وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا رَحْمَةً لِّلْعَالَمِينَ

தப்ஸீர் ஆயத் அந்நூர்

:.பழீலத்துஷ் ஷெய்கு
அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா
குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு

قَدْ جَاءَكُم مِّنَ اللَّهِ نُورٌ وَكِتَابٌ مُّبِينٌ

مطالع الجود في تفسير آية النور

بقلم : شمس العارفين وعلم الاولياء وريحان الرسول
السيد عبد العزيز الخوشحالي والرفاعي والحضرمي دامت بركاتهم القدسية

١٤٢٣

Printed by: Rabbania, INDIA. Ph: 91-431-701685

தப்ஸீர் ஆயத் அந்நூர்

ஆசிரியர் :
ஃபழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யிது
அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி
தவ்வலல்லாஹு ஹயாதஹு

JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA
No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 466113 Fax : 449055

® Copyright Reserved
பதிப்புரிமை ஆசிரியருக்கே

இந்நூல்
அன்பளிப்புக்குரியது
விற்பனைக்கு அல்ல

நூலின் பெயர் : **தப்ஸீர் ஆயத் அந்நூர்**

நூல் ஆசிரியர் : **ஃபழீலத்துஷ் ஷெய்க் அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு**

பக்கம் : 176

தொடர் இலக்கம் : 22

முதற் பதிப்பு : **ஏப்ரல் 2002**
1423 முஹர்ரம்

வெளியீடு : **ஜம்மிய்யது இஷாஅதி அஹ்லிஸ் ஸுன்னா**
105, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. போன் : 01466113
E-Mail: seyedina@hotmail.com

அச்சிட்டோர் : **ரப்பானியா பிரிண்டிங் பிரஸ்**
16, மதுரை ரோடு, திருச்சி-8.
இந்தியா. போன் : 91-431-701685
E-Mail: rabbaniapress@yahoo.com

Following are the Addresses where the Book is Available (Free of cost)

INDIA

KHANKQA - HE _ KHUSHALIYA
Chillagah Shariff Bihar Gad, Mourna Post
Dist. Muzafar Nagar, U.P. India

MUASKAR WOMEN'S ARABIC COLLEGE
Cholukkar Street,
KAYALPATNAM - 628 204. S. India

RABBANIA PRINTING PRESS
New No.249, Old No. 126-6, Adithya Complex,
Big Bazaar, TRICHY-620 008. S.India

SRI LANKA

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
105, Second Cross Street, Colombo-11
Sri Lanka. Phone : 466113, Fax : 449055

U.S.A.

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
436, Broad Street, Bristol Canaticut-06010
U.S.A.

CANADA

M. YUSUF VHQRA
15, Windsomg Court Markham, Ontario
Canada. L3r-8n7, 1-905-479-9483

SOUTH AFRICA

DARUL ULOOM PRETORIA
P.o. Box : 14296, Laudim-0037, Pretoria
Tel : (27-12-3741721

சமர்ப்பணம்

إلى الحقيقة الفردية روح الوجود وسر كل موجود سيد الثقلين وإمام الحضرتين سيدنا محمد صلى الله عليه وسلم

إلى كل ولي وولية لله تعالى في مشارق الأرض ومغاربها حيثما حلوا وحلت أرواحهم في سر علم الله القديم

إلى الذين تحيا الأرض بهم إلى أحباب رسول الله صلى الله عليه وسلم إلى الأقطاب والأفراد والأوتاد والأبدال والأطراز والأنجاب والأغواث والأخيار والعرفاء والنقباء إلى هؤلاء جميعا.

எமது வெளியீடுகளில் சில :

1. பாங்கில் திருநபியின் திருநாமம் கேட்டு விரல்களை முத்த வேண்டுமா?
2. கப்ருகளின் மீது கட்டிடம் கட்டலாமா?
3. இறைநேசர்களின் கப்ருகளை முத்தமிடலாமா?
4. ஸியாரத்தை நோக்கிப் பயணம்
5. வஸீலா
6. தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கை
7. அண்ணலாரின் அகமியம்
8. உத்தமர் உதயம்
9. மௌலிது ஓதுவோம் வாருங்கள்
10. முத்தமிடல்
11. சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்
12. ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்?
13. எத்தி வைப்போம் வாரீர்
14. இன்னல்களை நீக்கிடும் இனிய திருநாமம்

JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA

No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.

Tel : 466113 Fax : 449055

என்னுரை

الصلوة والسلام عليك ياسيــــدي وياحبيبي

يارسول الله صلى الله عليه وعلى آله واصحابه وسلم

சர்வ புகழும் புகழ்ச்சியும் அல்லாஹ்வுக்கே! அவன் இவ்வையகத்தைப் படைத்து தனது கிருபையென்னும் மழையைக் கொண்டு சகல ஜீவராசிகளையும் ரட்சித்துப் பரிபாலிப்பவன்.

மேலும் அவனைக் காட்டித்தரும் கண்ணாடியாகவும், படைப்புக்களின் மூலப் பொருளாயும் இலங்கி பரிபூரண ஜோதியாக விளங்கி அனைத்து சிருஷ்டிப் பொருட்களை விட எப்படைப்பும் புகழா அளவிற்கு தமதிறைவனாகிய அல்லாஹ்வைப் புகழ்ந்தபடியால் "அஹ்மத்" என்னும் திரு நாமத்திற்குரியதாகி, எல்லாப் படைப்புக்களாலும் புகழ்ந் தேற்றப்பட்டு எப்படைப்புக்கும் கிட்டாத அளவிற்கு புகழ் வாய்க்கப்பெற்ற காரணத்தால், "முஹம்மத்" என்னும் திருப் பெயருக்குரியதாகி இருளிலிருந்து ஒளியைப் பிரித்து, நன்மையிலிருந்து தீமையைப் பிரித்து, மெய்யிலிருந்து பொய்யைப் பிரித்து, உயர்விலிருந்து தாழ்வைப் பிரித்து, சூரியனிலிருந்து சந்திரனைப் பிரித்து, வானிலிருந்து பூமி யைப் பிரித்து, ஆணிலிருந்து பெண்ணைப் பிரித்து, தௌஹீ தென்னும் ஒன்றுபடுத்துதலிலிருந்து கைரிய்யத்தென்னும் வேற்றுமையைப் பிரித்து, சர்வ லோகங்களுக்கும் லோகாதி பதியான இறைவனுக்கும் மத்தியில் இரண்டையும் பிரதி பலித்துக் காண்பிக்கும் கண்ணாடியாகிய நபியும், ரஸூலு

மான அஹ்மதுல் முஸ்தபா, முஹம்மதுல் முஜ்தபா, சர்தாரே தோ ஆலம் ஸய்யிதுனா ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லமென்னும் பரம்பொருளின் ஜோதியான நூரே முஹம்மதிய்யாவாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீதும், அந்த ஜோதியினின்றும் வெளியான அவர்களது குடும்பத்தார் மீதும், அந்த ஜோதியென்னும் ரஸூலை வழிப்பட்டு வாழ்ந்த தோழர்களின் மீதும் ஸலாத்தென்னும் கருணையும் ஸலாமென்னும் ஈடேற்றமும் சதா காலமும் சுரந்துப் பொழிவதாக. ஆமீன்

எல்லாம் வல்ல அல்லாஹ் தனது தூதரின் அகமியத்தையும் எதார்த்தத்தைப் பற்றியும் அருள் மறையான குர்ஆனில் அந்த ரஸூலை ஏற்றோரை நோக்கி சொல்லும்போது,...

يايهاالذين آمنوا لاتقولوا راعنا وقولوا انظرنا
واسمعوا وللكافرين عذاب اليم

விளக்கம்:-

விசுவாசிகளே! நபியவர்கள் உங்களுடன் உரையாடும் போது உங்களின் கவனக் குறைவின் காரணமாக நபியவர்களால் சொல்லப்பட்டது புரியாமல் போகும்போது அதனைப் புரிந்து கொள்வதற்காக நல்லெண்ணம் கொண்டு மீண்டும் நபியவர்கள் தங்களுக்கு உபகாரம் செய்வதற்காக "ராயினா" என்று சொல்கின்றீர்கள். ஆனால் உங்களால் சொல்லப்பட்ட அப்பதத்திற்கு தவறான ஒரு அர்த்தமும் இருப்பதால் அப்பதம் நயவஞ்சகர்களான முனாபிக்கீன் களுக்கு நபியவர்களை ஏளனம் செய்வதற்கு ஒரு வாய்ப்பாகி விடுவதால் அதற்குப் பகரமாக "உன்ழுர்னா" என்று சொல்லுங்கள்.

அத்துடன் நபியவர்கள் உங்களோடு உரையாடும் போது உங்களின் சிந்தனையை வேறு பக்கம் திருப்பாது மீண்டும் ஒருமுறை அவர்களை சொல்ல வைக்காமல் கவனத்துடன் காது தாழ்த்தி கேளுங்கள். மேலும் காபிர்களுக்கு மகத்தான வேதனையுண்டு. பகரா-104.

இந்த வசனம் முஃமின்களான விசுவாசிகளை நோக்கி

பிரத்தியேகமாக இறக்கப்பட்ட முதல் வசனமாகும். முஃமின்களே! என்று அல்லாஹ்வால் அழைக்கப்பட்ட இம்முதல் வசனத்தில் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்ற விஷயத்தைக் குறித்துத்தான் விபரிக்கின்றதே அன்றி வேறு எந்தச் சட்டத்தை குறித்தும் பேசவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு தரப்பட வேண்டிய கண்ணியம் சம்பந்தமான விஷயத்திற்கு குர்ஆன் முன்னுரிமை கொடுப்பதுடன் அதனை எவ்வளவு அழகாக எடுத்துச் சொல்கிறது. இன்னும் நபியவர்களை கண்ணியப்படுத்துவது ஈமானின் அடிப்படை. இனி அந்த அடிப்படை இழக்கப்படும் போது, அல்லது இழந்து விடும்போது அவர் எவ்வளவு பெரிய துறவியாக, வணக்கவாளியாக இருந்தாலும் அவர் ஈடேற்றம் பெறுவதென்பது கானல்நீரே.

அனைத்து வணக்கங்களை விடவும் நபியவர்களை கண்ணியப்படுத்துவது தான் மேலான ஒன்றாகும் என்பதால் நாம் அந்த நபியவர்களை யாரென்றும், எப்படிப்பட்டவர்களென்றும் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு இந்நூல் ஒரு தூண்டுகோலாக நிச்சயம் அமைந்துள்ளதை நீங்கள் இந்நூலை வாசிக்கும் போதே தெரிந்து கொள்ளலாம்.

பின்னும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வெளித் தோற்றத்தில் பஷராகவும் அந்தரங்கத் தோற்றத்தில் நூராகவும் இருந்தார்கள் என்ற போதிலும் எந்தவொரு சிருஷ்டியைப் போன்றும் அவர்கள் இருக்கவில்லை. இவ்வாறே எந்தவொரு சிருஷ்டியும் அவர்களைப் போன்றும் இருக்கவில்லை.

அதேபோல நபியவர்கள் மனிதராகக் காட்சியளித்தாலும் மனித இனத்திலுள்ள எவரும் அவர்களுக்கு சமமாகாததைப் போன்று தமது நூரானிய்யத்துடைய நிலையிலும் நூரைக் கொண்டு படைக்கப்பட்ட வானவர்களிலும் எவருமே நபியவர்களுக்கு சமமானவர்களல்ல. மனித இனம் மனிதனுக்குரிய குணங்களை மட்டும் கொண்டிருப்பதைப்

போல வானவர்கள் நூரானிய்யத்துடைய பண்புகளை மட்டும் கொண்டிருப்பவர்கள். ஆனால் நபியவர்கள் ஒரே நேரத்தில் முழுமையாக இரு நிலைகளையும் கொண்டவர்களாகக் காட்சியளித்தனர்.

மேலும் நபியவர்கள் மனிதத் தோற்றத்தைக் கொண்டிருந்ததைக் காரணமாகக் கொண்டு அவர்களை தனக்கு ஒப்பாக்கிப் பேசுவோர் எத்தகையவர்கள் என்பதையும் இந்நூலை பார்வையிடுவோர் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இன்னும் அருமை நபியவர்கள் பஷராகவும் நூராகவும் இருக்கின்றார்கள் என்பதை சுன்னத் வல் ஜமாஅத்தினர் ஏகமனதாக நம்புகின்றனர். அதேநேரம் நபியவர்களின் நூர் தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டது என்னும் விஷயத்தில் முஸ்லிம்களிடையே உள்ள பல்வேறு இயக்கங்கள் அனைத்தும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதும் அதற்கு சில உலமாக்களும் துணைபோவதும் தான் மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும்.

யா அல்லாஹ்! உனது ஹபீபானவர்களும் எங்களுக்கு ஷஃபீயியானவர்களுமான திங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் இச்சிறிய பணியை நீ ஏற்று இச்சமுதாய மக்களை காப்பாற்றுவாயாக. ஆமீன். பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

الحمد لله الذي جعل محمدا فى السـر مظهر انوار الكمال وحلاه من أوصافه بكل ما تعرف به إلينا من الجمال والجلال وخصه بالوسيلة في مقام أو أدنى ثم دلاه بعد ما أدناه ليظهر فى العالم لأسمائه الحسنى ومكنه من القرب المقدس فى المكانة العليا وأحله من الجوار المؤنس فى المستوى الازهى وجعله فى العالم نموذج حضرة الحضرات ومرآة ظهور حقائق الأسماء والصفات فأنزل عليه آياته ظهرا وبطنا وعرفه بحقائق الأشياء صورة ومعنى فله الحمد سبحانه.

வல்லோன் அல்லாஹ் என்னும் ஏகனாகிய ரப்புல் ஆலமீன் சிருஷ்டிகள் அனைத்தின் வணக்கத்திற்கும் உரியவனாகும். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவர்கள் என்போர் யாருமில்லை. அவன் தனித்தவன். எங்கும் நிறைந்திருப்பவன். எவருடைய தேவையுமற்றவன். அவனுக்கு நிகர் அவனே. அவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிகள் அனைத்தும் அவனுக்கே சிரவணக்கம் செய்யத் தக்கவைகளாகும். படைப்புக்கள் அனைத்தும் அவனிடமே தேவையானவைகளாகும். வானவர்கள், நபிமார்கள், வலிமார்கள் போன்றோர் அனைவரும் அவனது அடியார்களே. அவனுக்குச் சிரம் பணிகின்றவர்களே.

இன்னும் அந்த ஏக வல்லோனாகிய அல்லாஹ் தான் அனைத்தையும் இல்லாமையிலிருந்து உள்ளமையின் பக்க

மாகக் கொண்டு வந்தான். அவன் விரும்பியதைப் படைக்கும் சர்வ ஆற்றலையும் கொண்டிருப்பவன். இவ்வாறே அவன் விரும்பிய ஒன்றுக்கு எந்தவொரு முன்மாதிரியும் இல்லாமலேயே உருவாக்குகின்றவன். அதேபோன்று உருவாக்கியவை அனைத்துக்கும் மரணமென்னும் பானத்தைக் கொடுப்பதன் மூலம் மீண்டும் இல்லாமைக்கே கொண்டு சென்று விடுவான். திரும்பவும் அவன் நாடினால் மரணமென்னும் பானத்தைக் குடித்த அப்படைப்புக்களை மீண்டும் அதே வடிவத்தில் எழுப்பி நிறுத்தி விடுவான்.

இன்னும் அவன்தான் வானங்களைத் தூண்கள் எதுவுமின்றி அந்தரத்திலும், இவ்வாறே பூமி அசையாதிருக்க அதன் மீது மலைகளையும், அப்பூமியில் உலாவரும் சிருஷ்டிப் பொருட்களையும் படைத்தான். இவ்வாறே வானங்களிலிருந்து மழையைப் பொழியச்செய்து பூமியை செழிப்பாக்கினான் என்று சொல்லப்படும் இவையனைத்தும் ஒரு சராசரி நிலைகொண்ட மனிதனிடம் கூட காணப்படும் இறைவன் சம்பந்தமான கொள்கை விளக்கமாகும். இனி இத்தகைய கொள்கையுடையவர் எவரோ அவர் நிச்சயம் இணை வைப்பவராக, வைத்தவராக ஒருபோதும் இருக்க மாட்டார்.

இருப்பினும் இப்போது நாம் நமது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில் அல்லாஹ்வாகிய அவனால் படைக்கப்பட்ட படைப்புக்கள் எல்லாமே எந்தவித வித்தியாசமுமின்றி சரிசமமானவைகளா என்னும் கேள்விக்குரிய விடைதான்.

பூமியில் நடமாடும் படைப்பினங்கள்.

والله خلق كل دابة من ماء فمنهم من يمشي على بطنه ومنهم من يمشي على رجلين ومنهم من يمشي على أربع يخلق الله ما يشاء إن الله على كل شيئ قدير

"இன்னும் அல்லாஹ் நடமாடும் அனைத்து உயிரினங்களையும் தண்ணீரிலிருந்தே படைத்தான். அவைகளில் ஊர்ந்து செல்லக் கூடியதாக சிலவற்றையும், இரு

கால்களால் செல்லக் கூடியதாக இன்னும் சிலவற்றையும், இன்னும் சிலவற்றை நான்கு கால்களால் செல்லக் கூடியதாகவும் படைத்தான். அல்லாஹ் தான் நாடியதைப் படைப்பவன். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் பேராற்றல் உள்ளவன்." (சூரா அந்நூர் : 45)

மேற்கண்ட திருமறை வசனம் பூமியில் உலவித்திரியும் அனைத்து உயிரினங்களும் சமமானவைகளல்ல. ஒன்று இன்னொன்றை விட வித்தியாசமானது மட்டுமின்றி வலுவான சக்தியும் கொண்டதாகுமென்றும் அத்துடன் அவைகளில் இரு கால்களால் நடந்து செல்லும் மனித இனம் சிருஷ்டிப் பொருட்களிலேயே மேன்மையான படைப்பாகும் என்றும் அகிலத்தில் படைக்கப்பட்ட படைப்புக்கள் அனைத்தும் மனிதனுக்காக படைக்கப்பட்டதென்றும் மனித இனத்தை மட்டும் இறைவனுக்காக படைக்கப்பட்டதென்றும் கூறுவதைப் பார்த்தோம். எனவே மனித இனத்திற்கு எந்தவொரு சிருஷ்டிப் பொருளும் சமமாகாது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட வசனத்தில் அல்லாஹ் இப்புவியில் பல்வேறு வகையான சிருஷ்டிகளைப் படைத்திருப்பதாகச் சொன்னதோடுஅவையன்றி இன்னும் பல்வேறு வகையான சிருஷ்டிப் பொருட்களை தான் விரும்பும் விதத்தில் தான் விரும்பும் ஒருவரின் மூலமாகப் படைப்பதாகவும் சொல்கிறான். உதாரணமாக ஸெய்யிதுனா ஸாலிஹ் அலைஹிஸ் ஸலாமவர்களின் பிரார்த்தனையைக் கொண்டு அல்லாஹ்வின் வல்லமையால் ஒரு பாறைக் கல்லிலிருந்து (மலை) ஒட்டகமொன்று வெளிப்படுத்தப்பட்டது. இது நான்கு கால்களைக் கொண்டு பூமியில் உலவித் திரிகின்ற ஒன்றாக இருந்தாலும் இது தண்ணீரைக் கொண்டு படைக்கப்படவில்லையாதலால் இதனை அல்லாஹ் "நாகத்துல்லாஹ்" அல்லாஹ்வின் ஒட்டகம் எனப் பெயரிட்டு கண்ணியப்படுத்தினான்.

மேலும் நான்கு கால்களைக் கொண்டு நடமாடும் உயிரினங்கள் தொடர்பாக அல்லாஹ் மற்றோரிடத்தில் விபரிக்கும் போது.,,,

والانعام خلقها لكم فيها دفء ومنافع ومنها تأكلون.
ويخلق مالا تعلمون.

"இன்னும் உங்களுக்காகப் படைக்கப்பட்ட மிருகங்களில் சில குளிர்காலத்தில் உங்களுக்கு உதவக் கூடியதாகவும், பிரயோஜனம் தரத்தக்கதாகவும் இன்னும் அவைகளில் சில நீங்கள் உண்ணுவதற்காகவும் இன்னும் நீங்கள் அறிந்து கொள்ளாத மிருகங்களையும் படைக்கிறான். (உதாரணமாக நாகத்துல்லாஹ்)"

(சூரா அந்நஹ்ல் 14-01)

மனிதர்கள் புசிப்பதற்காக படைக்கப்பட்ட மிருகங்களில் ஒட்டகமும் ஒன்றென்றால் மிகையாகாது. ஒட்டகம் ஹலாலான ஒன்றென்பதோடு அதனுடைய அனைத்துப் பொருளும் உண்ணத்தக்க ஒன்றாம். மீறி இதை ஹராம் என்று எவரேனும் சொல்வாராயின் அவர் குர்ஆனைப் பொய்ப்பித்தவராவார். ஆனால் அதேநேரம் ஒட்டகம் ஹலால் தானே என்றெண்ணி "நாகத்துல்லாஹ்" வாகிய அல்லாஹ்வின் ஒட்டகத்தை அறுக்க முடியுமா? இதைக் குறித்த வேத எச்சரிக்கையைப் பாருங்கள்.

ولاتمسوها بسوء فيأخذكم عذاب اليم

"நாகத்துல்லாஹ்" அல்லாஹ்வின் ஒட்டகத்திற்கு அநீதம் இழைக்காதீர்கள். இல்லையெனில் அல்லாஹ்வின் வேதனை உங்களை வந்தடையும்.

இத்திருமறை வாக்கியம் அல்லாஹ்வின் ஒட்டகத்தை அறுப்பதைத் தீங்கென்று தீர்ப்பளிப்பதோடு அதற்குத் தண்டனையும் வந்து சேருமென்று எச்சரிக்கின்றது. அதாவது அந்த ஒட்டகத்தை அறுத்தால் அல்லது அதற்குத் துன்பம் விளைவித்தால் உடனே அல்லாஹ்வின் வேதனை வந்து விடும் என்று கூறுகின்றது. ஆதலால் அந்த ஒட்டகம் நான்கு கால்களால் நடந்து செல்லக்கூடியதாக இருந்தாலும் மிருகங்களனைத்தும் தண்ணீரைக் கொண்டே படைக்கப்பட்டன என்னும் இலக்கண விதிமுறைக்கு மாறுபடுவதால் பார்ப்ப

தற்கு ஒட்டகத்தைப் போல் தோன்றினாலும் அதனுடைய ரகசியம் வேறு என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் இந்த ஒட்டகம் மற்ற ஒட்டகங்களைப் போன்றதுமல்ல. மற்ற ஒட்டகங்களுக்குச் சமமானதுமல்ல. மாறாக சமமாக்க முனைந்தால் அது அல்லாஹ்வுடைய கோபப் பார்வை மற்றும் அவனது தண்டனையை அனுபவிப்பதற்குத் தயாராகும் செயல் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இதுபோன்றே ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது கரத்தில் வைத்திருந்த கைத்தடி. இக்கைத்தடி பற்றி திருக்குர்ஆன் கூறும்போது, "**மின்ஹும் மன்ய் யம்ஷீ அலா பத்னிஹ்**" (இக்கைத்தடி) ஊர்ந்து செல்லும் உயிரினங்களுக்கு உட்பட்டதாக இருந்தாலும் இது எல்லா படைப்பினங்களைப் போன்று தண்ணீரால் படைக்கப்பட்ட ஒன்றல்ல. மேலும் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தமது கரத்தில் வைத்திருந்த இக்கைத்தடி தரையில் தமது வயிற்றைக் கொண்டு ஊர்ந்து செல்லக் கூடியதாக இருந்தது. அத்துடன் இதற்கு முகம், கண்கள், நாக்கு, வால் போன்றவைகளும் இருந்தன. அத்துடன் மற்றவர்கள் பேசுவதை உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றலும் இருந்தது. இன்னும் இது உண்ணக் கூடியதாகவும் பருகக் கூடியதாகவும் இருந்தது.

மேலும் சூனியக்காரர்களின் மந்திரிக்கப்பட்ட கயிறுகள் அனைத்தையும் இக்கைத்தடி தின்று தீர்த்து விட்டது. இக்கைத்தடி பாம்பின் தோற்றத்தில் பாம்பின் செயல்களைச் செய்தது. ஆதலால் ஸெய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் கரத்தில் இருந்த அக்கைத்தடி மற்ற எல்லா கைத்தடிகளை விட மேலானது என்றால் மிகையாகாது.

இவ்வாறே ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நமது உயிருக்கும் மேலான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபைக்கு வருகை தரும்போது "திஹ்யத்துல் கல்பி" என்னும் பெயர்கொண்ட நபித்தோழரின் தோற்றத்தில் வருகை தருபவராக இருந்தனர். இவ்வாறு மனித உருவில் வருகை தந்ததால் "**மின்ஹும் மன்ய் யம்ஷீ அலா ரிஜ்லைன்**" பூமியில் உலவித் திரியும் உயிரினங்களில் சில இருகால்களால் நடமாடக் கூடியது என்னும் திருமறை வசனத்திற்கு

உட்பட்டிருந்தாலும் அவை தண்ணீரால் படைக்கப்பட்டவையல்ல. எனவே இரு கால்களால் நடமாடும் உயிரினங்கள் "நுத்பா" இந்திரியத்தைக் கொண்டுதான் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

அத்துடன் அல்லாஹ் தான் விரும்புவதை உருவாக்கும் வல்லமை கொண்டவன். அவனால் எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் யார் மூலமாகவும் படைக்க முடியும். எந்தப் பொருள் இவ்வகிலத்தில் அவனால் படைக்கப்பட்டவைகளாக இருந்தாலும் எத்தனை உன்னதமான நிலை கொண்டதாக இருந்தாலும் அது அவனுக்கு ஒரு போதும் சமமாகவே முடியாது. மாறாக அவனுக்கு சிரம் தாழ்த்தி வணங்கும் அடிமையாகவே இருக்கும்.

பின்னும் மனிதனை அன்றி உள்ள மற்ற படைப்புக்களுக்கிடையே கூட ஒரு சமநிலை என்பது இல்லாதிருக்கும் போது அல்லாஹ்வின் மிகவுயர்ந்த சிருஷ்டியான மனித இனம் மட்டும் எவ்வாறு சமநிலை கொண்டதாக இருக்க முடியும்?

மனிதன் எப்படி உருவாகினான்?

இறைவனது சிருஷ்டிப் பொருட்களில் மனித இனம் மிக மிக ஓர் உன்னதமான படைப்பாகும். அவ்வுன்னதமான இந்த இனத்தின் துவக்கம் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும். இதனால்தான் அவர்கள் "அபுல் பஷர்" என்றழைக்கப்படுகின்றனர். இன்னும் இவர்களிலிருந்து தான் மனித இனம் முழுவதும் வெளிக் கொண்டு வரப் பட்டன. இதனை இறைவன்,...

خلقكم من نفس واحدة

"அல்லாஹ் உங்களை (ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம்) என்னும் ஒரே ஆன்மாவிலிருந்து படைத்தான்" என்பதாகக் கூறுகிறான். *(அஸ்ஸுமர் - 23 :01)*

அடுத்து ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட மனித இனம் எதைக்கொண்டு படைக்கப்பட்டது என்னும் கேள்விக்கு குர்ஆன் பின்வருமாறு விளக்கம் தருகிறது.

إني خالق بشرا من طين

"நிச்சயமாக மனிதனை நான் களியினால் படைப்பவனாகும்." *(அஸ்ஸுமர் - 23 : 05)*

وهوالذي خلق من الماء بشرا

"அவனே மனிதனை நீரிலிருந்து படைத்தான்." *(புர்கான் - 19 : 05)*

خلقناكم من ذكر وأنثى

"உங்களை நாம் ஆண் பெண் ஆகிய இரு வர்க்கத்தைக் கொண்டு படைத்தோம்." *(அல் ஹுஜ்ராத் : 49)*

خلق الانسان من نطفة

"நாம் மனிதனை இந்திரியத்திலிருந்து படைத்தோம்."

خلقناكم من تراب

"உங்களை நாம் மண்ணிலிருந்து படைத்தோம்."

மேற்கூறப்பட்ட வசனங்கள் அனைத்தும் வல்லோனாகிய அல்லாஹ்வின் கூற்றாகும். அத்துடன் அனைத்தும் சத்தியமானவைகள். இதில் ஒரு வசனம் இன்னொரு வசனத்திற்கு எதிர்நிலை கொண்டதாக தென்பட்டாலும் எல்லாமே உண்மையானவைகளாகும். இதன்றி இன்னோரிடத்தில்....

وقد خلقناكم اطوارا

இன்னும் உங்களை விதவிதமாகப் படைத்துள்ளான் என்றும் கூறுகிறான்.

ஆதலால் மண்ணிலிருந்தும், களியிலிருந்தும், ஆண் பெண்ணிலிருந்தும், இந்திரியத்திலிருந்தும் மனிதர்களாகிய நம்மைப் படைத்த அல்லாஹ் மேற்கண்ட பொருட்களில் எந்தவொரு பொருளின் சம்பந்தமும் இல்லாமல் சிலரைப் படைத்து தனது வல்லமையை அவன் வெளிப்படுத்தியும் உள்ளான். இதற்கு ஸய்யிதுனா ஆதம் மற்றும் ஈஸா அலைஹிமஸ்ஸலாம் அவர்களே உதாரணமாகும்.

ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதற் கொண்டு மனித இனம் அனைத்தும் மண்ணின் தொடர் புடையதாக இருந்தாலும் அல்லது வெவ்வேறு விதங்களில் படைக்கப்பட்டிருந்தாலும் எல்லோரையும் சமமானவர்கள் என்று சொல்ல முடியுமா?

நானும் நீங்களும் மண்ணைக் கொண்டு படைக்கப் பட்டிருந்தாலும் ஆண் பெண் ஆகிய இருவர் மூலமாகத் தான் பிறந்தோம். அதேநேரம் மண்ணைக் கொண்டு படைக் கப்பட்டிருந்த போதிலும் ஆண் பெண்ணின்றி படைக்கப் பட்ட ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நாம் சமமாக முடியுமா? அல்லது மண்ணின் தொடர்பைப் பெற்றிருந்தாலும் தந்தையின்றி தாயின் உதவியைக் கொண்டு மட்டும் பிறப்பிக்கப்பட்ட "ரூஹுல்லாஹ்"வாகிய அல்லாஹ்வின் ஆன்மாவாகிய நபி ஸய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத்தான் நாம் சமமாக முடியுமா?

அது மட்டுமா? பல்வேறு வகையாக படைக்கப்பட்ட மனிதன் பின்னர் பல சமுதாயமாகவும் ஆக்கப்பட்டான். அந்தச் சமுதாயங்களிலும் கூட ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தை விட மேலானதாகவே படைக்கப்பட்டுள் ளது. இதில் கடைசி சமுதாயமாகப் படைக்கப்பட்டு இப்போது வாழ்ந்து கொண்டுள்ள இந்த சமுதாயம் இதற்கு முன்னுள்ள அனைத்து சமுதாயங்களை விட மேன்மை யானதாக அல்லவா இருக்கிறது!

இந்நிலையில் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு பல சமுதாயமாகப் படைக்கப்பட்ட மனிதர்கள் ஒருவருக்கொருவர் சமமாகாது ஒருவர் இன் னொருவரை விட மேலானவராகவும் ஒரு சமூகம் இன் னொரு சமூகத்தை விட உயர்வானதாகவும் இருக்கும் போது ஆதம் நபியவர்களுக்கு முன்பே இருந்த ஒருவருக்கு ஆதம் நபியவர்கள் எப்படிச் சமமாக முடியும்? அல்லது அல் லாஹ்வின் ஆன்மாவாகிய ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தான் சமமாக முடியுமா? பின்னும் ரஸூல்மார்களுக்கும் நபிமார்களுக்கும் சமநிலை காண முடியாத ஒருவரை நீ எனக்குச் சமமானவர் ஒப்பானவர் என்று எப்படிச் சொன்

னாய்? இது எந்த வகையில் நியாயமாகும்?

மேலும் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர் கள் வெள்ளிக்கிழமை அஸருடைய நேரத்தில் களி, நீர் போன்றவற்றைக் கொண்டு படைக்கப்பட்டார்களென்று சொல்லப்பட்டாலும், இவ்வாறே ரஸூலே அக்ரம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரபீவுல் அவ்வல் மாதம் திங்கட்கிழமை பஜ்ருடைய நேரத்தில் படைக்கப்பட் டாலும், இதுபோன்றே உலகிலுள்ள மனித சமுதாயமனைத் தும் ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பிறந்திருந்தா லும் உண்மையில் இவர்களனைவரும் அக்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில்தான் பிறந்தார்களா என்று கேட்கப்பட் டால் இப்படி நேரம் மற்றும் காலங்களைக் கொண்டு படைக்கப்பட்டது என்பது மனிதனின் தேகமே அன்றி அந்தத் தேகத்தில் உறைந்துள்ள "ரூஹ்" ஆன்மாவல்ல என்பது எல்லோருக்குமே தெரிந்த ஓர் விஷயமாகும்.

ஆம். ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வெள்ளிக்கிழமை அன்று படைக்கப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் வரை வாழ்ந்து மறைந்தார்கள் என்பதும், ஸய்யிதுனா முஹம் மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திங்கட்கிழமை அன்று உதயமாகி அறுபத்து மூன்று ஆண்டுகள் இவ்வையகத்தில் வாழ்ந்தார்கள் என்பதும், நீங் களும் நானும் ஒரு குறிப்பிட்ட நாளில் பிறந்து ஒரு குறிப் பிட்ட காலம்வரை வாழ்ந்து மறைந்து போவோம் என்பதும் சரீரமாகிய தேகத்திற்குத்தானே அன்றி ரூஹுக்கல்ல.

காரணம் இப்பூமியில் பிறந்த அல்லது பிறக்கப்போகிற அனைத்து ஆன்மாக்களும் அவைகளுக்குரிய சரீரம் படைக் கப்பட்டு அதில் ஆன்மா ஊதப்படுவதற்கு பல்லாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்பே படைக்கப்பட்டிருந்தது. இதில் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் முதற்கொண்டு இவ்வுலகில் இறுதியாகப் பிறக்கப் போகிற மனிதன் வரை யுள்ள அனைவரது ஆன்மாக்களும் படைக்கப்பட்டு அவை களிடம்.,,,

நான் உங்களின் ரப்பல்லவா? எனக் கேட்டதாகவும் (அல்லாஹ்வுடைய ஏற்பாட்டில் அவனைக் கொண்டு ஈமான்

கொள்ளும்) அதற்கந்த ஆன்மாக்கள் நீதான் எங்களின் இரட்சகன் என்று சொன்னதாகவும் திருமறை சொல்லிக் கொண்டிருப்பதையும் நாம் தெரிந்து வைத்திருக்கிறோம்.

இவ்வாறு படைக்கப்பட்டிருந்த அந்த ஆன்மாக்களில் எவை எவை நபிமார்களாக அனுப்பப்படும். எவை எவை ரஸூல்மார்களாக அனுப்பப்படும். எந்தெந்த ஆன்மாக்கள் விலாயத்துக்குரியதாக விளங்கும். யார் யாருடைய ஆன்மாக்கள் நல்லடியார்களாக இருக்கும் என்பவை அனைத்தும் அப்போதே வகைப்படுத்தப்பட்டு விட்டன. பின்னர் காலப் போக்கில் அந்த ஆன்மாக்கள் "ஆலமுல் அஜ்ஸாம்" என்னும் சடவுலகை நோக்கி தோற்றமெடுக்கத் துவங்கின. அதற்குரிய முதல் வெளிப்பாடு தான் "அபுல் பஷர்" என்றழைக்கப்படும் முதல் மனிதரான ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும்.

முதலும் முடிவும் முழுவடிவமும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே!

ஆலமுல் அர்வாஹில் நபிமார்கள், ரஸூல்மார்கள் மற்றும் அனைத்து ஆன்மாக்களிடமும் இறைவன் “நான் உங்களின் ரப்பில்லையா? எனக்கேட்டது போன்று” நபிமார்களிடமும் ரஸூல்மார்களிடமும் தனிப்பட்ட ரீதியில் ஒரு உறுதிமொழியை வாங்கினான். அதுபற்றி அவன் தனது மாமறையில் விபரிக்கும் போது.,,,

وإذ اخذ الله ميثاق النبيين لما آتيتكم من كتاب وحكمة
ثم جاءكم رسول مصدق لما معكم لتؤمنن به ولتنصرنه قال
أأقررتم وأخذتم على ذالكم إصري قالوا أقررنا قال
فاشهدوا وانا معكم من الشاهدين

நான் வேதத்தையும் ஞானத்தையும் உங்களுக்குத் தந்துள்ளேன். இன்னும் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ரஸூல் வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான்கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களா? இதனை நீங்கள் உறுதி செய்கின்றீர்களா? எனது

உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா? என்றும், நாங்கள் அதை உறுதிப்படுத்துகிறோம் என்று நபிமார்கள் சொன்னபோது (அதற்கு அல்லாஹ்) நீங்கள் சாட்சியாக இருங்கள். நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் ஒருவனாக இருக்கிறேன் என்பதாக நபிமார்களிடம் வாக்குறுதி வாங்கியதை நபியே நீர் எண்ணிப் பாரும் என்று கூறுகிறான். *(ஆலஇம்ரான் - 03 : 81)*

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வவனியில் அவதரிக்கப் பலகோடி வருடங்களுக்கு முன்பாகவே மனித இனத்தை வழிநடத்தும் வேதங்களையும், ஞானங்களையும் சுமக்கின்ற புனிதமிகு நபிமார்களிடம் அவர்களைப் பற்றி அல்லாஹ் புகழ்ந்து பேசி (மௌலிதை ஓதி)யிருக்கிறான். ஆனால் நாம் அவ்வுயர் நிலை கொண்ட நபியை தற்போது புகழக் கூடாதென்று வாதம் பேசுகிறோம். இது ஒரு புறமிருக்க.,,,

“ஆலமுல் அர்வாஹில்” நபிமார்களின் மத்தியில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறித்து இறைவன், அவர்களை எல்லா நபிமார்களும் ஈமான் கொண்டு உண்மையாக்கி வைக்க வேண்டுமென்று வாக்குறுதி வாங்கினான் எனில் அதற்கு அல்லாஹ்வும் சாட்சியாளர்களில் ஒருவனாக இருந்தான் எனில் அந்தக் காருண்ய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மனிதரே அல்லது நபியே என்ற போதிலும் அவர்கள் மற்ற மனிதர்களுக்குச் சமமாகத்தான் முடியுமா? அல்லது நபிமார்களுக்குத் தான் சமமாக முடியுமா? இத்தனைக்குப் பிறகும் நீ எப்படி அவர்களை உன்னைப் போன்றவர் என்று சொல்கிறாய்?

“ஆலமுல் அர்வாஹில்” அல்லாஹ் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சம்பந்தமாக அனைத்து நபிமார்களிடமும் வாங்கிய அவ்வாக்குறுதி அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் தலைவர் என்பதை ஊர்ஜிதப் படுத்துவதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதைப்பற்றி ஏந்தல் நபியவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்.,,,

நமது நாயகம் ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே தம்மை நபிமார்களுக்கெல் லாம் முதன்மையானவர் என்றும் நபியாக அனுப்பப்பட் டோரில் இறுதியானவர் என்றும் கூறுகின்றனர். ஆகையால் அவர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முன்பே படைக்கப்பட்டிருந்தனர் என்பதுடன் நபியாகவும் இருந்த னர் என்பதையும் சந்தேகம் கொள்ளலாகாது. இதில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் முதல் மனிதர் என்னும் போது நபிமார்களில் தான் தான் முதல்நபி என்று கூறும் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எந்தப் பொருளைக் கொண்டு படைக்கப்பட்டார்கள் என் னும் கேள்வி எழுகிறதல்லவா! அதற்குரிய பதிலைப் பார்க்கு முன் நபிமார்களில் எல்லாம் நான்தான் முதன் முதலாகப் படைக்கப்பட்டேன் என்பதற்குரிய தகவல்களை முதலில் பார்த்து விடுவோம்.

أخبرنا عبد الوهاب بن عطاء عن سعيد بن ابى عروبة عن قتادة قال: وأخبرنا عمزو بن عاصم الكلابي اخبرنا ابو هلال عن قتادة قال قال رسول الله صلى الله عليه وآله وسلم كنت أول الناس فى الخلق وآخرهم فى البعث

"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்கள் "நான் மனிதப் படைப்பில் முதன்மையான வன். இன்னும் நபிமார்களில் இறுதியானவன் என்று கூறுகின்றனர்."

அ-ர் ஹழரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : தபகாத் இப்னு ஸஃத், பாகம்-1, பக்கம்-149. கன்ஸுல் உம் மால், பாகம்-11, பக்கம்-409. இது ஒரு முர்ஸலான ஹதீதாகும்.

அதாவது நபியவர்களின் ஹதீதை அவர்களது தோழர் கள் சொல்லக் கேட்டதாக தாபியீன்கள் அறிவிப்பார்களா யின் அதனை முர்ஸல் என்று சொல்லப்படும். (தைசீர் உலூமுல் ஹதீத், பக்கம்-42)

حدثنا ابو زرعة الدمشقي ثنا محمد بن بكار حدثنا سعيد بن بشير حدثني قتادة عن الحسن عن ابي هريرة رضي الله عنه عن

النبي صلى الله عليه وآله وسلم قال: كنت اول النبيين فى الخلق وآخرهم فى البعث.

"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்கள் கூறுகின்றனர். "படைப்புக்களில் நான் நபிமார் களுக்கெல்லாம் முதன்மையானவன். இன்னும் அனுப் பப்படுவதில் நான் இறுதியானவன்"

அ-ர் ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. நுல் : தப்ஸீர் இப்னு அபீ ஹாதிம், பாகம்-9 பக்கம்-316, எண்-17594. தப்ஸீர் இப்னு கதீர், பாகம்-3 பக்கம்-748. தப் ஸீர் அத்துர்ருல் மன்தூர், பாகம்-6 பக்கம்-570. தப்ஸீருல் பகவி, பாகம்-3 பக்கம்-508. கஷ்புல் கிபா, எண்-2005. அஷ் ஷதிரா பில் அஹாதீதில் முஷ்தஹிரா, எண்-716. சுனன் தைலமி, பாகம்-3, பக்கம்-282. தம்ஈஸுத் தையிப் மினல் கபீத், பக்கம்-126.

மேற்கண்ட இரு ஹதீதுகளில் ஒன்று முர்ஸலானதும் மற்றொன்று ழயீபானதுமாகும். இனி மேற்கண்ட நபி மொழியின் கருத்தைக் கொண்டுள்ள வேறு நபிமொழிகள் ஏதேனும் ஹதீதுக் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளதா என் பதை இப்போது பார்ப்போம்.

عن ابن عباس رضي الله عنهماقال قيل يا رسول الله صلى الله عليه وآله وسلم متى كنت نبيا؟ قال وآدم بين الروح والجسد.

"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்களிடம், அல்லாஹ்வின் ரஸூலே! நீங்கள் எப் போது நபியாக இருந்தீர்கள் எனக் கேட்கப்பட்ட போது ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர் கள் "ரூஹு" (உயிரு) க்கும் "ஜஸது (உடலு)க்கும் இடை யிலிருந்த போதே நான் நபியாக இருந்தேன் என்று நவின்றனர்."

அ-ர்: இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா நூல் : தப்ஸீர் துர்ருல் மன்தூர், பாகம்-06, பக்கம்-569. மஜ்ம

வுல் பஹ்ரைன், எண்-3492, பாகம்-6, பக்கம்-131. சுனன் தைலமி, எண்-4854. முஃஜிமுல் கபீர், பாகம்-12, பக்கம்-73.

حدثنا ابو الهمام الوليد بن شجاع بن الوليد البـــغدادى حدثنا الوليد بن مسلم عن الاوزاعى عن يحى بن ابي كثير عن ابي سلمة عن ابي هريرة رضي الله عنه قال: قـــالوا يا رسول الله صلى الله عليه وآله وســـلم متى وجبـــت لك النبوة؟ قال وآدم بين الروح والجسد.

"காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் கண்மணிகளான நபித்தோழர்கள் உங்களுக்கு "நுபுவ்வத்" (நபித்துவம்) எப்போது கடமையானது எனக் கேட்டபோது, அதற்கவர்கள்; நான் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ரூஹு" (ஆன்மாவு)க்கும் "ஜஸது" (சரீரத்திற்)க்கும் இடையில் இருந்தபோது என்மீது நுபுவ்வத் கடமையாக்கப்பட்டது என்பதாகக் கூறினர்."

அ-ர் ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : மிஷ்காத், திர்மிதி ஷரீப், கிதாபுல் மனாகிப், பாகம்-5, பக்கம்-569. இமாம் திர்மிதி இதனை ஸஹீஹான ஹதீதென்று குறிப்பிடுகின்றனர்.

حدثنا عبد الرحمن بن مهدي حدثنا منصور بن ســـعد عن بديل عن عبد الله بن شقيق عن ميسرة الفجر قـــال: قلت يارسول الله صلى الله عليه وآله وسلم متى كنت نبيا؟ قال وآدم بين الروح والجسد.

"ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம், அல்லாஹ்வின் ரஸூலே! நீங்கள் எப்போது நபியாக ஆகினீர்கள்? என்று கேட்கப்பட்ட போது, அதற்கு நபியவர்கள்; ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருந்த போதே நான் நபியாக இருந்தேன் என்று சொன்

னார்கள்."

அ-ர் ஹழரத் மஸீரத்துல் பஜ்ர் ரலியல்லாஹு அன்ஹு. நூல்: தலாயிலுன் நுபுவ்வத், இமாம் பைஹகீ, பாகம்-1, பக்கம்-84. தபகாத் இப்னு ஸஃத், பாகம்-7, பக்கம்-60. முஸ்னத் அஹ்மத், எண்-20872. முஃஜிமுல் கபீர், பாகம்-20, பக்கம்-353. சுனன் தைலமி, எண்-4854. தாரீக் கபீர் இமாம் புகாரி, பாகம்-7, பக்கம்-374. தப்ஸீர் துர்ருல் மன் தூர்.

இதே போன்றதொரு கருத்தைக் கொண்டுள்ள நபிமொழி ஒன்று ஹழரத் அப்துல்லாஹ் பின் ஷகீக் ரலியல்லாஹு அன்ஹுவின் வாயிலாக முஸ்னத் அஹ்மத் என்னும் நூலில் ஹதீத் எண்-16740, 23599லும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

حدثنا عبد الرحمن بن مهدى حدثنا معاوية يعنى ابـــن صالح عن سعيد بن سويد الكلبي عن عبـــد الله بـــن هلال السلمي عن عرباض بن سارية قال: قال رسول الله صلى الله عليه وآله وسلم إني عبـــد الله لخاتم النبـــيين وإن آدم لمنجدل في طينته.

"திடனாக நான் அல்லாஹ்வின் அடிமை. இன்னும் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் களிக்கிடையில் இருக்கும்போதே நான் நபிமார்களில் இறுதியானவனாக இருந்தேன் எனக் கூறுகின்றனர் காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்."

அ-ர் ஹழரத் இர்பாழ் பின் ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : முஸ்னத் அஹ்மத், பாகம்-5, பக்கம்-843. தபகாத் இப்னு ஸஃத், பாகம்-1, பக்கம்-149. ஸஹீஹ் இப்னு ஹிப்பான், பாகம்-14, பக்கம்-313. முஃஜிமுல் கபீர், பாகம்-18, பக்கம்-252. தலாயிலுன் நுபுவ்வத், பாகம்-1 பக்கம்-80.

இதுவரை மேற்கூறப்பட்ட ஹதீதுகளிலிருந்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நபிமார்களுக்கு மட்டுமல்ல. எல்லா ஆன்மாக்களுக்கும் முந்தியவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்திருக்கும். ஆம். நபியவர்கள் தான் முதன்மையானவர்கள் என்பது அறிஞர்கள் அனைவரின்

ஏகோபித்த கருத்தாகும். பின்னும் மனித இனம் என்பது ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்லாம் அவர்களை கொண்டே துவக்கப்பட்டது என்னும்போது அவர்களுக்கும் முன்னரே நான் நபியாக இருந்தேன் என்று கூறும் நமது நபியவர்களுக்கும் இந்த மனித இனத்துக்கும் என்ன தொடர்பு? அப்படியானால் அவர்களின் எதார்த்தம் என்பது என்னவாக இருக்கும்? சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அல்லாஹ்வின் அருளுக்குரிய முழுவடிவான வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் எதார்த்தத்தை அந்த அணையா ஜோதியின் பிரகாசத்தை வாயால் ஊதி அணைக்க விரும்பும் நயவஞ்சகர்கள் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருந்த போதே நான் நபியாக இருந்தேனென நபியவர்கள் சொன்னதற்குரிய கருத்து, ஆலமுல் அர்வாஹில் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஆன்மாவும் நபிமார்களில் ஒருவராக இருந்ததைத் தான் சுட்டிக் காட்டினரே அன்றி ஆதம் நபியவர்களுக்கு முன் படைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லவில்லை என்று கூறுகின்றனர்.

இவர்களது கருத்தை நாம் சரியான ஒன்றென வைத்துக் கொண்டால் அருமை நபியவர்கள் முன்பே நபியாக படைக்கப்பட்டிருந்தனர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் நபியவர்களுக்கு நாற்பதாம் வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று பின்பு எப்படிக் கூறுகின்றனர்? இந்த நயவஞ்சகர்கள் முன்னுக்குப் பின் முரணான கருத்தைச் சொல்பவர்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

பின்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வுடைய ஏற்பாட்டில் நபியாக இருந்தார்களே அன்றி ஆதம் நபியவர்களுக்கு முன் படைக்கப்படவில்லை என்னும் அவர்களது கருத்து அவர்களால் எடுத்துக் காட்டப்படும் ஹதீதைக் கொண்டே முறியடிக்கப்படுவதை பாருங்கள். எப்படித் தெரியுமா?

நான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருக்கும் போதே நபியாக இருந்தேன் என்று சொன்னதை கொஞ்சம் உங்களின் சிந்தனைக்கு

முதலில் எடுத்துக் கொள்ளுங்கள்.

அதாவது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "ஜஸத்" என்னும் சடத்தத்துவ ஒரு பொருளாக அமைக்கப்படுவதற்கு முன் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நபியாக இருந்ததைப் போலவே ஆதம் நபியவர்கள் "ரூஹ்" என்னும் ஒரு ஆன்மாவின் நிலைக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் நமது நாயகமவர்கள் "நபியாகத்தான்" இருந்துள்ளனர் என்பதை மேற்கண்ட ஹதீத் நமக்கு விளக்கிக் காட்டுவதை உணர்ந்தால் இந்நயவஞ்சகர்களின் வாதம் செயலிழந்து போய் அண்ணல் நபியவர்களே சிருஷ்டிகளில் முதன்மையானவர் என்பதை கண்டிப்பாக புரிந்து கொள்ளலாம்.

எனவே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆதம் நபியவர்களுக்கு முன்னரே படைக்கப்பட்டு நபித்துவம் வழங்கப்பட்ட நபியாக இருந்தார்கள் என்பதை நாம் ஈமான் கொண்டேயாக வேண்டும்.

மேலும் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான் அல்லாஹ்வை ஈமான் கொண்டவர்களில் முதன்மையானவர்களும், இதேபோன்று முஸ்லிம்களிலும் முதன்மையானவர்களாகும் என்பதை நிரூபிக்கும் அல்குர்ஆனின் சூறா அஸ்ஸுமரின் வசனமும் சூறா அன்ஆமின் வசனமும் நபியவர்கள்தான் இறைவனது முதல் சிருஷ்டி என்பதை நமக்குத் தெளிவுபடுத்திக் காட்டி விட்டன.

இனி திங்களெங்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நான் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு முன்பே நபியாக இருந்தேன், படைக்கப்பட்டிருந்தேன் என்பதாகச் சொல்லப்படும் நபிமொழிகள், அல்லாஹ்வால் தோற்றுவிக்கப்பட்ட ஆதம் நபியவர்கள் தான் அவனது முதல் பிரதிநிதி என்னும் தெளிவான கொள்கைக்கு முழுக்க முழுக்க மாறுபட்ட, பிழையான ஒன்றாகவல்லவா இருக்கிறது என்றும், மேலும் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தானே மனித இனத்திற்கெல்லாம் முதல் தந்தையான அபுல் பஷர். அப்படியிருக்கும் போது அண்ணல் நபியவர்கள் அவர்களுக்கும் முன்னதாக படைக்கப்பட்டிருந்தார்கள் என்பதோடு நபி

யாகவும் இருந்தார்களென்று சொல்லப்பட்ட வார்த்தைகள் ஒருவேளை ழயீபான - பலவீனமான சொல்லாக இருக்க லாமோ என்னும் சந்தேகத்திற்குரிய கேள்விகள் நமக்குள் எழுவதை நம்மால் உணர முடிகிறது. ஆதலால் இங்கே இரு விஷயங்களுக்கு முதலில் நாம் விடை காண வேண்டும். அதாவது.,,,

1. அபுல் பஷர் என்றழைக்கப்படும் ஆதம் நபிக்கு முன்பே நான் நபியாக படைக்கப்பட்டிருந்தேன் என்னும் தகவல் பலவீனமானதா?

2. அவ்வாறின்றி சொல்லப்பட்ட தகவல் உண்மையான நம்பத்தகுந்த ஒன்றெனில் நபியவர்களால் சுட்டிக் காட்டப் பட்ட அந்த வாக்கியத்தின் அர்த்தமென்ன?

பின்னும் நபிமார்களில் முதன்முதல் படைக்கப்பட்ட வனும், நபியாக ரஸூலாக அனுப்பப்பட்டோரில் இறுதியா னவனும் நானே என்ற தகவலும், நான் ஆதம் நபியவர்கள் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருந்த போதே நபியாக இருந்தேன் என்ற தகவலும் பல்வேறு தரப்பாரைக் கொண்டு பல நூல்களில் பதிவாகியுள்ளது.

இதில் ஒரு தகவலை அறிவிப்பவர்களில் ஒருவர் பலவீ னமானவராக இருந்தாலும் அத்தகவலை நம்பிக்கைக்குரிய பலர் உண்மையான ஒன்றென அறிவிக்கும் பட்சத்தில் அத் தகவல் மிகவும் நம்பத்தகுந்த ஒன்றாகி விடும் என்பது உலக நியதி மட்டுமல்ல. ஹதீதுக்கலை நியதியும் அதுதான்.

எனவே மேற்கூறப்பட்ட தகவலை இமாம் திர்மிதி, இமாம் அஹ்மத் பின் ஹன்பல், இமாம் சுயூத்தி, இமாம் பகவி, இமாம் தப்ரானி, இமாம் புகாரி, அபூநயீம், போன்ற பெரும் பெரும் அறிஞர் பெருமக்களெல்லாம் தமது நூல்களில் பதிவு செய்திருப்பதே நமக்கு தக்க சான்றாகும். அத்துடன் நாம் நமது மூதாதையரை மனதார ஏற்றுக் கொண்டிருப் பவர்கள். அவர்களின் வார்த்தைகளை மதிப்பவர்கள். இன்னும் இத்தகவல் நம்பத்தகுந்த ஒன்றல்ல என்று எந்தக் கொம்ப னாலும் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரு ஹதீத் ழயீபான தாக இருக்குமாயின் அந்நிலையில் அதற்குரிய சட்டமென்ன?

அதன் வகைகளென்ன? என்பனவற்றை எல்லாம் நமது மூதாதையர்கள் நமக்கு நன்கு விளக்கித்தந்த பின்னர் எல்லா நபிமொழிக் கிரந்தங்களில் இருந்தும் ழயீபான தகவல் களைத் தேடிக் கண்டுபிடித்து அதற்குரிய வகையென்ன என்பதைச் சொல்லாமல் வெறுமனே ழயீப் என்பதற்காக அதை ஆதாரமாக எடுக்க முடியாதென்றொரு புதியதோர் கருத்தை இஸ்லாமிய சமூகத்திற்குள்ளே திணித்ததைக் கொண்டு இஸ்லாமிய சமுதாயத்தையே துண்டாடிய ஒரு வரே தமது "ஸில்ஸிலத்து அஹாதீதிஸ் ஸஹீஹா" என் னும் நூலில் பாகம்-4, பக்கம்-471, எண்-1856ல் மேற்கண்ட நபி மொழி ஸஹீஹானது எனத் தீர்ப்பளித்திருப்பதே இங்கு மிக மிகக் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அவர் தான் அல்பானியாகும். இவர் இச்சமுதாயத்தின் மாபெரும் வழிகேடனும் கூட.

ஆதலால் "அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அபுல் பஷராகிய ஆதம் நபியவர்களுக்கு முன்பே நபியாக இருந்தனர்" என்னும் தகவல் நம்பிக்கைக் குரிய ஒரு தகவலாகும் என்பதுடன் அருமை நபியவர்கள் ஆதம் நபியவர்களுக்கும் முந்தியவர்கள் என்பதும் நிரூபன மாவதால் இந்நிலையில் அவர்கள் மண்ணால் படைக்கப் பட்டிருக்க முடியாது என்பதும் நமக்குப் புலனாகிறது. அத்துடன் ஆதம் நபியவர்கள் தான் முதல் மனிதர் என்பதி லும் நமக்குச் சந்தேகமில்லை. ஏனெனில் நமது நபியவர்கள் ஆதம் நபிக்குமுன் மனிதராகத்தான் இருந்தார்கள் என்பதை நாம் நிரூபிக்க முன்வரவில்லை. அவ்வாறாயின் நாம் நிரூபிக்க முனைவதென்ன?

அல்லாஹ்வின் முதல் படைப்பு எது?

இப்புவியிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வால் படைக் கப்பட்ட படைப்புக்களேயாகும். இனி அவை நமது கண்க ளுக்குப் புலப்பட்டாலும் சரி. புலப்படாமல் போனாலும் சரி. அதேநேரம் படைக்கப்பட்ட சிருஷ்டிகளில் மனித இனம் தான் மிகச் சிறந்த ஓர் சிருஷ்டியாகும்.

இன்னும் சிருஷ்டிகளனைத்தும் மனிதனுக்காகவும் மனிதன் தன்னைப் படைத்தவனை வணங்குவதற்காகவுமே

படைக்கப்பட்டான். இதைக்குறித்து இறைவன்.,,,

وما خلقت الجن والانس الا ليعبدون

"ஜின்னையும் மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே படைத்தேன் என்று கூறுகிறான்."

(அத்தாரியாத்-56)

வணங்குவதற்காக என்றால் இங்கே அறிவதற்காக என்பது பொருளாகும். எனவே மனிதனும் ஜின்னும் அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்காகப் படைக்கப்பட்டுள்ளதால் தான் மனிதன் எல்லா சிருஷ்டிகளை விடவும் உயர்ந்தவனாகத் திகழ்கிறான். இக்கருத்தை தான் கீழ்காணும் அரபி வாக்கியமும் சொல்லிக் காட்டுகிறது.

كنت كنــزا لاأعرف فأحببت أن أعرف فخلقت خلقا

"நான் (அல்லாஹ்) அறியப்படாத ஒரு மறைபொருளாக இருந்தேன். அதுபோது நான் அறியப்படுவதற்காக படைப்புக்களை படைத்தேன்"

இது ஸூஃபிய்யாக்கள் மத்தியில் பேசப்படும் ஒரு வாக்கியமே அன்றி இதை ஹதீத் என்று சொல்வதற்குரிய ஆதாரம் எதுவுமில்லை. அதேநேரம் மேற்கண்ட அரபி வாக்கியத்திற்குத்தான் ஆதாரமில்லையே தவிர அந்த வாக்கியத்தில் பொதிந்துள்ள கருத்துக்கு ஆதாரமில்லை என்பது அர்த்தமல்ல. அத்துடன் ஸூஃபிய்யாக்கள் மத்தியில் பேசப்படும் ஒன்று ஆதாரமற்றதாக நிச்சயம் இருக்காது. (கஷ்புல் கிபா, 2-121)

எனவே சிருஷ்டி என்பதன் கருத்து சிருஷ்டிகர்த்தாவை அறிவதேயாகும். இது மனிதனைக் கொண்டு மட்டுமே சாத்தியமாகும். அதனால் தான் மனித இனம் எல்லா இனத்தை விட மேலான அந்தஸ்த்தை கொண்டதாக அமைந்துள்ளது.

இதில் அறியப்படாத பொருளாக இருந்த அல்லாஹ் தான் அறியப்பட வேண்டுமென்று நினைத்ததும் அவனால் முதன் முதல் படைக்கப்பட்ட பொருள் எது என்பதே தற்

போது நமக்குமுன் எழுந்துள்ள கேள்வியாகும். அதேநேரம் அறியப்படாது இருந்தவனை அறிந்து கொள்ளும் பொருள் என்பது மனிதன் என்னும் பொருள்தான். அப்படியானால் அந்த மனிதன்தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் நியதியும் கூட. இதற்கு மாற்றமான தகவல்கள் காணப்படும் பட்சத்தில் அதை விளக்குவது நம்மீது கடமையுமாகும்.

தண்ணீர் தான் முதல் படைப்பு

إن رسول الله صلى الله عليه وآله وسلم قال كان الله
ولم يكن شيئ غيره وكان عرشه على الماء.

"அல்லாஹ் தனித்தவனாக இருந்தான். இன்னும் அவனது அர்ஷ் தண்ணீரின் மேல் இருந்தது என்று ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர்." (நூல் : புகாரி, கிதாபு பதியில் கல்கி)

عن ابى هريرة رضى الله عنه قال قلت يارسول الله صلى
الله عليه وآله وسلم إني إذا رأيتك طابت نفسي وقــرت
عيني فأنبئني عن كل شيئ قال كل شيئ خلق من الماء

"ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர். அல்லாஹ்வின் ரஸூலே! உங்களைக் கண்டால் என் உள்ளம் மிளிர்கிறது. எனது கண்கள் குளிர்ச்சியடைகின்றன. அருமை ரஸூலே! வஸ்துக்களின் அஸ்த்திவாரம் என்ன? என்று கேட்க, அதற்கு நபியவர்கள்; அனைத்தும் தண்ணீரிலிருந்தே தோற்றுவிக்கப்படுகின்றன என்று சொன்னார்கள்." (அ-ர் ஹழரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான், கிதாபுஸ் ஸலாத்.)

إن الله لم يخلق شيئا مما خلق قبل الماء

"தண்ணீரைப் படைக்குமுன் அல்லாஹ் வேறு எதையும் படைக்கவில்லை." (நூல் : பத்ஹுல்பாரி,

பாகம்-6, பக்கம்-334, கிதாபு பத்யில் கல்கி.)

மேற்கண்ட மூன்று ஸஹீஹான ஹதீதுகளும் தண்ணீ ரும் அர்ஷும் தான் இறைவனது முதல் படைப்பென்று சொல்கிறது. அதிலும் தண்ணீர் அர்ஷுக்கு முன்பே படைக் கப்பட்ட ஒன்று.

إن الماء خلق قبل العرش

"நிச்சயமாக தண்ணீர் அர்ஷுக்கு முன்பே படைக் கப்பட்டு விட்டது." (நூல் : பத்ஹுல்பாரி, கிதாபு பத்யில் கல்கி.)

وكان عرشه على الماء

"அல்லாஹ்வின் அர்ஷ் தண்ணீரின் மேலிருந் தது." (சூரா ஹூத், வசனம்-7.)

கலம் முதல் படைப்பு

أول ما خلق الله القلم ثم قال أكتب فجري بما هو كائن الى يوم القيامة

"அல்லாஹ் முதன் முதல் படைத்தது "கலம்" என் னும் எழுதுகோலாகும். பின்னர் அதை எழுதும்படியாக உத்திரவிட, அது; மறுமை நாள்வரை நிகழும் அனைத் தையும் எழுதிற்று." (நூல் : பத்ஹுல்பாரி, பாகம்-6, பக்கம்-334, கிதாபு பத்யில் கல்கி.)

முன்னால் சொல்லப்பட்ட நபிமொழிகள் தண்ணீர் தான் அனைத்துக்கும் அஸ்த்திவாரம் என்றும், அதிலிருந்து தான் எல்லாமே படைக்கப்பட்டதென்றும், அதுதான் இறை வனது முதல் படைப்பு என்பதையும் அதன்பின்னரே அர்ஷ் படைக்கப்பட்டதென்னும் விபரத்தையும் பார்த்தோம். ஆனால் மேற்கண்ட நபிமொழி "எழுதுகோல்" தான் முதன் முதல் படைக்கப்பட்டதென்று கூறுகிறது. அப்படியானால் முதன் முதல் படைக்கப்பட்ட பொருள் எது என்னும் கேள் விக்கு இப்போது நாம் விடைகாண வேண்டும். இதற்குரிய பதிலை இமாம் இப்னு ஹஜர் அஸ்க்கலானி ரஹிமஹுல்

லாஹ் அவர்கள் பத்ஹுல்பாரி, என்னும் நூல் பாகம்-6, பக்கம்-334ல் கூறும்போது.,,,

فيجمع بينه وبين ما قبله بأن أولية القلم بالنسبة الى ما عدا الماء والعرش

"தண்ணீர், அர்ஷ் ஆகிய இவ்விரண்டையும் தவிர்த்து "எழுதுகோல்" தான் முதன் முதல் படைக்கப் பட்டது என்று கூறுகின்றனர்."

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது, தண்ணீரும் எழுதுகோலும் முதல் படைப்பாக அமைவதற்கு அவைகள் தகுதி வாய்ந்தவை களல்ல. ஏனெனில் இவ்விரண்டுமே மனிதனுக்காகத்தான் படைக்கப்பட்டன.

மேலும் இங்கே எழுதுகோல் என்பது தண்ணீரும், அர்ஷும் இன்றி முதல் படைப்பாக படைக்கப்பட்டதால் இவ்விரண்டுக்கும் முன்னால் எழுதுகோல் முதல் படைப் பென்று சொல்லலாம். இதேபோன்று அர்ஷ் என்பதும் அதற்குப் பின்னால் படைக்கப்பட்ட பொருட்களை கவனத் தில் கொள்ளும் போது அது முதல் படைப்பென்பதில் சந்தேகமில்லை. எனவே தண்ணீருக்கும் அர்ஷுக்கும் முன்ன தாக ஒரு பொருள் இருந்தது. அதைக்குறித்த ஓர் நபிமொழி யைப் பாருங்கள்.

ولقد خلقت العرش على الماء فاضطرب فكتبت عليه لاإله إلاالله محمد رسول الله فسكن

"தண்ணீரின் மீது அர்ஷ் படைக்கப்பட்ட போது அது நடுங்கவே அதன்மீது லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று எழுதினேன். அதன் பின்னரே அது அமைதியடைந்தது என்பதாக அல்லாஹ் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வஹீ அறிவித் தான்." (நூல்: அல் முஸ்தத்ரக், பாகம் - 2, பக்கம் - 672.) இன்னும் இது ஒரு ஸஹீஹான ஹதீதாகும் என்று இமாம் ஹாகிம் கூறுகின்றனர்.

எனவே எல்லா சிருஷ்டிகளுக்கும் முதன் முதலாகப் படைக்கப்பட்டவர்கள் நமது நாயகம் ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான். இவ்வாறு நாம் சொல்லவில்லை. ஸய்யிதுனா ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு நபியவர்கள் தருகின்ற பதிலைப் பாருங்கள்.,,,

عن جابر رضي الله عنه قال يارسول الله صلى الله عليه وآله وسلم أخبرني عن أول شيئ خلق الله قبل الأشياء قال: ياجابر إن الله تعالى خلق قبل الأشياء نور نبيك من نوره فجعل ذالك النور يدور بالقدرة حيث شاءالله تعالى و لم يكن في ذالك الوقت لوح ولاقلم ولاجنة ولانار ولاملك ولاسماء ولاأرض ولاشمس ولاقمر ولاجن ولاانس - الحديث

"அல்லாஹ்வின் ரஸூலே! அனைத்து வஸ்துக்களையும் படைக்குமுன் அல்லாஹ் முதன் முதல் எதைப் படைத்தான் என்பதை எனக்குச் சொல்லுங்களென்று கேட்க, அதற்கு நபியவர்கள்; அல்லாஹ் முதன் முதல் உமது நபியின் "நூரை" அல்லாஹ்வுடைய நூரிலிருந்து படைத்தான். பின்னர் படைக்கப்பட்ட அந்த நூர் அல்லாஹ்வுடைய விருப்பப்படி உலவிக் கொண்டிருந்தது. அப்போது லௌஹு, கலம், பூமி, சூரியன், சந்திரன், மனிதன், ஜின் போன்ற எதுவுமே இருக்கவில்லை ஜாபிரே என்று ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்." (அ-ர்: ஹழரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு)

இந்த ஹதீத் மிக நீண்ட ஓர் ஹதீதின் ஒரு பகுதியாகும். இதனை இமாம் அப்துர் ரஸ்ஸாக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "முஸ்னதில்" பதிவு செய்துள்ளதாக இமாம் கஸ்தலானி, இமாம் ஸுர்கானி, அஷ்ஷைகு தப்பாக், இமாம் நப்ஹானி, இமாம் பைஹகீ, அல்லாமா அப்துல்ஹக் முஹத்தித் தெஹ்லவி போன்றோர் தத்தம் தமது நூல்களில் பதிவு செய்துள்ளனர். பின்னும் இந்த நபிமொழியை அப்துர் ரஸ்ஸாக் அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளதாக அஷ்ஷைகு யூசுப் ஹாஷிமுர்ரிபாஈ தவ்வலல்லாஹு ஹயாத்தஹூ அவர்கள் தமது "அர்ரத்துல் முஹ்கமுல் மனீஃ" என்னும் நூலில் 22ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது மிக மிகக் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

எனவே தண்ணீர் மற்றும்அர்ஷுக்குப் பிறகு படைக்கப்பட்ட "கலம்" என்னும் பொருளை அதுதான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டதெனச் சொல்லப்பட்ட நபிமொழிக்கு விளக்கமளித்த ஹதீதுக்கலை விரிவுரையாளர்கள் "கலம்" மேற்கண்ட இரு பொருட்களுக்கும் பின்னால் படைக்கப்பட்டிருந்தாலும் கூட அது கலம் என்னும் ஒரு இனத்துக்கு முதன்மையானது தானே என்றெல்லாம் விளக்கமளித்தனர். இதுபோலவே கலம் மட்டுமல்ல. தண்ணீர் மற்றும் அர்ஷ் போன்றவை படைக்கப்படுவதற்கு முன்பே நமது நபியவர்களின் ஜோதிதான் முதன் முதல் படைக்கப்பட்டது.

காரணம் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான் முதன் முதலாகப் படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் நமது நபியவர்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள். இனி அல்லாஹ்வை அறியும் ஆற்றல் என்பது மனிதனுக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. பின்னும் தண்ணீரும் கலமும் மனித உபயோகத்திற்காக படைக்கப்பட்ட பொருட்களாகும்.

மேலும் மனித இனம் என்பது ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைக் கொண்டு துவக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு முன்பே மண், தண்ணீர், வானம், பூமி, காற்று, மலக்கு, லௌஹ், கலம் போன்றவை படைக்கப்பட்டிருந்தாலும், யாருக்காக இவைகளெல்லாம் படைக்கப்பட்டனவோ அவைகளனைத்துக்கும் முன்னரே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி படைக்கப்பட்டிருந்தது என்பதுதான் உண்மை.

இங்கே ஆதம் நபியவர்களுக்கு முன்பே நான் படைக்கப்பட்டிருந்தேன் என்னும் நபியவர்களின் வாக்கியம் அவர்கள் நூராகப் படைக்கப்பட்டிருந்தார்கள் என்பதேயாகும்.

இதுபோன்றே தண்ணீரின் மீது அர்ஷை வைத்த போது அது நடுங்கவே அதன்மீது லாஇலாஹ இல்லல் லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று எழுதப்பட்ட பின் அது அமைதியானது என்னும் வாக்கியத்தையும் கவனித் தால் அர்ஷுக்கும் முன்னரே நமது நபியவர்களின் ஜோதி தான் படைக்கப்பட்டிருந்தது என்பதும் நமக்குப் புரியும்.

ஆதலால் அனைத்து சிருஷ்டிப் பொருட்களுக்கும் முன்னதாக நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லமவர்களின் ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டதென்னும் ஹதீதுக்கு "நூர்" என்றால் அது "ரூஹ்" தானென்று விளக்கமளிக்கின்றனர். விளக்கம் எப்படித் தரப்பட்டாலும் நமது நபியவர்கள் தான் முதல் படைப்பு என்பதை ஒப்புக் கொண்டால் சரி.

மேலும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அகமியத்தைப் பொய்யாக்கி நபியவர் கள் "நூர்" அல்ல. வெறும் மனிதர் மட்டுமே எனப் பிரச்சா ரம் செய்பவர்கள் "நூர்" சம்பந்தமாகப் பேசும் ஹதீதைப் பற்றி கூறும்போது, அந்த ஹதீதை அறிவிக்கும் இமாம் அப்துர் ரஸ்ஸாக் ரஹிமஹுல்லாஹ் அவர்களை நம்ப முடியாது. ஏனெனில் அவர் ஒரு "ஷியா" என்று தேவ்பந்த் பெரியார்களில் ஒருவரான சர்பராஸ்கான் என்பவர் தமது "நூரே வ பஷர்" என்னும் நூலில் 48வது பக்கத்தில் கூறுகி றார். ஆனால் அவரே அந்நூலின் 100வது பக்கத்தில் தமக்குச் சாதகமான விஷயத்தைச் சொல்லும்போது அதை அறிவிக் கும் அப்துர் ரஸ்ஸாக்கை நம்பத்தகுந்தவர். அவர் மிகப் பெரும் அறிஞர்களில் ஒருவர் என்றும் கூறுகிறார்.

மேலும் இவர் அந்நூலில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு ஜோதியாக படைக்கப்பட்டார்கள் என்னும் நபிமொழியை மறுக்கிறார். பின்னர் அவரிடம் உங்களது முன்னோர்கள் இந்த நபிமொழியை ஸஹீஹான ஒன்றெனக் கூறுகின்றனர் என்றபோது, அதற்கவர்; அதை நாம் எப்போது மறுத்தோம்? என்று கேட்டுவிட்டு, எமது பெரியார்கள் நூர் பற்றிய அந்த ஹதீதை ஸஹீஹென்று சொன்னதன் கருத்து "நூர்" என் றால் "ரூஹ்" என்பதுதான் அதற்குரிய கருத்தாகும். இதே

கருத்தைத்தான் முல்லா அலி காரி அவர்களும் தமது மிர்காத் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று கூறுவதன் மூலம் முல்லா அலி காரியும் முதன் முதல் நபியவர்களின் நூர் படைக்கப்பட்டதென்னும் கருத்துக்கு மாறான கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்று அவராகவே நினைத்துக்கொண்டு சந்தோஷப்பட்டுக் கொள்கிறார். இது நல்லதல்ல.

ஏனெனில் சர்பராஸ் சாஹிபவர்கள் இமாம் முல்லா அலி காரியின் "அல் மௌலிதுர் ரவி" என்னும் நூலின் 44 வது பக்கத்தை எடுத்துப் பார்க்க வேண்டுகிறோம். அதில் நூர் சம்பந்தமாக ஹழரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு வால் அறிவிக்கப்படும் ஹதீதை பதிவு செய்துள்ளது குறிப்பி டத்தக்க ஒன்றாகும்.

எனவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக் கப்பட்டது. அதன் பின்னரே மற்ற சிருஷ்டிகளனைத்தும் படைக்கப்பட்டன. இதை அல்லாஹ் எப்படிச் சொல்கிறா னென்று பாருங்கள்...

حدثنا علي بن حمشـاد العدل املاء ثنا هارون بـن العبـاس الهاشمي ثنا جندل بـن والق ثنا عمرو بـن اوس الانصاري ثنا سعيد بن ابي عروبة عن قتادة عن سعيد بـن المسيب عن ابن عباس رضي الله تعالى عنهما قال: اوحـى الله الى عيسى عليه السلام ياعيسى آمن بمحـمد وأمر من أدركه من أمتك أن يؤمنوا به فلولا محمد ما خلقـت آدم ولولا محمد ما خلقت الجنة ولاالنار

"(ஈஸா நபியவர்களே!) முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீது விசுவாசம் கொள்ளும். இன்னும் உமது சமுதாயத்தினரில் அவரது காலத்தைப் பெற்றுக் கொள்வோரையும் விசுவாசம் கொள்ளச் சொல்லும். ஏனெனில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இல்லையேல் நான் ஆத

மைப் படைத்திருக்க மாட்டேன். சுவர்க்க நரகத்தையும் படைத்திருக்க மாட்டேன் என்று அல்லாஹ் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வஹீ அறிவித்ததாக ஹழரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்."

இந்த ஹதீதை இமாம் ஹாகிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது முஸ்தத்ரக்கில் பதிவு செய்துவிட்டு "ஹாதா ஹதீதுன் ஸஹீஹுல் இஸ்னாதி வலம் யுக்ரிஜாஹ்" என்று கூறுகின்றனர். அதாவது, இது புகாரி, முஸ்லிம் ஆகிய இருவரது நிபந்தனைகளுக்கும் உட்பட்ட ஸஹீஹான அறிவிப்பாளர்களைக் கொண்ட ஹதீதாகும். இருப்பினும் அவர்கள் இதை பதிவு செய்யவில்லை என்று கூறுகிறார். பாகம்-2, பக்கம்-672.

ஆனால் இமாம் தஹ்பீ என்பவர் தமது தல்கீசில் இந்த ஹதீதைப் பற்றி "அழுன்னுஹு மௌழூஅன்" இது மௌழூஆ (இட்டுக் கட்டப்பட்டதா)க இருக்குமென்று நினைக்கிறேன் எனக்கூறுகிறார். இவர் என்ன நினைக்கிறார் என்பது நமக்கு முக்கியமல்ல. ஏனெனில் இந்த ஹதீதை இமாம் சுப்கி, இமாம் புல்கீனி போன்றோர் ஸஹீஹான ஒன்றென உறுதிப்படுத்தி உள்ளனர். இன்னும் இந்த ஹதீதை "அஷ்ஷீரத்துஷ் ஷாமிய்யா" என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-94ல் இமாம் தைலமி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் அறிவித்துள்ளதாக அர்ரத்துல் முஹ்கம் என்னும் நூலில் 20ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

حدثنا أبو سعيد عمرو بن محمد بن منصور العدل ثنا ابو الحسن محمد بن اسحاق ابــن ابــراهيم الحنظلى ثنا ابــو الحارث عبد الله بن مسلم الفهري ثنا اسماعيل بن مســلمة أنبأ عبد الرحمن بن زيد بن اسلم عن ابيه عن جده عن عمر بن الخطاب رضي الله عنه قال: قال رســول الله صلى الله عليه وآله وسلم لما إقترف آدم الخطيئة قال يارب أسـئلك بحق محمد صلى الله عليه وآله وسلم لما غفرت لي فقال الله

ياآدم و كيف عرفت محمدا و لم أخلقه؟ قال يارب لأنك لما خلقتني بيدك ونفخت في من روحك رفعت رأسي فرأيت على قوائم العرش مكتوبا لااله إلاالله محمد رسول الله صلى الله عليه وآله وســلم فعلمت أنك لم تضف الى إسمك إلا أحب الخلق إليك فقال الله صدقت ياآدم إنه لأحب الخلق إلي أدعني بحقه فقد غفرت لك ولولا محمد ما خلقتك

"ஹழரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களில் மறதியொன்று நிகழ்ந்தபோது, அவர்கள்; இறைவா! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் என்னை மன்னிப்பாயாக எனப் பிரார்த்திக்க, அதற்கிறைவன்; நான் இன்னும் அவரை வெளிப்படுத்தவே இல்லை. அப்படியிருக்க உமக்கு அவரை எப்படித் தெரியுமென்று கேட்டான். அதற்கவர்கள்; இறைவா! நீ உனது முபாரக்கான குத்ரத்தைக்கொண்டு என்னைப் படைத்து அதன்பின் ரூஹை ஊதினாய். அப்போது நான் எனது தலையை உயர்த்திப் பார்த்தபோது அர்ஷுடைய தூண்களில் "லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். அப்போது உனது பெயருடன் இன்னொருவரின் பெயரும் இணைந்திருக்குமாயின் அவர் உனக்குப் பிரியமானவராகத்தான் இருப்பார் என்பதை தெரிந்து கொண்டேன் என்று சொல்ல, அதற்கிறைவன்; ஆதமே! நீர் உண்மை சொன்னீர். கண்டிப்பாக அவர் எனக்குப் பிரியமானவரே. அவர் பொருட்டால் என்னிடம் கேளும். உனக்கு மன்னிப்புத் தருகிறேன். அத்துடன் அந்த முஹம்மத் இல்லையென்றால் உம்மைப் படைத்திருக்க மாட்டேன் என்றும் கூறினான் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்." (அ-ர் ஹழரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு)

இந்த ஹதீதை இமாம் ஹாகிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "அல் முஸ்தத்ரக்" என்னும் நூலின் பாகம்-

2, பக்கம்-672ல் கூறிவிட்டு.,,,

இது ஸஹீஹான அறிவிப்பாளர்களைக் கொண்ட ஹதீதாகும். அத்துடன் இது அப்துர் ரஹ்மானைக் கொண்டு அறிவிக்கப்பட்ட முதல் ஹதீதுமாகும் என்றும் கூறுகின்றனர்.

ஆனால் இமாம் தஹ்பீ இதையும் ஓர் இட்டுக்கட்டப்பட்ட ஹதீதாகுமென்று கூறுகிறார். இதை யாரும் பொருட்படுத்தத் தேவையில்லை. ஏனெனில் இவர் மிகக் கடினமாவர் என்பது அனைவருக்கும் தெரியுமென்று யூசுப் அஸ்ஸய்யிது ஹாஷிமுர் ரிபாயி என்பவர் தமது "அர்ரத்துல் முஹ்கம்" என்னும் நூலில் 20வது பக்கத்தில் கூறிவிட்டு.,,,

இந்த ஹதீத் இமாம் பைஹகீ அவர்களின் "தலாயிலுன் நுபுவ்வத்" என்னும் நூலில் 5-489ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இமாம் பைஹகீ அவர்கள் தமது நூலில் "மௌழூவு" எனத்தெரிந்த எந்தவொரு தகவலையும் பதிவு செய்யவில்லை என்றும் இமாம் சுயூத்தி ரஹிமஹு"ல்லாஹ் அவர்கள் தமது "அத்தௌஹீது மினல்லாயில் மஸ்னூஆ" என்னும் நூலில் குறிப்பிட்டிருப்பது இங்கே கவனிக்கத்தக்க ஒன்றாகும். பின்னும்.,,,

இதை ஒரு மௌழூஆன ஹதீஸென்று சொன்ன இமாம் தஹ்பி அவர்கள், அந்த ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ள தலாயிலுன் நுபுவ்வத் என்னும் நூல் சம்பந்தமாகப் பேசும் போது, இந்நூல் விஷயத்தில் கவனமாக இருந்துகொள். ஏனெனில் நிச்சயமாக அதில் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் ஹிதாயத்துக்குரிய விஷயங்களாகும் என்று கூறியுள்ளார். (நூல் : அர்ரத்துல் முஹ்கம், பக்கம்-20.)

இன்னும் இந்த ஹதீதை ஹாபிழ் இப்னு கதீர் அவர்கள் தமது "அல் பிதாயா வந் நிஹாயா" என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-81ல் குறிப்பிட்டபின், இதனை இமாம் ஹாகிம், இமாம் பைஹகீ, இப்னு அஸாகிர் ரஹிமஹு"முல்லாஹ் போன்றோரும் தமது நூல்களில் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் இந்த ஹதீதைப் பதிவு செய்துள்ள இமாம்

பைஹகீ அவர்கள், இந்த ஹதீதை அப்துர்ரஹ்மான் பின் ஸைத் பின் அஸ்லம் என்பவர் மட்டும் அறிவித்துள்ளார். இவர் ழயீபானவராகும். இருப்பினும் அனைத்தையும் அறிந்தவன் அல்லாஹ் ஒருவனே என்றும் கூறியுள்ளார்.

இதுபோலவே இமாம் ஹாகிம் அவர்கள், இந்த ஹதீதை ஸஹீஹ் என்று குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் இமாம் பைஹகியும் தமது நூலில் பதிவு செய்திருப்பதால் இதுவே மிகப்பெரும் ஆதாரமெனக் கருதி பெரும்பான்மையான பெரியோர்கள் இந்த ஹதீதை தமது நூல்களிலும் பதிவு செய்துள்ளனர். அவற்றை எல்லாம் உங்களுக்கு வரிசைப்படுத்திக் காட்டுமுன்னரே இமாம் தஹ்பி இதை மௌழூவு என்று சொல்லுவதையும் நாம் குறிப்பிட்டுக் காட்டினோம்.

மேலும் நம்மில் பலபேர் இந்த ஹதீதை ழயீப் என்றும், மௌழூவு என்றும் சொல்லி வருவதையும் நாம் அறிவோம். இவ்வாறு சொல்பவர்கள் இந்த ஹதீதை அறிவிப்பவர்களின் வரிசைப் பட்டியலை ஆய்வு செய்துதான் சொல்கிறார்களே அன்றி இந்த ஹதீதில் கூறப்பட்டுள்ள விஷயத்தின் கருத்தை ஆய்வு செய்தல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பின்னும் இந்த ஹதீதை இமாம் தஹ்பி அவர்கள் பொய்யான ஒன்றெனக் கூறியது இவர்களுக்கு ஆதாரமாகுமானால், ஹாகிம் போன்றோர் இது நம்பத்தகுந்த ஹதீதென்று கூறியதே நமக்கு ஆதாரமாகும். இது நமக்கு பெருமையும் கூட.

"ஜர்ஹு"த் தஃதீலுடைய" விஷயத்தில் இமாம் தஹ்பியைப் பின்பற்றி இந்த ஹதீதை மறுப்போர் அதே இமாம் தஹ்பியால் நம்பத்தகுந்தவர் நேர்வழிக்குரிய நூலாசிரியர் என்றெல்லாம் சொல்லப்பட்ட இமாம் பைஹகீ அவர்கள் ஸஹீஹானதென்று சொன்னதை ஏன் ஏற்க முடியாமல் போய்விட்டது?

இன்னும் இமாம் ஹாகிம் மற்றும் இமாம் பைஹக்கியுடைய தீர்ப்பே நம்பிக்கைக்குரிய ஒன்றென்பதற்கு மற்ற இமாம்களான சுயூத்தி, கஸ்த்தலானி, ஸு"ர்க்கானி, சுப்கி, புல்கீனி, ஸைனி தஹ்லான், யூசுபுன் நப்ஹானி, இப்னு கதீர்,

அப்துல் கரீம் ஜீலி, சம்ஹூதி, முல்லா அலி காரி, இப்னு ஹஜர் ஹைதமி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரே நமக்கு போதுமானவர்களென்று நாம் நம்புகிறோம். எனவே இந்த நபிமொழி பதிவு செய்யப்பட்டுள்ள சில நூல்களையும் இப்போது பார்ப்போம்.

1. ஹுஜ்ஜத்துல்லாஹி அலல் ஆலமீன் பக்கம்-28.
2. அத்துரருஸ் ஸனிய்யா
3. அல் மகாலாத்துஸ் ஸனிய்யா பக்கம்-105.
4. மபாஹிம் யஜிபு அன்ய் யுஸஹ்ஹஹ பக்கம்-62.
5. அர்ரத்துல் முஹ்கம் பக்கம்-19.
6. ஹகீகத்துத் தவஸ்ஸுலி வல் வஸீலா பக்கம்-49.
7. தப்ரானி முஃஜிமுஸ் ஸகீர்
8. குலாஸத்துல் வபா பி அக்பாரி தாரில் முஸ்தபா பாகம்-1, பக்கம்-411.
9. ஷவாஹிதுல் ஹக் பக்கம்-37.
10. சிலாஹுல் முஃமின் பக்கம்-130.
11. உன்மூதஜுல் லபீப் பீ கஸாயிஸில் ஹபீப் பக்கம்-15.
12. ரியாழ் சம்தித் துரர் பக்கம்-11.
13. மவாஹிபுல் லதுன்னிய்யா
14. ஸுர்கானி அலல் மவாஹிப்
15. மௌஸூஅத்துல் யூசுபிய்யா
16. அத்தவஸ்ஸுலு பில் அன்பியாயி வஸ்ஸாலிஹீன்
17. அஷ்ஷரீஆ பக்கம்-432.
18. பிக்ஹுஸ் ஸுன்னா
19. மிக்யாஸே நூர் - உர்து
20. தௌழீஹுல் பயான் - உர்து
21. ரப்புல் மினாரா
22. அல் மௌலிதுர் ரவி பில் மௌலிதின் நபி பக்கம்-47, முல்லா அலி காரி.
23. மௌலிதிர் ரஸூலில்லாஹ் பக்கம்-19, இப்னு கதீர்.
24. மௌலிதுன் நபி பக்கம்-18, இப்னு ஹஜர் ஹைதமி.

மேற்கண்ட நூல்களையும் மற்றும் அதன் ஆசிரியர்களையும் நாம் நம்ப வேண்டும். ஏனெனில் இந்த ஹதீதை எவராலும் பொய்யாக்க முடியாதென்பதாலே. அப்படியே ஒருக்கால் சிலர் பொய்யாக்க முனைந்தாலும் அது அந்த ஹதீதை அறிவிக்கின்ற அறிவிப்பாளர்களின் வரிசையை

அடிப்படையை முன்வைத்துத்தான் சொல்ல முடியுமே அன்றி மற்றபடி இந்த ஹதீத் எதைக் குறித்து பேசுகிறதோ அந்த விஷயத்தை அடிப்படையாக வைத்து ஒருபோதும் பொய்யாக்கவே முடியாது. ஏன் முடியாது தெரியுமா?

இவ்வுலகில் படைக்கப்பட்டவை அனைத்தும் மனிதனுக்காகவும், மனிதன் தன்னைப் படைத்தவனை அறிவதற்காகவும் வணங்குவதற்காகவும் படைக்கப்பட்டுள்ளானாகையால் இப்பூமியிலுள்ள மலைகளும், மரங்களும், வானமும், பூமியும், சந்திரனும், சூரியனும், கடலும், கரையும் அந்த மனிதனுக்காகப் படைக்கப்பட்டிருப்பதால் இந்த ஹதீதை ஒருபோதும் பொய்யாக்க முடியாதென்றே திண்ணமாகச் சொல்லுவோம்.

அடுத்து இப்பூமியும் இதிலுள்ளவைகளும் மனிதனுக்காகப் படைக்கப்பட்டதென்று சொல்லப்பட்டாலும் இதில் எல்லா மனிதர்களும் ஒருவருக்கொருவர் சமமானவர்களா என்று கேட்டால் இல்லையென்று தான் பதில் சொல்லுவோம். ஏனெனில்.,,,

حدثنا ابو المغيرة حدثنا صفوان حدثني شريح يعني ابن عبيد قال ذكر أهل الشام عند عليّ بن أبي طالب وهو بالعراق فقال إلعنهم يا أمير المؤمنين قال لا: إني سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول الأبدال يكونون بالشام وهم أربعون رجلا كلما مات رجل أبدل الله مكانه رجلا. يسقى بهم الغيث وينتصر بهم على الأعداء ويصرف عن أهل الشام بهم العذاب

“ஸய்யிதுனா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஈராக்கில் இருக்கும்போது, அவர்களிடம் அமீருல் முஃமினீனே! ஷாம் தேசத்தினரை சாபமிடுங்களென்று சொல்லப்பட்ட போது, அதற்கவர்கள்; முடியாதென்று மறுத்ததுடன், அங்குதான் அப்தால்கள் எனப்படுவோர் இருப்பர். அவர்கள் மொத்தம் நாற்பது பேராகும்.

அவர்களில் ஒருவர் மரணமடைந்தால் இன்னொருவர் அந்த இடத்தில் நியமிக்கப்படுகிறார். இன்னும் அவர்கள் பொருட்டே மழை பொழிகின்றது. எதிரிகளிடமிருந்து வெற்றி கிடைக்கிறது. முஸீபத்துக்கள் தூரமாக்கப்படுகின்றன என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்று கூறினர்."

நூல்: முஸ்னத் அஹ்மத், பாகம்-1, பக்கம்-326.)

حدثنا علي بن سعيد ثنا إسحاق بن رزيق الراسـي ثنا عبد الوهاب بن عطاء عن سعيد بن أبي عروبة عن قـتادة عن أنس رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وآله وسلم لن تخلو الأرض من أربـعين رجلا مثل خليل الرحمن فبهم يسقون وبهم ينصرون ما مات منهم أحد إلا أبدل الله مكانه آخر

"இப்பூவுலகில் அல்லாஹ்வின் கலீபாவாகிய இப்ராஹீம் நபியைப் போல் (இதயமுடையோர்) நாற்பது பேர் எப்போதும் இருந்துகொண்டே இருப்பர். அவர்கள் பொருட்டே மழை பொழிகிறது. இன்னும் அவர்கள் பொருட்டே விரோதிகளுக்கு எதிராக வெற்றி கிடைக்கின்றன. அவர்களில் ஒருவர் மரணமடைந்தால் இன்னொருவர் அவருக்குப் பகரமாக்கப்படுகிறார் என்று எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்." *(நூல்: தப்ரானி, அல் அவ்ஸத், மஜ்மவுல் பஹ்ரைன், பாகம்-7, பக்கம்-38. பாபு ஃபில் அப்தால்.)*

எனவே இவ்வுலகிலுள்ள அனைத்தும் மனிதர்களுக்காக என்று படைக்கப்பட்டிருந்தாலும் அம்மனிதர்களிலுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் சமமானவரல்ல. மாறாக அவர்களில் அல்லாஹ்வைக் கொண்டு பொருந்திக் கொள்ளப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் பொருட்டால் தான் இப்புவியிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பிரயோஜனம்

அளிக்கப்படுகிறது. அந்த நல்லடியார்களின் பொருட்டால் தான் மழை பொழிகிறது. ஆகையால் மனிதனுக்காக இவ்வுலகம் படைக்கப்பட்டதெனக் கூறுவதை விட நல்லடியார்களுக்காகவே இவ்வுலகம் படைக்கப்பட்டதென்று சொல்வது தான் ஏற்றமாகும். இன்னும் அடுத்து வரும் ஹதீதையும் கொஞ்சம் பாருங்கள்.,,,

حدثنا علي بن محمد بن عبيد الحافظ ثنا احمد بن سعيد الزهري حدثنا عبد العزيز بن ابى سلمة العمرى ثنا محمد بن عون مولى أم يحى بنت الحكم عن أبيه قال قال محمد بـن مسلم بن شهاب أخبرني ابو سلمة عن ابي هريرة رضي الله عنه قال سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول: خرج نبيّ من الأنبياء بالناس يستسقى فإذا هو بنملة رافعة بعض قوائمها الى السماء فقال إرجعوا فقد أستجيب لكم من أجل شأن هذه النملة

"நபிமார்களில் ஒருவர் தமது சமூக மக்களுக்காக வேண்டி மழைக்காக பிரார்த்திக்க வெளியே வந்தார். அப்போது ஒரு எறும்பு தனது காலை வானத்தின் பக்கமாக உயர்த்திக் கொண்டிருந்தது. அதுபோது அல்லாஹ், அந்த எறும்புக்காக உமது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று கூறினான் என்பதாக எங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர். *(நூல் : தாரகுத்னீ, பாகம்-2, பக்கம்-53. கிதாபுல் இஸ்திஸ்கா)*

இந்த ஹதீதை இமாம் ஹாகிம் தமது நூலின் பாகம்-1, பக்கம்-473, கிதாபுல் இஸ்திஸ்காவில் கூறிவிட்டு, "ஹாதா ஹதீதுன் ஸஹீஹுன்" இது அறிவிப்பாளர்களின் வரிசைத் தொடரைச் சரியாகக் காட்டும் உண்மையான ஹதீதாகும் என்று கூறுகிறார். இக்கருத்தை இமாம் தஹ்பியும் ஊர்ஜி தப்படுத்தியுள்ளார்.

எனவே இப்பூமியில் அல்லாஹ்வின் நல்லடியார்கள்

வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்காகத்தான் மழை பொழிவிக்கப்படுகிறது என்னும் கொள்கையை மேற்கண்ட எறும்பு சம்பந்தப்பட்ட ஹதீத்கூட உறுதிப்படுத்துவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆதலால் ஒரு எறும்பைக் கொண்டு அல்லாஹ் ஒரு சமுதாயத்திற்கு மழையைப் பொழியச் செய்தானெனில், திங்களெங் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்காக ஆதமையும் அகிலத்தையும் படைத்தானென்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதா? எனவே அருமை நபியவர்களுக்காகத்தான் அகிலங்களனைத்தும் படைக்கப்பட்டன. அவர்களின் ஜோதி தான் முதன் முதலில் படைக்கப்பட்ட ஹகீகத்தான ஒன்றாகும். அதன் பின்னரே படைப்புக்களில் முதன் முதல் தண்ணீரும், .அதற்கடுத்து அர்ஷும், அதைத் தொடர்ந்து கலமும் படைக்கப்பட்டன.

பின்னும் அனைத்து சிருஷ்டிப் பொருட்களுக்கும் முன்னதாக முதன் முதல் நமது நபியவர்களின் ஜோதிதான் படைக்கப்பட்டதென்பதை மறுக்கும் இந்த மாயக்காரர்கள் அந்த ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் வரிசைப் பட்டியலை வைத்துத்தான் மறுக்கின்றார்களே அன்றி அந்த ஹதீத் பேசுகின்ற கருத்தை வைத்தல்ல என்று நாம் கூறியதற்குக் காரணம், அனைத்தும் அருமை நபியவர்களுக்காகத் தான் படைக்கப்பட்டன என்பதாலேயே. அத்துடன் அவர்கள் இல்லையேல் அர்ஷுமில்லை. ஆலமும் இல்லையென்று சொல்லப்படும் ஸஹீஹான ஹதீத் எல்லாவற்றுக்கும் முன்னதாக முத்து நபியவர்கள் தான் படைக்கப்பட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதைக் கொண்டு நாம் புரிந்து கொள்ளலாம். அதன்றி நபியவர்களின் ஜோதிதான் முதன் முதலில் படைக்கப்பட்டது என்பதை மேலும் உறுதிப்படுத்த "லவ்லாக லமா கலக்துல் அஃப்லாக" என்னும் ஸஹீஹான ஹதீதையும் நாம் முன்பே குறிப்பிட்டோம். இருப்பினும்.,,,

"அல்லாஹ் எனது ஜோதியைத்தான் முதன் முதலில் படைத்தான்" என்னும் ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர் நம்பிக்கைக்குரியவரல்ல அத்துடன் இது முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் பதிவு செய்யப்படவில்லையெனக் கூறி மக்களை ஏமாற்றுவதைப் போல நமது நபியவர்கள் தான் முதல் படைப்பு என்பதை ஊர்ஜிதப்படுத்த எம்மால் முன்வைக்கப்

படும், "அவர் இல்லையேல் ஆதமைக்கூட படைத்திருக்க மாட்டேன்" என்னும் ஸஹீஹான ஹதீதை இமாம் தஹ்பி மறுக்கிறார் என்பதற்காகவும் அவர்கள் மறுக்கலாம். ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டிருக்க வேண்டும்; படைக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த நாம் எடுத்து வைக்கும் ஆதாரத்தை எவராலும் மறுக்க முடியாது என்பதோடு இதுவரை எவருமே மறுக்கத் துணிந்ததுமில்லை. அதுவென்ன என்பதைப் பார்க்கு முன் "அல்லாஹ் எனது ஜோதியைத் தான் முதன் முதலில் படைத்தான்" என்று கூறப்படும் ஹதீத் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாக் என்னும் நூலில் அந்த ஹதீத் பதியப்படவில்லை என்னும் கேள்விக்கு பதில் சொன்னபின் . மற்ற விஷயங்களைப் பார்ப்போம்.

அன்பர்களே!

நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு பஷ(மனித)ர் தானென்று வாதிக்கிறது ஒரு கூட்டம். இவர்களுக்கு நாம் பதில்சொல்ல வேண்டியதில்லை. நபியவர்கள் மனித நிலையினைக் கொண்டிருந்ததைப் போலவே ஜோதியின் நிலையையும் கொண்டிருந்தனர் என்கின்றது இன்னுமொரு கூட்டம். ஆனால் இவ்விரண்டாம் தரப்பை சார்ந்தவர்கள் நபியவர்களின் "அவ்வலிய்யத்தான நூரை" பொய்யாக்கப் பார்க்கின்றனர். அதே நேரம் "லவ்லாக லமா கலக்துக யா ஆதம்" என்னும் ஹதீதையும் ஏற்றுக் கொள்வதோடு, "ஆதமுக்கு முன்பே நான் நபியாக இருந்தேன்" என்ற ஸஹீஹான ஹதீதுக்கு அல்லாஹ்வுடைய ஏற்பாட்டில் அவ்வாறு இருந்ததாகவும், "நான் படைப்புக்களில் நபிமார்களுக்கெல்லாம் முதன்மையானவன்" என்னும் ஹதீதை ழயீப் என்றும் ஆதம் நபியவர்கள் தான் முதல் மனிதர் என்பது சரியான தகவல் என்றும் கூறுகின்றனர். மனிதர்களின் தந்தை எனும் பிரச்னையில் ஆதம் நபியவர்கள் தான் முதல் மனிதர் என்பதில் யாருக்குமே சந்தேகமில்லை என்ப்தை இவர்கள் நன்றாக தெரிந்து கொண்டே இவ்வாறு சொல்வதற்குரிய காரணமென்ன என்பதை பார்க்கும் போது, "அவ்வலு மா கலகல்லாஹு நூரீ" என்னும் ஹதீதை ஏற்க மறுப்பது தானென்று தெரிய வருகிறது.

பின்னும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனிதராகவும் ஜோதியாகவும் இருக்கிறார்கள் என்னும் உண்மையான கொள்கையைக் கொண்ட இவர்கள், நபியவர்களின் ஜோதி தான் முதன் முதலில் படைக்கப்பட்டதென்னும் ஹதீதை மட்டும் ஏற்றுக் கொள்ள மறுப்பதற்குரிய காரணமென்னவென்று வினவப்பட்டால் இந்த ஹதீத் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் இல்லை என்பதுதான் அவர்களது பதிலாக இருக்கிறது.

அவ்வாறாயின் 22-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர் அதே நூற்றாண்டில் அச்சிடப்பட்ட நூலொன்றைப் பார்க்கிறார். அதே நூல் 10-ம் நூற்றாண்டிலும் அச்சிடப்பட்டிருந்தது. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அந்த நூலைப் பார்த்து அதில் சொல்லப்பட்ட தகவலை ஆதாரமாகக் காட்டுகிறார். ஆனால் 22-ம் நூற்றாண்டில் அச்சிடப்பட்ட நூலைப் பார்க்கும் வேறொருவர் அந்தத் தகவல் அந்த நூலில் இல்லையென்று சொல்கிறார். இந்நிலையில் நாம் எவருடைய சொல்லை எடுத்துக் கொள்வதென்னும் கேள்வி பிறக்கிறது. இக்கேள்விக்கான பதிலை நாம் பார்க்க வேண்டுமானால் யார் அந்நூலில் இருப்பதாக ஆதாரம் காட்டுகிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அதாவது.,,

1. மௌழூஆன - பொய்யான ஹதீத் இதில் பதியப்படவில்லையென இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் உறுதி செய்யப்பட்ட "தலாயிலுன் நுபுவ்வத்" என்னும் நூலில் இந்த ஹதீத் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இமாம் பைஹகியின் நூலாகும். (ஸுர்கானி பாகம்-1, பக்கம்-91)

2. இந்த ஹதீதை முஹத்தித் அப்துர் ரஸ்ஸாக் ரஹிமஹுல்லாஹ் அவர்களே ஹழ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹில் அன்ஸாரி ரலியல்லாஹு அன்ஹுவைக் கொண்டு அறிவித்துள்ளதாக அல்லாமா கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "மவாஹிபுல் லதுன்னிய்யா பில் மன்ஹில் முஹம்மதிய்யா" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

3. அல்லாமா கஸ்த்தலானியின் நூலுக்கு விரிவுரை செய்துள்ள இமாம் ஸுர்கானி அவர்கள் பாகம்-1, பக்கம்-81ல் இந்த ஹதீதை விளக்கமாக கூறியுள்ளார்கள். அதில்

அப்துர் ரஸ்ஸாக் அவர்களின் முழுப் பெயரையும், அப்துர் ரஸ்ஸாக் பின் ஹுமாம் பின் நாபிஃ அல் ஹிம்மேரி என்று குறிப்பிட்டுள்ளார்.

4. இந்திய நாட்டில் ஹதீதுக் கலையை பிரபலப்படுத்தியவர் என்னும் பெருமைக்குரிய அஷ்ஷைகு அப்துல் ஹக் முஹத்தித் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பல்வேறு நூல்களில் இந்த ஹதீதைக் குறிப்பிட்டு இது ஸஹீஹான ஒன்றெனவும் கூறுகின்றனர். இவர் இந்திய நாட்டில் அனைவராலும் மதிக்கப்படுகின்ற ஒருவராகும்.

5.இந்திய தேசத்தில் தப்லீக் ஜமாஅத்தினரால் பெரும் மேதையெனக் கணிக்கப்படும் அஷ்ரப் அலி தானவி என்பவர் தமது "நஷ்ருத்தீப்" என்னும் நூலிலும் இந்த ஹதீதைக் குறிப்பிட்டு சரி கண்டுள்ளார். அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை தரக்குறைவாகப் பேசுவதை அடிப்படையாகக் கொண்ட இவரே இந்த ஹதீதை ஸஹீஹான ஒன்றென ஏற்றுக் கொண்டுள்ளார் எனில் இந்த ஹதீத் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் இடம் பெற்றுள்ளது என்பது உறுதியாகி விட்டது.

6. பாகிஸ்தானிலுள்ள எல்லா கல்லூரிகள் மற்றும் வாசகசாலைகளிலும் ஏன்! பொது இடங்களில் எல்லாம் வாசிக்கின்ற நிலையினைக் கொண்டுள்ள ஒரு நூலாசிரியர் உண்டெனில் அவர் அல்லாமா அஹ்மத் தாஹிருல் காதிரி என்பவராவார். அவர்கூட தமது தப்ஸீர் ஆயத் அந்நூர் என்னும் நூலில் இந்த ஹதீதைக் குறிப்பிட்டு, இது முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் உள்ளதாகக் கூறியிருப்பதோடு தற்காலத்தில் அச்சிடப்படும் முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் இருந்து இந்த ஹதீத் நீக்கப்பட்டிருப்பது மிக மிக வேதனைக்குரிய ஒன்றெனவும் கூறியுள்ளார்.

எனவே தற்போது அச்சிடப்படும் நூலைப் பார்த்துவிட்டு அதில் இந்த ஹதீத் இல்லையென்னும் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இனி இப்படிப்பட்ட முடிவுக்கு வருவோர் இந்த ஹதீதைத் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ள பெரியோர்கள் அனைவரையும் பொய்யாக்க வேண்டி வரும். எனவே இந்த நபிமொழி முஸ்னத் அப்துர் ரஸ்ஸாகில் தான்

குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அதோர் ஸஹீஹான ஹதீத்தான் என்பதற்கு மேற்கண்ட பெரியார்களே நமக்குப் போதும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறோம்.

பின்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியைத்தான் முதன் முதல் அல்லாஹ் படைத்தான் என்றறிவிக்கும் ஹதீதை அது குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் நூலில் இல்லை என்பதற்காக பொய்யாக்கக் கூடாது. இனி பொய்யாக்குபவர்கள் இந்த ஹதீதைப் பற்றிய இமாம் சுயூத்தியின் கருத்தை தமக்கு ஆதரவாகக் காட்டுகின்றனர். அதாவது.,,,

“இந்த நபிமொழிக்கு நம்பத் தகுந்த இஸ்னாத் - அறிவிப்பாளர்கள் இல்லை” என்பதாக அல் ஹாவி லில் பதாவா என்னும் நூலில் கூறப்பட்டுள்ளதென்றும், ஸரீஹுல் பயான் என்னும் நூலாசிரியர் இது தெளிவானதோர் பொய் தகவல் என்றும் கூறுகிறார்.

ஸரீஹுல் பயானின் நூலாசிரியர் இந்த ஹதீதைப் பொய்யாக்க இமாம் சுயூத்தியின் சொல்லை ஆதாரமாகக் காட்டியிருக்க வேண்டியதில்லை. ஏனெனில் இந்த ஹதீதை அறிவித்தவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்றுதான் சொன்னார்களே அன்றி, அந்த ஹதீத் தனக்குள் கொண்டுள்ள கருத்து நம்பிக்கைக்குரியதல்ல என்று சொல்லவில்லை. இன்னும் இந்த ஹதீதை அறிவித்தவர்களைக் காரணம்காட்டி இதையொரு பிரச்னையாக்க முடியுமென்று ஆரம்பத்திலேயே நாம் சொன்னது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

இனி இந்த ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களின் வரிசைப் பட்டியலைக் காரணமாக்கி இந்த ஹதீத் பொய்யான ஒன்றெனக் கூறுவோரில் ஒருவர் “நூரோ வ பஷர்” என்னும் நூலாசிரியருமாகும். இந்த நூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனிதர் மட்டுமின்றி ஜோதியானவர்களும் தானென்பதையும், அந்த ஜோதியைத் தான் அல்லாஹ் முதன் முதலாகப் படைத்தான் என்பதையும் நிரூபித்து எழுதப்பட்ட நூலுக்கு மறுப்பு நூலாகும்.

இந்த நூலின் 36 பக்கங்களை நமது நாயகம் ஸல்லல்

லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மனிதர் தானென்பதை ஆதாரப்படுத்த வீணாக்கியுள்ளார். நபியவர்கள் மனிதரல்ல என்று யார் சொன்னார்கள்? நம்மை போன்ற ஒரு சாதாரண மனிதர் என்றுதான் சொல்லக்கூடாது. இவ்வாறே நபியவர்கள் வெறும் ஜோதி மட்டும் தானென்றும் யாரும் சொல்வதில்லை. விஷயம் இவ்வாறிருக்க இவர், நாம் நபியவர்களை மனிதரல்ல என்று கூறுவதாக நம்மீது குற்றஞ் சாட்டுவது வேடிக்கையிலும் வேடிக்கையே.

மேலும் தேவ்பந்த் உலமாக்களில் ஒருவரான இவர் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மனிதரென்றும் ஜோதியென்றும் ஏற்றுக்கொண்ட போதிலும் நபியவர்களின் ஜோதிதான் முதன் முதல் படைக்கப்பட்டதென்பதை சுட்டிக் காட்டும் ஹதீதைப் பொய்யாக்குகிறார். பின்னும் இந்த ஹதீதை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதற்கு இவர் சொல்லும் காரணங்களில் ஒன்று இதை அறிவிக்கும் அப்துர் ரஸ்ஸாக் என்பவர் ஒரு ஷியாவாகுமென்று குற்றஞ் சாட்டும் இவர், தன்னை மறந்தோ என்னவோ தெரியவில்லை. அதே நூலின் 100வது பக்கத்தில் அப்துர் ரஸ்ஸாக் நம்பிக்கைக்குரிய பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவரென்றும் கூறுகிறார். இதற்குப் பெயர்தான் இரட்டை வேடமோ?

இன்னும் இந்த ஹதீத் தனக்குள் கொண்டுள்ள கருத்தை எவரும் பொய்யான ஒன்றென ஏன் நிரூபிக்க முடியாது போயிற்று? ஹதீதை அறிவித்தவர்கள் சரியில்லை என்றும், இந்த ஹதீத் அப்துர் ரஸ்ஸாகில் குறிப்பிடப்படவில்லை என்றும் வாதிப்பவர்கள், நபியவர்களின் ஜோதி முதன் முதல் படைக்கப்படவில்லை. அவ்வாறு படைக்கப்பட்டதாக சொல்லப்படும் ஹதீத் பொய்யானது, வீணானது, இட்டுக் கட்டப்பட்டது என்று சொல்வதற்குரிய துணிச்சல் யாருக்குமே ஏன் வரவில்லை? இதற்குரிய காரணத்தை அல்லாஹ் சொல்கிறான்.,,,

وما ارسلناك إلا رحمة للعالمين

“நபியே! உம்மை நாம் அகிலத்தார் அனைவருக்கும் அருளாகவே அன்றி அனுப்பவில்லை” என்று கூறுகிறான்.

இந்த வசனத்தை நன்கு அறிந்தவர்கள் நபியவர்களின் ஜோதியே அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டதென்னும் ஹதீதைக் கண்டபோது, அந்த ஹதீதின் பொருள் இந்த வசனத்திற்குள் பொதிந்திருப்பதை உணர்ந்து கொண்டபோது, அதன் அறிவிப்பாளர்களை ஆய்வு செய்யவே, அந்த ஹதீதில் குறிப்பிட்டுக் காட்டப்படும் வாக்கியங்களுக்குத் தான் தெளிவான ஆதாரமில்லை என்று சொன்னார்களே அன்றி அந்த ஹதீதின் கருத்தை ஆய்வு செய்தல்ல. ஏனெனில் நபியவர்கள் தான் முதன்முதல் படைக்கப்பட்டிருக்க வேண்டும். படைக்கப்பட்டார்கள் என்னும் கருத்தை மிகத் துல்லியமாக இவ்வசனம் எடுத்துக் காட்டுவதாலே. இதை நாமும் தெரிந்து கொள்ள வேண்டும்.

“நபியே! நீர் அகிலங்கள் அனைத்துக்கும் அருளாகவே அனுப்பப்பட்டுள்ளீர்கள்” எனக் கூறப்படுவதை கவனியுங்கள்.

இதில் அகிலங்கள் என்று சொல்லப்பட்டால் அல்லாஹ்வைத் தவிரவுள்ள எல்லா சிருஷ்டிப் பொருட்களும் அதற்குள் அடங்கிவிடும். ஆதலால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மனித இனத்திற்கு மட்டுமல்ல. ஜின் வர்க்கத்திற்கு மட்டுமல்ல. வானம் பூமியிலுள்ள அனைத்து சிருஷ்டிப் பொருட்களுக்கும் அவர்களே அருளாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மேற்கண்ட வசனத்தில் குறித்துக் காட்டப்படும் “ரஹ்மத்” என்னும் பதம் மஸ்தரா (உருவாகும் ஸ்தலமா)கும். ஆதலால் மஸ்தராக இடம் பெற்றுள்ள ஒரு பதம் இஸ்ம் ஃபாயிலுடைய கருத்தையும் சட்டத்தையும் உள்ளடக்கும் என்பது அரபி மொழியின் இலக்கண நியதி. எனவே ரஹ்மத் என்னும் பதத்திற்கு “ராஹிம்” (அருள் புரிபவர்) என்ற பதத்தையும் பயன்படுத்தலாம். ஆகையால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எத்தனை உலகங்களுண்டோ அத்தனை உலகங்களுக்கும் அருள் புரிபவர்களாகப் படைக்கப்பட்டவர்கள். பின்னும் அருள் புரிகின்ற ஒருவர் அருளப்படும் பொருட்கள் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பே படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் நியதியாகும்.

பாருங்கள்! தண்ணீருக்கு அருள்புரிந்தார்கள், அர்ஷின் நடுக்கம் நீங்க அருள் புரிந்தார்கள், கலமுக்கு அருள் புரிந்தார்கள் எனில் இவையனைத்தும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தயாளத்தினாலேயே இயங்குகின்றன என்னும்போது அந்த ஜோதிக்குமுன் எந்தப் பொருள் படைக்கப்பட்டிருக்க முடியும்? மாறாக அந்த ஜோதியிலிருந்து தான் எல்லாமே படைக்கப்பட்டன. இதைத் தான் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மூலமாக அப்துர் ரஸ்ஸாகைக் கொண்டு அறிவிக்கப்பட்ட “உமது நபியின் ஜோதியைத்தான் அல்லாஹ் முதன் முதலில் படைத்தான்” என்ற ஹதீதின் பிற்பகுதி சொல்லிக் கொண்டிருக்கின்றது. அதாவது.,,,

“அல்லாஹ்வின் ரஸூலே! உங்களுக்கு எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டும். முதன் முதல் அல்லாஹ் எதைப் படைத்தான் என்பதை எனக்குக் கூறுங்கள் என்று கேட்க, அதற்கு நபியவர்கள்; உமது நபியின் “நூரை” (ஜோதியை)த்தான் அல்லாஹ் தனது ஜோதியிலிருந்து முதன் முதல் படைத்தான். அதன்பின் அந்த ஜோதி அல்லாஹ்வின் விருப்பப்படி சுற்றிக் கொண்டிருந்தது. அப்போது லௌஹு, கலம், சுவர்க்கம், நரகம், வானவர்கள், வானம், பூமி, சூரியன், சந்திரன், ஜின், மனிதன் போன்ற எதுவுமே இருக்கவில்லை. பின்பு அல்லாஹ் சிருஷ்டிகளை சிருஷ்டிக்க நாடிய போது அந்த ஜோதியை நான்கு பாகங்களாக்கி முதல் பாகத்திலிருந்து கலமையும், இரண்டாம் பாகத்திலிருந்து லௌஹையும், மூன்றாம் பாகத்திலிருந்து அர்ஷையும் படைத்தான். பின்னர் நான்காம் பாகத்தை நான்கு பாகமாக்கி அர்ஷை சுமப்பவர்களை முதல் பாகத்திலிருந்தும், குர்ஸியை இரண்டாம் பாகத்திலிருந்தும், வானவர்களை மூன்றாம் பாகத்திலிருந்தும் படைத்தான். பின்னர் அந்த நான்காம் பாகத்தை மீண்டும் நான்காகப் பிரித்து அதன் முதல் பகுதியிலிருந்து வானங்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து பூமிகளையும், மூன்றாம் பகுதியிலிருந்து சுவர்க்க நரகங்

களையும் படைத்தான்." இதன் இறுதி வரையுள்ள விஷயங்களை மூலநூலைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

எனவே நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதலாகப் படைக்கப்பட்டது. அதன்பின் அந்த ஜோதியிலிருந்து தான் அனைத்தும் தோற்றுவிக்கப்பட்டன. அப்படி படைக்கப்பட்ட ஜீவராசிகளில் மனித இனம்தான் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த படைப்பாகும். அந்த மனித இனத்திலும் நபிமார்கள் மிக முக்கியமானவர்கள். அதனால்தான் நபியவர்கள் "அன அவ்வலுன் நபிய்யீன பில் கல்கி" படைக்கப்பட்ட நபிமார்களில் எல்லாம் நான்தான் முதன்மையானவன் எனக் கூறுவதன் மூலம் இவ்வகிலமனைத்திலும் முதன் முதலாக எனது ஜோதிதான் படைக்கப்பட்டதென்று சுட்டிக் காட்டுகின்றனர்.

"நான் ஆதம் தண்ணீருக்கும் கழிக்கும் இடையிலிருக்கும் போதே நபியாக இருந்தேன்" என்றும்,

"ஆதம் தண்ணீர், கழி ஆகிய எதுவுமே இல்லாதிருக்கும் போதே நபியாக இருந்தேன்" என்றும் சொன்னதாகக் கூறுகின்றனர். இவைகள் மௌலித் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உண்மையில் இதுபோன்ற விஷயங்கள் சொல்லப்பட்டதற்குரிய தெளிவான ஆதாரம் ஹதீதுக் கிரந்தங்களில் இல்லையென்ற போதிலும் இவ்விஷயங்கள் தனக்குள் கொண்டுள்ள கருத்துக்களை பொய்யென்று எவராலும் சொல்ல முடியவில்லை. அதனால் தான் இவைகள் ழயீபானவை என்று தீர்ப்பளிக்கப்பட்டு விட்டன.

இருப்பினும் இப்போது உங்களுக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியிலிருந்து தான் எல்லாமே படைக்கப்பட்டன என்பதும், அவர்களுக்காகத்தான் எல்லாமே படைக்கப்பட்டன என்பதும், அவர்கள் இல்லையென்றால் எதுவுமே படைக்கப்பட்டிருக்காது என்பதும் தெளிவாகப் புரிந்திருக்கும். இப்போது இதே

போன்றதொரு கருத்தைக் கொண்டுள்ள இன்னொரு ஹதீதையும் உங்களின் பார்வைக்குத் தருகிறோம். இது இப்னு அஸாகிரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக இமாம் அல்ஹாபிழ் அல் முஹத்தித் முல்லா அலி காரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது "அல்மௌலிதுர் ரவி பில் மௌலிதின் நபவி" என்னும் நூலின் 48வது பக்கத்தில் பதிவு செய்துள்ளார்கள். அதாவது,,,,

هبط جبريل عليه السـلام على النبي صلى الله عليه وآله وسلم فقال إن ربك يقول إن كنت إتخذت ابراهيم خليلا فقد إتخذتك حبيبا وماخلقت خلقا أكرم عليّ منك ولقد خلقت الدنيا وأهلها لأعرفهم كرامتك ومنـزلتك عندي ولولاك ما خلقت الدنيا

"ஒருமுறை ஸய்யிதுனா ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அண்ணலெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வந்தபோது, அவர்கள் நபியவர்களை நோக்கி, நிச்சயமாக உங்களுடைய இறைவன் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை தனது கலீலாக எடுத்துக் கொண்டாலும் உங்களை அவன் தனது ஹபீபாக எடுத்துக் கொண்டதாகச் சொல்கிறான். இன்னும் உங்களைவிட சிறந்ததோர் படைப்பை அவன் படைக்கவில்லை என்றும், உலகத்திற்கும், அதிலுள்ளவைகளுக்கும் என்னிடம் உங்களுடைய அந்தஸ்த்து என்னவென்பதைக் காட்டுவதற்காகவே படைத்தேன் என்றும், உங்களைப் படைக்காவிட்டால் உலகத்தையே படைத்திருக்க மாட்டேன் என்றும் அல்லாஹ் சொல்வதாகச் சொன்னார்கள். (நூல்: மவாஹிபுல் லதுன்னிய்யா ஸுர்கானி பாகம்-1, பக்கம்-120)

எனவே ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அகிலமனைத்துக்கும் "ரஹ்மத்" தாகிய அருள் புரிகின்றவர்களாகும் என்பதும், அவர்கள் படைக்கப்படாவிட்டால் அகிலமே படைக்கப்பட்டிருக்காது என்பதும் அல்லாஹ்வின் கூற்றாதலால் நபியவர்கள் தான் முதன் முதல்

அல்லாஹ்வைக் கொண்டு படைக்கப்பட்டார்கள் என்பது நமக்கு எள்ளளவும் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாகின்றது. ஆதலால் "அல்லாஹ் எனது ஜோதியைத் தான் முதலில் படைத்தான்" என்னும் ஹதீத் ஒரு கூற்றின் பிரகாரம் பதியப் படாதிருந்தாலும் இதனால் நபியவர்களின் உயர்நிலைக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

மேலும் அருள் வடிவான ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் "ரஹ்மத்துன்லில் ஆலமீன்" ஆகிய அகிலங்களுக்கெல்லாம் அருள் புரிகின்றவர்கள் என்னும் திரு மறை வசனத்தையும் "லௌலா முஹம்மதுன்ம் மா கலக்துக" (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் படைக்கா விட்டால் ஆதமையும் படைத்திருக்க மாட்டேன்) என்னும் ஸஹீஹான ஹதீதையும் நம்புகின்றவர்கள், "எனது ஜோதிதான் அல்லாஹ்வால் முதன் முதலில் படைக்கப்பட்டது" என்றொரு ஹதீத் இல்லையென்றாலும் கூட நபியவர்கள் தான் முதன் முதலில் படைக்கப்பட்டவர்கள் என்பது நன்கு புலனாகும் போது, அவ்வலு மா கலகல்லாஹு நூரீ என்னும் ஹதீத் ஸஹீஹான ஹதீதுக்கு நேர்மாற்றமான ஒன்றாகும் எனக்கூறுவது ஆச்சரியமான ஒன்றுதான்.

சகோதரர்களே! அடுத்து சொல்லப்படப் போகும் விஷயத்தை தெளிந்த உள்ளத்துடன் உங்களின் ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளும்படியாக தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

1. "நிச்சயமாக அல்லாஹ் தண்ணீரைப் படைக்கு முன் வேறு எதையும் படைக்கவில்லை."

2. "அர்ஷ் தண்ணீரின் மீதிருந்தது."

3. "நிச்சயமாக அர்ஷுக்கு முன் தண்ணீர் படைக்கப்பட்டிருந்தது."

4. "வானங்களையும் பூமிகளையும் படைக்க 50,000 வருடங்களுக்கு முன்பே சிருஷ்டிகளின் தக்தீரை (விதியை) அல்லாஹ் படைத்து விட்டான். அப்போது அவனது அர்ஷ் தண்ணீரின் மேலிருந்தது."

மேற்கண்ட ஸஹீஹான ஹதீதுகளிலிருந்து அல்லாஹ் தண்ணீரை முதலிலும் அதற்குப்பின் அர்ஷையும் அதன் பின்னரே தக்தீரையும் படைத்தான் என்பது நமக்குப் புலனாகிறது. தண்ணீரோ அர்ஷோ அல்லது தக்தீரோ எதுவாக இருந்தாலென்ன? இவை எல்லாமே "ஆலமீன்" என்னும் அகிலங்களிலுள்ள படைப்புக்களுக்கு உட்பட்டவைதானே. இந்நிலையில் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவைகளுக்கும் அருள் புரிபவர்கள் தானே. இல்லையென்று மறுக்க முடியுமா? அப்படியானால் இவைகளுக்கெல்லாம் முன்னரே நபியவர்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா! இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

எனவே முதன் முதல் அல்லாஹ் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியைத் தான் படைத்தான். அதற்குப் பிறகு படைக்கப்பட்டவைகளில் முதலாவதாக தண்ணீரையும் அதன்பின்னர் அர்ஷையும் படைத்தானென்று சொன்னால் இது ஸஹீஹான ஹதீதுக்கு மாற்றமென்று வாதம் பேசுகின்றனர்.

அதேநேரம் அல்லாஹ் தண்ணீரைப் படைக்குமுன் வேறு எதையும் படைக்கவில்லை என்பது நம்பிக்கைக்குரிய தகவல். தண்ணீருக்குப்பின் அர்ஷைப் படைத்தான் என்பதும் நம்பிக்கைக்குரிய தகவல். இவ்விரண்டுக்கும் பிறகே தக்தீரைப் படைத்தான் என்பதும் நம்பிக்கைக்குரிய தகவலாகும். ஆனால் இம்மூன்று நம்பிக்கைக்குரிய தகவல்களுக்கு மாற்றமாக,,,,

"அல்லாஹ் கலமைத்தான் முதன் முதலில் படைத்தான்" என்னும் இந்நம்பிக்கைக்குரிய தகவலுக்கு என்ன பதில்? எனவே இந்த ஹதீதைக் குறித்த முழு விபரத்தையும் இப்போது பார்ப்போம்.

عن عبد الله بن عمرو رضي الله عنه قال: قال رسـول الله صلى الله عليه وآله وسلم قال: قدر الله مقادير الخلق قبل ان يخلق السموات والأرض بخمسين ألف سنة وكان عرشه على الماء

"திடனாக அல்லாஹ் "கலம்" என்னும் எழுது கோலை படைத்து அதை எழுதும்படியாக கட்டளை யிட, அது; எதை எழுதுவதென்று கேட்டது. அதற்கு நடந்ததையும் இறுதிநாள் வரை நடக்கப் போவதையும் எழுதென்று கட்டளையிட்டான் என்பதாக எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்பதாக ஹழரத் அதாஃ ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர்."

(நூல் : திர்மிதி, கிதாபுல் கத்ர் பாகம்-4, பக்கம்-62.)

இந்த ஹதீத் அல்லாஹ் முதன் முதல் கலமைத்தான் படைத்தானென்று சொல்வதோடு அதற்குமுன் வேறு ஏதோ படைக்கப்பட்டிருந்ததையும் நமக்கு குறிப்பின் மூலம் உணர்த்திக் காட்டுகிறது. அவ்வாறாயின் கலமுக்கு முன் வேறு ஏதோ படைக்கப்பட்டிருந்தாலும் கூட கலம்தான் முதல் படைப்பென்று பேசப்படுவதையும் நாம் பார்க்கிறோம். இந்நிலையில் ஸஹீஹான ஹதீத்கள் என்று பேசப்படுபவை ஒன்று இன்னொன்றுக்கு நேர் முரணான கருத்தையல்லவா காட்டுகின்றன.

இதில் "தண்ணீர் மறறும் அர்ஷுக்குப்பின் படைக்கப் பட்டவைகளில் முதன்மையானது தான் கலம்" என்னும் புகாரி ஷரீபின் விரிவுரையாளர்களில் ஒருவரான இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ்வின் கருத்தை அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியுமாயின், தண்ணீர் முதல் கலம் வரையுள்ள அனைத்தும் நூரே முஹம்மதிய்யா என்னும் மூலப் பொருளைக் கொண்டுதான் படைக்கப்பட்டன என்னும் அதே புகாரி ஷரீபின் விரிவுரையாளர்களில் ஒருவரான இமாம் கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ்வின் கருத்தை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது? ஆதலால் படைப்புக் களின் துவக்கம் தாஹா நபி என்பதை ஏற்றுக் கொள்ள மறுப் போர் எவராயினும் அவர் அண்ணல் நபியவர்களின் எதார்த் தத்தை மூடி மறைக்க முயலும் மூடர்களே.

மேலும் கலம் தான் முதல் படைப்பென்னும் திர்மிதி ஷரீபின் ஹதீதை ஆதாரமாகக் காட்டி அண்ணல் நபியவர் களின் அகமியத்தைப் பொய்யாக்குவோருக்கு மேற்கண்ட

அதே ஹதீதைக் கொண்டு நாம் கூற விரும்பும் இன்னுமோர் விளக்கம் யாதெனில்.,,,

கலம் என்பது ஒரு ஜடப் பொருளாகும். இதில் நடந் தவை மற்றும் நடக்கப் போகின்றவை அனைத்தும் அல்லாஹ் வுக்கு மட்டும் தான் தெரியும். அதை அல்லாஹ் யாருக்கும் தரவுமில்லை. இதில் நடந்தவைகளும் நடக்கப் போகின்ற வைகளும் இறைநேசர்களான நபிமார்களுக்கும் வலிமார் களுக்கும் தெரியுமென்று சொல்வதை ஷிர்க்கென்று நம் மிலே சிலர் வாதிக்கிறார்களே! அப்படியானால் ஒரு ஜடப் பொருளான கலம் என்னும் பொருள் நடந்ததையும் நடக்கப் போவதையும் எழுதியதென்று சொல்லப்படும் வார்த்தைக்கு இவர்கள் என்ன பதில் தருவார்கள்? இல்லையில்லை! அந்த ஜடப்பொருளுக்கு அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தான் என்று சமாதானம் சொல்வீர்களேயாயின், அதை நம்புவீர் களேயாயின் இறைவனால் படைக்கப்பட்ட சிருஷ்டிப் பொருட்களில் எந்தவொரு சிருஷ்டிக்கும் நிகராக முடியாத ஒப்புயர்வற்ற காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும் அதே அல்லாஹ் தான் நடந்ததையும் நடக்கப் போவதையும் அறிவித்துத் தந்தானென்று சொல் லப்படுவதை மட்டும் ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில் ஏன் பின்வாங்குகிறார்கள்?

யாரைப் படைக்காவிட்டால் எதையுமே படைத்திருக்க மாட்டேனென்று சொன்னானோ அந்த ஆதி நபியை விட ஒரு ஜடப்பொருளான கலம் இவர்களுக்குப் பெரிதாக தெரி கின்றதா? ஒன்று தெரியுமா? அந்த ரஸூலுக்கு அல்லாஹ் வால் வழங்கப்பட்ட அவ்வுயர் தன்மைகளை ஏற்றுக் கொள் ளாமல் அந்த ரஸூலை மட்டும் ஏற்றுக் கொள்வதால் ஆகப் போவது என்ன? கொஞ்சம் சிந்தியுங்கள். அத்துடன் இன் னொன்றையும் கவனிக்க வேண்டுகிறோம்.

அறிவு தான் முதல் படைப்பு

தண்ணீரும் அர்ஷும் தான் முதன் முதல் படைக்கப் பட்டவை என்பதற்கே ஸஹீஹான ஹதீத் இருப்பதாக வாதிப் போரிடம் இல்லையில்லை. கலம் தான் முதன் முதல் படைக் கப்பட்டது என்பதற்குரிய ஸஹீஹான ஹதீதைக் காட்டி

னால் அதற்கு விளக்கம் சொல்ல முற்படுகின்றனர். அத்துடன் தண்ணீர் அர்ஷ் கலம் என்று பேசப்படும் ஹதீதையும் நாம் மறுக்கவில்லை. ஆனால் அவை ஒவ்வொன்றும் தத்தம் தமது இனத்தின் முதல் படைப்பென்று தான் சொல்கிறோம்.

பின்னும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் முதன் முதல் அல்லாஹ்வால் படைக்கப்பட்டதென்று பேசும் ஹதீதுகளனைத்தும் பொய்யானவை. அர்ஷ் மற்றும் தண்ணீர் பற்றிய ஹதீத்கள் மட்டும் தான் நம்பிக்கைக்குரியவை என்றிருக்குமாயின் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நமது கருத்தைப் பொய்யாக்கி இருப்பர். ஏன் தெரியுமா? அவர்கள் தமது தகாயிக்குல் அக்பார் என்னும் நூலில் என்ன சொல்கிறார்களென்று பாருங்கள்.,,,

ومن عرق وجهه خلق العرش والكرسي واللوح والقلم والشمس والقمر والحجاب والكواكب وما كان فى السماء

“அர்ஷோ குர்ஸியோ லௌஹோ கலமோ சூரியனோ சந்திரனோ ஹிஜாபோ நட்சத்திரங்களோ ஏன்! விண்ணிலுள்ளவை அனைத்தும் அண்ணலெம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவதனத்தின் வியர்வைத் துளியிலிருந்து தான் படைக்கப்பட்டதென்று சொல் கிறார்கள்.”

இங்கே வியர்வைத் துளி என்றால் நூர் என்பதுதான் அதற்குப் பொருளாகும். எனவே ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் முதல் படைப்பு. அதிலிருந்து தான் மற்ற சிருஷ்டிகளனைத்தும் படைக்கப்பட்டன என்பது இமாம் கஸ்ஸாலியின் கொள்கையாகும். அதுதான் உண்மையும் கூட. இதன்றி.,,,

அல்லாஹ் அறிவைத்தான் முதன் முதல் படைத்தான் என்றொரு ஹதீதும் காணப்படுகிறது. இது எத்தனை தூரம் நம்பிக்கைக்குரிய ஒன்றென்பதை நம்மால் திட்டவட்டமாக சொல்ல முடியாவிட்டாலும் இதைப் பொய்யானதென்று சொல்ல முடியாது. ஏனெனில் இந்த ஹதீத் ஸுனன் தைலமி

எண்-4லும், இஹ்யா உலூமுத்தீனின் பாகம்-4, பக்கம்-99லும், இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷஃரானியின் அல்யவாகீத் வல் ஜவாஹிரில் பாகம்-2, பக்கம்-20லும் பதிவு செய்யப்பட்டிருப்பதேயாகும். பின்னும்.,,,

அல்லாஹ் முதன் முதல் நபியவர்களின் நூரைப் படைத்தான் என்றும், இன்னொரு ஹதீதில் அறிவைப் படைத்தான் என்றும் இருவேறு வகையாகக் கூறப்படுவதன் கருத்தென்னவென்று கேட்பீர்களாயின் இரண்டுமே ஒன்று தானென்று சொல்லப்படும். ஏனெனில் நபியவர்களைத்தான் அறிவு என்றும் நூர் என்றும் சொல்லப்படுகிறது என்பதாக இமாம் ஷஃரானி கூறுகின்றனர். இதற்கு பின்வரும் ஹதீத் ஆதாரமாகும்.

حدثنا محمد بن أحمد بن علي ثنا الحارث بن ابي أسامة ثنا داؤد بن المحبر ثنا عباد بن كثير عن ابي ادريس عن وهب بن منبه قال: قرأت إحدى وسبعين كتابا فوجدت في جميعها إن الله عز وجل لم يعط جميع الناس من بدء الدنيا الى انقضائها من العقل في جنب عقل محمد صلى الله عليه وآله وسلم إلا كحبة رمل من بين رمال جميع الدنيا وأن محمدا صلى الله عليه وآله وسلم أرجح الناس عقلا وأفضلهم رأيا

“நான் எழுபத்தோரு நூல்களைப் படித்தேன். அதில் உலகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இறுதிநாள் வரையுள்ள அனைத்து மனிதர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த அறிவானது, அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவில் ஒரு அணுவளவேயாகும். ஏனெனில் நிச்சயமாக நபியவர்கள் அறிவில் அனைவரை விடவும் மிகைத்தவர்கள். மிகச்சிறப்பான சிந்தனையைக் கொண்டவர்கள் என்பதையும் நான் தெரிந்து கொண்டேன் என்பதாக வஹ்ப் இப்னு முனப்பஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்.” *(நூல் : ஹுல்யத்துல் அவ்லியா பாகம்-4, பக்கம்-26, கஸாயிஸுல் குப்ரா பாகம்-1, பக்கம்-66.)*

எனவே இதுவரை ஸஹீஹான ஹதீத்களில் கூறப்பட்ட தண்ணீர், அர்ஷ், கலம், லௌஹு என்பனவற்றை தனித் தனிப் பொருட்களென்று கற்பனை செய்யாமல் ஸய்யிதே! ஸர்காரே தோ ஆலமே! மேற்கண்டவை அனைத்தும் உங்களது ஜோதியின் பிரதிபலிப்புக்களே என்னும் முடிவுக்கு வாருங்கள். இதுவே அஸ்ஸய்யித் அப்துல் காதிர் ஜீலி மற்றும் அப்துல் வஹ்ஹாப் ஷஃரானி போன்ற ஞானவான்களின் தீர்ப்புமாகும்.

ஆதலால் அண்ணலெம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தான் அல்லாஹ்வால் முதன்முதல் படைக்கப்பட்டது என்பதில் இனியும் சந்தேகம் வேண்டாம். அவர்களின் ஜோதி தான் முதல் படைப்பு. அதிலிருந்து தான் அனைத்தும் படைக்கப்பட்டன. அவர்கள் இல்லையேல் அர்ஷுமில்லை. ஆதமும் இல்லை. ஏன்! எதுவுமேயில்லை என்பதை உள்ளத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ளுங்கள். முனாபிக்கீன்களான நயவஞ்சகர்களிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள். இன்னும் அந்த ஜோதிக்கு அப்போதே நபித்துவமும் வழங்கப்பட்டிருந்தது என்பதையும் உளமாற நம்புங்கள். இன்னும்.,,,

"நான் நபிமார்களில் முதன்மையானவன்" என்னும் ஹதீதையும், "ஆதம் ரூஹுக்கும் ஜஸதுக்கும் இடையிலிருக்கும் போதே நான் நபியாக இருந்தேன்" என்னும் ஹதீதையும் நம்புங்கள். இன்னும் நபியவர்களுக்கு நாற்பதாம் வயதில் தான் நபித்துவம் கிடைத்ததென்னும் நயவஞ்சகர்களின் விஷக் கருத்துக்களை குழிதோண்டிப் புதைத்து விட்டு நாற்பதாம் வயதில்தான் நபியவர்கள் தமது நபித்துவத்தை வெளிப்படுத்தினார்களென்று நம்புங்கள்.

உத்தமத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஆதம் நபிக்கு முன்னரே நபித்துவம் என்னும் கிரீடத்தைச் சுமந்து கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் மூடி மறைத்துவிட்டு நாற்பதாம் வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று கதை பேசுகிறார்களே இவர்கள் இன்ஜீல் வேதத்தில் நமது நபியைக் குறித்து சொல்லப்பட்டிருந்ததாக நமது வேதமாகிய குர்ஆன் சொல்வதுகூட இவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டதா? அல்லது இவர்களின்

பார்வையிலிருந்து அந்த வசனமே மறைந்துபோய் விட்டதா? இதோ குர்ஆன் கூறுவதைப் பாருங்கள்.

وإذ قال عيسى ابن مريم يابني إسـرائيل إني رسـول الله
إليكم مصدقا لما بين يدي من التوراة ومبشرا برسول يأتي من
بعدى إسمه أحمد فلما جائهم بالبينات قالوا هذا سحر مبين

"மேலும் மர்யமின் மைந்தர் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள்" இஸ்ராயீலின் சந்ததிகளே! நான் எனக்கு முன்னுள்ள தௌராத் வேதத்தை உண்மையாக்குபவனாகவும், எனக்குப்பின் வரப்போகும் "அஹ்மத்" என்னும் பெயருள்ள ரஸூலைக் குறித்து சுபச்செய்தி அறிவிப்பவனாகவும் அல்லாஹ்வின் ரஸூலாக உங்களிடம் வருகை தந்துள்ளேன் எனக்கூறியதை நபியே நீர் எண்ணிப்பாரும். எனினும் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளை அவர் கொண்டுவந்த போதிலும் அவர்கள் "இது தெளிவானதோர் சூனியமாகும்" எனக் கூறினர். *ஸூரா அஸ்ஸஃப்ஃபு, வசனம்-06.)*

இவ்வசனத்தில் ஸய்யிதுனா ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் தனது சமூகத்தாரை நோக்கி நான் உங்களுக்காக அனுப்பப்பட்ட ரஸூலென்று பிரச்சாரம் செய்ததோடு, எனக்குப்பின் ஒருரஸூல் வருவார். அவருடைய பெயர் அஹ்மத் என்று சுபச்செய்தி அறிவித்ததையும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ரஸூல் என்பது மட்டுமல்ல. பல நூற்றாண்டுக்கு முன்பே "அஹ்மத்" என்பதாகப் பெயர் சூட்டப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் ஒருவருக்கு நாற்பதாவது வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று சொல்வது கடைந்தெடுத்த மடத்தனம் என்பதைவிட வேறென்னவாக இருக்க முடியும்? இன்னும் நபியவர்கள் பிறக்கு முன்பே நபித்துவம் கொடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்னும் குர்ஆனின் கூற்றைப் பொய்யாக்கி நாற்பதாம் வயதில்தான் நபித்துவம் கிடைத்ததென்று கூறும் இவர்கள் புனிதமிகு இஸ்லாத்தில் புதியதோர் கொள்கையைப் புகுத்தும் குற்றவாளிகள் என்

பதை இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள்.

இதுவரை கூறப்பட்ட விஷயங்கள் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் "கில்கத்" படைப்பு சம்பந்தமாகப் பேசப்பட்டவைகளாகும். ஆம். அவர்கள் அல்லாஹ்வைக் கொண்டு ஜோதியாகப் படைக்கப்பட்ட முதல் சிருஷ்டி என்பதை மீண்டும் திரும்பத் திரும்பக் கூறியவர்களாக ஜோதியாகப் படைக்கப்பட்ட அம்முதல் சிருஷ்டி இப்புவியில் எப்போது எப்படி உதயமாயிற்று என்பதைக் குறித்த சில ஆதாரப்பூர்வமான தகவல்களை இப்போது பார்ப்போம்.

இதய நபியின் உதயம்

அல்லாஹ்வின் நூராகிய ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தனது ரட்சகனின் விருப்பப்படி உலவிக் கொண்டிருந்ததாகவும் பின்னர் அந்த ஜோதியிலிருந்தே பல்வேறு வகைப்பட்ட அர்ஷ், லௌஹ், கலம் போன்றவை படைக்கப்பட்டதாகவும் முன்னால் நாம் பார்த்தது உங்களுக்கு நினைவிலிருக்கலாம். அதன்பின் அந்த ஜோதியை அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின் முதுகந்தண்டில் வைத்தான். அது அவர்களின் நெற்றியில் பிரகாசிக்க அதைக்கண்ட அமரர்கள் ஆதம் நபியவர்களை வலம் வரத்துவங்கினர். அதன்பின் அந்த ஜோதியைக் குறித்து அல்லாஹ் தனது மாமறையில்.,,,

وتقلبك فى الساجدين

"நபியே! நீர் சிரம் பணிந்தவர்களோடு இயங்குவதையும் அல்லாஹ் பார்க்கிறான்."

(அஷ்ஷுஃஅரா வசனம்-219.)

இவ்வசனத்திற்கு குர்ஆனின் விரிவுரையாளர் அல்லாமா சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,....

إنه كان ينقل نوره من ساجد الى ساجد

"நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஜோதியானது அல்லாஹ்வுக்கு ஸஜ்தா

செய்வோரில் ஒருவரிடமிருந்து இன்னொருவரளவில் மாற்றப்பட்ட வண்ணமாயிருந்தது என்று கூறுகிறார்கள்.." (நூல்: அல்ஹாவி லில் பதாவா பாகம்-2, பக்கம்-210, மஸாலிகுல் ஹுனபா)

எனவே பேரொளிப் பெருந்தகை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட நல்லடியார்களிடையே ஒருவர்பின் ஒருவராக இடம்மாறிக் கொண்டேவந்து இறுதியாக அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹுவை வந்தடைந்தது. அவர்கள் நபியவர்களின் ஜோதியைச் சுமந்திருந்ததால் ஹழ்ரத் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹுவால் அல்லாஹ்வுக்காக செய்து கொள்ளப்பட்ட நேர்ச்சையிலிருந்து நூறு ஒட்டகங்களுக்குப் "பகரமாகப்." பாதுகாக்கப்பட்டார்கள்.

பின்னும் நபியவர்களின் ஜோதியைச் சுமந்திருந்த அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குறைஷியர்களிலேயே மிகப்பெரும் அழகு வாய்ந்தவர்களாக இருந்ததால் அவர்களை அடைவதற்கு பெண்கள் பெரிதும் போட்டியிட்டனர். இதுபற்றி இமாம் பைஹகீ, இப்னு கதீர் போன்றோர் கூறுவதைப் பாருங்கள்.,,,

وكان عبد الله أحسن من رؤي في قريش قـــط فخرج
يوما على نساء من قريش مجتمعات فقالت إمرأة منهن: يا
نساء قـــريش أيتكن تتزوج هذا الفتى فتصطاد النور الذي
بين عينيه؟ وإن بين عينيه نورا

"குறைஷி வம்சத்தில் அப்துல்லாஹ்வை விட அழகு வாய்ந்தவர் வேறு யாருமிருக்கவில்லை. ஒரு முறை குறைஷிப் பெண்களுக்கு மத்தியில் அவர்கள் சென்றபோது, அப்பெண்களில் ஒருத்தி "இவரை மண முடித்து." இவரது இரு கண்களுக்கிடையேயும் இலங்கிக் கொண்டிருக்கும் "நூரை." (ஜோதியை) வேட்டையாடுபவர் யார்? திடனாக இவரது கண்களுக்கிடையே ஜோதி இலங்கிக் கொண்டிருக்கிறது என்றாள்.."

(நூல் : தலாயிலுன் நுபுவ்வத் பாகம்-1, பக்கம்-87.)

இதன்பின் ஹழ்ரத் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவுக்கு திருமணம் செய்து வைப்பதற்காக அழைத்துக் கொண்டு போகும்போது வழியில் அப்துல்லாஹ் அவர் களைக் கண்ட பெண்ணொருத்தி தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியதோடு பின்தொடரவும் செய்தாள். பின்பு அன்னை ஆமினாவுக்கும் அப்துல்லாஹ் அவர்களுக்கும் திருமணம் நடைபெறவே அப்துல்லாஹ் அவர்களின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருந்த அப் பேரொளி அன்னை ஆமினாவுக்குள் இடம் பெயர்ந்தது. பின்பு அப்துல்லாஹ் அவர்களை வழியில்கண்டு தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்திய அதே பெண் மீண்டும் அவர்களைக் கண்டபோது பார்த்தும் பாராதது போல் இருப்பதைக் கண்ட அவர்கள்.,,,

நேற்று என்னைக் கண்டபோது இடைமறித்தாயே! இன்று ஏன் எதுவுமே பேசாமல் போகிறாய். உனக்கென்ன நடந்ததென்று கேட்க, அதற்கந்த பெண் சொன்ன பதில்.,,,

فقالت له فارقك النور الذي كان معك بالأمس فليس لي بك حاجة

நேற்று உமக்குள்ளே நான் கண்ட அந்த "நூர்" (ஜோதி) இப்போது உம்மை விட்டும் பிரிந்து விட்டது. ஆகையால் எனக்கு இனி நீர் அவசியமில்லை" என்றாள்.
(நூல் : அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-1, பக்கம்-249., தபகாத் இப்னு ஸஃத் பாகம்-1, பக்கம்-96,97.)

இன்னும் "பரிசுத்த முதுகந்தண்டிலிருந்து தூய்மையான கர்ப்பறையை நோக்கி மாறிமாறி வந்து கொண்டிருந்தேன்." என்னும் நபியவர்களின் வாக்குக்கேற்ப இறுதியாக அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் பரிசுத்தமான கர்ப்ப றையை வந்தடைந்தது.

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதியை அல்லாஹ்வின் நல்லடியார் களுக்குள்ளேயே தான் புரட்டிக் கொண்டிருந்தோம் என்ப

தாக அல்லாஹ் கூறுகிறான். நான் அல்லாஹ்வுக்கு அடி பணிந்து அவனுக்கு சிரம் பணிபவர்களுக்கு மத்தியில் தான் இருந்து வந்தேன் என்று நபியவர்களும் கூறுகின்றனர். இந் நிலையில் நபியவர்களின் பெற்றோரை கொஞ்சங்கூட நா கூசாமல் (நவூது பில்லாஹி மின்ஹா) நயவஞ்சகர்களின் கூட்டமொன்று நரகவாதிகள் என்றும் பேசுகிறது.

இது ஒரு பக்கமிருக்க, அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவை அந்த ஜோதி வந்தடைந்த போது, அன்னை அவர்கள் ஒரு மிகப் பிரம்மாண்டமான பிரகாசத்தைக் கண்டனர். இதேபோன்று நபியவர்கள் இவ்வவனியில் உதயமான தினத்தன்றும் கண்டார்கள். இது அடுத்து வரும் ஹதீதைக் கொண்டு உறுதிப்படுத்தப்படுகிறது.

أخبرنا عليّ بن الحسين بن سليمان بالفسطاط حدثنا الحارث بن المسكين حدثنا ابن وهب قال: وأخبرني معاوية بن صالح عن سعيد بن سويد عن عبد الاعلى بن هلال السلمى عن العرباض بن سارية الفزاري قال: سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول: إني عند الله مكتوبا بخاتم النبيين وإن آدم لمنجدل في طينته وسأخبركم بأول ذالك دعوة ابراهيم وبشارة عيسى ورؤيا أمي التي رأت حين وضعتني أنه خرج منها نور أضائت لها منه قصور الشام

நிச்சயமாக நான் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் களிமண்ணாக இருக்கும்போதே நபிமார்களில் இறுதி நபியாக இருந்தேன். இன்னும் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமவர்களின் பிரார்த்தனையும், ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்களின் சுபச்செய்தியும், ஷாம் தேசத்து கோட் டையின் கொத்தளங்கள் தெரியுமளவிற்கு வெளிப் பட்ட பிரகாசமாகிய எனது தாயாரின் கனவும் நானே என்று நவின்றார்கள் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள். *(அ-ர் ஹழ்ரத் இர்பாழ் பின் ஸாரியா ரலியல்லாஹு அன்ஹு)*

قال ابن اسحاق حدثني ثور ابـــن يزيد عن خالد بـــن معدان عن أصحاب رسول الله صلى الله عليه وآله وسلم إنهم قالوا: أخبرنا عن نفسك قال نعم أنا دعوة إبي إبراهيم وبشرى عيسى عليه السلام ورأت أمي حين حملت بي أنه خرج منها نور أضائت له قصور الشام

"அல்லாஹ்வின் ரஸூலே! உங்களைப்பற்றி சொல்லுங்கள் எனத்தோழர்கள் கேட்டபோது, அதற்கு நபியவர்கள்; நானே எனது தந்தை இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பிரார்த்தனையுடைய பிரதிபலனும், ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களின் சுபச் செய்தியும், என்னை எனது தாயார் சுமந்திருந்தபோது ஷாம் தேசத்து கோட்டையின் கொத்தளங்கள் தெரியுமளவிற்கு வெளிப்பட்ட நூர் சம்பந்தமான கனவும் என்று சொன்னார்கள். *(அ-ர் ஹழ்ரத் காலித் பின் மஃதான்)*

(நூல் : தலாயிலுன் நுபுவ்வத், இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-80,83. ஸஹீஹ் இப்னி ஹிப்பான் பாகம்-14, பக்கம்-313. குதுாப் மின் ரியாழிஸ் ஸீரந்நபவிய்யா பக்கம்-24. தப்ரானி முஃஜமில் கபீர் பாகம்-18, பக்கம்-252. முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல் பாகம்-5, பக்கம்-843, என்-17281. அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-2, பக்கம்-293, 294. ஹாதல் ஹபீப் பக்கம்-64. ஸுர்கானி அலல் மவாஹிப் பாகம்-1, பக்கம்-656. தபகாத் இப்னு ஸஃத் பாகம்-1 பக்கம்-150. இதனை இமாம் ஹாகிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிட்டு விட்டு, "ஹாதா ஹதீதுன் ஸஹீஹுல் இஸ்னாதி." இது சரியானதோர் வரிசைத் தொடரைக் கொண்ட ஸஹீஹான ஹதீதாகும் என்று கூறுகின்றனர். இன்னும் இமாம் தஹ்பியும் இதை அங்கீகரித்துள்ளார்.

இந்த ஹதீதில் கவனிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான மற்றுமோர் விஷயம் யாதெனில் நபியவர்கள் ஸய்யிதுனா இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை "அபீ" (தந்தை) என்று குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்.

அவ்வாறாயின் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்கள் தமது தந்தையான அப்துல்லாஹ் அவர்களைத் தவிர்த்து வேறொருவரையும் தந்தையெனக் கூறுகிறார்கள் எனில், இந்நிலையில் "எனது தந்தையும் நரகத்தில் தான்." என்னும் ஹதீதில் இடம் பெற்றுள்ள தந்தை என்னும் பதத்திற்கு தமது தந்தையான அப்துல்லாஹ் அவர்களல்ல. வேறொருவராகும் என்பதாக ஹதீதுக்கலை விரிவுரையாளர்கள் கூறும் விளக்கத்தை சிலர் ஏன் ஏற்க மறுக்கின்றனர்? பின்னும் நபியவர்களின் பரிசுத்தமான பெற்றோர் தொடர்பாக மேலும் விளக்கங்கள் வேண்டுவோர் நமது மற்றுமோர் வெளியீடான "சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்" என்னும் நூலைப் பார்வையிடுக. அடுத்து மற்றுமோர் ஆதாரத்தையும் பாருங்கள்.,,,

عن عطاء بن يسار عن أم سلمة عن آمنة قالت لقد رأيت ليلة وضعته نورا أضائت له قصور الشام حتى رأيتها

அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். "நான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைப் பெற்றெடுக்கவிருந்த இரவன்று ஒரு பிரகாசத்தைக் கண்டேன். அது ஷாம் தேசத்து கோபுரங்களைக் காணுமளவுக்கு பிரகாசமாக இருந்தது.." *(நூல் : மவாஹிப், ஸுர்கானி பாகம்-1, பக்கம்-219, தபகாத் இப்னு ஸஃத் பாகம்-1 பக்கம்-102.)*

عن عثمان بن ابي العاص عن أمه أم عثمان الثقفية وإسمها فاطمة بنت عبد الله قالت: لما حضرت ولادة رســول الله صلى الله عليه وآله وسلم رأيت البيت حين وقع قــد إمتلأ نورا ورأيت النجوم تدنوا حتى ظننت انها ستقع علي

இதுபோன்றே **"அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். திங்களெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்புவியில் உதயமாகும் நேரம் அண்மித்தபோது வீடு முழுவதும் பிரகாசத்தால் நிறைந்து காணப்பட்டது. அதுபோது நட்சத்திரங்களையும் கண்டேன். அவை எனக்கு மிக நெருக்கத்**

திலிருப்பதாக நினைத்தேன்." (அ-ர் பாத்திமா பின்த் அப் தில்லாஹ், நூல் : மவாஹிப், ஸுர்கானி பாகம்-1, பக்கம்-218, அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-2, பக்கம்- 264.)

எனவே இறைவனால் முதன் முதல் ஜோதியாகப் படைக் கப்பட்ட நமது நாயகம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அந்த ஜோதி அன்னை ஆமினா ரலியல்லாஹ்வின் புனிதமிகு கர்ப்பப்பைக்கு வந்து சேர்ந்து இவ்வுலகில் உதயமாகும் நாள்வரை ஒளிமயமாகப் பிரகாசித்தது மட்டுமின்றி தினந்தோறும் கனவில் நபிமார் களும் வானவர்களும் வருகைதந்து சுபச்செய்தியும் தந்துள் ளனர். இவையனைத்தும் நமது நபியவர்கள் ஜோதி மய மானவர்கள் என்பதையும் அவர்களது பரிசுத்தமான பெற் றோர்கள் முஃமின்கள் என்பதையும் உறுதிப்படுத்துவதை பொய்யென்று சொல்ல முடியுமா? பின்னும் உங்களில் யாராவது இதனைப் பொய்யென்று வாதிப்பீர்களேயாயின் இறைவன் மீதாணையாக அவர்கள் உண்மையான முஃமின் களாகவே இருக்க முடியாது.

மேலும் ஜோதி மயமான நபியவர்கள் தமது அன்னை வழியாக மனித கோலத்தில் ரபீவுல் அவ்வல் பிறை 12ம் நாளன்று உதயமானார்கள். இன்னும் அந்த ஜோதி மனித கோலத்தில் வெளியான போதிலும் அதற்கு எந்தவொரு மனிதனும் சமமாக முடியாதென்பதை நிரூபித்துக் காட்டும் வண்ணம் அதிசயமான விதத்தில் பிறந்து காட்டினார்கள். இது போன்றதொரு குழந்தை இவ்வுலகில் இதுவரை பிறக்க வில்லை. இனி பிறக்கப் போவதுமில்லை. இதோ எப்படி அந்த ஜோதி இவ்வுலகில் உதயமாயிற்று என்பதற்குரிய ஆதாரங்களைப் பாருங்கள்.

இன்னும் ரபீவுல் அவ்வல் 12ம் நாளன்று நபியவர்கள் உதயமானார்கள் என்பதைக்கூட ஒரு கூட்டம் ஏற்க மறுக் கின்றது. ஆனால் இன்று உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கம்ப்யூட்டர் பனிரெண்டாம் நாள்தான் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதனை ஏற்க மறுக்கும் கூட்டத்தைச் சார்ந்தவர்களில் ஒருவரான அபுல் ஹஸன் நத்வி என்பவர் தமது அஸ்ஸீரத்துன் நபவிய்யா என்னும் நூலின் 99ம் பக்கத்தில் 12ம் நாள் திங்கட்கிழமை தானென்று

கூறுகிறார். இப்போது அடுத்துவரும் ஹதீதைப் பாருங்கள்.,,,

عن ابن عباس عن أبيه العباس بن عبد المطلب رضي الله عنه قال: ولد رسول الله صلى الله عليه وآله وسلم مختونا ومسرورا

"ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கத்னா செய்யப்பட்டவர்களாகவும், தொப்புள்கொடி அறுக்கப்பட்டவர்களாகவும் உதயமா னார்கள்." (நூல்: அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-2, பக் கம்-265, ஸுர்க்கானி பாகம்-1, பக்கம்-232, இப்னு அஸாகிர் தப்ரானி, அபூநயீம் கதீப், ஹாதல் ஹபீப் பக்கம்-64, ஹாகிம் பாகம்-2, பக்கம்-657, இப்னு ஸஃத் பாகம்-1, பக்கம்-103.)

தொப்புள் கொடி அறுக்கப்பட்டவர்களாக நபியவர் கள் உதயமானது கூட அவர்கள் ஒரு ஜோதி மயமானவர் கள் தானென்பதை நமக்கு தெளிவுபடுத்திக் காட்டுகிறது. எப்படித் தெரியுமா? இவ்வுலகில் பிறக்கின்ற எல்லா குழந்தை களும் அவை பிறந்ததும் அவைகளின் தொப்புள் கொடியை நாம்தான் துண்டிக்கிறோம். ஏனெனில் அக்கொடியின் மூலமாகத்தான் தாயின் வயிற்றிலுள்ள குழந்தைக்கு ஆகா ரம் செல்கிறது. ஆனால் நபியவர்கள் தாயின் வயிற்றிலிருக் கும் போது கூட ஆகாரம் எதுவுமின்றி கர்ப்பப்பையில் வாழ்ந்து பிறக்கும் போது அந்தத் தொப்புள் கொடிக்குச் சம்பந்தமில்லாதவர்களாகப் பிறந்தார்கள்.

அது மட்டுமல்ல. தலைக்கு எண்ணை இடப்பட்டவர் களாகவும் தமது கண்களை வானத்தின் பக்கம் உயர்த்திய வர்களாகவும் தமது கலிமா விரலை உயர்த்தி ஏகத்துவத்தை உண்மையாக்கியவர்களாகவும் மர்மஸ்தானத்தின் வழியா கப் பிறக்காமல் தொப்புளுக்கும் மர்மஸ்தானத்துக்கும் இடையில் உதயமானார்கள். இப்படியொரு குழந்தை பிறந் ததை வரலாற்றில் எங்காவது காட்ட முடியுமா? அறவே இல்லையெனில் பின் எப்படி அந்த நபியை உன்னைப் போன்றவரென்று வாதிக்கிறாய்? இதுதான் அகிலத்தின் அதிபரான அண்ணலெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வவனியில் உதயமான முறைபற்றிய

விளக்கமாகும். வாருங்கள். அடுத்து நாம் சொல்லப் போகும் விஷயம் என்ன தெரியுமா?

ஜோதியா? மனிதரா?

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப் பட்ட ஜோதி என்பதை இதுவரை நாம் தந்த விளக்கங்களைக் கொர்ண்டு நிரூபித்துக் காட்டினோம். ஆனால் அந்த ஜோதிதான் ரபீவுல் அவ்வல் மாதம் 12ம் நாளன்று அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் வழியாக மனித உருக்கொண்டு வெளியாயிற்று என்பதாகக் கூறுகிறீர்களே! இது எப்படிச் சாத்தியமாகும் என்று யோசிக்கிறீர்கள் அல்லவா. இதற்குரிய விடையை நீங்கள் பார்க்க வேண்டுமாயின் இந்நூலின் ஆரம்பப் பகுதிக்கு மீண்டும் திரும்பிப் போங்கள். அங்குதான் அதற்குரிய விடை இருக்கின்றது. இருப்பினும் அந்த சிரமத்தை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டாமென்பதற்காக ஆரம்பத்தில் நாம் என்ன சொன்னோம் என்பதை இங்கே சுருக்கமாக உங்களின் பார்வைக்குத் தருகிறோம். அதாவது...

மனித இனம் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைக் கொண்டே துவக்கப்பட்டிருந்தாலும் அவ்வினத்திலுள்ள ஒருவர் இன்னொருவருக்குச் சமமாக முடியாது. ஏனெனில் அவர்களில் ஒருவர் கலீலுல்லாஹ்வாகவும், இன்னொருவர் கலீமுல்லாஹ்வாகவும், வேறொருவர் ரூஹுல்லாஹ்வாகவும் வித்தியாசப்படுத்தப்பட்டிருப்பதை புரிந்திருப்பீர்கள்.

இதில் கலீலுல்லாஹ்வாகிய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒரு மனிதராகத்தானே காட்சியளித்தார்கள்? இதேபோன்று கலீமுல்லாஹ்வாகிய மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களும் ஒரு மனிதராகக் காட்சி தரவில்லையா? அட இதையெல்லாம் விட இறைவனின் ஆன்மா என்று பேசப்பட்ட ரூஹுல்லாஹ்வாகிய ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களும் ஒரு மனிதராகப் பிறந்து வாழ்ந்தும் காட்டவில்லையா? இதையெல்லாம் நம்மால் நம்ப முடிகிறதென்றால் அல்லாஹ்வின் ஜோதியென்று பேசப்படும் நூருல்லாஹ்வாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்

கள் மட்டும் ஒரு மனிதராக ஏன் பிறந்து காட்சியளிக்க முடியாது?

கலீலுல்லாஹ், கலீமுல்லாஹ், ரூஹுல்லாஹ் போன்றவர்களை எல்லாம் ஒரு தாயின் வழியாகப் பிறக்கச் செய்து மனித இனத்தாரிடையே ஒரு மனிதராக வாழவைக்க முடிந்த மாட்சிமை மிக்க அல்லாஹ்வால் தனது ஜோதியாகிய நூருல்லாஹ்வையும் ஒரு மனிதராக மனித கோலத்தில் ஏன் வாழவைக்க முடியாது? நிச்சயமாக அல்லாஹ்வால் முடியும். அவன் எதையும் செய்வதற்குரிய ஆற்றலைக் கொண்டிருப்பவன். இதுதான் அவனைப் பற்றிய அடிப்படை நம்பிக்கையும் கூட.

இருப்பினும் நம்மிடையேயுள்ள சிலர், ஒளி என்பது உருவமற்றது. அதற்கென்று தனிப்பட்ட உருவம் என்பது எதுவுமில்லை என்பதால் நபியவர்கள் நூரானிய்யத்தானவர்களல்ல. வெறும் மனிதர் மட்டுமே என்று வம்பு பேசுகின்றனர். இவர்கள் சாதாரணமானவர்களல்ல. சகல ஆற்றலுக்கும் சொந்தக்காரனான அல்லாஹ்வின் வல்லமைக்கே வேட்டு வைப்பவர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில் இவர்களின் வாதம் எத்தனை தூரம் தவறான ஒன்றென்பதையும் நிச்சயமாக அல்லாஹ் தனது ஹபீபை தன் ஜோதியிலிருந்து தான் படைத்தான் என்பதையும், என்றபோதிலும் அவர்கள் இப்பூமியில் மனிதராகவே காட்சி தந்தார்கள் என்பதையும் நிரூபிக்க ஒருசில ஆதாரங்களை உங்களின் மேலான பார்வைக்குத் தருகிறோம்.

إن آدم عليه السلام لما حضره الموت قال لبنيه: أى بـــنيّ
إني اشتهى من ثمار الجنة فذهبوا يطلبـــون له فاستقبـــلتهم
الملائكة ومعهم أكفانه وحـــــــــنوطه ومعهم الفؤوس
والمساحي والمكاتل فقالوا لهم يابـــني آدم ما تريدون وما
تطلبون؟ أو ما تريدون؟ وأين تذهبون؟ قالوا أبونا مريض
فأشتهي من ثمار الجنة قالوا لهم إرجعوا فقد قضي قـــضاء

ابـــيكم. فجاءوا فلما رأتهم الحواء عرفتهم فلاذت بـــآدم فقال: إليك عني فإني إنما أوتيت من قبلك خلي بيني وبـــين ملائكة ربّي تبارك وتعالى فقبـــضوه وغســـلوه و كفنوه و حنطوه و حفروا له وألحدوا له وصلوا عليه ثم دخلوا قبره فوضعوه في قبره ووضعوا عليه اللبن ثم خرجوا من القبر ثم حثوا عليه التراب ثم قالوا: يابني آدم هذه سنتكم

"ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரியும் வேளை வந்தபோது அவர்களுக்கு சுவனத்திலுள்ள கனிகளை உண்ண வேண்டுமென்று விருப்பமேற்பட்டது. அதைத் தமது புதல்வர்ளை அழைத்துச் சொல்லவே, அவர்கள் அக் கனிகளை தேடிக்கொண்டு சிறிது தூரம்கூட சென்றி ருக்க மாட்டார்கள். அதற்குள் ஆண்களின் தோற்றத் தில் வானவர்களின் கூட்டமொன்று கபனுக்குரிய துணிகளைச் சுமந்தவர்களாக அவர்களை அணுகி, எங்கே போகிறீர்களென்று கேட்க, அதற்கவர்கள் தாம் செல்லும் நோக்கத்தைச் சொல்ல, அதற்கந்த வானவர் கள்; நீங்கள் வீடு திரும்புங்கள். உங்களது தந்தையின் காலம் முடிந்து விட்டதென்றனர். அதுகேட்டு அவர் களும் அமரர்களும் ஆதம் நபியவர்களின் வீட்டை நோக்கி வருவதைக் கண்ட ஹவ்வா அலைஹஸ்ஸலா மவர்கள் விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள்.

இருப்பினும் நபிமார்களுக்கு அவர்களின் விருப் பப்படி மரணிக்கும் உரிமையுண்டு என்பதால் ஹவ்வா அவர்கள் நபியவர்களிடம் மரணத்தை சிறிது தள்ளிப் போடலாமே என்பது போல சைகை செய்ய, அதற் கவர்கள்; தன்னை அமரர்களிடம் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டனர்.

அதன்பின் நபியவர்களின் ரூஹ் கைப்பற்றப்பட்டு அவர்களை நல்லடக்கம் செய்வதற்குரிய சகல ஆயத்

தங்களையும் அமரர்களே செய்யத் துவங்கி, கப்ரைத் தோண்டினார்கள். மேலும் நபியவர்களைக் குளிப் பாட்டி அவர்களுக்குக் கபனிட்டு தொழ வைத்தபின் கப்ருக்குள் வைத்தார்கள் அப்போது அதன்மேல் ஒரு பொருளையும் வைத்து விட்டு கப்ரைவிட்டு வெளியே வந்து மண்ணைப் போட்டு கப்ரை மூடினார்கள். இது அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த புதல்வர் களை நோக்கி இதுதான் இறுதிக் கிரியைகளுக்குரிய முறைகளாகும் எனக்கூறி விட்டு சென்றார்கள்." *(நூல்: அல் பிதாயா வன் நிஹாயா பாகம்-1, பக்கம்-96.)*

பின்னும் இதைக் குறிப்பிடும் இந்நூலாசிரியர் இப்னு கதீர் அவர்கள் இதனை "ஸஹீஹுல் இஸ்னாதி இலைஹி." (இதன் வரிசைத் தொடர் உண்மையானதாகும்) எனக் கூறி யிருப்பது இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றா கும். இன்னும் இந்த ஹதீதுக்கு "ஸஹீஹ் அல் கிஸஸுன் நபவி" என்னும் நூலின் 26ம் பக்கத்தில் தரப்பட்டுள்ள விளக் கத்துடனேயே பொருள் கூறப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும். மேலும் இந்த ஹதீத் மஜ்மவுஸ் ஸவாயித் என் னும் நூலில் 8ம் பக்கத்திலும், 199ம் பக்கத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் இமாம் இப்னு ஹஜர் ஹைதமி அவர்கள் இதைப்பற்றி கூறும்போது, இதை இமாம் அப் துல்லாஹ் பின் அஹ்மத் என்பவர் முன்மொழிந்துள்ளார். அதேநேரம் அறிவிப்பாளர்களில் அதபீ பின் ழமுரா என்ப வரைத் தவிர மற்றவர்களனைவரும் நம்பிக்கைக்குரியவர் களாகும் என்றும் இருப்பினும் ழமுரா ஸிகத்தானவரே என் றும் கூறுகின்றனர்.

அடுத்து ஸய்யிதுனா லூத் அலைஹிஸ்ஸலாமவர் களிடம் வானவர்களில் சிலர் அழகான வாலிபர்களின் தோற்றத்தில் விருந்தினர்களாக வருகை தந்தனர். அந்த நபி யவர்களின் சமூகத்தார் மகாக் கொடூரமானவர்களாதலால் அவர்கள்மீது நபியவர்கள் மிகவும் வெறுப்புற்றிருந்தனர். லூத் நபியவர்களின் இல்லத்திற்கு விருந்தாளிகள் வந்துள்ள னர் என்பதைக் கேள்விப்பட்ட அவர்கள் அங்கே விரைந்து வந்தனர். அதுபோது அதைக்கண்ட நபியவர்கள் என்ன செய்தார்கள் என்பதைக் குர்ஆன் இப்படிக் கூறுகின்றது. அதாவது,...

"தனது மூன்று புதல்விகளையும் அவர்கள் முன் நிறுத்தி என் சமூகத்தாரே! இதோ இவர்கள் எனது புதல்விகள். இவர்கள் உங்களுக்கு (திருமணத்திற்குப்) பரிசுத்தமானவர்கள். எனவே நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். என் விருந்தினரது விஷயத்தில் நீங்கள் என்னை அவமானப்படுத்தாதீர்கள். உங்களில் நல்ல மனிதர் ஒருவர்கூட இல்லையா?." என்று கூறினர்.

அதற்கு (அம்மக்கள்) "உங்களது புதல்வியரில் எங்களுக்கு எந்தத் தொடர்புமில்லை. நாங்கள் விரும்புவது என்னவென்பதை நீர் அறிவீர் என்று சொன்னார்கள்." *(சூரா ஹூத் வசனம்-78, 79. ஸஹீஹ் கிஸஸுன் நபவி பக்கம்-63.)*

عن أبي هريرة رضى الله عنه قال أرسل ملك الموت الى موسى عليه السلام فلما جائه صكه ففقأ عينه فرجع الى ربه فقال أرسلتني الى عبد لايريد الموت فقال: فرد الله اليه عينه

அடுத்து "ஹழ்ரத் இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஸய்யிதுனா மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வருகை தந்தபோது, மூஸா நபியவர்கள் அவரை அடிக்கவே, அவர் பின்பகுதி அடிபடுமளவிற்கு கீழே விழுந்தார்கள். அதில் அவரது கண்ணும் சேதமடைந்தது. அதே நிலையில் அல்லாஹ்வின் சமூகத்தில் ஆஜராகி மரணத்தை விரும்பாத ஒருவரிடம் என்னை ஏன் அனுப்பி வைத்தாய்? என்று கேட்க, பின்பு அல்லாஹ் அவரது கண்ணைத் திருப்பிக் கொடுத்தான்." *(நூல் : புகாரி ஷரீப், முஸ்லிம் ஷரீப் கிதாபுல் பழாயில், பாபு மின் பழாயிலி மூஸா அலைஹிஸ்ஸலாம். இக்மால் பாகம்-7, பக்கம்-351.)*

عن ابي هريرة رضى الله عنه عن النبي صلى الله عليه وآله وسلم أن رجلا زارأخا له في قـرية أخرى فأرصده الله له على مدرجته ملكا فلما أتي عليه قال أين تريد؟ قـال أريد

أخالي في هذه القرية قال هل لك عليه من نعمة تربها؟ قال لاغير إني أحببته فى الله عز وجل قال فإني رسـول الله اليك بأن الله قد أحبك كما أحببته فيه

இதுபோன்றே "அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறினர். ஒருவர் வேறொரு கிராமத்தில் வசிக்கும் தமது தோழனைச் சந்திப்பதற்காக சென்று கொண்டிருந்தார். வழியில் இடைமறித்த ஒருவர் எங்கே போகிறீரென்று கேட்க, நண்பனைச் சந்திப்பதற்காக செல்கிறேனென்று சொல்ல, அதற்கவர்; உமது நண்பனிடம் ஏதேனும் தேவையைக் கருதி செல்கிறீரா? என்று கேட்க, அதற்கவர்; அல்லாஹ்வுக்காக அவரை விரும்புகிறேன். அதன் பொருட்டே அவரைச் சந்திக்கச் செல்கிறேன். வேறு நோக்கம் எதுவுமில்லை என்று சொல்ல, அதற்கந்த மனிதர்; நான் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட வானவர். நிச்சயமாக அல்லாஹ் உன்னை விரும்புகிறான் என்று கூறினார்." *(அ-ர் ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. நூல் : முஸ்லிம் ஷரீப் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலத்தி வல் ஆதாபி, பாபு ஃபீ ஃபழ்லில் ஹுப்பி ஃபில்லாஹ் பாகம்-8 பக்கம்-35.)*

இவ்வாறே "ஒரு பட்டணத்திலிருந்த ஒருவருக்கு அறிமுகமான பனூ இஸ்ரவேலர்களைச் சேர்ந்த மூவர் கடுமையான வறுமையில் வாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் வெண்குஷ்டத்திலும், இன்னொருவர் மொட்டையிலும், மூன்றாமவர் அந்தகராகவும் இருந்தனர். இம்மூவரையும் அல்லாஹ் சோதிக்க விரும்பினான்.

அதனால் அவர்களிடம் வானவர் ஒருவரை அனுப்பி அவர்களின் தேவைகளை எல்லாம் கேட்டறிந்து நிறைவேற்றினான். இதன்படி அம்மூவரும் தமது விருப்பப்படி பெரும் செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் அவ்வானவர்.,,,

வெண்குஷ்டம் பிடித்தவனிடம் வெண்குஷ்ட ரோகியின் தோற்றத்தில் காட்சியளித்து அல்லாஹ் அவனுக்கு வழங்கியுள்ள நிஃமத்துக்களை எல்லாம் சொல்லிக்காட்டி தமக்கு உதவுமாறு வேண்ட, அவனோ இவைகளெல்லாம் தனக்கு பரம்பரை பரம்பரையாக வந்து சேர்ந்ததாகக்கூறி தனது ஆரம்ப நிலையைப் பொய்யாக்கிப் பேச அவன் மீண்டும் அதே நிலைக்கு உள்ளாக்கப்பட்டான்.

பின்னர் மொட்டையனிடம் மொட்டையனாகத் தோற்றமளித்த போது அவனும் வெண்குஷ்டனைப் போலவே பேசலானான். இதனால் இவனும் பழைய நிலைக்கே தள்ளப்பட்டான்.

அதன்பின் அந்தகனிடம் அந்தகனைப் போல் தோன்றி உதவிகோர அவரோ தனது ஆரம்ப நிலையை எடுத்துக் கூறி உமக்கு விருப்பமானதை எடுத்துச் செல்லுமென்று கூறினார். அப்போது அவர் தாம் வானவர் என்பதைக்கூறி அவருக்காக பிரார்த்தனையும் செய்துவிட்டுச் சென்றார் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றனர்."
(நூல்: முஸ்லிம் ஷரீப் கிதாபுஸ் ஸுஹ்தி வர்ரகாயிக். இக்மால் பாகம்-8, பக்கம்-515.)

சகோதரர்களே! இதுவரை உதாரணத்திற்காக வேண்டி ஒரு சில நபிமொழிகளை உங்களின் பார்வைக்குத் தந்தோம். ஆனால் இதுபோன்ற எத்தனையோ தகவல்கள் நபிமொழிகளில் மட்டுமல்ல. குர்ஆனிலும் உள்ளன. உதாரணமாக.,,,

ஹழ்ரத் மர்யம் அலைஹஸ்ஸலாமிடம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மனிதத் தோற்றத்தில் காட்சி தந்தது. அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் திஹ்யத்துல் கல்பி என்னும் நபித்தோழரின் உருவில் ஜிப்ரீலைப் பார்த்தது. நபித்தோழர்கள் ஜிப்ரீலை ஒரு பிரயாணியின் தோற்றத்தில் பார்த்த சம்பவங்களை எல்லாம் சொல்லலாம்.

இருப்பினும் வானவர்கள் எனப்படுவோர் ஒளியால் படைக்கப்பட்டவர்கள் என்பதுதான் இஸ்லாமியக் கொள்கையும் நமது நம்பிக்கையுமாகும். ஆனால் அந்த வானவர்கள் மனிதத் தோற்றத்தில் காட்சியளித்துள்ளனர். ஆம். ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின்புதல்வர்கள் முன் மனித உருவில் வானவர்கள் கூட்டமாக வந்து காட்சி தந்தது மட்டுமின்றி நபியவர்களை குளிப்பாட்டி கபனிட்டு கப்ரைத் தோண்டி ஜனாஸா தொழுகையும் நடத்திய பின் அவர்களைக் கப்ரில் வைத்து அதன்மீது மண்ணைப் போட்டபின் இதுதான் உங்களுக்குரிய வழிமுறை என்பதாகவும் கற்றுக் கொடுத்துவிட்டும் சென்றார்கள் எனில், அதாவது ஒரு மனிதனுக்குள் நிகழக்கூடிய ஆட்டம் அசைவு போன்றவை அனைத்தையும் காட்டிவிட்டுச் சென்றார்கள் எனில் இதற்குப் பிறகும் அவர்கள் வானவர்களாகத் தான் இருந்தார்கள் என்பதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

இதுபோன்றே ஹழ்ரத் லூத் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வருகைதந்த வானவர்கள் ஒரு அழகான வாலிபர்களின் தோற்றத்தில் காட்சி தந்தனர். இவ்வாறே மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வருகைதந்த இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்களை நபியவர்கள் கன்னத்தில் அறைந்துள்ளார்கள். அதன் விளைவு! அடித்த வேகத்தில் கண்ணையே இழந்திருக்கிறார்கள். இத்தனைக்குப் பிறகும் அவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். நாம் நம்புகிறோம்.

பின்னும் ஒளியால் படைக்கப்பட்ட அந்த வானவர்கள் ஒருவேளை நபிமார்களுக்குத் தான் இப்படி மனித உருவில் காட்சி தந்தார்களோ என்று நீங்கள் யோசித்தால் அதற்கு இல்லையென்பது தான் பதிலாகும். ஏனெனில் நண்பனைச் சந்திக்கச்சென்ற ஒருவரிடம் வானவர் மனித உருவில் தோற்றம் வழங்கியதோடு அவருடன் உரையாடியுமிருக்கிறார். இதுபோன்றே வெண்குஷ்டம் பிடித்தவனைப் போலவும், மொட்டையனைப் போலவும், அந்தகனைப் போலவும் எல்லாம் காட்சியளித்துள்ளனர்.

இன்னும் சொல்லப் போனால் ஹாரூத் மாரூத் என்னும் இரு வானவர்கள் மனித உருவில் காட்சியளித்தது மட்டுமின்றி மனிதனுக்குரிய இயல்பான எல்லா தன்மை

களையும் அவர்கள் வெளிப்படுத்தி உள்ளனர்.

எனவே ஒளியால் படைக்கப்பட்டுள்ள வானவர்கள் மனிதஉருவில் மனிதர்களாகக் காட்சியளித்தது மட்டுமின்றி மனிதர்களது எல்லாநிலைகளையும் தமக்குள் கொண்டிருந் தமைக்கு இன்னும் வேறென்ன ஆதாரம் வேண்டும்? நூரா னிய்யத்துடைய நிலை கொண்ட வானவர்கள் மனிதர்களாகக் காட்சியளித்தார்கள். மனிதர்களோடு பேசினார்கள். மனிதர் களைப் போலவே நடந்தார்கள். மனிதர்கள் செய்யும் வேலைகளையும் செய்தார்கள் என்றால், இதில் எவ்வித ஆச் சரியமும் இல்லையென்றால் அல்லாஹ்வால் முதன் முதலா கப் படைக்கப்பட்ட ஜோதியாகிய முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மட்டும் மனிதராகக் காட்சி யளித்தால் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

பின்னும் ஒளியால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த வானவர் கள் மனிதர்களாகக் காட்சியளித்தாலும் மனிதர்கள் செய் யும் வேலைகளைச் செய்தாலும் அந்த நிலையிலும் கூட அவர்களது நூரானிய்யத்துடைய நிலைக்கு எந்தவொரு பாதகமும் ஏற்படாததைப் போல, அதேநேரம் மற்ற மனிதர் களுக்குச் சமமாகாததைப் போல ஜோதி மயமான முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் ஒரு மனித ராகப் பிறந்த போதிலும் அவர்களது ஜோதிக்கு அதனால் எவ்விதப் பாதகமும் நேரவில்லை என்பதோடு அவர்களை உன்னைப் போன்றவரென்று எப்படி நீ வாதம் செய்கிறாய்?

எனவே இதுவரை நாம் முன்னிருத்திய ஆதாரங்களைக் கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தான் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப் பட்ட ஜோதி என்பதும், அந்த ஜோதிதான் ரபீவுல் அவ்வல் மாதத்தின் 12ம் நாள் மனித கோலம் கொண்டு வெளியா னது என்பதும், அதேபோல அந்த ஜோதி மனிதராகவும் முடியும் என்பதும் உறுதிப் படுத்தப்பட்டு விட்டது. இருப் பினும் இன்னுமொரு சந்தேகம். அதாவது...,

வானவர்கள் நூரானிய்யத்துடையவர்களாக இருந்து அவர்கள் மனிதத் தோற்றத்தில் காட்சி தந்ததை காஸிம் நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு ஒப்பு நோக்குதல் சரியல்ல. ஏனெனில் அவர்கள் நபியவர்களைப் போன்று ஒரு தாயின் வழியாகவா பிறந்து வந்தார்கள்? ஆனால் நபியவர்கள் ஒரு தாய் வழியாகவல்லவா பிறந்து வந்தார்கள். இதற்குரிய ஆதாரத்தையும் கொஞ்சம் காட்டி விடுங்களேன் என்று கேட்பீர்களாயின் அதற்குரிய ஆதார மாவது,....

நீங்களும் நானும் ஏற்றுக் கொண்டுள்ள "அல்லாஹ் தான் விரும்பியதை எல்லாம் செய்யக் கூடியவன்" என்பதில் உங்களுக்கு சந்தேகம் ஏதேனுமுண்டா? இல்லையெனில், கலீலுல்லாஹ்வும் கலீமுல்லாஹ்வும், ரூஹுல்லாஹ்வும் ஒரு தாயுடைய வயிற்றிலிருந்து தான் பிறந்து வந்தார்கள் என்பதிலாவது ஏதேனும் சந்தேகமுண்டா? இல்லையெனில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோற்றத்தில் மட்டும் எப்படி சந்தேகம் வரலாம். வரக் கூடாது. இப்படிப்பட்ட சந்தேகங்களை எல்லாம் உங்க ளுடைய உள்ளத்திலிருந்து முழுவதுமாகக் கிள்ளி எறிந்து விடுங்கள். இல்லையேல் இதுவரை நாம் கூறிவந்தவைகளில் சொன்னதைப் போல அல்லாஹ்வின் வல்லமையின் மீதே நாம் சந்தேகம் கொள்ளக்கூடிய ஒரு அபாயகரமான சூழ் நிலை உருவாகி விடும். அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பா னாக. இருப்பினும் உங்களின் தெளிவுக்காக இன்னும் சில ஆதாரங்களை உங்களின் பார்வைக்கு தருகிறோம். தெளிவு பெறுவதற்கு அல்லாஹ்வே போதுமானவன்.

சந்தேகம் வேண்டாம்

ஜோதி மயமான ஜெகமே போற்றும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், தான் ஒரு தாயின் வழியாக வந்துதித்து இவ்வுலகில் மனித உருவில் நடமாடினர். இது அல்லாஹ்வுக்கு சாத்தியமான ஒன்றுதான் என்பதை நிரூ பித்துக் காட்டும் ஆதாரங்களாவது,...

وإن لكم فى الانعام لعبرة نسقيكم مما في بطونه من بين
فرث ودم لبنا خالصا سائغا للشاربين

"நிச்சயமாக உங்களுக்கு (ஆடு, மாடு, ஒட்டகங்

கள் போன்ற) கால்நடைகளிலும் கூட தகுந்த படிப்பினைகள் உள்ளது. அவைகளின் வயிற்றிலுள்ள சானத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பற்ற பாலை அருந்துவோருக்கு இனிமையானதாக (தாராளமாகப்) புகட்டுகிறோம்."

(சூரா அந்நஹ்ல் வசனம்-66.)

وأوحى ربك الى النحل أن اتخذي من الجبال بيوتا ومن الشجر ومما يعرشون ثم كلي من كل الثمرات فاسـلكي سبل ربك ذللا يخرج من بطونها شـراب مختلف الوانه فيه شفاء للناس إن في ذالك لآية لقوم يتفكرون

"மலைகளிலும் மரங்களிலும் உயர்ந்த கட்டிடங்களிலும் கூடுகளை அமைத்துக் கொள்ளும்படியாகவும் பின்பு எல்லாவிதமான கனிகளின் மலர்களிலிருந்தும் உணவருந்தி இறைவனின் வழியில் செல்லும்படியாகவும் உமதிறைவன் தேனீக்களுக்கு வஹீ அறிவித்தான். அதன் வயிற்றிலிருந்து பலவித நிறங்களைக் கொண்ட ஒரு பானம் (தேன்) வெளியாகிறது. அதில் மனிதர்களுக்கு (பிணியகற்ற வல்ல) சிகிச்சை உண்டு. நிச்சயமாக இதிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது." *(சூரா அந்நஹ்ல் வசனம்-68, 69.)*

மேற்கண்ட வசனங்களைக் கொண்டு சானத்திற்கும் இரத்தத்திற்கும் இடையிலிருந்து கலப்பில்லாத பாலை நம்மால் அருந்த முடிகிறது. அதேபோல ஒரு வகை பூச்சியின் வயிற்றிலிருந்து வெளியாகும் தேனை பருகவும் மருந்தாகப் பயன்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. இவைகளை எல்லாம் நமது அறிவு ஏற்றுக்கொள்ள முடியுமாயின் எல்லாம் வல்ல அல்லாஹ்வைக் கொண்டு எதையும் எப்படியும் உருவாக்க முடியும் என்பதை நம்புகின்றவர்களில் ஒருவராக நாம் இருந்தால் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் வழியாக நபியவர்களின் ஜோதி மனித உருக்கொண்டு வெளிப்பட்டதை மட்டும் ஏன் நம்ப முடியாது?

மேலும் ரூஹுல்லாஹ்வாகிய ஹழ்ரத் ஈஸா அலை

ஹிஸ்ஸலாமவர்களை அல்லாஹ்வின் தூதராகவும் அடியாராகவும் தந்தையின்றி வெறுமனே தாயாகிய மர்யம் அலைஹஸ்ஸலாமவர்கள் வழியாகப் பிறந்தார்கள் என்பதை ஏற்றுக்கொண்ட நாம், கலீலுல்லாஹ்வாகிய இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை அல்லாஹ்வின் அடியாராகவும் ரஸூலாகவும் விசுவாசம் கொண்ட நாம், கலீமுல்லாஹ்வாகிய மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை அந்த பரம்பொருளின் அடியாரென்றும் ரஸூலென்றும் நம்பிக்கைக் கொண்ட நாம், இதற்குள் ஒளிந்து கொண்டுள்ள ரகசியத்தைப் புரிந்து கொண்ட நாம் அல்லாஹ்வின் முதல் படைப்பான ஜோதி தான் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹாவின் மூலமாக இப்பூமியில் மனிதத் தோற்றம் கொண்டு உதயமாயிற்று என்பதை மட்டும் நம்மால் ஈமான் கொள்ளவோ புரிந்துகொள்ளவோ முடியவில்லையா? மற்ற நபிமார்களின் பிறப்பிலெல்லாம் மறைந்திருந்த அந்த ரகசியத்தை உடைத்துப் பார்க்க முடிந்த நம்மால் நமது இதய வேந்தரின் இனிய நாதரின் பிறப்புக்குள் மறைந்துள்ள ரகசியத்தை மட்டும் நம்மால் உடைத்துப் பார்க்க முடியவில்லை. இந்த நிலையில் அந்த உத்தம நபியைச் சிலர் தமக்குச் சமமாக்கி தன்னைப் போன்றவர் என்று எப்படிக் கூறுகின்றனர்? இதுதான் அறியாமையின் விபரீதமோ!

பின்னும் மறைவானவற்றின் மீது நம்பிக்கைக் கொள்வதற்குப் பெயர்தான் நம்பிக்கையாகும். இதில் மனிதக் கண்களுக்கோ அறிவுக்கோ உணர்வுகளுக்கோ எண்ணங்களுக்கோ ஒரு விஷயம் புரிந்து கொள்ளப்படுமாயின் அதற்குப் பெயர் நம்பிக்கையல்ல. இந்நிலையில் நாம் நம்பிக்கைக் கொண்டுள்ள இறைவனது வல்லமைக்கும் ஆற்றலுக்கும் சான்றாகக் காட்டப்படும் இதுபோன்ற விஷயங்களை நம்புவதுதான் உண்மையில் இறைவன் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கைக்குரிய ஆதாரமாகும். ஆதலால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதிதான் முதன் முதலாக அல்லாஹ்வால் படைக்கப்பட்டது என்பது இப்போது ஊர்ஜிதமாயிற்று. அந்த ஜோதிதான் ரபீவுல் அவ்வலின் 12ம் நாள் இப்பூமியில் உதயமாயிற்று என்பதும் ஊர்ஜிதமாயிற்று. ஜோதி மயமான ஒருவர் மனித உருவில் காட்சியளிக்க முடியும் என்பதற்கும் பதில் கிடைத்தது. அத்துடன் அந்த ஜோதி மயமானவர் ஒரு தாயின் வழியாகப்

பிறக்க முடியுமென்பதும் அசைக்க முடியாத ஆணித்தர மான ஆதாரங்களுடன் ஊர்ஜிதமாயிற்று.

அத்துடன் அண்ணல் நபியவர்கள் தமது தந்தை அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் முதுகந் தண்டில் நுத்பாவாக இருக்கும்போதும், தான் ஒரு தோதி தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தினர். அதன்பின் தாயின் கர்ப்பரைக்கு வந்து சேர்ந்த போதும், தான் ஒரு ஜோதி தான் என்பதை ஊர்ஜிதப்படுத்தினர். இதேபோல தாம் உதயமான தினத்தன்றும் தான் ஒரு ஜோதி தானென்பதை நிரூபித்துக் காட்டிய பின்னரே உதயமானார்கள். இந்நிலையில் அப் புனித நபியவர்களின் தோழமையைப் பெற்றவர்கள் தமது ரஸூலை எப்படியெல்லாம் பெற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதை அடுத்து வரும் பக்கங்களில் பார்ப்போம்.

ஆம். வல்லோனாகிய அல்லாஹ்வைக் கொண்டு பொருந்திக் கொள்ளப்பட்டோரென திருக்குர்ஆனைக் கொண்டு உத்திரவாதம் அளிக்கப்பட்ட ஸஹாபாக்கள் என்னும் அத்தோழர்கள் தமது ரஸூலை ஒரு மனிதராகக் கண்டாலும் கூட அவர்களில் யாருமே தமது ரஸூலுக்குச் சமமாக முடியாது என்னும் ஓர் நிரந்தரமானக் கொள் கையை தமக்குள் அவர்கள் கொண்டிருந்ததற்கு அவர்களின் செயல்பாடுகளே தகுந்த சான்றாகும் என்பதை நம்மால் ஒருபோதும் மறுக்க முடியாது. இதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமாயின்,...

அவர்கள் தமது நபியின் உதிரத்தைக் குடித்ததையும், ஊரியத்தைக் குடித்ததையும், அவர்களது வியர்வையை திர வியமாக உபயோகித்ததையும், சளியையும் உமிழ் நீரையும் தமது முகங்களில் பூசிக் கொண்டதையும் உதாரணமாகச் சொல்லலாம். இருப்பினும் இங்கே நாம் சொல்லவந்த விஷயம் நூர் சம்பந்தப்பட்டதாகுமாதலால் அதைக் குறித் துப் பேசுகிறோம்.

இஸ்லாமியர்களே!

என்னுடைய ஷைகு நாயகம் அவர்களின் சகவாசத் தாலும் அவர்களது நல்லாசியாலுமே என்னால் இப்படி யெல்லாம் உதவ முடிகிறதென்றால் எனது ஷைகு நாயகம்

எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை உங்க ளால் ஓரளவுக்கு ஊகித்துக்கொள்ள முடிகிறதல்லவா. இதே போல கண்மணி நாயகமவர்களின் சகவாசத்தைப் பெற்றி ருந்த அத்தோழர் பெருமக்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைப் பார்க்கப் போகும் உங்களில் சுத்தமான உள்ளமுடையோராக இருப்போர் கண்டிப்பாக புரிந்து கொள்ள முடியும். அதாவது,...

قال حماد بن سلمة أخبرنا ثابت عن أنس رضى الله عنه قال: كان أسيد بن حضير وعباد بن بشـــر عند النبي صلى الله عليه وآله وســـلم في ليلة ظلماء حـــندس: فلما خرجا أضائت عصا أحدهما فمشيا في ضوئها فلما افترقـــت بهما الطريق أضائت عصا الآخر

“ஹழ்ரத் உஸைத் பின் ஹுளைர் மற்றும் ஹழ்ரத் உப்பாத் பின் பிஷ்ர் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரும் “மாதக் கடைசியிலுள்ள மூன்று இரவுகளில்” ஒரு நாளிரவு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களோடு நீண்ட நேரம் உரையாடிய பின் அங்கி ருந்து வீடு திரும்பும் போது இரவாதலால் ஒரே காரிரு ளாக இருந்தது. அப்போது அவ்விருவரிடமும் இருந்த கைத்தடிகளில் ஒன்று பிரகாசிக்கலாயிற்று. அதன் வெளிச்சத்தில் இருவரும் சென்று கொண்டிருக்கும் போது இருவரும் வெவ்வேறு பாதையில் செல்ல நேரிட இரண்டாமவரின் கைத்தடியும் பிரகாசிக்கலாயிற்று.”

இந்த ஹதீதை ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஸாபித் ரலியல்லாஹு அன்ஹுவுக்குச் சொன்னதாக ஹழ்ரத் மஃமர் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர். அடுத்து ஹம்மாத் என்பாரைக் கொண்டு அறிவிக்கப்பட்ட ஹதீ தைப் பாருங்கள்.

وقال معمر ابن راشـــد عن ثابـــت عن أنس رضى الله عنهما أن اسيد بن حضير ورجلا من الأنصار تحدثا عند

رسول الله صلى الله عليه وآله وسلم حتى ذهب من الليل ساعة في ليلة شديدة الظلمة ثم خرجا وبيد كل واحد منهما عصية فأضائت عصا أحدهما حتى مشيا في ضوئها حتى إذا إفترقت بهما الطريق أضائت عصاالآخر فمشيا كل واحد منهما في ضوء عصاه حتى بلغ اهله

"ஹழ்ரத் உஸைத் பின் ஹுழைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஹழ்ரத் உப்பாத் பின் பிஷ்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் கடுமையான இருள் காலத்தின் இரவுகளில் ஓரிரவு ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடன் நீண்ட நேரம்வரை உரையாடிக் கொண்டிருந்து விட்டு பின்னர் அங்கிருந்து விடைபெறும் போது அவ்விருவரின் கரங்களிலிருந்த தடிகளில் ஒருவரின் தடி பிரகாசிக்க, அப்பிரகாசத்தில் இருவரும் வெவ்வேறு பாதை வரும்வரை சென்று கொண்டிருந்தனர். பின்னர் தேவைக்கேற்ப இரண்டாமவரது தடியும்அவரவர் இல்லம் வரை பிரகாசித்தது."

இவ்விரு ஹதீதுகளும் உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-16, பக்கம்-270. பத்ஹுல் பாரி பாகம்-7, பக்கம்-156. இர்ஷாதுஸ் ஸாரி பாகம்-8, பக்கம்-317ல் கிதாபு மனாகிபில் அன்ஸாரி, பாபு மன்கபத்தி உஸைத் பின் ஹுழைர் வ உப்பாத் பின் பிஷ்ர் என்னும் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்னும் இதே நூல்களில் பின்வரும் ஹதீதுகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். அதாவது,...

عن قتادة بن نعمان أنه خرج من عند النبي صلى الله عليه وآله وسلم وبيده عرجون فأضاء العرجون

"ஹழ்ரத் கதாதா பின் நுஃமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு சமூகத்திலிருந்து வீட்டை நோக்கிச் செல்லும்போது அவ்விரவு

ஒரே காரிருளாக இருந்ததால் அவரது கரத்திலிருந்த தடி பிரகாசிக்க ஆரம்பித்தது. இந்த ஹதீத் இப்னு அஸாகிரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-4, பக்கம்-242ல் பாபு இத்காலில் பயீரி பில் மஸ்ஜிதி லில் இல்லத்தி என்னும் பிரிவில் பதிவாகியுள்ளது. இது போல இன்னும் பல ஹதீதுகளும் இப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

எனவே மேற்கண்ட ஹதீதுகளைக் கொண்டு நமக்குக் கிடைக்கும் படிப்பினை, பிரயோஜனம் என்னவென்பதைப் பார்க்கும்போது அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு அல்லாஹ் "கராமத்" என்னும் அற்புதங்களை வழங்கியுள்ளான் என்பது உறுதிப்படுத்தப்பட்டாலும் அந்நபித் தோழர்கள் நபியவர்களின் சமூகத்திலிருந்து விடைபெற்று காரிருள் சூழ்ந்த இரவு நேரங்களில் செல்லும்போது அவர்களது கைகளிலிருந்த ஜடப் பொருட்களான தடிகள்கூட பிரகாசித்திருக்கின்றன என்றால், பின்னும் அவை கண்டிப்பாக காத்த முன் நபியவர்களின் அருள் கிருபையைக் கொண்டுதான் பிரகாசித்ததெனில் நிச்சயமாக நபியவர்கள் ஜோதிமயமானவர்களாகத்தான் இருந்தார்கள் என்பது திண்ணமாகத் தெரிகிறது.

இதேபோல அல்லாஹ்வின் நேசர் பெருமக்களான வலிமார்களின் வதனங்கள் நூரானிய்யத்தான பிரகாசமுடையதாக இருப்பதுகூட நபியவர்கள் ஜோதி மயமாக ஜொலித்துக் கொண்டிருந்ததற்குரிய அத்தாட்சியேயாகும்.

பின்னும் ஒளியுள்ள மின் விளக்கில் ரேடியத்தின் துண்டொன்றை பலமணி நேரம் வைத்துவிட்டு அதன்பின் அதை கடும் இருள் சூழ்ந்த இருட்டில் வைத்துப் பார்ப்பீர்களாயின் நிச்சயமாக அதுவும் ஒளியுள்ள ஓர் பொருளைப் போல் தெரிகிறதா இல்லையா என்பதைப் பரிசோதித்துப் பாருங்கள்.

இவ்வாறே இறுதிநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடன் சகவாசம் கொண்டிருந்த தோழர்களின் கரங்களிலிருந்த அந்த ஜடப்பொருட்களும் பிரகாசித்தன எனில் அது முன்பே பிரகாசமானதொரு பொருளோடு இணைந்திருந்தது என்பதற்குரிய அழுத்தமான

ஆதாரம் கிடைக்கிறதல்லவா. இப்படியெல்லாம் முஃமின்களால் விளக்கம் தரப்படுவதைக் கண்ட சில நயவஞ்சகர்கள்,–

“நபியவர்கள் ஜோதி மயமானவர்கள். அதனால்தான் அவர்களது தோழர்களின் கரங்களிலிருந்த தடிகளும் பிரகாசித்தன என்று கூறுகிறீர்களே! அப்படியானால் அத்தோழர்களை விட அந்தத் தடிகள் உயர்வானதா என்ன? இல்லையெனில் அந்த இருளில் அவர்கள் ஏன் பிரகாசிக்கவில்லை? ஒருவேளை அவர்கள் முழுவதுமாகப் பிரகாசிக்க முடியவில்லை என்றாலும் குறைந்த பட்சம் அவர்களின் உறுப்புக்களில் ஏதாவதொன்று பிரகாசித்திருக்கலாமே? என்று கேட்கின்றனர்.

ஆம். அந்த ஜட்ப் பொருளுக்குப் பகரமாக நபித்தோழர்களது அங்கங்கள் ஏன் பிரகாசிக்கவில்லை என்றொரு கேள்வி எழும் என்பதாலோ என்னவோ அதற்கான ஹதீத் சொல்லப்பட்ட ஹதீதுடன் விளக்கப்படாமல் விடுபட்டிருக்குமோ என்றொரு எண்ணம் உள்ளத்தில் ஊசலாடுகிறது. எதற்கும் உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-4, பக்கம்-242டை பார்க்க வேண்டுகிறோம்.

மேலும் நபித்தோழர்களை விட அந்த ஜடப்பொருட்களை உயர்த்திப் பேசுவதாகவும், நபித் தோழர்களுக்கு அவ்விருள் ஏன் அகலவில்லை என்றும் வாதிக்கின்ற இவர்களிடம் நாம் கேட்க விரும்புவதெல்லாம்,...

இவர்களுக்கு இருள் என்றாலே வானத்தின் இருள் மட்டும் தானென்று நினைக்கிறார்களா? ழலாலத், குப்ரு, ஷிர்க் போன்றவைகளெல்லாம் இருளில்லையா? ஒரு ஜடப்பொருளாகிய தடி என்பது இன்னொரு ஜடப்பொருளான வானத்தின் இருளைத்தான் அகற்ற முடியும். இதற்காகவா நபியவர்கள் தமது தோழர்களை உருவாக்கினார்கள்? நிச்சயமாக இல்லையென்று தான் சொல்லுவோம். பின் எதற்காக என்றால் வழிகேடு, அறியாமை, குப்ரு, ஷிர்க் போன்றவைகளெல்லாம் நீக்கப்பட்டு தௌஹீதென்னும் ஏகத்துவத்தின் ஒளியை உலகமெங்கும் பிரகாசிக்கச் செய்வதற்காகத்தான் உருவாக்கப்பட்டார்கள். இதைத்தான் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்,...

أصحابي كالنجوم فبأيهم إقتديتم إهتديتم

“எனது தோழர்களில் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழியை அடைவீர்கள்” என்று சொன்னார்கள்.

இன்னும் இருள் என்றால் என்ன? அதன் வகைகள் என்ன? என்பதைக்கூட சரியாகப் புரிந்துகொள்ள முடியாத இவர்கள் நமக்குப் பூச்சாண்டி காட்டுகின்றனர். இதற்குமுன் இவர்கள் ஒளியைப் பார்த்திருந்தாலல்லவா இருளைப் பற்றித் தெரிய முடியும். எனவே மேற்கண்ட ஹதீதுகளைக் கொண்டும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜோதி மயமானவர்கள் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். இருப்பினும் புனிதமிகு நபித்தோழர் பெருமக்கள் இது விஷயத்தில் எப்படிப்பட்ட விளக்கங்களை எல்லாம் தந்துள்ளனர் என்பதையும் நாதாக்களின் நல்லாசியால் இப்போது பார்ப்போம்.

ஜோதி மயமான திருவதனம்

حدثنا ابوبكر بن اسحاق أنبأ عبيد بن عبدالواحد ثنا يحى بن بكير ثنا الليث عن عقيل عن ابن شهاب عن عبد الرحمن بن كعب بن مالك قال: سمعت كعب بن مالك يقـــول: لما سلمت على رسول الله صلى الله عليه وآله وسلم قال وهو يبرك وجهه وكان رسول الله صلى الله عليه وآله وسلم إذا سرّ استنار وجهه كأنه قطعة قمر وكان يعرف ذالك منه

“நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஸலாம் சொன்னேன். அப்போது அவர்களது திருவதனம் ஒளியால் இலங்கிக் கொண்டிருந்தது. இன்னும் நபியவர்கள் மகிழ்வோடு இருப்பார்களாயின் அப்போது அவர்களின் திருவதனம் நிலவின் ஒரு பகுதிபோலத் தென்படும் என்று ஹழ்ரத் கஃப் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லக் கேட்டேன் என்பதாக ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் பின்

கஃப் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர். இது நபியவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானதாகும்." *(நூல்: அல் முஸ்தத்ரக் பாகம்-2, பக்கம்-662. தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-197. புகாரி ஷரீப் பாகம்-2, பக்கம்-731.)*

இன்னும் இந்த ஹதீத் முஸ்லிம் ஷரீப், *இக்மால் பாகம்-8, பக்கம்-274. முஸ்னத் அஹ்மத் பாகம்-5, பக்கம்-47, எண்-15882 பாபு ஹதீதீ தௌபத்தி கஃபிப்னி மாலிக்கின் வஸாஹிபைஹி என்னும் பிரிவில் நீண்டதொரு ஹதீதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

وأخبرنا ابو عبد الحافظ قال: حدثنا ابو بكر: احمد بـــن سليمان الفقيه قال: حدثنا احمد بن محمد بن عيسى قـــال: حدثنا ابو نعيم قال: حدثنا زهير عن ابي اسحاق قال: سأل رجل البراء: اليس كان وجه رسول الله صلى الله عليه وآله وسلم مثل السيف؟ قال: لاكان مثل القمر

அடுத்து **"ஹழ்ரத் பராஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவதனம் வாளைப் போலிருக்க வில்லையா? என்றொருவர் கேட்க, அதற்கவர்கள்; இல்லை சந்திரனைப் போலிருந்தது என்று கூறினார் கள்."** *(நூல் : தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-195. புகாரி ஷரீப் பாகம்-2, பக்கம்-729. திர்மிதி ஷரீப் பாகம்-5, பக்கம்-363.)*

ஸுப்ஹானல்லாஹ்! நமது நபியவர்களைக் கண்ணால் கண்ட அவர்தம் தோழர்களில் ஒருவர் நபிகளாரின் திருவதனத்தை சந்திரனின் ஒருபகுதி போலவும், இன்னொருவர் பார்வைக்கு சந்திரனைப் போலவே இருந்ததாகவும் சொல்கிறார். இப்போது இன்னொருவர் என்ன சொல்கிறாரென்பதையும் பாருங்கள்,...

أخبرنا أبوطاهر: محمد بن محمد بن محمش الفقـــيه قـــال:

أخبرنا ابو حامد: احمد بن محمد بن يحى بن بلال البزاز قـــال: حدثنا محمد بن اسماعيل الأحمش قـــال: حـــدثنا المحاربى عن أشعث عن ابي اسحاق عن جابر بن سمرة قـــال: رأيت النبي صلى الله عليه وآله وسلم في ليلة إضحيان وعليه حـــلة حمراء فجعلت أنظر اليه والى القمر فلهو كان في عيني أحسن من القمر

"ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மேகமில்லாத முழு நிலவுடைய இரவொன்றில் அவர்கள் மீது சிவப்பு நிறப் போர்வை இருக்கும் நிலையில் கண்டேன். அப்போது நான் சந்திரனை ஒரு முறையும் நபியவர்களின் திருவதனத்தை ஒரு முறையுமாகப் பார்ப்பவனாக இருந்தேன். அப்போது சந்திரனைவிட அவர்களின் திருவதனமே மிக மிக அழகானதாகக் காணப்பட்டது என்பதாக ஜாபிர் பின் ஸமுரா ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்."

(நூல் : தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-196. ஸுனன் திர்மிதி, கிதாபுல் அதப், பாகம்-4, பக்கம்-370. ஸுனன் தாரமீ பாகம்-1, பக்கம்-30)

ஆக நபியவர்களின் திருவதனம் சந்திரனை விடவும் மிக அழகானதென்பது உறுதியாகிறது. ஆம். கண்டிப்பாக நபியவர்களின் திருவதனத்தை விட வேறொரு பொருள் அழகானதாகவோ, பிரகாசமானதாகவோ ஒருபோதும் இருக்கவே முடியாது. ஏனெனில் நபியவர்களின் ஜோதியிலிருந்து தான் சந்திரனும் படைக்கப்பட்டதென்பதை முன்னால் வாசித்தது உங்களுக்கு நினைவிலிருக்கலாம். இன்னும் நபியவர்கள் மனிதத் தோற்றத்தில் காணப்பட்டாலும் அவர்கள் முழுக்க முழுக்க ஜோதி மயமானவர்கள் தானென்பதற்கு அடுத்து வரும் நபியவர்களின் ஒரு முஃஜிஸாத் என்னும் அற்புதமும் அசைக்க முடியாத ஆதாரமாக விளங்குவதைக் காணலாம். அதாவது,...

حدثنا صدقة بن الفضل أخبرنا ابن عيينة عن ابـــن ابى نجيح عن مجاهد عن ابى معمر عن عبدالله بن مسعود رضي

الله عنه قال: إنشق القمر على عهد رسول الله صلى الله عليه وآله وسلم شقتين فقال رسول الله صلى الله عليه وآله وسلم إشهدوا

"நாங்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு அமர்ந்திருக்கும் போது சந்திரன் இரண்டாகப் பிளந்தது. உடனே நபியவர்கள், சந்திரன் பிளந்ததற்கு நீங்கள் சாட்சியாக இருங்களென்று சொன்னார்கள்." *(நூல் : புகாரி ஷரீப் கிதாபுல் மனாகிப் பாகம்-2, பக்கம்-762.)* இதுபோன்றே,

حدثني عبدالله بن محمد حدثنا يونس خدثنا شيبان عن قتادة عن أنس بن مالك رضي الله عنه وقال لي خليفة: حدثنا يزيد بن زريع حدثنا سعيد عن قتادة عن انس بن مالك رضي الله عنه أنه حدثهم أن أهل مكة سألوا رسول الله صلى الله عليه وآله وسلم أن يريهم آية فأراهم إنشقاق القمر

"மக்காவாசிகள் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் எங்களுக்கு ஏதேனும் அற்புதத்தைக் காட்டுங்களென்று கேட்க, நபியவர்கள் சந்திரனை பிளக்கவைத்துக் காட்டினார்கள் என்பதாக ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்." *(நூல் : புகாரி ஷரீப், கிதாபுல் மனாகிப், பாகம்-2, பக்கம்-762.)*

மேற்கண்ட இவ்விரு ஹதீதுகளைக் கொண்டு ஒரு விஷயத்தை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, ஒரு இரும்பை இன்னொரு இரும்பால் தான் துண்டாக்க முடியும் என்பதும், ஒரு கண்ணாடியை இன்னொரு கண்ணாடியால் தான் அறுக்க முடியும் என்பதும் நாம் தெரிந்து வைத்துள்ள விபரங்களாகும். அவ்வாறின்றி ஒரு கண்ணாடியை கல்லைக் கொண்டு அறுத்தால் அது பல துண்டுகளாக உடைந்து தான் போகுமேயன்றி அறுபடாது. அப்படி இல்லையேல் அக்கண்ணாடியின் இனத்தைச் சேர்ந்த

வைரம் போன்ற பொருளைப் பயன்படுத்தினால் அது அறுபடும். இதேபோல ஒளியாலான சந்திரனை பிளப்பதாயின் அதைவிடப் பிரகாசமானதொரு பொருளைக் கொண்டு தான் அது சாத்தியமாகும். இந்த இடத்தில் நபியவர்கள் தான் சந்திரனை விடப் பிரகாசமானவன் என்பதை அதை பிளப்பதன் மூலம் நிரூபித்துக் காட்டுகின்றனர். இதைவிட நபியவர்கள் தாம் ஒரு ஜோதி மயமாகத்தான் இருந்தார்கள் என்பதற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்? இன்னும் நபியவர்கள் ஜோதி மயமானவர்கள் தானென்பது அவர்களது தோழர் பெருமக்களின் கொள்கையாக இருந்தது என்பதை ஆதாரப்படுத்துகின்ற விஷயங்களைப் பாருங்கள்,...

"ரஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்வர்கள் உரையாடுவார்களேயானால் அவர்களது முன்னிரண்டு பற்களிலிருந்தும் நூரைப் போன்ற பிரகாசம் வெளிப்படுவது எனக்குத் தெரியும் என்பதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்." *(நூல் : ஷமாயில் திர்மிதி, பாபு மாஜாஅ ஃபீ காத்த மின் நுபுவ்வத்தி, ஹதீத் எண்-15. தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ பாகம்-1, பக்கம்-215. முஃஜிமுல் கபீர் பாகம்-11, பக்கம்-328. ஸுனன் தாரமீ பாகம்-1, பக்கம்-30.)*

சகோதரர்களே! உங்களது வாழ்க்கையில் நீங்களும் பெரும் பெரும் பேச்சாளர்களை எல்லாம் பார்த்திருப்பீர்கள். அவர்களில் பெரும்பாலோர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மிகவும் தரக்குறைவாக தம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று ஒப்பிட்டுப் பேசுவதையும் கேட்டிருப்பீர்கள். இவர்கள் பேசும் போது இவர்களின் வாயிலிருந்து நூர் ஏதேனும் வெளியாவதைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையெனில் இவர்களது வாயிலிருந்து நபிமார்கள், வலிமார்கள், இமாம்கள் போன்றோரை கீழ்த்தரமாக விமர்சிக்கப்படும் அசிங்கமான வார்த்தைகளும் கெட்டதொரு துர்நாற்றமும் தான் வெளியாவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்நிலையில் இவர்கள் நபியவர்களை தம்மோடு எப்படி ஒப்பு நோக்குகின்றனர்?

வள்ளல் நபியின் வியர்வை நூர்

عن محمدبن اسماعيل البخارى ثنا عمرو بن محمد بن

جعفر ثنا ابو عبيدة معمر بن المثنى ثنا هشام بـــن عروة عن
ابيه عن عائشة رضي الله عنها قالت كنت قـــاعدة أغزل
والنبي صلى الله عليه وآله وسلم يخصف نعله فجعل جبينه
يعرق وجعل عرقه يتولد نورا فهبت فقال: رسول الله صلى
الله عليه وآله وسلم مالك بهت؟ قلت: جعل جبينك يعرق
وجعل عرقك يتولد نورا

"அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். நான் ஒருமுறை ஆடையொன்றை தைத்துக் கொண்டிருந்தேன். அப்போது அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது முபாரக்கான பாதணியை சரிசெய்து கொண்டிருந்தார்கள். அப்போது நபியவர்களின் நெற்றியிலிருந்து வியர்வைத் துளிகள் விழுந்து கொண்டிருந்தன. இன்னும் அதிலிருந்து பிரகாசம் வெளிப்படுவதை நான் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அதுபோது என்னைக் கண்ட நபியவர்கள், ஏன் இப்படிப் பார்க்கிறீர்? என்று கேட்க, அதற்கு நான்; இறைத்தூதரே! உங்களின் நெற்றியிலிருந்து வெளிப்படும் வியர்வை பிரகாசிக்கின்றது என்றேன்.

(நூல் : ஸுனனுல் குப்ரா இமாம் பைஹகீ, மிக்யாஸே நூர் பக்கம்-68. கஸாயிஸுல் குப்ரா பாகம்-1, பக்கம்-67.)

மேற்கண்ட ஹதீதில் நபியவர்களின் வியர்வையே ஒளிமயமாக இருந்ததெனில் அந்த நபியைத் தம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று இழித்துரைப்போரின் வியர்வையிலிருந்து நூர் அல்ல. கரும் புகையை உள்ளடக்கிய நார் (நெருப்பு) தான் வெளிப்படும். இத்தனைக்குப் பிறகுமா இவர்கள் தமது இதய வேந்தரான இரஸூலை தம்மைப் போன்ற மனிதரென்று வாதிக்கின்றனர்.?

அடுத்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மனிதத் தோற்றத்தில் காட்சியளித்த ஒளிப் பிழம்பு என்பதை மேலும் உறுதிப்படுத்த இதோ நாம் எடுத்துக் காட்டப்போகும் ஹதீத் மிக மிக அற்புதமான அதே நேரம் அழகானதோர் நபிமொழியாகும்.

மனித உருக்கொண்ட ஜோதியே உங்களுக்கு எங்கள் ஸலாம்

حدثنا علي بن عبدالله حدثنا ابن مهدى عن سفيان عن
سلمة عن كريب عن ابن عباس رضي الله عنهما قال: بت
عند ميمونة رضي الله عنها فقـــام النبي صلى الله عليه وآله
وسلم فأتى حاجته فغسل وجهه ويديه......وكان يقول
في دعائه اللهم إجعل في قلبي نورا وفي بـــصري نورا وفي
سمعي نورا وعن يميني نورا وعن يساري نورا وفوقـــي نورا
وتحتي نورا وأمامي نورا وخلفي نورا واجعل لي نورا

"ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர். நான் ஒருநாள் இரவு ஸய்யிதத்துனா மைமூனா ரலியல்லாஹு அன்ஹாவின் இல்லத்தில் தங்கியிருந்தேன். அப்போது தூக்கத்திலிருந்து கண் விழித்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது தேவைகளை எல்லாம் முடித்தபின் தமது வதனத்தையும் கைகளையும் கழுவினார்கள். இதன் பின் அவர்கள் தமது பிரார்த்தனையில், யா அல்லாஹ்! எனது உள்ளத்தை ஒளியாக்கு. எனது பார்வையை ஒளியாக்கு. எனது கேள்வியை ஒளியாக்கு. எனது வலப்புறத்தையும் ஒளியாக்கு. எனது இடப்புறத்தையும் ஒளியாக்கு. எனது மேல் பகுதியையும் கீழ் பகுதியையும் ஏன்! என்னையே ஒளியாக்கு எனப் பிரார்த்

தித்தவர்களாக இருந்தனர்." *(நூல் : புகாரி ஷரீப், கிதாபுத் தஃஅவாத், பாபு துஆயி இதன் தபஹ பில்லைலி பாகம்-4, பக்கம்-248.)*

حدثنا عبدالله بن هشام بن حيان العبدي حدثنا عبد الرحمن يعنى ابن مهدى حدثنا سفيان سلمة بن كهيل عن كريب عن ابن عباس رضي الله عنهما قال: بت عند بيت ميمونة رضي الله عنها فقام النبي صلى الله عليه وآله وسلم..... وكان في دعائه اللهم إجعل في قلبي نورا وفي بصري نورا وفي سمعي نورا وعن يميني نورا وعن يساري نورا وفوقي نورا وتحتي نورا وأمامي نورا وخلفي نورا وعظم لي نورا

"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது பிரார்த்தனையில் யா அல்லாஹ்! எனது உள்ளத்தை ஒளிமயமாக்குவாயாக. இன்னும் எனது பார்வையையும், கேள்வியையும், எனது வலப் பகுதியையும் இடப் பகுதியையும் மேல் பகுதியையும் கீழ் பகுதியையும், முற்பகுதியையும், பிற்பகுதியையும் பின்னும் என்னை அதிக ஒளியுள்ளவனாகவும் ஆக்குவாயாக என்று கேட்பவர்களாக இருந்தார்கள் என்பதாக இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றனர்." *(நூல் : முஸ்லிம் ஷரீப், கிதாப் ஸலாத்தில் முஸாபிரீன், பாபுத் துஆயி ஃபீ ஸலாத்தில் லைலி வ கியாமிஹி. இக்மால் பகாம்-3, பக்கம்-117.)*

حدثنا محمد بن عيسى حدثنا هشيم أخبرنا حصين عن حبيب بن ابى ثابت وحدثنا عثمان بن ابى شيبة حدثنا محمد بن فضيل عن حصين عن حبيب بن ثابت عن محمد بن علي بن عبدالله بن عباس عن ابيه عن ابن عباس أنه رقد عند النبي صلى الله عليه وآله وسلم فرآه استيقظ فتوسك

وتوضأ وهو يقول:..... اللهم إجعل في قلبي نورا وإجعل في لساني نورا وإجعل في سمعي نورا وإجعل في بصري نورا وإجعل خلفي نورا وأمامي نورا وإجعل من فوقي نورا ومن تحتي نورا اللهم وأعظم لي نورا

"நான் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் இல்லத்தில் ஓரிரவு தங்கியிருந்தேன். அப்போது கண்விழித்த நபியவர்கள், மிஸ்வாக் செய்து ஒழுச் செய்தபின்; யா அல்லாஹ்! எனது உள்ளத்தையும் எனது நாவையும், இன்னும் எனது பார்வையையும் கேள்வியையும், இன்னும் எனது பிற்பகுதியையும் முற்பகுதியையும் மேற்பகுதியையும் கீழ் பகுதியையும் இன்னும் என்னை அதிகமான பிரகாசமுள்ளவனாக ஆக்குவாயாக என்று பிரார்த்தித்தார்கள் என்பதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினர்." *(நூல் : ஸுனன் அபீதாவூத், கிதாபுஸ் ஸலாத்தி, பாபு ஃபீ ஸலாத்தில் லைலி பாகம்-2, பக்கம்-93.)*

இன்னும் இந்த ஹதீத் ஸுனன் அந்நஸாயி, கிதாபுத் தக்பீர், பாபு துஆயி ஃபிஸ்ஸுஜூதி பாகம்-2, பக்கம்-567. முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல் பாகம்-1, பக்கம்-733. அதபுல் முப்ரத், பாபு தஅவாத்தின் நபி, எண்-717 போன்றவைகளிலும் மிக நீண்டதோர் ஹதீதின் ஒரு பகுதியாகும். எனது ரத்தம் சதை தோல் முடி போன்ற வாக்கியங்கள் புகாரி ஷரீபில் காணப்படும் வாக்கியங்களாகும். புகாரி பா-4, ப-249.)

மேலும் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே அல்லாஹ்வைக் கொண்டு முதன் முதல் படைக்கப்பட்ட ஜோதி என்பதற்கும் ஜோதியாகவே மனிதத் தோற்றத்தில் காட்சியளித்தார்கள் என்பதற்கும் இதுவரை ஆதாரப்படுத்தப்பட்டவைகளில் புகாரி முஸ்லிம் போன்ற நூல்களிலிருந்து ஆதாரம் காட்டப்படவில்லை என்னும் ஆதங்கமும் இப்போது மேலே எடுத்துக் காட்டப்பட்டவைகளைக் கொண்டு நீங்கியிருக்குமென்று நம்புகிறோம். புகாரி முஸ்லிம் மட்டுமின்றி இன்னும் பல கிரந்தங்

களில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்நபிமொழிகள் நபியவர்கள் ஒரு மனிதரைப் போன்று காட்சியளித்தாலும் முழுக்க முழுக்க நூராகவே இருந்தார்கள் என்பதை அங்கம் அங்கமாகப் பிரித்துக் காட்டப்பட்டு விட்டதைக் கண்டு அக மகிழ்கிறோம். இத்தனைக்குப் பிறகுமா? மனிதனே! அப்புனித நபியை உனக்கு ஒப்பானவரென்று சொல்லப் போகிறாய்? உன்னைச் சொல்லி என்ன பயன். நீதான் கூலிக்கு மாரடிப்பவனாயிற்றே.

மேலும் நாம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஜோதி மயமானவர்கள் என்பதற்கு இது போன்ற நபிமொழிகளை ஆதாரமாக எடுத்து வைத்தால் இதைக் காணும் முனாபிக்கீன்கள், பார்த்தீர்களா! நபியவர்களே தமது அங்கங்களை ஒளிமயமாக்குமாறு இறைவனிடம் வேண்டுகிறார்கள். ஆனால் இவர்களோ அந்த நபியை ஜோதி மயமானவரென்று பிரச்சாரம் செய்கின்றனரென்று பாமர மக்களிடம் உரத்த குரலில் உக்கிரமாகக் கேட்கின்றனர். இந்த மாயக்காரர்களின் உரத்த தொனியையும், உடல் பருமனையும் அந்த உடலிலுள்ள நீண்ட தாடியையும் ஜுப்பாவையும் காணும் அப்பாமரர்கள், அதுதானே! இவ்வாறு எப்படிச் சொல்ல முடியும்? என்று அவ்வாய் சவடால்காரர்களுக்கு வெண்சாமரமும் வீசுகின்றனர்.

அவர்கள் கேட்கும் அதே கேள்வியை நாம் இப்படிக் கேட்கிறோம். அதாவது, நீ இறைவனால் கடமையாக்கப்பட்ட பர்ழான தொழுகையைத் தொழுபவனா? அப்படியானால் அத்தொழுகை கலிமாச் சொல்லி முஸ்லிமான ஒருவன் மீதுதான் கடமை. இதில் இஸ்லாம் என்பதுதான் நேரான பாதை. ஆதலால் ஒருவன் இஸ்லாமென்னும் நேரான பாதையில் இருந்துகொண்டு அதில் கடமையாக்கப்பட்ட காரியங்களைச் செய்வானாயின் அவன் நேரான பாதையில் தான் இருக்கிறான் என்பதற்கு அதுதான் அடையாளமாகும். இந்நிலையில் நீ நேரான பாதையில் இருந்து கொண்டே தொழுகையில் சூரா பாத்திஹா என்னும் அத்தியாயத்தைக்கொண்டு இறைவா! என்னை நேரான பாதையில் செலுத்துவாயாக என்று எப்படிப் பிரார்த்திக்கிறாய்? அப்படியானால் அந்நயவஞ்சகர்களது பாதையிலா நீ இருக்கிறாய்? அல்லது நீ இப்போதுள்ள பாதை நேரான பாதைதான் என்பதில் உனக்குச் சந்தேகமா? இப்படிப்பட்ட ஓர் நிலையில் நீ கலிமா சொன்ன போதிலும் தொழுத போதிலும் கூட வழிகேட்டில் தானிருக்கிறாய் என்பதைத் தெரிந்து கொள். இன்னும் நீ மட்டுமா சூரா பாத்திஹாவின் அந்த வசனத்தை ஓதினாய்? உன்னை நேர்வழியில் நடத்தவந்த, நேர்வழியாளராக வந்த, இவ்வகிலத்தையே நேர்வழியில் அழைத்துச் சென்ற உனது ரஸூலாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அல்லவா ஓதியிருக்கிறார்கள்! இதற்கு நீ என்ன பதில் தரப் போகிறாயோ அது தான் நாம் உனக்குத் தரும் பதிலாகும்.

அடுத்து நபியவர்கள் உனது கூற்றின்படி ஜோதியானவர்களல்ல. அவர்களது எந்தவொரு அங்கமும் நூராக முடியாதெனில் அவர்கள் தனது ஒவ்வொரு அங்கத்தின் பெயரையும் சொல்லிச் சொல்லி அவைகளை எல்லாம் ஒளியாக்குவாயாக என்று ஏன் பிரார்த்தனை புரிந்தார்கள்? ஒளியாலான ஒருபொருள் மனிதனாக முடியாதெனில் தன்னை நூரானிய்யத்தான மனிதனாக்குவாயாக என்று பிரார்த்திக்க வேண்டிய அவசியமென்ன? ஒளிமயமான ஒருவர் எல்லா மனிதர்களுக்கும் இருப்பதைப் போன்ற அங்கங்களை உடையவராக இருக்க முடியுமென்பதை அந்த நபியவர்களின் பிரார்த்தனையைக் கொண்டேனும் உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா?

முஃமின்களான விசுவாசிகளால் ஒரு கருத்துச் சொல்லப்பட்டால் அதைப் பொய்யாக்க புகாரியில் உண்டா? முஸ்லிமில் உண்டா? என்றெல்லாம் கேட்கிறாய். அதை இந்நூலின் துவக்கத்திலிருந்து நாம் கூறிவந்த, நபியவர்கள் அல்லாஹ்வின் முதல் படைப்பு. அந்த ஜோதிதான் மனிதராகக் காட்சியளித்ததென்று சொன்னோம். இப்படி நாம் சொன்ன அனைத்தையும் அக்குவேறு ஆணி வேராகப் பிரித்துக் காட்டியிருக்கிறது புகாரியிலும் முஸ்லிமிலும் உள்ள நபிமொழிகள்.

பின்னும் நபியவர்கள் இரத்தம், சதை, முடி, எலும்பு, தோல், உள்ளம், பார்வை, கேள்வி, முற்பகுதி, பிற்பகுதி, முன், பின், வலது, இடது என எல்லாமே நூராகத்தான் படைக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? எனக் கேட்டால் அதற்கு புகாரி

முஸ்லிமிலுள்ள இன்னொரு ஹதீதைக் காட்டி இதற்கென்ன பதில் என்று நம்மிடம் கேட்கிறார்கள். ஒன்று மட்டும் நமக்கு மிக நன்றாகத் தெரிகிறது. அது; அல்லாஹ் உங்களை நேர்வழியில் நடத்த விரும்பவே இல்லை என்பதை இவர்களே ஊர்ஜிதப் படுத்துகின்றனர் என்பது தான். அரபிமொழி தெரியுமென்பதற்காக குர்ஆன் ஹதீதின் வாக்கியங்களுக்குரிய (வெளிப்படையான) அர்த்தத்தை மட்டும் சொல்ல முனைந்தால் அதன் விளைவு என்னவாகும் என்பது கூடவா உங்களுக்குத் தெரியாது? ஒரு குர்ஆனுடைய வசனத்திற்கு அல்லது ஒரு ஹதீதுக்கு முன்னாலும் பின்னாலும் சொல்லப்பட்ட விஷயத்தோடு தொடர்புள்ளதா? அது இறக்கப்பட்ட அல்லது சொல்லப்பட்ட நேர கால சூழ்நிலைகள் என்ன? என்பனவற்றை எல்லாம் நீங்கள் கவனத்தில் கொண்டிருந்தால் இந்தக் கேள்வியையே கேட்டிருக்க மாட்டீர்கள். பின்னும் ஒரு வாக்கியத்தின் வெளிப்படையான அர்த்தத்தை மட்டுமே நீங்கள் எடுத்துக் கொள்பவர்களாதலால் உங்கள் பாணியிலேயே உங்களிடம் சில கேள்விகளை சில ஹதீதுகளை முன்வைத்துக் கேட்கிறோம்.

حدثنا اسماعيل قال: حـــدثني مالك عن ابى النضر مولى عمر بن عبيدالله عن ابى سلمة بن عبدالرحمن عن عائشـــة زوج النبي صلى الله عليه وآله وسلم انها قـــالت: كنت أنام بين يدي النبي صلى الله عليه وآله وسلم ورجلاي في قبلته فإذا سجد غمزني فقبضت رجلي فإذا قام بسطتهما قالت: والبيوت يومئذ ليس فيها مصابيح

"நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முன்பாக தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது எனது இரு பாதங்களும் நபிகளாரை நோக்கி நீட்டியிருந்தன. நபியவர்கள் ஸுஜூது .செய்யும் போதெல்லாம் என்னை அகற்றுவார்கள். அதனால் எனது பாதத்தை முடக்கிக் கொள்வேன். அதுபோது வீட்டில் விளக்கு ஏதுமிருக்கவில்லை என்பதாக அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர்." *(நூல் : புகாரி ஷரீப், கிதாபுஸ் ஸலாத்தி, பாபுஸ் ஸலாத்தி அலல் ஃபிராஷி பாகம்-1, பக்கம்-201. முஸ்லிம் ஷரீப், கிதாபுஸ் ஸலாத், பாபுல் இஃதிராழி பைன யதையில் முஸல்லி.)*

நபியவர்கள் நூரானவர்களல்ல என்று வாதிப்போர் இந்த ஹதீதையும் எடுத்துக்காட்டி, பார்த்தீர்களா! நபிகளாரின் அருமைத் துணைவியார் நபியவர்கள் வீட்டிலிருக்கும் போது விளக்கில்லாமல் இருட்டாக இருந்ததால் தான் நபியவர்கள் ஸுஜூது செய்தது அவர்களுக்குத் தெரியாமல் போய் விட்டதென்று கூறுகின்றனர்.

இன்னும் இந்த ஹதீது இடம்பெற்றுள்ள புகாரி ஷரீபின் நூலுக்குரிய விரிவுரையாளர்களான இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் தமது உம்தத்துல் காரி என்னும் நூலின் பாகம்-4, பக்கம்-114லும், முஸ்லிம் ஷரீபின் விரிவுரையாளரான இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,–

"வீட்டில் வெளிச்சம் இல்லாதிருந்ததால் தான் நபியவர்கள் ஸுஜூது செய்யும் போதெல்லாம் என்னை நகர்த்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. அவ்வாறு இல்லையேல் நானாகவே பாதத்தை நகர்த்தியிருப்பேன்" என்று கூறப்பட்டிருப்பதையும் எடுத்துக் காட்டி நபியவர்கள் ஒளிமயமானவர்களாக இருப்பின் பின்னர் வீடு ஏன் இருளடைந்திருந்ததென்றும் நம்மைப் பார்த்து ஆவேசமாகக் கேட்கின்றனர். இதற்குரிய பதிலைப் பார்க்குமுன் இந்த ஹதீதுக்கு புகாரி ஷரீபின் விரிவுரையில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் இவர்களால் எடுத்துக் காட்டப்படுவது மட்டும் தானா? அல்லது இன்னும் வேறு ஏதேனும் தரப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்தால்.,,,

"இந்த ஹதீத் அன்னையவர்கள் அயர்ந்த உறக்கத்தில் இல்லை என்பதையும் அவ்வாறின்றி அயர்ந்த உறக்கத்தில் இருந்திருப்பார்களேயானால் வெளிச்சம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நபியவர்களின் எந்தவொரு செயலையும் அவர்களால் தெரிந்து கொண்டிருக்க முடியாமல் போயிருக்கும்" என்றும் விளக்கம் தரப்பட்டிருப்பதை இவர்கள் ஏன் சொல்லாமல் விட்டு விட்டார்கள்?

மேலும் வீட்டில் வெளிச்சமில்லாமல் இருளாக இருந்த போதிலும் நபியவர்கள் ஸுஜூது செய்யும் போது என்னை நகர்த்த, நான் பாதத்தை முடக்கிக் கொள்வேன் என்றும், பின்பு நபியவர்கள் நிலைக்கு எழுந்தவுடன் மறுபடியும் பாதத்தை நீட்டிக் கொள்வேன் என்னும் அன்னையவர்களின் வாக்கியம் அவர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதோடு நபியவர்கள் ஸுஜூதை விட்டு எழுந்து விட்டார்கள் என்பதை எப்படித் தெரிந்து கொண்டார்கள்?

பின்னும் ஸுஜூத் என்பது அல்லாஹ்வுக்கு மிக மிகப் பிரியமான ஒன்றாகும். ஆதலால் நபியவர்கள் எவ்வளவு நேரம் ஸுஜூதில் இருந்திருப்பார்களென்று குறிப்பிட்டு நம் மால் சொல்ல முடியாவிட்டாலும் மிக நீண்ட நேரம்வரை இருந்திருப்பார்கள் என்பதை மட்டும் திட்டமாகச் சொல்ல லாம். அப்படியானால் அன்னையவர்கள் வேண்டுமென்றே தூங்குவதைப் போல் பாசாங்கு செய்தார்களென்று சொல்ல முடியுமா? இன்னும் நபியவர்கள் இரவு காலங்களில் தொழு வார்களென்பது அவர்களுக்கு தெரிந்துதானே இருக்கும்! பின் எப்படி நபிய்வர்கள் ஸுஜூது செய்யும் பக்கமாக காலை நீட்டித் தூங்கினார்கள்? அல்லது குறைந்த பட்சம் நபியவர்கள் தாம் தொழுவதற்கு முன் அவர்களை நகரச் செய்திருக்கலாமல்லவா? இதன்றி இப்பசப்புக்காரர்களின் வாதப்படி நபியவர்களுக்கு தொழுகையில் கூட தமது மனைவியின் சிந்தனை இருந்திருக்கின்றது. அப்படித்தானே!

எனவே முதலில் இந்த ஹதீத் ஹதீதுடைய நூல்களில் எந்தப் பாடத்திற்குரிய பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது? இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் பதிவு செய் யப்பட்டுள்ள இந்த ஹதீதுக்கு விளக்கமளித்த விரிவுரை யாளர்கள் அந்த விளக்கத்தைக் கொண்டு எதை நிரூபிக்கின் றார்கள்? என்பதைப் பார்ப்பீர்களாயின் இத்தகைய விளக் கங்களை அவர்கள் தந்ததற்குரிய பதில் தாமாகக் கிடைத்து விடும் இன்ஷா அல்லாஹ். எனவே இவைகளை எல்லாம் கவனத்தில் கொள்ளாமல் அந்த காத்தமுன் நபியின் மகாத் மியத்தை மண் தோண்டிப் புதைப்பதற்கு அவர்களின் ஹதீ தையே அல்லவா பயன்படுத்தப் பார்க்கிறீர்கள். இதுதான் உங்களின் உயிருக்கும் மேலான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நீங்கள் தருகின்ற சன்மானமா?

ஆதலால் இந்த ஹதீதின் விரிவுரை நூலான உம்தத் துல் காரியை அருள் கூர்ந்து எடுத்துப் பாருங்கள். வீட்டில் விளக்கில்லாமல் போனதைக் காரணமாக்கி அன்னையவர் களின் வாயிலாக நமக்குக் கிடைத்த அந்த ஹதீத் எப்படிப் பட்ட மார்க்கத்திற்குரிய அத்தியாவசியமான பிரச்னை களெல்லாம் தீர்க்கப்படுவதற்குரிய சட்டங்களை எல்லாம் தந்ததென்பதை தெரிந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். ஒரு விஷயத்தைப் படித்துக் கொள்ள வேண்டுமாயின் அதைப் படித்துக் கொடுப்பவரிடம் தன்னை அதற்கு முன் அர்ப்பணிக்க வேண்டியது அவசியமாகும். இதனால் படிப் பவரும் படித்துக் கொடுப்பவரைப் போலாகி விட்டா ரென்று சொல்ல முடியுமா? எனவே அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வேறொரு இடத்தில் நபியவர்களின் வியர்வைத் துளியிலிருந்து நூர் வெளியா யிற்று என்றும் சொன்னார்கள். பகல் காலத்தில் சூரிய ஒளி யில் நபியவர்களின் வியர்வையிலிருந்து நூர் வெளிப்பட் டது பார்வைக்குப் புலப்பட்டதெனில் அந்த நூர் இரவு காலத்தில் ஏன் ஒளியேதுமில்லாமல் காணப்பட்டதென் றால் இருளில் எப்படிப்பட்ட வணக்கங்களை எல்லாம் நிகழ்த் தலாம் என்பதை கற்றுத் தருவதற்காகத்தான் என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் வீட்டிலிருக்கும் போது ஒளியில்லாமல் இருந்தனர் என்பதை வைத்துக்கொண்டு அண்ணலாரின் அகமியத்தைப் பொய்யாக்க முனையும் நீங்கள் அதே அன்னையவர்கள்,...

"ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வெளிச்சத்தில் காணப்படுவதைப் போன்றே இருளி லும் (பிரகாசமாக) காணப்படுவார்கள் என்னும் வார்த் தையை ஏன் சொல்லாமல் மறைக்கிறார்கள்?"

இன்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டவர் கள் என்பது மட்டுமின்றி நூராக இருந்தும் மனிதத் தோற் றத்தில் காணப்பட்டார்கள் என்பதை சந்தேகத்திற்கிட மின்றி நம்புகின்ற முஃமின்களுக்கு இங்கே நாம் சொல்ல விரும்புவது என்னவெனில், அண்ணல் நபியவர்கள் எல்லா

நேரங்களிலும் ஒரே மாதிரியான மா்தபாவைக் (படித் தரத்தை) கொண்டிருந்தவா்களல்ல. சில நேரங்களில் தம்மை மறந்த நிலையிலும் இன்னும் சில நேரங்களில் ஒரு சாதாரண மனிதரைப் போல் தமது தோழா்களுடன் அன்னியோன்ய மாகக் காணப்படுவதும் உண்டு. இன்னும் மனித குலத்தா ரிடையே மனித சமுதாயத்திற்கு மனிதத் தோற்றத்தைக் கொண்டு ரஸூலாக வருகை தந்திருந்ததால் ஒரு சராசரி மனிதரைப் போலவே தம்மைக் காட்டிக்கொள்ள விரும்பி னாா்கள். அவ்வாறே வாழ்ந்தும் காட்டினாா்கள். அத்தகைய தோா் நிலையில் நடைபெற்ற நிகழ்ச்சிதான் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவா்களால் சுட்டிக் காட்டப் படும் நிகழ்ச்சியாகும். இதை இன்னும் உறுதிப்படுத்த மிஃரா ஜுடைய. சம்பவத்தையும் நாம் ஒரு படிப்பினையாகக் கொள்ளலாம்.

ஆகையால் மனிதத் தோற்றத்திலும் அவா்களின் எதாா்த்தமான நூரானிய்யத்துடைய நிலை மிகைத்தவா் களாகக் காணப்பட்டதைப் போலவே இவ்வவனியில் பஷாிய் யத்துடைய நிலையுடையவா்களாகவும் காணப்பட்டாா் கள். அத்துடன் வல்லோனாகிய அல்லாஹ்வால் வழங்கப் பட்ட பேருபகாரங்களுக்கும் நிஃமத்துக்களுக்கும் நன்றி செலுத்தும் வண்ணம் தன்னைத்தானே கஷ்டத்திற்கும் பசிக்கும் உட்படுத்திக் கொண்டாா்கள்.

இதுவரை அகிலத்தின் அதிபதியாகிய அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்டது பாா் போற்றும் பயகம்பா் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவா்களின் ஜோதி தானென்பதையும், அந்த ஜோதியிலிருந்து தான் அகில மனைத்தும் தோற்றுவிக்கப்பட்டன என்பதையும், அந்த ஜோதி தான் மக்கமா நகாில் அன்னை ஆமினா ரலியல் லாஹு அன்ஹாவின் வாயிலாக முஹம்மதென்னும் நாமம் தாித்து மனித உருவில் மனிதராகக் காட்சியளித்தது என்ப தையும் நாதாக்களின் நல்லாசியால் சுருக்கமாக உங்களின் மேலான பாா்வைக்கு தந்தோம். அத்துடன் இதுவரை விப ாிக்கப்பட்ட விஷயங்களனைத்தும் ஹதீதுகளை ஆதார மாகக் கொண்டே முன்வைக்கப்பட்டதைக் கவனித்திருப் பீா்கள். இனி நபியவா்கள் நூரானவா்கள் என்பதற்குாிய ஆதாரங்களை திருக்குா்ஆனைக் கொண்டு பாா்ப்போம்.

நூரும், குர்ஆனும்

இதில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவா்கள் நூரானவா்கள் என்பதை உறுதிப்படுத்த பல்வேறு குா்ஆனுடைய வசனங்கள் சுட்டிக் காட்டப்படு கின்றன. ஆதலால் இதுவரை சுட்டிக்காட்டப்பட்ட நபி மொழிகளுக்கோ அல்லது அடுத்து சொல்லப்போகும் குா் ஆனுடைய வசனங்களுக்கோ யாா் விளக்கம் தந்தாலும் அவ்விளக்கம் எங்கேயிருந்து எதிலிருந்து எடுக்கப்பட்ட தென்பதை ஆதாரப்படுத்த வேண்டும். அவ்வாறின்றி தாமாக ஒரு விளக்கத்தைத் தரக்கூடாது.

மேலும் எடுத்து வைக்கப் போகும் குா்ஆனுடைய வச னங்களுக்கு திருமறை விாிவுரையாளா்களான முபஸ்ஸிாீன் கள் அனைவருமே ஒரே மாதிாியான விளக்கங்களைத் தான் தருகிறாா்களென்று சொல்ல முடியாது. அதேநேரம் அவா் கள் தருகின்ற பல்வேறு விளக்கங்களில் நமது நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவா்களும் ஒருவராகக் காட்டப் படுகிறாா்களாதலால் நாம் அந்த விளக்கத்துக்கே முன் னுாிமை கொடுத்துள்ளோம். அதற்காக மற்ற விளக்கங் களை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பது கருத்தல்ல. ஆதலால் வேத வியாக்யானிகள் தந்துள்ள விளக்கங்களில் எல்லாமே நபியவா்களைச் சாா்வதில் பாதகம் ஏதுமில்லை என்பதால் சுன்னத் வல் ஜமாஅத்தினா் நபியவா்கள் நூா் என் பதற்கு இவ்வசனங்களையே ஆதாரமாகக் காட்டுகின்றனா்.

ஏனெனில் நமக்குக் குா்ஆன் கிடைத்ததென்றால் அது நபியவா்களைக் கொண்டுதான். மேலும் நாம் முஸ்லிம் களாக இருக்கிறோம் என்றால் அதுவும் நபியவா்களைக்

கொண்டுதான். இன்னும் நமக்கு ஹிதாயத்துக் கிடைத்த தென்றால் அதுவும் நபியவர்களைக் கொண்டுதான். எனவே எல்லாமே அவர்கள் தானென்பதால் இவ்வசனங்களும் அவர்களுக்குரியது தானென்றே கூறுவோம்.

பின்னும் இவ்வசனங்களுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூர் என்பதற்கும் எந்தத் தொடர்புமில்லை என்று கூறுவோர் வேத வியாக்யானி களை மட்டுமல்ல. நபித்தோழர்களையும் பொய்யாக்கு கின்றனர். இதில் மிக மிக முக்கியமானது சூரா அந்நூரின் 35வது வசனமும் சூரா மாயிதாவின் 15ம் வசனமுமாகும்.

இவ்விரு வசனத்திலும் இடம் பெற்றுள்ள "நூருன்" என்பதற்கு குர்ஆன், ஹிதாயத், இஸ்லாம் என்று பல விளக் கங்கள் தரப்படுகின்றன. இருப்பினும் நூராகிய அந்த குர் ஆன் நாளை மறுமையில் மனித உருவில் வந்து அதனை அதிக மதிகம் ஓதியவனுக்காக அல்லாஹ்விடம் ஷபாஅத்துச் செய்யுமாம். இவ்வாறே தொழுகை, நோன்பு, ஜகாத் போன்றவைகளும் நாளை மறுமையில் மனித உருவில் தோன்றி காட்சி தருவது மட்டுமல்லாமல் அவைகளை நிறைவேற்றியவர்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாடும் என்பதாகவும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் சொல்லப்பட்டுள்ள ஹதீதுகளைக் கொண்டு நாம் அறிந்திருக்கிறோம்.

உருவமற்ற நூராகிய குர்ஆன் அல்லது ஹிதாயத் அல்லது முன்னால் குறித்துக் காட்டப்பட்டவை நாளை மறுமையில் மனிதத் தோற்றத்தில் வரும் என்பதில் நமக்கு சந்தேகமில்லையானால் குர்ஆனாகவும், ஹிதாயத்தாகவும், இஸ்லாமாகவும் இவ்வுலகில் வந்துதித்த திங்களெங் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூராக உதயமானார்கள் என்பதில் மட்டும் ஏன் சந்தேகம் கொள்ள வேண்டும்?

இன்னும் இவ்வசனத்தில் குறித்துக் காட்டப்படும் "நூர்" என்பது குர்ஆன் தானேயன்றி நபிகளாரல்ல எனக் கொள்ளப்பட்டால் இன்று ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றுக் குப் பத்து இருக்கிறதே! அவைகளெல்லாம் ஏன் ஒளிர

வில்லை? நூலுருவில் வடிவமைக்கப்பட்டதால் அதொரு நூர் இல்லை என்றாகி விடுமா? அல்லது அந்த நூருக்கு பங் கம் ஏதும் ஏற்பட்டு விடுமா? அல்லது அது ஒளிதரவில்லை என்பதற்காக அது ஒளியான பொருளல்ல என்று சொல்ல லாமா? இல்லையில்லை. அது ஒளிதான். ஆனால் கண்ணால் காணக்கூடிய ஒளியல்ல என்பீர்களானால் நீங்கள் உங்கள் கைகளில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! அதற்குப் பெயர் என்ன? ஒளிக்கு உருவமில்லை. அதனால் ஒரு உருவத்தை எடுக்க முடியாதென்று சொன்னால் உங்கள் கைகளால் அதை எப்படிப் பிடிக்கிறீர்கள்? ஆம். குர்ஆன் ஒரு நூராக இருந்தும் அதைப் பிடிக்கிறீர்கள். அதேநேரம் அது ஒரு நூர் என்பது உங்களுக்குப் புரியவில்லை. அந்த நூரை ஓதுகிறீர்கள். முத்தமிடுகிறீர்கள், சுமந்து செல்கிறீர் கள். இத்தனையும் செய்துவிட்டு நூரால் உருவமெடுக்க முடியாதென்றும் சொல்கிறீர்கள். இது கையில் வெண் ணையை வைத்துக்கொண்டு நெய்யைத் தேடியலைந்த ஒரு பெரியாரின் தத்துவக் கருத்தைப் போலல்லவா இருக்கிறது.

உங்களின் கண்களுக்கு முன்னாலேயே நடந்து திரியும் நூரையே உணர முடியாத உங்களால் உத்தமத் திருநபி ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நூரானவர்கள் என்பதை எப்படி ஏற்றுக் கொள்வீர்கள்? இப்போது அதற் குரிய குர்ஆனின் வசனத்தைப் பாருங்கள்.

வசனம் ஒன்று :-

الله نور السموات والارض

இந்த வசனத்திற்கு அல்லாஹ் வானங்கள் பூமிகளின் நூராக இருக்கிறான் என்று சொன்னாலும் அல்லது அல் லாஹ் வானங்கள் பூமிகளை நூராக்கக் கூடியவன் என்று சொன்னாலும் அதற்குமுன் அல்லாஹ் நூரானவனா? என் றொரு கேள்வி எழுகிறது. ஆதலால் முதலில் நூர் என்றால் என்ன என்பதை பார்ப்போம்.

நூர் என்றால்,

நூர் என்னும் அரபிப் பதம் "லுஃகவி மஃனா" (அக ராதி அர்த்தம்) "ஹகீகி மஃனா" (எதார்த்தமான அர்த்தம்)

என்னும் இருவகை அர்த்தங்களைக் கொண்ட ஒரு பத மாகும்.

லுஃகவி மஃனா

நூர் என்பதற்குரிய அகராதி அர்த்தத்தை விளக்கும் உலமாக்கள் பின்வரும் பொருளைத் தருகின்றனர்.

الأضواء المدركة بالبصر

"பார்வைகள் எத்திக் கொள்ளும் பிரகாசங்களா கும்" *நூல் : ஜாமிவுல் குர்ஆன், பாகம்-6, பக்கம்-169.*

النور الضوء الذي يعين الابصار

"பார்வைகளுக்கு உதவி செய்யும் ஒளியாகும்"

நூல் : அல் முப்ரதாத், பக்கம்-805.

"நெருப்பு, சூரியன், சந்திரன் போன்றவைகளால் பூமியின் மீதும் அதன் சுவர்கள் மீதும் பிரதிபலிக்கும் ஒருவகை இனத்தைச் சார்ந்தத பொருளாகும்"

நூல் : தப்ஸீருல் கபீர், பாகம்-8, பக்கம்-378.

النور قائمة بالجسمية وهو ضدالظلمة

"நூர் என்பது ஜடப் பொருட்களின் உதவியோடு நிலைத்து நிற்கும் ஒன்றாகும். இது இருளுக்கு எதிர்ப் பதமாகும்."

நூல்: தப்ஸீருல் கபீர், இப்னு தைமிய்யா, பாகம்-5, பக்கம்-421.

النور هي كيفية تدركه به الباصرة

"பார்க்கக் கூடிய ஒரு வகைப் பொருளாகும்"

நூல் : பைழாவி, பாகம்-6, பக்கம்-379.

ஆக மேற்கண்ட உலமாக்களுடைய விளக்கங்களின் அடிப்படையில் நூர் என்னும் அரபிப் பதம் ஒளி, வெளிச் சம், பிரகாசம் என்னும் பொருட்களைக் கொண்டது என்ப தைத் தெரிந்து கொண்டோம்.

மேலும் ஒளி, பிரகாசம் என்னும் பொருட்களைக் கொண்ட "நூரே லுஃகவி"யானது, "நூரே துன்யவீ" (உல

கைச் சார்ந்த ஒளி) என்றும் "நூரே உக்ரவீ" (மறுமையைச் சார்ந்த ஒளி) என்றும் இரு வகைப்படும்.

அதாவது பார்வையால் உணரப்படும் சூரிய, சந்திர, நட்சத்திரங்களின் ஒளிகளை "நூரே துன்யவீயை" (உல கைச் சார்ந்த ஒளியை) "மஹ்ஸூஸ் பில் பஸரா" பார்வை யால் உணரக்கூடிய ஒளியென்றும், சிந்தனையால் உணரக் கூடிய குர்ஆன், ஹிதாயத், புத்தி போன்றவைகளை "நூரே உக்ரவீ" (மறுமையைச் சார்ந்த ஒளியை) "மஹ்ஸூஸ் பில் பஸீரா" உள்ளத்தால் உணரக்கூடிய ஒளியென்றும் சொல் லப்படும்.

ஆக நூர் என்னும் அரபிப் பதம் சொல்லின் அடிப் படையில் ஐம்புலன்களால் உணரப்படும் (சூரிய, சந்திர, நட் சத்திரங்களின்) ஒளிகளாக அல்லது உள்ளத்தால் உணரப் படும் (குர்ஆன், ஹிதாயத், புத்தி) ஒளிகளாக இருப்பதால் அல்லாஹ் நூரானவனாக எப்படி இருக்க முடியும்? ஏனெ னில் அல்லாஹ் ஐம்புலன்களால் உணரப்படும் "மஹ்ஸூ ஸான" பொருளோ, அல்லது உள்ளத்தால் உணரப்படும் "மஃகூலான" பொருளோ அல்ல. அவன் இவ்விரண்டை விட்டும் தூய்மையானவன்.

மேலும் நூர் என்பதற்கு ஒளி, பிரகாசம் என்பதாக ஒரே பொருளைக் கொண்ட இரு சொற்களைப் பயன்படுத்தி னாலும் இரண்டும் முரண்பட்ட வெவ்வேறு பொருளுக் குரிய வித்தியாசங்களைக் கொண்டிருப்பதால் நூர் என்ப தற்கு ஒளியென்று தான் பொருள் கொள்ள வேண்டுமே யன்றி பிரகாசம் என்று பொருள் கொள்ளக் கூடாது. ஏனெனில்.,,,

هوالذي جعل الشمس ضياء والقمر نورا

"அவன் எப்படிப்பட்டவன் எனில் சூரியனைப் பிரகாசமுடையதாவும் சந்திரனை ஒளியானதாவும் வெளிப்படுத்தினான்." *(சூரா யூனுஸ், வசனம்-5.)*

நூருன், ழௌவுன் பற்றிய வித்தியாசம்

ஒளி, வெளிச்சம், பிரகாசம் என்பவைகளெல்லாம் ஒரே கருத்தைக் கொண்ட பல வாக்கியங்கள் என்பதாக நாம் படித்திருந்தாலும், பொருள் கூறினாலும் மேற்கண்ட திரு மறை வசனம் சூரியனை பிரகாசமானதென்றும், சந்திரனை ஒளியானதென்றும் கூறுவதை நாம் பார்க்கும்போது இரண் டும் ஒரே பொருளாகவோ அல்லது ஒரே பொருளைக் கொண்டதாகவோ இருக்க முடியாதென்றே தோன்றுகிறது.

வித்தியாசம் ஒன்று :-

இமாம் அல்லாமா ராகிப் இஸ்பஹானி ரஹிமஹுல் லாஹ் அவர்கள் இதைப்பற்றி விளக்கும் போது.,,,

وتخصيص الشمس بالضوء والقمر بالنور من حيث أن الضوء أخص من النور

"சூரியனை ழௌவுன் (பிரகாசமானதென்றும்) சந் திரனை நூருன் (ஒளியானதென்றும்) பிரித்துக் காட்டி யது ஒளியைவிட பிரகாசம் தனித்தன்மை வாய்ந்த தாகும் என்பதாலேயே என்று கூறுகின்றனர்."

(நூல் : அல் முப்ரதாத், பக்கம்-508.)

வித்தியாசம் இரண்டு :-

இன்னொரு பொருளில் இருந்து ஒளியைப் பெற்று தானொரு ஒளியான பொருளைப் போன்று தோற்றமளிக் கும் ஒரு பொருளையே நூர் என்றும், இயற்கையிலேயே ஒரு ஒளியை தனக்குள் கொண்டிருக்கும் பொருளை ழியாவுன் என்று சொல்லப்படும் என்பது ஆய்வாளர்களின் கணிப் பாகும்.

சூரியன் ஒளியான பொருளாக இருப்பதால் அதை ழியாவுன் என்றும், சந்திரன் சூரிய ஒளியின் எதிரொளியாக இருப்பதால் அதை நூருன் என்றும் வர்ணிக்கப்படுகிறது. எனவே நூரைவிட ழௌவுன் மேலானதாகும்.

இன்றைய விஞ்ஞானம் :-

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே புனிதமிகு திருக்குர் ஆன் சூரிய சந்திரனாகிய இரண்டையும் நூர் என்றோ ழியாஃ என்றோ ஒரே சொல்லில் வர்ணிக்காது இரண்டை யும் தனித்தனி வார்த்தைகளால் வர்ணித்து அவ்விரண்டுக்கு முள்ள வித்தியாசத்தை தெளிவுபடுத்திய உண்மையை இன் றைய விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மாறாக வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டுமுள்ளது.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகளின் தீர்ப்பென்ன வெனில் சந்திரன் பூமியின் வடிவமைப்பை ஒத்த ஒன்றாகும். சந்திரனின் ஒளி அதனுடையதல்ல. அது ஒரு ஒளியான பொருளுமல்ல. பூமிக்கு சூரியனுடைய ஒளி கிடைப்பதைப் போல சந்திரன் போன்ற மற்ற கிரகங்களுக்கும் கிடைக் கிறது. இதனால் தான் சூரியனுடைய ஒளியைப் பெற்ற அப் பொருட்கள் தூரத்திலிருந்து பார்க்கும்போது அவைகளும் ஒளியுள்ள பொருட்களைப் போல் தெரிகின்றன. பின்னும் சந்திரனுக்குச் சென்று பூமியைப் பார்ப்போமாயின் பூமியி லுள்ளோருக்கு சந்திரன் ஒளியாகத் தெரிவதைப் போல சந்திரனில் இருப்போருக்கு பூமி ஒளியாகத் தெரியும் என் றும் கூறுகின்றனர்.

எனவே நூர் என்னும் அரபிப் பதத்திற்கு இதுவரை சொல்லப்பட்ட பல்வேறு வகையான கருத்துக்களின் முடி வின்படி அது ஐம்புலன்களால் உணரப்படும் பொருளாக அல்லது சிந்தனையால் உணரப்படும் பொருளாக இருப்ப தால் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனாக இருக்க முடியாதென்பதை இப்பதத்தின் அகராதிப் பொருளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அறிஞர்களது தீர்ப்பாகும். அதேநேரம் இப்பதத்திற்குரிய இரண்டாவது பொருளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அறிஞர்கள் அல்லாஹ் தாத் திலே நூரானவன் எனக் கூறுகின்றனர். இவர்களது விளக் கம் இந்நூலில் கொடுக்கப்படவில்லை.

முதல் தரப்பைச் சார்ந்த அறிஞர்கள் தமது கூற்றை நிரூபிக்க "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" என் னும் திருமறை வசனத்தையும் வேறுசில வசனங்களையும் கொண்டு வருகின்றனர். அவையானது.,,,

விளக்கம் ஒன்று:- "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" அரபி இலக்கணத்திற்குரிய (நஹ்வு) அடிப்படையில் அதன் தர்கீப் (பல வார்த்தைகளை ஒருங்கிணைப்பதற்கு அரபி மொழியில் பயன்படுத்தப்படும் ஒரு பதமாகும்) என்னவென்று பார்ப்போமாயின் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் என்பதும் "மஸலு நூரிஹீ" என்பதற்குரிய தர்கீப் என்னவென்று பார்ப்போமாயின் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனல்ல என்பதும் புரியவரும். அரபி இலக்கண சட்டத்தின்படி இது சாத்தியமற்ற ஒன்றாகும்.

இன்னொன்று, "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" இதில் அல்லாஹ் என்பது முப்ததாவா (எழுவாயா)கவும் நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி என்பது முழாஃப் முழாஃப் இலைஹி சேர்ந்து கபர் - பயனிலையாகும். அதாவது எழுவாயும் பயனிலையும் சேர்ந்து அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

அடுத்து "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" என்னும் வசனத்தின் அடுத்த தொடரான "மஸலு நூரிஹி" என்பதில் நூர் என்பதிலுள்ள "ஹீ" என்னும் அட்சரம் மீளும் ஸ்தலம் அல்லாஹ் என்பதாகப் பொருள் சொல்லப்படுகிறது. இது தவறாகும். ஏனெனில்,

ஒரு சொல் இன்னொரு சொல்லோடு இணைக்கப்பட வேண்டுமாயின் அவ்விரு சொற்களும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்பது தான் இலக்கணத்திற்குரிய தீர்ப்பாகும். உதாரணமாக ஃபரஸு ஸைதின் - ஸைதுடைய குதிரை என்று சொல்லப்பட்டால் இதில் ஸைது என்னும் பொருள் குதிரை என்னும் பொருளோடு இணைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இதில் இவ்விரு பொருட்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்ததாக இருப்பதைப் பாருங்கள்.

இதுபோன்றே "மஸலு நூரிஹி" என்பதையும் கொஞ்சம் கவனியுங்கள். அதாவது நூரிஹி - அவனு (அல்லாஹ்வு)டைய நூர் என்பது இதன் பொருளாகும். இங்கே அல்லாஹ் என்னும் பொருளோடு நூர் என்னும் பொருள் இணைக்கப்

பட்டுள்ளது. இதில் இணைக்கப்படும் இவ்விரு பொருட்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டியது அவசியமென்னும் இலக்கணச் சட்டத்திற்கு இவ்வசனம் நேர் முரணாகவல்லவா இருக்கிறது.

இன்னும் இலக்கணம் என்பது குர்ஆனிலிருந்தே உருவாக்கப்பட்ட ஒன்றென்பதால் இலக்கணத்திற்கு குர்ஆனோ அல்லது குர்ஆனுக்கு இலக்கணமோ முரண்பாடு கொண்டதாக இருக்காது. அப்படியானால் இவ்வசனத்தில் குறித்துக் காட்டப்படும் "நூரிஹி" என்பதற்குரிய பொருள் அல்லாஹ்வுடைய நூர் என்பதல்ல. அது இன்னொருவரின் நூர் என்பதே அதற்குப் பொருளாகும். பின்னும் அது வேறொருவருடைய நூர் என்றால் இந்நிலையில் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனல்ல என்பது ஊர்ஜிதமாகிறது. மேலும் இவ்வசனத்தின் இறுதியில் இடம் பெற்றுள்ள "யஹ்தில் லாஹு லி நூரிஹி" என்பதிலும் "மஸலு நூரிஹி" என்பதில் காணப்பட்டதைப் போன்ற சட்டமே காணப்படுகிறதாகையால் ஒரே வசனத்தில் ஒரு இடத்தில் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் என்றும், இரு இடங்களில் நூரானவனல்ல என்றும் நமக்குத் தெரிய வருகிறது. இப்படி வரக் கூடாது. அப்படியானால் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனா இல்லையா?

விளக்கம் இரண்டு :-

"மஸலு நூரிஹி" என்பதில் இடம் பெற்றுள்ள ழமீரின் மீளும் ஸ்தலம் அல்லாஹ் தான். ஆதலால் இதில் இடம் பெற்றுள்ள இழாஃபத்தானது பயானிய்யா (ஒன்றை விபரிப்பதற்காகவே) உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. எனவே அல்லாஹ் தனது தாத்திலே நூரானவன் தானென்று சொல்லப்பட்டால் அல்லாஹ் தனது தாத்துக்கு ஒரு உவமை சொல்ல வேண்டி வரும்.

ஆனால் அல்லாஹ் தனது செயல்களுக்குத்தான் உதாரணத்தின் மூலம் பேசுவானேயன்றி அவனது தாத்திலல்ல. ஏனெனில் "லைஸ கமிஸ்லிஹீ ஷைவுன்" அல்லாஹ்வுக்கு உதாரணம் எதுவுமில்லை என்று அல்லாஹ்வே தெளிவாகச் சொல்கிறான்.

விளக்கம் மூன்று :-

இன்னும் அல்லாஹுத் தஆலா திருமறையின் சூரா அன்ஆமின் முதல் வசனத்தில் "வ ஜஅலழ் ழுலுமாத்தி வந் நூர்" என்பதில் ழுலமாத் (இருளையும்) நூர் (ஒளியையும்) படைத்தவன் அவனே என்று சொல்கிறான். எனவே நூர் என்பது அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஒரு சிருஷ்டியாகும். இவ்வாறே சூரா பகராவில் "யுக்ரிஜுஹும் மினழ் ழுலுமாத்தி இலன் நூரி" என்றும், இவ்வாறே சூரா அஸ்ஸுமரின் 41ம் வசனமும் அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனாக இருக்க முடியாதென்பதையே தெளிவுபடுத்துகின்றது.

எனவே அல்லாஹ் தனது தாத்திலே நூரானவனல்ல எனில் "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" என்னும் வசனத்தில் நூர் என்னும் பதம் பிறகு ஏன் உபயோகப்படுத்தப்பட்டது என்னும் கேள்வி எழுவதால் இதற்குரிய பதிலைச் சொல்லும் அறிஞர் பெருமக்கள் இவ்வசனத்தில் "நூர்" என்னும் பதம் மஜாஸ் முர்ஸலாவாக அல்லது இஸ்திஆராவாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதென்று கூறுகின்றனர்.

அதாவது ஒரு சொல்லைப் பிரயோகித்து இன்னொன்றை அதைக்கொண்டு நாடுவதற்கு மஜாஸ் முர்ஸல் என்று சொல்லப்படும். இதற்கு ஒரு காரணத்தைக் காட்டி அதற்குரிய காரியத்தை நாடுதல் என்றும் சொல்லலாம். இப்படிக் கையாளப்பட்டதற்கு குர்ஆனில் பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. இவ்வடிப்படையில் நூர் என்ற பதத்திற்கு அறிஞர் பெருமக்கள் எந்தெந்த வகையில் எல்லாம் விளக்கமளித்துள்ளனர் என்பதை இனி பார்ப்போம்.

நூர் பி மஃனா ஹாதி :-

"ஹழ்ரத் ஸஹ்ல் பின் அப்தில்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்" அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி" என்பதற்கு "அல்லாஹு ஹாதி அஹ்லிஸ் ஸமாவாத்தி" அல்லாஹ் வானம் பூமியிலிருப்போர்க்கு நேர்வழி காட்டுபவன் என்பது பொருளாகுமென்று கூறுகின்றனர்." (நூல் : தப்ஸீர் ரூஹுல் பயான்)

ஹழ்ரத் ஸஹ்ல் பின் அப்தில்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் முன்மொழியப்பட்ட கருத்தைத்தான் அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது அஷ்ஷிபா என்னும் நூலிலும் குறிப்பிட்டுள்ளனர். அடுத்து,

"உங்களை ழுலுமாத் (குப்ரிய்யத்) என்னும் இருளிலிருந்து நூர் (ஹிதாயத்) என்னும் ஒளியின்பால் கொண்டு வருவதற்காக" (சூரா அஹ்ஸாப், வசனம்-43.)

"அல்லாஹ் எவருடைய இதயத்தை இஸ்லாத்திற்காக விசாலமாக்குகின்றானோ அவர் தமது இறைவனின் (ஹிதாயத் - நூர் என்னும்) ஒளியில் இருக்கிறார். (சூரா அஸ்ஸுமர், வசனம்-22.)

இன்னும் இதுபோன்ற சில வசனங்களையும் முன்வைத்து இவ்வசனங்கள் அனைத்திலும் ஹிதாயத் என்பதை நூர் என்னும் பதத்தைக் கொண்டு பேசுகிறான். எனவே அல்லாஹ் வானங்கள் பூமிகளின் நூராக இருக்கிறான் எனில் அவைகளில் வாழுவோரை நேர்வழிப் படுத்துபவன் என்பது தான் அதற்குரிய பொருளாகும் என்று கூறுகின்றனர்.

நூர் பி மஃனா முனவ்விர் :-

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வசனத்தில் காணப்படும் நூர் என்னும் பதத்திற்கு முனவ்விர் என்பதாகவும் பொருள் தருகின்றனர். இக்கருத்துக்கே பெரும்பான்மையான குர்ஆனின் விரிவுரையாளர்கள் முன்னுரிமை கொடுத்துள்ளனர். இன்னும் இமாம்களான ஹழ்ரத் இப்னு ஜரீர், ஹழ்ரத் இப்னு அபீ ஹாத்திம், ஹழ்ரத் இமாம் பைஹகீ ரலியல்லாஹு அன்ஹும் போன்றோரும் இக்கருத்தையே கூறியுள்ளனர்.

"முனவ்விர் என்பதாக விளக்கம் தரப்பட்டாலும் இமாம் ஹழ்ரத் ஹஸன் பஸரீ, ஹழ்ரத் ழஹ்ஹாக், ஹழ்ரத் அபூ ஆலியா போன்றோர் அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி என்பதை ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலி

யல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹு நவ்வரஸ் ஸமாவாத்தி வல் அர்ழி என்று ஓதியதாகவும் குறிப் பிடுகின்றனர். இதோர் அரிதான கிராஅத்தாகும்."

(நூல் : தப்ஸீர் ரூஹுல் மஆனி)

அல்லாஹு நவ்வரஸ் ஸமாவாத்தி என ஓதப்பட்ட தாக பதிவாகியுள்ள ஹதீதை அல்லாமா இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அல் இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன் என்னும் நூலில் இது பலவீனமான ஹதீத் என்று கூறுகின்றனர்.

நூர் பி மஃனா முதப்பிர் :-

அல்லாமா இமாம் ஸையித் மஹ்மூத் ஆலூஸி மற்றும் ஹழ்ரத் இப்னு ஜரீர் ரஹிமஹுமல்லாஹ் போன்றோர்,

நூர் என்றால் முதப்பிர் என்பதாகும் அதாவது, அல்லாஹ் வானம் பூமியிலுள்ளோரை ஆளுபவன் எனக் கூறியதாக பதிவு செய்துள்ளனர்.

(நூல் : தப்ஸீர் ரூஹுல் மஆனி)

அல்லாஹ் வானம் பூமி மற்றும் அவைகளில் உள் ளோரை மிகவும் தத்துவமான முறையில் அழகான விதத் தில் வழிநடத்துவதால் நூர் என்பதாகும்.

"ஒரு கிராமத்தின் அல்லது ஒரு தேசத்தின் தலை வன் தனது மக்களை பிரச்னைகள் ஏதுமின்றி நன் முறையில் செழிப்போடு வழி நடத்துவானாயின் அவனை "நூருல் பலத்" ஊரின் ஒளி எனச் சொல்லுவ துண்டு என்பதாக இமாம் அஸம்முன், இமாம் ஸுஜ் ஜாஜ் ரஹிமஹுமல்லாஹ் போன்றோர் கூறுகின்றனர்."

(நூல் : தப்ஸீர் இப்னு ஜரீர்)

"இவ்வாறே ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் நூர் என்பதற்கு முதப்பிர் என் னும் பொருளையே கொண்டிருந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்." (நூல் : ரூஹுல் மஆனி)

நூர் பி மஃனா நாழிம் :-

சில வேத வியாக்யானிகள் நூர் என்பதற்கு நாழிம் (கட்டளையிடுபவன்) என்றும் கூறுகின்றனர்.

"அல்லாஹ் வானம் பூமிகளின் நூர் என்றால் வானம் பூமியுடையோருக்கு கட்டளையிடுபவன் என்பதாக விளக்கமளிக்கின்றனர்."

(நூல்: ரூஹுல் மஆனி)

நூர் பி மஃனா முபர்ரஃ மின் குல்லில் உயூப் :-

"நூர் என்பது எல்லா வகையான குறைபாடுகளை விட்டும் தூய்மையான பரிசுத்தமான ஒன்றுக்குச் சொல் லப்படும். அரபியர் பரிசுத்தமான் பெண்ணை இம்ர அத்துன் நௌரா எனக் கூறுவதுண்டு."

நூர் பி மஃனா முஜீத் :-

"தேர்ச்சி பெற்ற உலமாக்களில் சிலர் இவ்வசனத் தில் பேசப்படும் நூர் என்னும் பதத்திற்கு முஜீத் (உரு வாக்குபவன்) எனப் பொருள் தருகின்றனர். ஏனெனில் அல்லாஹ் தான் வானம் பூமிகளை இல்லாமையி லிருந்து உருவாக்கினான் என்பதாக விளக்கமளிக் கின்றனர்."

ஆதலால் அல்லாஹ் வானங்கள் பூமிகளின் நூராக இருக்கிறான் என்றால் வானம் பூமியிலுள்ளோர்க்கு ஹிதா யத்தைக் கொடுப்பவன் என்றும், வானம் பூமியில் வாழு வோரை வழி நடத்துபவன் என்றும், வானம் பூமிகளை ஆட்சி செய்பவன் என்றும், வானம் பூமிகளை உருவாக்கிய வன் என்றும், வானம் பூமிகளில் இருப்போருக்கு கட்டளை பிறப்பிப்பவன் என்றும், வானம் பூமிகளை பிரகாசிக்கச் செய்பவன் என்றும் பல்வேறு வகையான விளக்கங்களை கண்டோம். இந்த விளக்கங்களனைத்தும் அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி என்னும் ஒரேயொரு வச னத்திற்குரிய விளக்கங்களாகும். அடுத்து இதே வசனத்தின் தொடர்ச்சியில் பேசப்படும் இன்னொரு நூர் எது என்ப தைப் பற்றி இப்போது பார்ப்போம்.

இரண்டாவதாகப் பேசப்படும் நூர் என்னும் பதத்திற்கு உவமை சொல்லப்படுவதைக் காண முடிகிறது. இதை அல்லாஹ் தனக்கு உவமைபடுத்துவதாக யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் அவன் தனது செயல் பாடுகளைத்தான் உவமைபடுத்திப் பேசுவானே அன்றி தன்னை ஒருபோதும் எதற்கும் உவமைபடுத்திப் பேச மாட்டான். காரணம் அல்லாஹ் உவமைகளை விட்டும் மிக மிகப் பரிசுத்தமானவன் என்பதே இஸ்லாமியக் கொள்கையாகும். அப்படியானால் இப்போது இங்கே சொல்லப்படுகின்ற உவமையை முதல் நூருக்கு வழங்கப்பட்ட விளக்கத்தோடு இணைத்துப் பாருங்கள்.

"அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி" அல்லாஹ் வானம் பூமியிலுள்ளோர்களுக்கு நேர்வழி காட்டுபவன் என்பதாகப் பொருள் கொள்ளப்பட்டால் "மஸலு நூரிஹி" அந்நேர்வழி காட்டுதலுக்கு உவமையானது என்பது இங்கே பொருளாகும்.

பின்னும் அல்லாஹ்வுடைய நேர்வழி காட்டுதலுக்கு உவமை சொல்லப்படுவதாகச் சொல்லப்பட்டால் அவன் எதைக்கொண்டு நேர்வழி காட்டுகிறானோ அதற்குத்தான் இங்கே உதாரணம் சொல்கிறான். அல்லது எவரைக் கொண்டு நேர்வழி காட்டுகிறானோ அவருக்குத்தான் உதாரணம் சொல்கிறான். ஆகையால் இங்கே உதாரணப்படுத்தப்படும் பொருள் எது? அல்லது உதாரணமாக்கப்படுபவர் யார்?

மேலும் யாருடைய உதவியுமின்றி எதையும் சுயமாகச் செய்வதற்குரிய சர்வ வல்லமை கொண்டவன் தான் அல்லாஹ். அவனையன்றி எந்தவொரு சிருஷ்டிக்கும் சுயமாக ஒன்றைச் செய்வதற்குரிய ஆற்றலோ அதிகாரமோ அறவே கிடையாது. இருப்பினும் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதற்கும் ஒருவர் அவனால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதால் இங்கே நேர்வழி காட்டுவதற்காகவென்று அல்லாஹ்வைக் கொண்டு நபிமார்களும் ரஸூல்மார்களும் அவனால் நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதை எவராலும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ ஒருக்காலும் முடியாது என்னும்போது இப்போது இவ்வசனத்தில் உதா

ரணப்படுத்தப்படுபவர் யார் என்பது உங்களுக்கு மிக நன்றாகப் புரிந்திருக்குமென்று நினைக்கிறோம். ஆம். அவர்கள் தான் நமது நாயகம் ஸர்காரே தோ ஆலம், ஸர்வரே காயினாத், கருணைக் கடல், காத்தமுன் நபி, இறைவனின் பேரொளி, இருளகற்றும் நாதர், ஈருலகின் இதய வேந்தர் அஹ்மத் முஸ்தபா முஹம்மத் முஜ்தபா ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வ ஸல்லம் அவர்களாகும் என்பதில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்தோருக்கு சிறிது கூடச் சந்தேகமில்லை. இவையனைத்தும் அக்லிய்யத்தான (அறிவார்த்தமான) ஆதாரங்களாகும். இனி நக்லிய்யத்தான (குர்ஆன் ஹதீத் என்னும் சுருதிப் பிரமாணங்களுக்குரிய) ஆதாரங்களைப் பாருங்கள்.

மஸலு நூரிஹி :-

"ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸய்யிதுனா கஃபுல் அஹ்பார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இவ்வசனம் எதைக் குறிக்கின்றதெனக் கேட்க, அதற்கவர்கள்; நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறிப்பிடுகிறதென்று சொன்னார்கள்.

பின்னும் கஃபுல் அஹ்பார் ரலியல்லாஹு அன்ஹுவைத் தவிர ஸய்யிதுனா ஸயீத் பின் ஸுபைர், ஸய்யிதுனா இப்னு ஜரீர், ஸய்யிதுனா இப்னுல் அன்பாரி, ஸய்யிதுனா இப்னு அதிய்யா, ஸய்யிதுனா முஹம்மத் பின் கஃப், ஸய்யிதுனா இப்னு உமர், ஸய்யிதுனா ழஹ்ஹாக் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற பெரும் பெரும் தாபியீன்களும் இவ்வசனத்தில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிக்க முபாரக்கான தாத்துக்கே உவமைபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்."

عن عبدبن حميد وابن جرير وابن المنذر وابن ابى حـــاتم
وابن مردويه عن شمرة بن عطية قال: جاء ابن عباس رضى
الله عنهما الى كعب الاحبار رضى الله عنه فقال حدثني عن

قول الله تعالى: الله نور السموات والارض مثل نوره: قال مثل نور محمد صلى الله عليه وآله وسلم

"அப்து பின் ஹுமைத், இப்னு ஜரீர், இப்னுல் முன்திர், இப்னு அபீ ஹாத்திம், இப்னு மர்துவிய்யா, ஆகியோர் ஸமுரா பின் அதிய்யா ரலியல்லாஹு அன்ஹுவைக் கொண்டு அறிவிப்பதென்ன எனில் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸய்யிதுனா கஃபுல் அஹ்பார் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வருகைதந்து "அல்லாஹு நூருஸ் ஸமாவாத்தி வல் அர்ழி மஸலு நூரிஹி" என்னும் வசனத்திற்குரிய விளக்கத்தைக் கேட்டபோது, அதற்கவர்கள்; அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதாகப் பதில் தந்தனர்." (தப்ஸீர் துர்ருல் மன்தூர், பாகம்-6, பக்கம்-198. இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ்)

மேலும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரயீஸுல் முபஸ்ஸிரீன் - வேத விரிவுரையாளர்களின் தலைவர் எனப் போற்றப்படுபவர்கள். இவர்களே கஃபுல் அஹ்பாரிடம் இவ்வசனத்திற்கு விளக்கம் கேட்கின்றனர் என்றால் இந்த க்ஃபுல் அஹ்பார் என்பவர் யார் தெரியுமா? இவர் மிக மிகப் பிரச்சித்தி பெற்ற தாபியீன்களில் ஒருவராகும். இவரது முழுப்பெயர் 'அபூ இஸ்ஹாக் கஃபிப்னி கானிஃ பின் மைனூஃ" என்பதாகும். இவர் அரபிய வம்சத்தினரில் மிகவும் பிரச்சித்திப்பெற்ற "ஹிம்யர்" என்னும் வம்சத்தைச் சேர்ந்தவராகும்.

இவர்கள் இஸ்லாத்தை ஏற்குமுன் யூதர்களிடையே பிரபலமான பேரறிஞர்களில் ஒருவராக இருந்ததால் அஹ்பார் என்றழைக்கப்பட்டார்கள். இவர்கள் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்தும் அவர்களை சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காது போனதால் ஸய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அத்துடன் ஸய்யிதுனா உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியதாகவும் ஒரு தகவலுண்டு. (நூல் : தஹ்தீபுல் அஸ்மாயி வல்லுகாத்)

இன்னும் இவர்களால் அறிவிக்கப்படும் ஹதீத்கள் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது அறிவிப்புக்களில் உள்ள ஹதீதுகளுக்கு ஒப்பானதென்றே சொல்லலாம். மேலும் ஹழ்ரத் ஸய்யிதுனா உமர் பாரூக், ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ், ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ ஹுரைரா, ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற பெரும் பெரும் நபிமணித் தோழர்களிடமிருந்தும், பிரபலமான பெரும் எண்ணிக்கையைக் கொண்ட தாபியீன்களிடமிருந்தும் இவர்கள் பல ஹதீதுகளை அறிவித்துள்ளனர். மேலும் இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், இமாம் நஸாயி, இமாம் அபூதாவூத் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரும் இவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீதுகளை தமது நூல்களில் பதிவு செய்துள்ளனர். இதில் இமாம் அபூதாவூத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இவர்களைப் பற்றி...

"அவர் அறிவுகளை உடையவர், நம்பிக்கைக் குரியவர், நிறைந்த ஞானங்களைப் பெற்றவர் என்பதில் அறிஞர் பெருமக்கள் ஒருங்கிணைந்துள்ளனர் எனக் குறிப்பிடுகின்றார்கள்."

(நூல்: தஹ்தீபுல் அஸ்மாயி வல்லுஃகாத்)

இவர்கள் ஹிஜ்ரி 32ல் ஹிம்முஸ் என்னுமிடத்தில் இறையடி சேர்ந்து அங்கேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அத்துடன் சூரா அந்நூரின் 35ம் வசனத்தில் சொல்லப்பட்ட உவமை நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் குறித்துத்தான் என்று சொன்னவர்களில் ஹழ்ரத் ஸய்யிதுனா ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஒருவராகும்.

இவர் ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மாணவரும் பிரச்சித்திப் பெற்ற தாபியீன்களில் ஒருவருமாகும். இன்னும் இவர்

ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு அப்பாஸ், ஹழ்ரத் ஸய்யிதுனா இப்னு உமர், ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ மஸ்வூதில் அன் ஸாரி, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ ஹுரைரா, ஹழ்ரத் ஸய்யி துனா அபூ ஸயீதுல் குத்ரீ, ஹழ்ரத் ஸய்யிதுனா அபூ மூஸா அல் அஷ்அரி, ஹழ்ரத் ஸய்யிதுனா ழஹ்ஹாக் ரலியல்லாஹு அன்ஹும் போன்ற புனிதமிகு நபித்தோழர்க்ளிடமிருந் தெல்லாம் ஹதீதுகளை அறிவித்துள்ளார்.

ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி ஹழ்ரத் இப்னு ஹிப்பான் ரஹிமஹுல் லாஹ் அவர்கள்.,,,

"ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீதுகளை அறிவித்தோரில் நம்பிக்கைக்குரிய ஒருவராகவும், சட்ட நிபுணராகவும், ஸுஹ்தும் தக்வாவும் உடையவராகவும் இருந்தனர் என்று கூறுகின்றனர்." *(நூல் : தஹ்தீபுத் தஹ்தீப்)*

"ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இஸ்லாமியர்களுக்கு மாபெரும் நம் பத்தகுந்த ஆதாரமாகும் என்கின்றனர் இமாம் அபூ காசிம் திப்ரீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள்."

(நூல் : தஹ்தீபுத் தஹ்தீப்)

"ஹழ்ரத் ஸயீத் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது ஞானங்களின் பால் தேவையா காத எவரும் இப்புவியில் இல்லை என ஹழ்ரத் உமர் பின் மைமூன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தந்தை சொல்லக் கேட்டதாகக் கூறுகின்றனர்."

(நூல் : தஹ்தீபுத் தஹ்தீப்)

ஆக இவ்வசனத்தில் அக்லிய்யத்தான (அறிவார்த்த மான) ஆதாரங்களைக் கொண்டும் நக்லிய்யத்தான (கருதி பிரமாணங்களின்) ஆதாரங்களைக் கொண்டும் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயத்தின் சாரம்சம் என்னவெனில்.,,,

"மஸலு நூரிஹி" என்றால் "ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்களின் நூருக்கு உதாரணமாவது" என்பதாக
நூர் என்னும் பதத்தை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல
மவர்களோடு இணைத்துப் பொருள் தரலாம். அல்லது,

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்
களுக்கு உதாரணமாவது" என்றும் பொருள் கொடுக்க
லாம். இந்நிலையில் நபியவர்களை உதாரணப்படுத்தும்
போது அதில் இடம் பெற்றுள்ள ழமீரானது அல்லாஹ்வை
நோக்கி மீளும். அதாவது,

"அல்லாஹ்வின் நூராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லமவர்களுக்கு உதாரணமாவது" என்ப
தாகப் பொருள் அமையும்.

வசனம் இரண்டு :-

قد جائكم من الله نور و كتاب مبين

"திடனாக அல்லாஹ்விடமிருந்து நூரும் கிதாபும் வந்து விட்டது." *(சூரா மாயிதா, வசனம்-15)*

இந்த வசனமும் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லமவர்கள் நூரானவர்களே என்னும் கருத்தை
மேலும் உறுதிப்படுத்துகின்ற ஓர் ஆதாரமாகும். அதே
நேரம் இவ்வசனத்தைக் கொண்டு அண்ணல் நபி ஸல்லல்
லாஹு அலைஹி வஸல்லமவர்களது அகமியம் எடுத்துக்
காட்டப்படுவதை ஜீரணித்துக் கொள்ள முடியாத வஹ்ஹா
பிகள் நூர் என்பதும் கிதாப் என்பதும் குர்ஆனைத் தான்
குறிக்குமென்று கூக்குரலிடுகின்றனர். இது இஸ்லாமிய
முன்னோர்களில் எவருமே சொல்லாத ஒரு புதுமையான
விளக்கமாகும். இனி இவ்விரு வசனங்களிலும் பேசப்படு
கின்ற நூர் என்னும் பதம் பாராளும் முஹம்மத் ஸல்லல்
லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தான் குறித்துக் காட்
டுகிறது என்பதை ஆதாரப்படுத்துவதற்காக நாம் எடுத்துக்
கொண்ட நூல்களைப் பாருங்கள்.

நூரும் குர்ஆனின் விரிவுரையாளரும் :-

1. தப்ஸீர் ஸமர்கந்தீ, இமாம் இப்ராஹீம் ஸமர்கந்தீ - 375

2. தப்ஸீர் நஸபீ, இமாம் நஸபீ - 701
3. அல் ஜவாஹிருல் ஹஸ்ஸான் ஃபீ தப்ஸீரில் குர் ஆன், இமாம் தஆலபீ - 875
4. அய்ஸருத் தபாஸீர் விகலாமில் அலிய்யில் கபீர், இமாம் அல் ஜஸாயிர்
5. ஃபத்ஹுல் கதீர், அல்லாமா ஷௌக்கானி - 1250
6. ஹாஷியத்துஷ் ஷிஹாப், அல்லாமா ஷிஹாபுத்தீன் அல் குஃப்பாஜி - 1069
7. தப்ஸீருல் மன்னார், முஹம்மத் ரஷீத் ரழா
8. தப்ஸீர் அல் மாவரூதி, அல்லாமா அல் மாவரூதி - 450
9. தப்ஸீர் அத்தஹ்ரீர் வத்தன்வீர், அல்லாமா தாஹிர்
10. அத்தப்ஸீருல் கபீர், அல்லாமா ராஸி - 606
11. ஹாஷியா அல் ஜமலுல் ஜலாலைன்,. அல்லாமா சுலைமானுல் ஜமல் - 1204
12. தப்ஸீருல் பஃகவீ, அல்லாமா பஃகவீ - 516
13. அத்தப்ஸீருல் முனீர், உஸ்தாத் வஹ்பா அர்ரகீலி
14. அல் ஜாமிவுல் அஹ்காம், அல்லாமா குர்துபி - 671
15. ரூஹுல் மஆனி, அல்லாமா ஆலூஸி - 127
16. ரூஹுல் பயான், அல்லாமா பரோஸி - 1137
17. ஜாமிவுல் பயான், அல்லாமா தப்ரீ - 210
18. கிதாபுல் வஜீஸ் ஃபீ தப்ஸீரில் குர்ஆன், அல்லாமா அல் வாஹிதி - 468
19. மராஹ் லபீத் தப்ஸீர் நவவி, அல்லாமா ஜாவீ
20. தப்ஸீர் பைழாவீ, அல்லாமா பைழாவீ - 791
21. அத்துர்ருல் மன்தூர், அல்லாமா சுயூத்தி - 911
22. தப்ஸீர் ஜலாலைன், அல்லாமா சுயூத்தி - 911
23. தப்ஸீருல் காஸின், அல்லாமா இப்ராஹீம் அல் பக்தாதி - 725

அல்லாஹ்வைக் கொண்டு முதன் முதலாக ஜோதியாகப் படைக்கப்பட்டு ஜொலித்துக் கொண்டிருந்தவர் தான் பஷரிய்யத்துடைய ரஸூலாக வருகை தந்திருக்கிறார். அதை ஊர்ஜிதப்படுத்தவே தெளிவான வேதமும் வந்துள்ளது என்பதாக ஸூஃபிய்யாக்கள் கூறுகின்றனர்.

வசனம் மூன்று :-

يريدون ليطفئوا نورالله بافواههم والله متم نوره ولو كره الكافرون

"அவர்கள் அல்லாஹ்வுடைய நூரை தமது வாயால் ஊதி அணைத்து விடலாம் எனக் கருதுகின்றனர். காபிர்கள் வெறுப்படைந்த போதிலும் அவன் தனது நூரை பூரணப்படுத்துபவனாகவே இருக்கிறான்."
(சூரா அஸ்ஸஃப், வசனம்-8. சூரா அத்தௌபா, வசனம்-32.)

"இவ்வசனத்தில் நூருல்லாஹ் (அல்லாஹ்வின் நூர்) என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும்." *(நூல்: தப்ஸீர் இப்னு ஜரீர், தப்ஸீர் நஸஃபீ, பாகம்-1, பக்கம்-619. தப்ஸீர் கஷ்ஷாஃப், பாகம்-2, பக்கம்-186. தப்ஸீர் அத்துர்ருல் மன்தூர், பாகம்-4, பக்கம்-175.)*

வசனம் நான்கு :-

يايهاالنبي إنا أرسلناك شاهدا ومبشرا ونذيرا وداعيا الى الله بإذنه وسراجا منيرا

"ஓ! மறைவானவற்றை அறிவிப்பவரே! நாம் உம்மை ஹாழிராகவும் நாழிராகவும் சுபச்செய்தி தருபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டு அவன்பால் அழைப்பவராகவும் பிரகாசமான ஒளியாகவும் அனுப்பியுள்ளோம்." *(சூரா அஹ்ஸாப், வசனம்-45,46.)*

வசனம் ஐந்து:-

والضحى والليل إذا سجى

"முற்பகல் மீது சத்தியமாக ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக" *(சூரா அழ்ழுஹா, வசனம்-1)*

இந்த வசனத்திற்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நூருக்கும் என்ன தொடர்பு என்று யோசிக்கின்றீர்களா? இதோ அதற்குரிய பதிலைப் பாருங்கள்,..

هل أحد من المذكرين فسرالضحى بوجه محمد صلى الله عليه وآله وسلم والليل بشعر صلى الله عليه وآله وسـلم.

نعم. ولا استبعاد فيه

"அழ்முஹா என்னும் பதம் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருவதனமும், லைல் என்னும் பதம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக்கான திருமுடியும் தான் என்பதாக எவரேனும் விளக்கமளித்துள்ளனரா? ஆம்." *(நூல் : தப்ஸீர் கபீர்)* இவ்வாறே,

لااستبعاد فيما يذكره الواعظ من تشبيه وجه محمد صلى الله عليه وآله وسلم بالضحى وشعره بالليل

"முஹா என்னும் பதத்தை நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக்கான திருவதனத்திற்கும், லைல் என்னும் பதத்தை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக் கான திருமுடிக்கும் உவமைப்படுத்தலாம்." *(நூல்: தப் ஸீர் நைஷாபூரி, அஸ்ஸீரத்துல் ஹலபிய்யா, பாகம்-1, பக் கம்-95. அஷ்ஷிஃபா.)*

வசனம் ஆறு :-

والنجم اذا هوى

"ஏறி இறங்கும் நட்சத்திரத்தின் மீது சத்தியமாக" *(ஸூரா அந்நஜ்ம், வசனம்-1)*

النجم هو محمد صلى الله عليه وآله وسلم

"நட்சத்திரம் என்பது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும்." *(நூல் : அஷ்ஷிஃபா, பாகம்-1, பக்கம்-23. தப்ஸீர் காஸின், பாகம்-6, பக்கம்-212. தப்ஸீர் பஃகவீ, பாகம்-4, பக்கம்-244. தப்ஸீர் ஸாவி.)*

வசனம் ஏழு :-

والسماء والطارق. وما ادراك ما الطارق. النجم الثاقب

"வானத்தின் மீது சத்தியமாக! தாரிக் மீதும் சத்தி யமாக தாரிக் என்னவென்பதை உமக்கு அறிவித்தது எது? அது இலங்கும் நட்சத்திரமாகும்" *(ஸூரா அத்தாரிக், வசனம்-1)*

إن النجم هنا أيضا محمد صلى الله عليه وآله وسلم

"இங்கே நட்சத்திரம் என்றால் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களேயாகும்" *(நூல் : அஷ்ஷிஃபா, நஸீமுர்ரியாழ்)*

மேற்கண்ட வசனங்களனைத்தும் நமது நாயகம் ரஸுலே அக்ரம் ஸர்வரே காயினாத் ஸர்காரே தோ ஆலம் ஹபீபே முஸ்தபா முஹம்மத் முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒளிமயமானவர்கள் (நூர்) என் பதை நிரூபிப்பதற்காக உங்களின் பார்வைக்குத் தரப்பட்ட திருமறை வசனங்களாகும்.

நான் உங்களைப் போன்றவனல்ல

சர்வ சக்தனாகிய அல்லாஹ் ஸய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைப் படைத்து அவர்களுக்கு மரியாதை செலுத்துமாறு வானவர்களுக்குக் கட்டளையிட, இப்லீஸைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அவர்களுக்கு மரியாதை செலுத்தினர். இப்லீஸ் மரியாதை செலுத்தாததால் அவன் அல்லாஹ்வின் சாபத்திற்குள்ளாகி இரு உலகிலுமுள்ள வானவர் மற்றும் முஃமின்களது விரோதியாகவும் ஆக்கப்பட்டான்.

எல்லா வானவர்களும் மரியாதை செலுத்த இப்லீஸ் மட்டும் மரியாதை செலுத்தாமல் போனதற்குரிய காரணமென்ன என்பதை யோசித்தால் மனித இனத்தில் ஒருவராக ஆதம் நபியவர்கள் படைக்கப்பட்ட பின் அவரை ஒரு மனிதரென்று மட்டும் பார்க்காமல் அவ்வானவர்கள் அவர்களுக்குள் இருந்த ஸஃபிய்யுல்லாஹ்வையும் பார்த்தனர். ஆதலினாலேயே அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து மரியாதை செலுத்தினர். ஆனால் இப்லீஸ் அவர்களை ஒரு மனிதராக மட்டுமே பார்த்தான். அன்றி அவர்களுக்குள் ஜொலித்துக் கொண்டிருந்த ஸஃபிய்யுல்லாஹ்வைக் பார்க்காததால் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிய மறுத்தான்.

இதுபோன்றே ஹாபீல் என்பவர் தமது தந்தையான ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை ஒரு மனிதராகக் கண்டாலும் அவருக்குள்ளிருந்த ஸஃபிய்யுல்லாஹ்வையும் கண்டதால் அவர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்த நல்லடியாரானார். ஆனால் அதே ஆதமின் இன்னொரு பிள்ளையான

காபீல் என்பவன் தமது தந்தையை வெறும் மனிதராக மட்டுமே கண்டதால் முடிவில் இப்லீஸின் கூட்டாளியானான்.

இன்னும் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை நம்ரூத் என்னும் கொடுங்கோலன் தன்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதராகப் பார்த்தானே அன்றி அவருக்குள் இருந்த கலீலுல்லாஹ்வை காணவில்லை. இதனால் இவனும் இப்லீஸின் கூட்டாளியானான்.

இவ்வாறே ஹழ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை ஃபிர்அவ்ன் என்னும் ஆணவக்காரன் தன்னைப் போன்றே ஒரு சாதாரண மனிதராகக் கண்டானேயன்றி அவர்களுக்குள் இருந்த கலீமுல்லாஹ்வை அவன் காணவில்லை. ஆதலால் அவனும் இப்லீஸின் தோழனானான்.

இவ்வண்ணமே ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களை ஸலஃபிய்யீன்கள் என்போர் அவர்களுக்குள் இருந்த ரூஹுல்லாஹ்வைக் காணாததால் அவர்களும் இப்லீஸின் நண்பர்களாயினர்.

இதேபோல நமது நாயகம் ஹழ்ரத் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அபூஜஹ்லும் அவனது கூட்டத்தாரும் தமக்கு நிகரானதொரு மனிதராகக் கண்டார்களேயன்றி அப்பேரொளிக்குள் இருந்த நூருல்லாஹ்வைக் காணவில்லை. விளைவு! முடிவில் இவர்களும் அந்த இப்லீஸின் ஆப்த நண்பர்களாகிப் போயினர்.

இந்த இடத்தில் நபியவர்களின் மகத்துவத்தை பார்க்க மறுப்போர் (வஹ்ஹாபிகள்) அபூஜஹ்லும் அவனது கூட்டத்தாரும் நபித்துவத்தை பகிரங்கமாக எதிர்த்ததாலும் மறுத்ததாலும் தான் காபிர்களாகிப் போனார்களென்று சொல்வார்களாயின், நுபுவ்வத் என்பது நமது நபியவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஒரு கிரீடமாகும். அதை மறுத்ததால் தான் அவர்கள் அல்லாஹ்வின் விரோதிகளாயினர் என்பதையாவது நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அப்படியானால் இங்கே நபி வேறு நபித்துவம் வேறு என்று சொல்கிறீர்களா?

ஆனால் நபியவர்களை ஒரு சாதாரண மனிதராகக் கண்டதால் தான் அவர்களது எல்லா நிலைகளையும் பொய்யாக்கினர். அதேநேரம் நபியவர்களை நபியென்றும், ரஸூலென்றும் ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களின் எதார்த்தத்தை ஏற்க மறுக்கிறீர்களே. அப்படியானால் நீங்கள் யார்? நபியவர்களின் மகத்துவத்தை எடுத்துச் சொல்லும்போது எல்லைமீறி அளவுகடந்துப் புகழ்வதாகச் புலம்பும் நீங்கள் யார்? நாங்கள் தான் முனாபிக்கீன்கள் - நயவஞ்சகர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா? இன்னும் இவர்கள் அபூ ஜஹ்லை விடக் கொடியவர்கள் என்பதும் பொய்யா? என்றால் அதற்கிவர்கள்,...

அல்லாஹ்வே தனது மாமறையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை "பஷருன்" (மனிதர்) என்று சொல்கிறானே. அப்படியானால் நாமும் சொல்லலாமல்லவா என்று கேட்கின்றனர்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை மனிதரென்று சொல்லக்கூடாதென்று எப்போது சொன்னோம்? நம்மைப்போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்லக்கூடாதென்று தான் சொல்கிறோம். அத்துடன் அம்மனிதத் தோற்றத்தில் வெளியான அவர்களின் எதார்த்தங்களையும் பாருங்களென்று தான் சொல்கிறோம். ஆனால் நீங்கள் குர்ஆன் மனிதரென்று சொன்னதை வைத்துக் கொண்டு உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்வதுடன், அவர்களது புகழுக்குரிய எதார்த்தமான நிலைகளை எல்லாம் எல்லை கடந்ததென்று சொல்வதைத் தான் நயவஞ்சகத்தனம் என்று எச்சரிக்கிறோம்.

மேலும் அல்லாஹ் அவனது மாமறையில் "பஷர்" என்று சொன்னதால் அதை வைத்துக்கொண்டு நாமும் சொல்லலாமா? பின்னும் பஷர் என்று சொன்னவர்களெல்லாம் யார் தெரியுமா? இதோ அந்தக் குர்ஆனையே பாருங்கள்.

வசனம் ஒன்று :-

وقال الملأ الذين كفروا من قومه مانراك إلا بشـــرا مثلنا

ومانراك إتبعك إلاالذين هم أراذلنا بـــادى الرأي ومانرى لكم علينا من فضل بل نظنكم كاذبين

"ஹழ்ரத் ஹூத் அலைஹிஸ்ஸலாமவர்களை நிராகரித்த அவரது சமூகத்தினர் (அவரை நோக்கி) நாங்கள் உம்மை எங்களைப் போன்ற ஒரு மனிதராகவே அன்றி (வேறு விதமாகக்) காணவில்லை. இன்னும் அறிவும் தெளிந்த சிந்தனையும் இல்லாத இழிவானவர்களே உம்மைப் பின்தொடர்பவர்களாக பார்க்கிறோம். எங்களைவிட உமக்கு எவ்வகையான மேன்மையும் இருப்பதாக நாங்கள் காணவில்லை. மாறாக உம்மை நாங்கள் பொய்யர்களாகவே பார்க்கிறோம்." (சூரா ஹூத், வசனம்-27)

ஏ! வஹ்ஹாபிகளே!

1. நீங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்லவில்லையா?

2. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கண்ணியப்படுத்தும் சுன்னத் வல் ஜமாஅத்தினரை இழிவுபடுத்தவில்லையா?

3. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இச்சமுதாயத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு தூதர் மட்டுமே. எங்களுக்குப் பணிவிடை செய்வதற்காக அனுப்பப்பட்டவர் என்றும், நபியவர்கள் (நவூதுபில்லாஹ்) ஒரு தபால்காரரைப் போன்றவர் என்று மௌதூதி சொல்லவில்லையா? நபியவர்கள் நமது மூத்த சகோதரனைப் போன்றவர் தானென்று இல்யாஸ் சொல்லவில்லையா?

வசனம் இரண்டு :-

وقال الملأ من قومه الذين كفروا و كذبوا بلقاء الآخرة وأترفناهم في الحياة الدنيا ماهذا إلا بشـــر مثلكم يأكل مما تأكلون منه ويشرب مما تشربون ولئن أطعتم بشرا مثلكم إنكم إذالخاسرون

"ஆதுக் கூட்டத்தாரில் காபிர்களாக இருந்த தலை வர்களும் இன்னும் இறுதிநாளைப் பொய்யாக்குபவர் களும் நாம் அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் விசாலமான (சுகானுபவங்களை) கொடுத்திருந்தோமே அவர்களும் (தமது சமூகத்தாரிடம்) இவர் உங்களைப் போன்ற ஒரு மனிதரேயன்றி வேறில்லை. நீங்கள் உண்ணுவதையே அவரும் உண்ணுகிறார். நீங்கள் அருந்துவதையே அவரும் அருந்துகிறார். எனவே உங்களைப் போன்ற ஒருவரைப் பின்தொடர்வீர்களா யின் நிச்சயமாக நீங்கள் நஷ்டவாளிகளே." *(சூரா முஃமினூன், வசனம்-33,34.)*

இவ்வசனத்தில் ஆது சமூகத்தினர் இறுதிநாளைப் பொய்யாக்குபவர்களாக இருந்ததோடு பெரும் செல்வந்தர் களாகவும் இருந்துள்ளனர். அத்துடன் அவர்களுக்கு அனுப் பப்பட்ட நபியைப் பொய்யாக்கியதற்குரிய காரணத்தைச் சொல்லும்போது,

"உங்களைப் போன்ற ஒரு மனிதராகத்தான் இருக் கிறார்" என்றும்,

"நீங்கள் உண்ணுவதையே அவரும் உண்ணுகிறார்" என்றும்,

"நீங்கள் பருகுவதையே அவரும் பருகுகிறார்" என்றும்,

"உங்களைப் போன்ற ஒருவரை நீங்கள் பின்தொடர் வீர்களாயின் நிச்சயமாக நீங்கள் நஷ்டவாளிகளே" என்றும் கூறப்படுவதைக் கவனியுங்கள். அத்துடன்,...

1. உங்களின் முன்னோடிகளான அப்துல் வஹ்ஹாபும் தற்போதுள்ள அல்பானி, ஹுதைமைன், பௌஸான் போன் றோரின் நாடுகளும் இன்று பெரும் செல்வம் கொழிக்கும் நாடுகள்தானே. இறுதிநாளைப் பொய்யாக்கா விட்டாலும் எங்களின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களை நீங்கள் உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனித ரென்று சொல்லவில்லையா?

2. எங்களின் இதய வேந்தரான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒளி மயமானவர்கள் என்று சொன்னபோது நூராக இருப்பவர் எப்படிச் சாப்பிட முடி யும்? அது மனிதப் பண்புக்குரிய தன்மையல்லவா என்று நீங்கள் கேட்கவில்லையா?

3. நாங்கள் அருந்துவதைப் போலவே இவரும் அருந்து கிறார் ஆதலால் இவர் எங்களைப் போன்றவர் என்று நீங்கள் சொல்லவில்லையா?

4. சுன்னத் வல் ஜமாஅத்தினர் தம்மை நாயகம் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அடிமைகளென்று சொன்னதைக் கேட்டு எங்களை நீங்கள் முஷ்ரிக்குகள் என்று இழிவுபடுத்த வில்லையா? நபியை சாதாரண மனித ரென்று சொல்பவர்கள் யாரென்று இப்போது புரிகிறதா?

வசனம் மூன்று :-

كذبت ثمود بالنذر فقالوا أبشرا منا واحدا نتبعه إنا إذالفي ضلال وسعر

"ஸமூத் கூட்டத்தார் (அவர்களின் நபியான ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின்) எச்சரிக்கைகளை எல் லாம் பொய்யாக்கி நாங்கள் எங்களைப் போன்ற ஒரு வருக்கா வழிப்படுவது! அவ்வாறு வழிப்பட்டால் திட னாக நாங்கள் வழிகேட்டிலும் நரகிலும் இருப்போ மென்று கூறினர்." *(சூரா அல் கமர், வசனம்-23,24)*

ஓ! வஹ்ஹாபிகளே!

ஸமூத் கூட்டத்தார் ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாமவர் களை ஒரு சாதாரண மனிதரைப்போன்று பார்த்ததால் தான் அவர்களைப் பொய்யாக்கினர். அவர்களைப் போலவே நீங்களும் உங்களின் நபியை ஏற்றுக்கொண்ட பின்பும் கூட ஒரு சாதாரண மனிதரென்று சொல்கிறீர்களே. ஏனெனில் அவர்கள் காபிர்கள். நீங்கள் முனாபிக்குகள். அதனால் தானோ.

வசனம் நான்கு :-

وماانت. إلابشر مثلنا وإن نظنك لمن الكاذبين

"(ஷுஐப் அலைஹிஸ்ஸலாமவர்களின் கூட்டத்தார்) நீர் எங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரேயன்றி வேறில்லை. இன்னும் திடனாக உம்மைப் பொய்யர்களில் ஒருவராகவே நாங்கள் எண்ணுகிறோம் என்றனர்." *(சூரா அஷ்ஷுஃரா, வசனம்-186)*

ஓ! வஹ்ஹாபிகளே!

ஷுஐப் அலைஹிஸ்ஸலாமவர்களை அவர்களது சமூகத்தார் ஒரு சாதாரண மனிதராகக் கண்டதால் தான் அவர்கள் தமது நபியைப் பொய்யாக்கி காபிர்களாகவும் ஆகிப்போயினர். ஆனால் நீங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை உண்மையாளரென்று சொல்லிக்கொண்டே உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதரென்று சொல்கிறீர்களே. அப்படியானால் நீங்கள் முனாபிக்கீன்கள் இல்லையா?

வசனம் ஐந்து :-

ثم ارسلنا موسى وأخاه هارون بآياتنا وسلطان مبين الى فرعون وملإه فاستكبروا وكانوا قوما عالين فقالوا أنؤمن لبشرين مثلنا وقومهما لنا عابدون

"பின்னர் மூஸாவை (அலைஹிஸ்ஸலாமவர்களை)யும் அவருடைய தோழர் ஹாரூனை (அலைஹிஸ்ஸலாமவர்களை)யும் நம்முடைய அத்தாட்சிகளுடனும் தெளிவான சான்றுகளுடனும் ஃபிர்அவ்னிடத்திலும் அவனது பிரமுகர்களிடத்திலும் அனுப்பினோம். அவர்கள் ஆணவங்கொண்டு பெருமையடிக்கும் சமூகத்தாராக இருந்தனர். இன்னும் அவர்கள் நாங்கள் எங்களைப் போன்ற இருவரையா ஈமான் கொள்வது? இவ்விருவரின் சமூகத்தாரும் நமக்கல்லவா அடிபணிந்து பணிவிடை செய்கிறார்களென்று கூறினர்."
(சூரா முஃமினூன், வசனம்-45,46,47.)

ஹழ்ரத் ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின் சமூகத்தார் தங்களின் நபியை ஒரு சாதாரண மனிதரென்று பொய்யாக்கியதால் அவர்கள் அழிக்கப்பட்டனர். இவ்வாறே ஹழ்ரத் ஷுஐப், ஹழ்ரத் மூஸா அலைஹிமஸ்ஸலாமவர்களின் சமூகத்தாரும் இதே காரணத்திற்காக அழிக்கப்பட்டனர். ஆனால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒரு சாதாரண மனிதரென்று சொன்னாலும் அவ்வுத்தமரை தமது நபியாக ஏற்று கலிமா சொல்லி இஸ்லாத்தைத் தழுவியிருப்பதால் இம்முனாபிக்கீன்கள் இதுவரை அழிக்கப்படாமல் விட்டு வைக்கப்பட்டுள்ளனர் எனில் இது எங்களின் ஏந்தலாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பேரருளைக் கொண்டுதான் என்பதை எவராலும் மறுக்க முடியாது. எனவே யார் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒரு சாதாரண மனிதரென்று சொல்லி அவர்களின் மகத்துவத்தை எதார்த்தமான நிலைகளைப் பொய்யாக்குகிறார்களோ அவர்கள் இப்லீஸின் வழித்தோன்றல்களாகும். அத்துடன் வஹ்ஹாபிஸம் என்னும் கொடிய இயக்கத்தின் படைப்பிரிவைச் சார்ந்தவர்களுமாகும்.

மேலும் நபிமார்கள் மனிதர்களென்பதில் என்ன சந்தேகம்? மனிதர்கள் தானென்றாலும் அவர்களின் அந்தரங்கங்கள் வேறானதாகும். தன்னைப் போன்றே அவர்களின் சமூகத்தார் எண்ணிக்கொண்டதுடன் அவர்களுக்குள் அந்தரங்கங்கள் என்பது எதுவுமில்லை என்றும் கருதியதால் தான் அவர்களைப் பொய்யாக்கினர். இதன் விளைவு! அவர்கள் அல்லாஹ்வின் விரோதிகளாகி அடியோடு அழிக்கப்பட்டும் போயினர். ஆனால் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஈமான் கொண்டு அந்தரங்கத்தில் அவர்களின் எதார்த்தங்களை மறுக்கலாயினர். ஏன் இன்றும்கூட மறுத்து வருகின்றனர். இவர்கள் முனாபிக்கீன்களாகும். இதனால் இவர்களுக்கு அழிவுமில்லை. சோதனையுமில்லை. அதேநேரம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கைருல் பஷராகவும் அவர்களின் எதார்த்தங்களை ஈமான் கொண்டுள்ள முஃமின்களுக்குத் தான் இவர்களால் சோதனையும் வேதனையும் நிகழ்ந்து கொண்டுள்ளன.

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மறைவான எல்லா விஷயங்களும் தெரியுமென்று காலங்காலமாக சுன்னத் வல் ஜமாஅத்தினர் விளக்கிக் கொண்டிருக்க இடையே ஊடுருவிய வஹ்ஹாபியக் கொள்கைவாதிகள் பல்வேறு பெயர்களில் புதுப்புது அணுகுமுறைகளைக் கொண்ட கூட்டங்களாகத் தோற்றமெடுத்து நபியவர்களுக்கு மறைவானவைகளெல்லாம் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால் அவர்கள் பல யுத்தங்களில் ஏன் தோல்வியடைந்தார்கள் என்றெல்லாம் மக்களை இன்று குழப்பிக் கொண்டுள்ளனர்.

ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு எல்லா மறைவான விஷயங்களும் தெரியும் என்பதுதான் உண்மையான சத்தியமான இஸ்லாமியக் கொள்கையாகும். இருப்பினும் அவையனைத்தும் நபியவர்களுக்கு அவர்களது ரட்சகனால் கற்றுக் கொடுக்கப்பட்டவைகளே அன்றி அல்லாஹ்வுக்கு இருப்பதைப் போல அவர்களுக்கு சுயமாக இருக்கின்றவைகளல்ல. இந்நிலையில் எல்லாவற்றையும் சுயமாக தனக்குள் கொண்டுள்ள சர்வ சக்தனாகிய அந்த அல்லாஹ் தானே தனது நபியையும் அவரது கூட்டத்தாரையும் யுத்தம் செய்யுமாறு கட்டளையிட்டான். அப்படியிருந்தும் தோல்வி ஏன் ஏற்பட்டது?

பின்னும் எல்லா மறைவான விஷயங்களும் நபியவர்களுக்கு அறிவித்துக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவைகளில் பெரும்பாலானவைகளை மறைத்து வைக்குமாறே நபியவர்கள் உத்திரவிடப்பட்டிருந்தார்கள் என்று கூறுகிறார் வேத விரிவுரையாளரான அல்லாமா இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். மேலும் அந்த மறைவான விஷயங்களில் எவை எவையெல்லாம் நிகழுமோ அவைகளில் இன்று ஒன்று வெளியாகுமானால் நிலநடுக்கம், மழையின்மை, பஞ்சம் போன்றவைகளை எதிர்பாருங்களென்று சொன்னார்கள். அது என்ன தெரியுமா?

“பிற்காலத்தில் வருவோர் தங்களுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த நல்லடியார்களான முன்னோர்களை தரக் குறைவாக இழிவுபடுத்திப் பேசுவர் என்னும் தகவலாகும்.” இது திர்மிதியில் இடம் பெற்றுள்ள ஹதீதின் ஒரு பகுதியாகும்.

இதில் சுன்னத் வல் ஜமாஅத் எனப் பெயரிடப்படாத எல்லா இயக்கங்களும் அமைப்புக்களும் ஜமாஅத்துக்களும் தமது முன்னோர்களான நபித்தோழர்களையும், இமாம்களையும், மஷாயிகீன்களையும் தரக்குறைவாக இழிவுபடுத்திப் பேசுவதை பெருமையாக எண்ணிக் கொண்டுள்ளன. அத்துடன் இமாம்களும் மஷாயிகீன்களும் குர்ஆன் ஹதீதுக்கு தவறான விளக்கங்களைத் தருவதாகவும் அவர்கள் மீது இட்டுக்கட்டியும் பேசுகின்றன.

ஆம். நல்லோர்கள் இழிவுபடுத்தப்படுவார்களாயின் பூகம்பம் நிகழும் என்பதை மறைவின் மாணிக்கமாகிய மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் எச்சரிக்கை செய்யப்பட்ட வாக்கு உண்மையாகி விட்டதை அண்மைக்கால நிகழ்வுகளைக் கொண்டு தெரிந்துகொள்ள முடிகிறது. இன்னும் மூதாதையர் எப்போது இழிவுபடுத்தப்படுவார்களோ அப்போதே மழையில்லாப் பஞ்சத்தை எதிர்பாருங்களென்ற ஏந்தல் நபியவர்களின் எச்சரிக்கையும் பலித்து விட்டதை இன்று நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இன்னும் நமது நாட்டில் வரலாறு காணாத பசியும் பட்டினியும் பஞ்சமும் இன்று தலைவிரித்து ஆடுகிறதென்றால் அதற்கிந்த வஹ்ஹாபிச ஊடுருவலே முக்கியக் காரணம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த நாசகார சக்திகளால் இன்று நல்லடியார்களும் அப்பாவிகளும் மிருக வர்க்கங்களும் இதன் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னும் இன்று இமாம்களையும், மஷாயிகீன்களையும் மரியாதைக் குறைவாக பேசுவதற்குரிய காரணமென்ன என்று கேட்கப்பட்டால் முன்னோர்களென்று சொல்லப்படும் அப்பெரியார்கள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மாற்றமான புதுப்புது கொள்கைகளை கொண்டு வந்ததாகவும் குர்ஆன் ஹதீதுக்குரிய வெளிப்படையான கருத்தை அவர்கள் சொல்லவில்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எந்தவொரு சமூகமானாலும் அது தமது முன்னோர்களைப் பின்தொடர்வதுடன் அவர்களது கருத்துக்களுக்கு முன்னுரிமையும் அளிக்க வேண்டும். அப்போது தான் அச்சமூகம் சீர்பெற முடியும். அவ்வாறில்லையேல் சீரழிவு தான் என்பதை உங்களால் மறுக்கவோ தடுக்கவோ முடியாது.

அத்துடன் அனைத்து சமூக மக்களுக்கும் வழிகாட்டிகளாக அவர்களது முன்னோர்கள் இருப்பது மிகவும் அவசியமாகும். அந்த மக்களும் அவர்களைப் பின்தொடர வேண்டும். ஆனால் அதற்கு மாறாக குர்ஆனும் ஹதீதும் தான் எங்களுக்கு வழிகாட்டிகள், முன்னோடிகள். அவ்விரண்டும் எதைச் சொல்கிறதோ அதைத்தான் நாங்கள் செய்கிறோம். ஆகையால் எங்களுக்கு முன்னோர்களின் கருத்து முக்கியமல்ல என்பதாகச் சிலர் கூறுகின்றனர்.

சரி. அப்படியே வைத்துக் கொள்வோம். நமது முன்னோர்கள் குர்ஆன் ஹதீதில் இல்லாத கருத்துக்களைச் சொல்வதாகக் கூறுகிறார்களே, இவர்களுக்கு அந்த குர்ஆனையும் ஹதீதையும் தொகுத்துத் தந்தது யார்? அந்த முன்னோர்க்ள் தான் அதைச் செய்தார்களெனில் அந்த குர்ஆனிலும் ஹதீதிலும் தமக்கு விருப்பமான கருத்துக்களை எல்லாம் அப்போதே அவைகளில் சேர்த்திருக்கலாமே. அவர்கள் அதை ஏன் செய்யவில்லை?

இன்னும் எனக்குப்பின் எனது தோழர்கள் தான் உங்களின் வழிகாட்டிகள். அவர்கள் இச்சமுதாயத்தில் நட்சத்திரங்களைப் போன்றவர்கள் என்பதாக பெருமையோடு பெரிதுபடுத்தி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் பேசப்பட்ட அந்த நபிமணித் தோழர்கள் தான் இச்சமுதாயத்தை நரகத்திற்கு இட்டுச் செல்லும் பித்அத்துக்களுக்கு அடித்தளமிட்டதாக அசைபோடும் இச்சமுதாயத்திலுள்ள கொடியதோர் கூட்டமாகிய தௌஹீத் ஜமாஅத்தினரே! உங்களது பிரச்சாரத்தின் படி குர்ஆன் நபியவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டதல்ல. மாறாக அதை ஒன்று திரட்டியவர்கள் அவர்களின் தோழர் பெருமக்களே. அப்படியானால் அத்தோழர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட அந்த குர்ஆனில் குளறுபடிகள் இல்லை என்பதற்கு நீங்கள் என்ன உத்திரவாதம் வைத்திருக்கிறீர்கள்? இந்நிலையில் நரகத்திற்கு இட்டுச் செல்லும் பித்அத்தைத் தோற்றுவித்த அத்தோழர்களால் ஒன்று திரட்டப்பட்ட குர்ஆனை நாங்கள் ஆதாரமாகக் காட்டலாமே அன்றி நீங்கள் அதை ஆதாரமாகக் காட்டக்கூடாது. உங்களுக்கு அந்த யோக்கியதையும் அறவே கிடையாது.

இவர்கள் எங்களின் பெரியார்களால் தரப்பட்ட

பிளேட்டை கையில் வைத்துக்கொண்டு அவர்கள் போட்ட பிச்சையில் தின்று கொழுத்து இன்று அப்பெரியார்களே பரிதவிக்கும் வண்ணம் அவர்களை எள்ளி நகையாடுகிறார்களே இவர்கள்தான் நன்றியுள்ளவர்கள்? இவர்களால் இந்தச் சமுதாயத்திற்கு என்ன லாபம்? நாமும் நமது முன்னோர்களும் செய்தும் சொல்லியும் வந்தவைகளெல்லாம் வழிகேடானவை என்றும் குர்ஆன் ஹதீதிலில்லாத புதுப்புது வியாக்யானங்களை எல்லாம் இவர்களது வாயால் சொல்லக் கேட்கும் போது முஸ்லிம் ஷரீப் என்னும் நூலில் விபரிக்கப்படும் ஒரு நபிமொழி தான் நம் கண்முன்னே நிழலாடுகிறது.

وحدثني محمد بن عبدالله بن نميروزهير بن حرب قـــالا:
حدثنا عبدالله بن يزيد قال: حدثني ســـعيد بـــن ابى ايوب
قال: حدثني ابو هانئ عن ابى عثمان مسلم بن يسار عن ابى
هريرة رضى الله عنه عن رســـــول الله صلى الله عليه وآله
وسلم أنه قال: سيكون في آخر أمتي أناس يحدثونكم ما لم
تسمعوا أنتم ولا آبائكم فإياكم وإياهم

“பிற்காலத்தில் எனது உம்மத்தினர் (என்று சொல்லிக் கொள்ளும்) சிலர் உங்களிடம் வருவார்கள். அவர்கள் நீங்களோ உங்களது மூதாதையரோ (தந்தையும் தந்தையின் தந்தையும்) கேட்டிராத (புதுப்புது) ஹதீதுகளை (விளக்கங்களைச்) சொல்வார்கள். அவர்களின் வலையிலோ குழப்பத்திலோ நீங்கள் சிக்கிக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கிறேன் என்றார்கள் மறையின் மணிமகுடம் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.” *(அ-ர் ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம் ஷரீப், பாகம்-1, பக்கம்-117, முகத்தமா முஸ்லிம்)*

وحدثني حرملة بن يحى بن عبدالله بن حرملة بن عمران
التجيى قال حدثنا ابن وهب قال: حدثني ابو شريح أنه سمع

شراحيل بن يزيد يقول: أخبرني مسلم بن يسار أنه سمع أبا هريرة رضى الله عنه يقول: قال رسول الله صلى الله عليه وآله وسلم: يكون في آخرالزمان دجالون كذابون يأتونكم من الأحاديث بما لم تسمعوا أنتم ولاآبائكم فإياكم وإياهم لايظلونكم ولايفتنونكم

"இறுதிக் காலத்தில் பல பொய் தஜ்ஜால்கள் வருவார்கள். அவர்கள் நீங்களும் உங்களின் மூதாதையரும் கேட்டிராத ஹதீதுகளை (பேச்சுக்களை) பேசுவார்கள். உங்களை நான் அவர்களது குழப்பத்தின் வழிகேட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள எச்சரிக்கிறேன் என்று சொல்கிறார்கள் சத்திய வேந்தர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்." *(அ-ர் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : முகத்தமா முஸ்லிம்.)*

எனவே யார் சுன்னத் வல் ஜமாஅத்தினர் செய்வதற்கும் சொல்வதற்கும் ஆதாரமில்லை அவையனைத்தும் வழிகேடானவை எனக்கூறி அதை நிரூபிக்க குர்ஆன் ஹதீதைக் காட்டுகிறார்களோ அவர்களை நம்பாதீர்கள். ஆம் சுன்னத் வல் ஜமாஅத்தினர் பேசும் செய்யும் அனைத்தையும் பொய்யாக்க ஹதீதுகளைக் கொண்டு வருவார்களென்றால் அவர்கள் புதிதாக எதையும் கொண்டுவரப் போவதில்லை. மாறாக அவர்கள் கொண்டு வரும் ஆதாரங்களனைத்தும் நமது முன்னோர்களால் சொல்லப்படாத புதுப்புது விஷயங்களாகத்தான் இருக்கும். அதைச் சொல்லித்தான் இவர்கள் பாமர மக்களை திசைதிருப்புகிறார்கள்.

இனி குர்ஆன் ஹதீத் தான் வழிகாட்டி என்பதில் யாருக்கும் எவ்வித ஐயமுமில்லை என்ற போதிலும் அந்த குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் நாமாக எந்தவொரு விளக்கமும் சொல்லக்கூடாது. நமது முன்னோர்கள் தந்த விளக்கங்களின் படிதான் நாம் செயல்பட வேண்டும். இதைத்தான் மேற்கண்ட அவ்விரு ஹதீதுகளும் நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

அதற்கு மாறாக முன்னோர்களான இமாம்கள், மஷாயிகீன்கள், வலிமார்கள் போன்றோர் தந்த விளக்கங்களை எல்லாம் தமது முதுகுக்குப் பின்னால் தூக்கியெறிந்து விட்டு குர்ஆன் ஹதீதை மட்டுமே நாம் பின்பற்ற வேண்டுமென்று தான் கட்டளையிடப்பட்டுள்ளோமென்று சொல்லும் இந்தத் தௌஹீத்வாதிகள் தஜ்ஜால்களாகும். நாமும் நமது முன்னோர்களும் கேட்டிராத விஷயங்களை எல்லாம் சொல்பவர்கள் இவர்கள்தான். ஆதலால் குர்ஆன் ஹதீதை மட்டும் ஆதாரமாகக் காட்டுவோரை நம்பாதீர்கள். அவர்கள் காட்டும் குர்ஆனையும் ஹதீதையும் நமது முன்னோர்கள் எதற்கு ஆதாரமாக்கினார்கள் என்பதைக் கவனியுங்கள். அன்றி குர்ஆன் ஹதீதிலிருந்து தானே ஆதாரம் காட்டுகிறார்களென்று உங்களுக்குள் சந்தேகத்திற்குரிய ஒருசிறு பொறி தட்டுமானாலும் விரைவில் நீங்களும் அவர்களோடு கைகோர்க்கப் போகிறீர்கள் என்பதுதான் அதற்கு அர்த்தமாகும். ஆகையால் விழிப்போடு ஜாக்கிரதையாக இருந்து உங்களின் ஈமானைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

அன்பானவர்களே! சுன்னத் வல் ஜமாஅத்தினர், அல்லாஹ்வால் முதன் முதல் படைக்கப்பட்ட சிருஷ்டி நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஜோதி தானென்பதைப் பொய்யாக்க குர்ஆனும் ஹதீதும் உங்களிடம் எடுத்துக் காட்டப்படுமானால் தலையாட்டி பொம்மையைப் போல இது தவறு அவர்கள் சொல்வதுதான் சரியென்று நீங்களும் அந்தச் சாக்கடையில் விழுந்துவிடாது அவர்களால் எடுத்துக் காட்டப்படும் குர்ஆன் ஹதீதுக்குரிய அவ்வாதாரத்திற்கு நமது முன்னோர்கள் என்ன விளக்கம் தந்துள்ளார்கள் என்பதை எடுத்து அதனோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அல்லாஹ்வால் படைக்கப்பட்ட அந்த ஜோதிதான் நபியாக, ரஸூலாக, மனிதத் தோற்றமெடுத்து காட்சியளித்தது என்னும் கொள்கையைப் பொய்யாக்க குர்ஆன் ஹதீதை காட்டப்படுமானால் அவைகளைக் கண்மூடித்தனமாக நம்பாது முன்னோர்களது விளக்கங்களைக் கவனிக்கத் தவறாதீர்கள்.

இன்னும் ரஸூல்மார்கள், நபிமார்கள், வலிமார்கள் போன்றோரிடம் நேரடியாக நமது நாட்ட தேட்டங்களை நிறைவேற்றித் தருமாறு பிரார்த்திக்கலாம் என்னும் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைக்கு மாறான கருத்து குர்ஆன்

ஹதீதைக்கொண்டு முன்னிருத்தப்பட்டால் அவற்றுக்கு முன்னோர்கள் தந்துள்ள விளக்கங்களை எடுத்துப் பார்க்கத் தவறாதீர்கள்.

நபிமார்களும் வலிமார்களும் தமது மண்ணறைகளில் உயிரோடு இருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் நமது அழைப்பையும் பிரார்த்தனையையும் செவிமடுக்கிறார்கள் என்னும் நம்பிக்கைக்கு எதிரிகளால் காட்டப்படும் குர்ஆன் ஹதீதைக் கண்டு சட்டெனச் சறுகிவிடாமல் அதற்கான விளக்கங்களைப் பாருங்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு ரௌழா ஷரீபை தரிசிப்பதற்காக பயணம் செய்யலாம். அவர்கள் மீது சொல்லப்படுகின்ற ஸலவாத்துக்களை அவர்கள் செவியேற்கின்றனர் என்னும் நம்பிக்கைக்கு மாற்றுக் கருத்து குர்ஆன் ஹதீதிலிருந்து காட்டப்படுமானால் அவைகளுக்கான விளக்கங்களைப் பார்வையிடாது அதைச் சொல்பவர் மீது நல்லெண்ணம் கொள்ளாதீர்கள்.

இதுபோன்றே தொப்பி அணிவதை சுன்னத்தென்று தான் நாம் தெரிந்திருக்கிறோம். மௌலிது ஓதலாம் என்பதால் ஓதி வருகிறோம். பாங்குக்கு முன் ஸலவாத்துச் சொல்லலாமென்பதால் சொல்லி வருகிறோம். வலிமார்களின் தர்காக்களுக்கு ஆண் பெண் ஆகிய இரு சாராரும் செல்லலாமென்று இருப்பதால் சென்று வருகிறோம். இவ்வாறே தல்கீன் ஓதுதல், கூட்டாக துஆ செய்தல், பாங்கில் நபியவர்களின் பெயரைக் கேட்டு பெருவிரலை முத்தமிடல், சப்தமாக திக்ரு செய்தல், ஆடி அசைந்து திக்ரு செய்தல் போன்ற இன்னோரன்ன காரியங்களையும் ஆகுமானவை என்பதால் செய்து வருகிறோம். அதற்கு மாறாக இவைகளெல்லாம் பித்அத்தென்று எவரேனும் சொல்வாராயின் அவர் பொய்யரும் குழப்பவாதியுமாகும்.

மேலும் சுன்னத் வல் ஜமாஅத்தினரது கொள்கைகளுக்கும் நடைமுறைகளுக்கும் ஆதாரமில்லையென்று சொல்பவர்களும் குர்ஆன் ஹதீதைத்தானே ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர்! இந்நிலையில் பாமரர்களாகிய

நாங்கள் யாருடைய கருத்தை ஏற்றுக் கொள்வது என்னும் கேள்வி நாலா திசைகளிலிருந்தும் தொடுக்கப்படுவதை நாம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம்.

அவர்களுக்கு ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். அதாவது, குர்ஆன் ஹதீதை முன் வைத்து இவர்களால் எடுத்துக் காட்டப்படும் ஆதாரங்கள் அனைத்தும் நமது முன்னோர்களால் சொல்லப்படாத புதியதோர் விளக்கங்களாகும். அத்துடன் குர்ஆன் ஹதீதுக்கு விரிவுரைகளைத் தந்த நமது முன்னோர்களின் விளக்கங்களுக்கு இவை முற்றிலும் மாற்றமானவைகளாக இருக்கின்றன. அதனால்தான் நமது முன்னோர்கள் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் மாற்றமான விளக்கங்களைத் தந்துள்ளதாக இவர்கள் பொது மேடைகளிலும் பேசி வருகின்றனர். அப்படியானால் இவர்கள் இந்த குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் சுயமாகக் கருத்துக் கூறுகின்றனர் என்பதுதானே இதற்குப் பொருள்! இல்லையென்றால் இவர்கள் இப்னு தைமிய்யாவையும், அப்துல் வஹ்ஹாப் நஜ்தியையும், இல்யாஸையும் மௌதூதியையும் பின்பற்றுகிறார்கள் என்று சொல்லலாமா?

நாமும் நமது நாட்டு மக்களும் இவர்களும் இவர்களது கொள்கையைக் கொண்டவர்களும் நமது நாட்டுக்குள் ஊடுருவுவதற்கு முன்னாலிருந்தே மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தையும் செய்து வருகிறோம். இவர்களது கருத்துக்கள் நம்மை வந்து சேர்ந்த பின்புதான் இவர்களிடமிருந்து நாம் இஸ்லாத்தைக் கற்றுக் கொண்டவர்களோ புரிந்து கொண்டவர்களோ அல்ல. இஸ்லாமிய விளக்கம் இவர்கள் நமக்குச் சொல்லித் தந்ததுமல்ல. மாறாக இவர்களது ஊடுருவலுக்குப் பின்புதான் இந்த நாட்டில் இஸ்லாமிய சமுதாயம் பிளவுபட்டுப் போனது. அத்துடன் நாடே குட்டிச்சுவராகிப் போயிற்று.

எனவே இவர்களில் யார் எதைச் சொன்னாலும் அதற்கு குர்ஆன் ஹதீதை மட்டுமல்ல. அதற்கும் மேலாக இன்னொரு ஆதாரத்தைக் காட்டினாலும் அவற்றை நமது முன்னோர்களது கருத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அத்துடன் அது முன்னோர்களின் ஏகோபித்த முடிவா என்பதையும் பாருங்கள்.

இன்னும் குர்ஆன் ஹதீதுக்குரிய பொருள் இதுதான். இந்த அரபிச் சொல்லுக்கு இதுதான் அர்த்தமென்று மடக்கி மடக்கி பாமரர்களிடம் சொல்லும்போது, பாமரர்கள் மட்டுமல்ல. உலமாக்களும் மிக மிக உன்னிப்பாக இருந்து உண்மை என்னவென்பதைக் காட்டித் தாருங்கள். அத்துடன் நமது முன்னோர்களால் சொல்லப்படாத விளக்கங்களையும் வியாக்யானங்களையும் சொல்லும் இவர்கள் பேச்சாற்றலில் மிகுந்த திறமையுள்ளவர்களாக இருப்பதையும் மறந்து விடாதீர்கள்.

இன்னும் இவர்கள் குர்ஆனையும் ஹதீதையும் தானே ஆதாரமாகக் காட்டுகிறார்களென ஆச்சரியப்பட வேண்டாம். இவர்கள் காட்டுகின்ற குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் தமிழில் இதுதானே அர்த்தமென்றும் குழப்பமடைய வேண்டாம். ஏனெனில் குர்ஆனும் ஹதீதும் பாலர் பள்ளியில் கற்பிக்கப்படுகின்ற புத்தகங்களோ நாவல்களோ அல்ல. பாலர் பள்ளியில் பயிலும் ஒரு மாணவனிடம் சிங்கம் என்றால் என்ன? என்று கேட்டால் அதற்கவன்; அது ஒரு மிருகத்தின் பெயரென்று தான் சொல்லுவான். இல்லை அதற்கு வேறொரு பொருளும் உண்டென்று சொல்வோமாயின் அவர்களிடம் நாம் பொய்யர்களாக நேரிடும். இதேபோல குர்ஆன் ஹதீதிலுள்ள ஒரு வசனத்திற்கு இதுதான் பொருளென்று சொல்லப்பட்டால் அதற்கு வேறு பொருளுண்டா என்பதை ஆராயுங்கள். இன்னும் அவ்வசனத்திற்கு முன்னும் பின்னும் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதையும் கவனியுங்கள். தொலைநோக்கு சிந்தனையை இழந்த நம்மால் இப்படியெல்லாம் சிந்திக்க முடியாதென்பதற்காகத் தான் நமது முன்னோர்கள் அதற்கு என்ன விளக்கம் தந்துள்ளார்கள் என்பதைப் பாருங்களென்று திரும்பத் திரும்ப குரல் கொடுக்கிறோம்.

மேலும் நமது முன்னோர்களான முபஸ்ஸிரீன்களும், முஹத்திஸீன்களும், முஃபக்கிஹீன்களும், ஸூஃபிய்யாக்களும் தந்த விளக்கங்களெல்லாம் பொய்யானவை, குர்ஆன் ஹதீதுக்கு மாற்றமானவை என இவ்வுலகில் தோன்றிய இப்னு தைமிய்யா என்பவருக்கு முன்னால் யாருமே சொன்னதில்லை. இன்னும் இவரது விளக்கங்கள் நவீனமானதாக இருந்ததால் அதற்காக இவர் பலமுறை சிறையில் அடைக்

கப்பட்டார். வழிகேடர், வழிகெடுப்பவர் என்றும் பட்டம் சூட்டப்பட்டார். இவரோடு அஸ்த்தமித்துப் போன இவருடைய கருத்துக்கள் இவருக்குப் பின்வந்த 300 ஆண்டுகாலம் வாழ்ந்தவர்களில் எவராலும் சொல்லப்படவுமில்லை. இவர் ஹிஜ்ரி 661ல் பிறந்து 728ல் இறந்து போனார்.

இவருக்குப் பின் இவருடைய கருத்துக்களை ஆதரித்ததோடு முஸ்லிம் என்றால் இவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் அவர் முஷ்ரிக்காகும் என இவருக்குப்பின் பிரகடனப்படுத்திய முதல் ஆசாமி முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப் என்பவராகும். இவர் ஹிஜ்ரி 1111ல் பிறந்து 1206ல் மடிந்து போனார். இதில் சுன்னத் வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள ஏனைய எல்லாக் கூட்டங்களுமே கொள்கை அடிப்படையில் இவரைச் சார்ந்தோர் என்பதால் இவர்கள் வஹ்ஹாபிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

அரபு நாட்டில் தலைதூக்கிய இப்பிரச்னை இந்திய நாட்டில் தோன்றிய தேவ்பந்திகள், கைரெ முகல்லிதுகள் என்னும் இரு கூட்டத்தாருக்கு முன் இந்திய நாட்டில் இக்கொள்கை பேசப்படவேயில்லை. அல்லது இஸ்லாமியக் கொள்கைக்குரிய விளக்கமாகவும் இது இருக்கவில்லை. அதன்பின் தப்லீக் ஜமாஅத், தௌஹீத் ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, இக்வானுல் முஸ்லிமீன், அன்ஸாருல் முஸ்லிமீன், எஸ். ஐ. ஓ. அய்.எஸ்எம். போன்ற பல்வேறு பெயர்களில் பிறப்பெடுத்த இக்கூட்டங்கள் அனைத்தும் மேற்கண்ட இரு கூட்டத்தின் மறு பெயர்களாகும். இக்கூட்டங்களைச் சார்ந்தோர் நேரத்திற்குத் தக்கவாறு ஏதாவதொன்றைச் சொல்லி பாமரர்களை ஏமாற்றினாலும் இவர்கள் தமது சொந்த ஆதாயத்திற்காக மார்க்கத்தை விலை பேசும் வியாபாரிகள் என்பது இவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

அதேநேரம் நம்மால் எடுத்துக் காட்டப்படும் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளும் அதன் கோட்பாடுகளும் நமது சொந்த விளக்கங்களோ கருத்துக்களோ அல்ல. மாறாக இவையனைத்தும் இப்னு தைமிய்யா மற்றும் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி போன்றோருக்கு முந்தியவர்களின் கருத்துக்களாகும். வரலாற்றின் ஒரு பகுதியை எடுத்துக் காட்ட வேண்டுமென்பதற்காக அதனை சுருக்கமாக உங்க

ளின் பார்வைக்கு தந்தோம். இனி நாம் எடுத்துக் கொண் டுள்ள தலைப்புக்குரிய விஷயங்களைப் பார்ப்போம்.

இறைவனால் முதன் முதல் படைக்கப்பட்ட ஜோதி யான நமது திங்களெங்கோமான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சூரிய, சந்திர வெளிச்சத்தில் நிழல் விழுந்ததில்லை. இன்னும் நபியவர்களுக்கு நிழலே இருக்கவில்லை என்பதுதான் நமது முன்னோர்களின் நம்பிக்கையாகும். நாமும் நமது பெற்றோர்களும் இதுவரை நபியவர்களுக்கு நிழலில்லை என்றுதான் சொல்லியும் வரு கிறோம். ஆனால் இன்று இரவு பகலாக தம்மை இஸ்லாமிய சேவையில் ஈடுபடுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் இயக்கங்கள் நபியவர்களுக்கு நிழல் இருந்தது என்பதற்குரிய ஸஹீஹான ஹதீதுகள் உள்ளனவென்று பிரச்சாரம் செய்து வருகின்றன. நாமும் நமது மூதாதை யரும் கேள்விப்படாத புதியதோர் விஷயம் சொல்லப்பட் டால் அதற்குரிய தீர்ப்பென்ன என்பதை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஹதீதைக் கொண்டு முன்னா லேயே நாம் பார்த்து புரிந்துகொண்ட ஒன்றென்ற போதி லும் நிழலிருப்பதாக வாதிப்போர், நிழலில்லையென வாதிப்போர் ஆகிய இருவரது கருத்துக்களையும் இங்கே உங்களின் பார்வைக்கு தருகிறோம். தெளிந்த சிந்தனை யோடு படித்துப் பார்த்து முடிவெடுங்கள்.

ழில்லும் அதன் பொருளும்

"ழில்லுன்" என்னும் அரபிப் பதத்திற்கு தமிழில் நிழல் எனப் பொதுவாக அர்த்தம் சொல்லப்பட்டாலும் மதிய நேரம் வரையுள்ள வெயிலுக்கே "ழில்லுன்" எனச் சொல் லப்படும். இனி மதிய நேரத்திலிருந்து மஃரிப்வரை காணப் படும் நிழலுக்கு "ழில்லுன்" என்று சொல்லாமல் "ஃபைவுன்" எனச் சொல்லப்படும்.

"ழில்லுன்" என்பதற்கு நிழல் என்று அர்த்தம் சொல்லப்படுவதைப் போல இப்பதத்திற்கு இன்னும் பல அர்த்தங்கள் உள்ளன. அவை, மேகம், தோப்பு, அருள், கனமான ஆடை, இரவின் ஓர்பகுதி, வாலிபப் பருவம், பாதுகாப்பு, நண்பகல், நிழல் தருதல், நிழலுடைய தாகுதல் என்பன போன்றவைகளாகும். *(நூல்: அல்கா மூஸுல் அன்வார், பக்கம்-118.)*

மேலும் "ழில்லுன்" என்பதற்கு மனிதன், உருவம் என் றும் அர்த்தமுண்டு. அதை வழக்கத்தில் கொண்டுதான் நாம் நமது பேச்சு வழக்கத்தில் நமக்கு மிகவும் நெருக்கமான ஒருவரைப் பார்த்து "என்ன உங்களுடைய நிழலைக்கூட காணோம்" எனக் கேட்கிறோம். அதாவது உங்களைப் பார்க் கவே முடியவில்லையே என்பதுதான் இதற்குரிய பொருளா கும். ஆதலால் இவற்றையெல்லாம் நீங்கள் நன்றாக மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். அல்லது எதிர் தரப்பாரின் கருத்துக்கள் உங்கள்முன் வைக்கப்படும் போது மீண்டு மொரு முறை இதைப் படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சுன்னத் வல் ஜமாஅத்தினரின் கருத்து

أخرج الحكيم الترمذى عن ذكوان أن رسول الله صلى الله عليه وآله وسلم لم يكن يرى له ظل في شمس ولا قمر

“நிச்சயமாக நூரே முஜஸ்ஸமாகிய ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சூரிய சந்திரனின் வெளிச்சத்தில் நிழல் காணப்படவில்லை.” *(நூல்: கஸாயிஸுல் குப்ரா, பாகம்-1, பக்கம்-68, இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ்)*

أنه صلى الله عليه وآله وسلم صار نورا أنه كان إذا مشى فى الشمس اوالقمر لم يظهر له ظل

“திடனாக தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜோதியானவர்களாகும். அதனாலேயே அவர்களுக்கு சூரிய சந்திரனின் வெளிச்சத்தில் நிழல் வெளியாகவில்லை.” *(நூல்: அல் மன்ஹலுல் மக்கிய்யா ஃபீ ஷரஹில் ஹம்ஸிய்யா, பாகம்-1, பக்கம்-129, இமாம் இப்னு ஹஜர் ஹைத்தமி ரஹிமஹுல்லாஹ்)*

وقال عثمان رضى الله عنه إن الله ماأوقع ظلك على الأرض

“நபியே நாயகமே! பூமியில் உங்களின் நிழலை அல்லாஹ் விழவைக்கவில்லை என்கிறார்கள் ஹழ்ரத் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்” *(நூல் : தப்ஸீர் நஸஃபி, ஸூரத்துன் நூர், பாகம்-2, பக்கம்-1123, இமாம் நஸஃபி ரஹிமஹுல்லாஹ்)*

أن النبي صلى الله عليه وآله وسلم كان إذا مشى لم يكن له ظل

“நிச்சயமாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நடந்து செல்வார்களாயின் அவர்களுக்கு நிழல் விழாது.” *(நூல்: முஃப்ரதாத்துல் குர்ஆன், பக்கம்-653, இமாம் ராகிப் இஸ்பஹானி ரஹிமஹுல்லாஹ்)*

عن ابن عباس رضى الله عنهما قال لم يقع لرسـول الله صلى الله عليه وآله وسلم ظل و لم يقع مع شمس قـط إلا غلب ضوئه ضوء الشمس و لم يقع مع سراج قط إلاغلب ضوئه على ضوء السراج

“ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழல் விழவில்லை. நபியவர்கள் சூரிய சந்திர வெளிச்சத்தில் காணப்படுவார்களாயின் அவைகளின் வெளிச்சத்தை விட அவர்களின் ஒளியே மிகைத்திருக்கும் எனக் கூறுகின்றனர் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.” *(நூல்: அல்வபா பி அஹ்வாலில் முஸ்தபா, பக்கம்-412, அல்லாமா அப்துர் ரஹ்மான் பின் ஜௌஸி)*

وماذكر من أنه كان لاظل لشخصه في شمس ولاقمر لأنه كان نورا

“நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சூரிய சந்திரனின் வெளிச்சத்தில் நிழலிருக்கவில்லை. திடனாக நபியவர்கள் ஜோதியானவர்கள்.” *(நூல்: அஷ்ஷிபா, பாகம்-1, பக்கம்-242, அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ்)*

ومن أسمائه صلى الله عليه وآله وسلم النور وليس للنور ظل

“நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குரிய திருநாமங்களில் (நூர்) என்பதும் ஒன்றாகும். ஆதலால் நூருக்கு நிழலில்லை.” *(நூல்: மதாரிஜுன் நுபுவ்வத், அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி)*

ولم يكن يقع ظله صلى الله عليه وآله وسلم على الأرض

“ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நிழல் பூமியில் விழவில்லை.”

(நூல்: தப்ஸீர் பத்ஹுல் அஸீஸ், சிராஜுல் ஹிந்த் அல்லாமா அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி)

இதுவரை அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஜோதியானவர்கள் என்பதால் அவர்களுக்கு நிழல் இல்லை என்பதுதான் நமது முன்னோர்களின் அகீதா - நம்பிக்கை என்பதற்கு கடந்த ஹிஜ்ரி 225 முதல் 1200 வரையுள்ள ஒருசில அறிஞர் பெருமக்களின் கருத்துக்களை உங்களின் பார்வைக்கு தந்தோம்.

பின்னும் திருக்குர்ஆனின் விரிவுரையாளர்களில் ஒருவரான அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நபியவர்களுக்கு நிழலில்லை என்று கூறுகிறார்கள். இல்லையில்லை இருக்கின்றதென்று வாதிக்கிறது வஹ்ஹாபிஸம். புகாரி ஷரீபின் விரிவுரையாளர் அல்லாமா இமாம் கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நிழலில்லை என்கிறார்கள். ஆனால் நிழலுண்டு என்பதற்கு ஸஹீஹான ஹதீத் இருப்பதாக வாதிக்கிறது வஹ்ஹாபிஸம். முஸ்லிம் ஷரீபின் விரிவுரையாளர் அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நிழலில்லை என்று அடித்துச் சொல்கிறார். இருப்பதாகச் சொல்லுகிறது வஹ்ஹாபிஸம். உர்து மொழியில் புகாரி ஷரீபுக்கு விரிவிரை தந்த மௌலானா ஷரீபுல் ஹக் என்பார் நிழலில்லை என்கிறார். இருக்கிறதென்று விதண்டாவாதம் பேசுகிறது வஹ்ஹாபிஸம். உர்து மொழியில் முஸ்லிம் ஷரீபுக்கு விரிவுரை வழங்கிய மௌலானா குலாம் ரஸூல் ஸயீதி என்பவர் நிழலில்லை என்கிறார். இருந்ததாகச் சொல்கிறது வஹ்ஹாபிஸம். வரலாற்றாசிரியர் அல்லாமா புர்ஹானுத்தீன் ஹலபீ ரஹிமஹுல்லாஹ் என்பவர் நிழலில்லை என்கிறார். இருப்பதாகப் பேசுகிறது வஹ்ஹாபிஸம்.

இதன்றி இமாம் பைஹகீ, இமாம் திர்மிதி, இமாம் ஸுர்கானி, இமாம் இப்னு அஸாகிர், இமாம் குஃப்பாஜி, இமாம் நூருத்தீன் ஹைத்தமீ, இமாம் யூஸுபுன் நபஹானி ரஹிமஹுமுல்லாஹ் போன்ற பெரும் பெரும் மேதைகளெல்லாம் நபியவர்களுக்கு நிழலில்லை என்றே கூறுகின்றனர்.

ஆனால் நிழல் இருந்தது என்பதற்கு ஸஹீஹான ஹதீதுகள் இருப்பதாகக்கூறி அதை நிரூபிக்க நூலொன்றையும் தொகுத்துள்ளார் இல்யாஸின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான சர்பராஸ் என்பவர். இன்னும் இவரால் எடுத்துக் காட்டப்படும் ஹதீத் மேற்கண்ட பெரியார்களின் பார்வைக்கு வராதிருந்திருக்கலாம் என்று சொல்வதோடு, இந்த ஸஹீஹான ஹதீதுகளுக்கு முன் பத்தாயிரமல்ல. பத்து லட்சமல்ல. பத்துகோடி பெரியார்கள் ஒன்று சேர்ந்து நபியவர்களுக்கு நிழலில்லை என்று சொன்னாலும் அதை நாம் நம்ப மாட்டோமென்றும் வீர வசனம் பேசுகிறார்.

எப்போதுமே தமது கருத்துக்களை ஆதாரப்படுத்துவதற்கு அஷ்ரப் அலி தானவி, முஹத்தித் அபதுல்ஹக் தெஹ்லவி போன்றோரின் கருத்துக்களை எடுத்துக் காட்டும் இவர் இந்தப் பிரச்னையில் மட்டும் இவருக்குக் கிடைத்த அந்த ஹதீதுகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம் என்கிறார்.

ஒருவேளை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழலில்லை என்று சொல்லும் அப்பெரியார்களுக்கு நிழலுண்டு என்பதை ஆதாரப்படுத்தும் ஹதீதுகள் கிடைக்காமல் போயிருக்கலாம் என்னும் சர்பராஸ் அவர்களின் கருத்தை ஒரு வாதத்திற்காக நாம் ஏற்றுக் கொண்டாலும் அந்த ஸஹீஹான ஹதீதுகளை தமது நூல்களில் பதிவு செய்துள்ள அந்த நூலாசிரியர்களுக்குமா தெரியாமல் போயிருக்கும்? இதில் ஆச்சரியம் என்னவெனில் இந்திய நாட்டில் ஹதீதுக்கலையை பிரபல்யப்படுத்தியவர் என்பதோடு அக்கலையின் வல்லுனர் எனப் போற்றப்படும் அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி அவர்களுக்குமா தெரியாமல் போயிருக்கும்? பின் அவர் எப்படி நபியவர்களுக்கு நிழலில்லை என்று சொன்னார்?

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழலில்லை என்று சொல்வோர் பித்அத்திகள் - வழிகேடர்கள் எனக்கூறும் சர்பராஸ் நிழலிருந்தது என்பதை நிரூபிக்க ஸஹீஹான நான்கு ஹதீதுகளைக் கொண்டு வருகிறார். அதில் இரு ஹதீதுகள் ஒரே விஷயத்தின் சாரம் சத்தைக் கொண்டவைகள். மற்ற இரண்டும் வெவ்வேறு தலைப்புக்களில் உள்ளவைகளாகும். இந்நான்கு ஹதீதுகளையும் எடுத்துக்காட்டி வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் சொல்லி நிழலிருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறார். இதில் மிகப் பெரும் ஆச்சரியம் என்னவெனில் இந்த நான்கு

ஹதீதையும் தமது நூல்களில் பதிவு செய்துள்ள அல்லாமா இப்னு ஹஜர் ஹைத்தமியும், இமாம் ஹாக்கிமும் நபியவர்களுக்கு நிழலில்லை என்னும் சுன்னத் வல் ஜமா அத்தினரின் கொள்கையைக் கொண்டவர்களாகும் என்பதே.

இன்னும் நமது பெரியார்கள் தமது நூல்களில் பதிவு செய்துள்ள ஹதீதுகளை தமக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் அந்த வஹ்ஹாபிகள் அவைகளுக்கு அந்நூலாசிரியர்கள் தந்துள்ள விளக்கங்களை எல்லாம் ஒதுக்கி விட்டு தமது நோக்கத்திற்கு ஏதுவாகப் பொருள் கொடுக்கின்றனர். இவர்கள் எடுத்துக் காட்டும் விளக்கங்களெல்லாம் நமது முன்னோர்களில் எவருமே சொல்லாத புதியதோர் விளக்கமாகும். எனவே இவ்வியக்கங்களின் தூய்மையற்ற இஸ்லாமியப் பணிகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். உங்களின் மனைவி மக்களை அவர்களுக்கு பலி கொடுத்து விடாதீர்கள்.

எதிர்தரப்பார் கருத்தும் அதன் விளக்கமும்

ஆதாரம் ஒன்று :-

أخبرنا عفان بن مسلم حدثنا حماد بن سلمة حدثنا ثابت البناني عن شميسة عن عائشة رضى الله عنها أن رسول الله صلى الله عليه وآله وسلم كان في سفر فأعتل بعير لصفية وفي إبل زينب فضل فقال رسول الله صلى الله عليه وآله وسلم إن بعيرا لصفية إعتل فلو أعطيتها بعيرا من إبلك فقالت: أنا أعطي تلك اليهودية: فتركها رسول الله صلى الله عليه وآله وسلم ذا الحجة والمحرم شهرين أو ثلاثة لايأتيها: قالت: حتى يئست منه وحولت سريري قال فبينما أنا يوما منصف النهار إذا أنا بظل رسول الله صلى الله عليه وآله وسلم مقبلا

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது அருமைத் துணைவியர் சிலரோடு பயணமொன்றை மேற்கொண்டிருந்தனர். (வழியில்) ஹழ்ரத் ஸபிய்யா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் ஒட்டகம் நோய்வாய்ப்படவே, ஹழ்ரத் ஜைனப் ரலியல்லாஹு அன்ஹாவிடம் ஒன்றுக்கு மேற்பட்ட ஒட்டகங்கள் இருந்ததால் அதிலொன்றை ஹழ்ரத் ஸபிய்யா ரலியல்லாஹு அன்ஹாவுக்கு கொடுத்துதவுமாறு நபியவர்கள் உத்திரவிட, எதிர்பார்த்ததற்கு நேர்மாறான பதிலை நாயகியார் தர, இதனால் சினங்கொண்டு துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய இரண்டு அல்லது மூன்று மாதம்வரை நபியவர்கள் தொடர்பை துண்டித்திருந்தார்கள். ஹழ்ரத் ஜைனப் ரலியல்லாஹு அன்ஹா கூறுகின்றனர். நபியவர்கள் இனிமேல் என்னிடம் வருவார்கள் என்னும் எதிர்பார்ப்பை இழந்தவளாக எனது படுக்கையை தூரப்படுத்தி இருந்தேன். அப்படிப்பட்ட சமயத்தில் திடீரென ஒருநாள் மதிய வேளையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நிழலைக் கண்டேன். அது என் பக்கமாக முன்னோக்கிக் கொண்டிருந்தது எனக் கூறுகின்றனர்." *(அ-ர் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா, நூல்: தபகாத் இப்னு ஸஃத், பாகம்-8, பக்கம்-126, முஸ்னத் அஹ்மத், எண்-25516, பாகம்-8, பக்கம்-235)*

இது சர்பராஸ் அவர்கள் தமது வாதத்திற்கு ஆதாரமாகவும் நமக்குப் பாதகமாகவும் எடுத்துக் காட்டும் ஆதாரங்களில் ஒன்றாகும். இந்த ஹதீத் முஸ்னத் அஹ்மத் பாகம்-8, பக்கம்-517லும், மஜ்மவுல் பஹ்ரைன் பாகம்-4, பக்கம்-206லும் பதிவு செய்யப்பட்டிருப்பதை இவர் எடுத்துக் காட்டவில்லை. இவ்விரு நூலிலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீதுகளுக்கும் தபகாத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படும் ஹதீதுக்கும் சொல்லப்படும் வாக்கியங்களில் சிறு வித்தியாசம் தானென்ற போதிலும் பொருளில் பெரும் வித்தியாசம் இருப்பதால் அதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியது நமது கடமையாகும்.

"நிழலைக் கண்டதும் தூரப்படுத்திய கட்டில் மற்றும் பொருட்களை வாபஸ் செய்து விட்டார்கள்" என்று மஜ்மவுல் பஹ்ரைனிலும்,

"நிழலைக் கண்டதும் தூரப்படுத்திய படுக்கையை வாபஸ் செய்தார்கள்" என்று முஸ்னத் அஹ்மதிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதை நாம் சுட்டிக்காட்ட விரும்பாத வாக்கியங்களில் காணப்படும் வித்தியாசமாகும். இனி பொருளிலுள்ள வித்தியாசத்தை நமது விளக்கவுரையின் போது நாம் தருவோம். இருப்பினும் இங்கே நாம் சுட்டிக்காட்ட வேண்டிய மிக முக்கியமான ஒரு விஷயம் யாதெனில்,...

எதிர் தரப்பினர் தமது கருத்துக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டும் ஸஹீஹான அந்த ஹதீத் தபகாத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர்களும் கூறுகின்றனர். ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நூரானவர்கள் என்பதை ஆதாரப்படுத்த இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்ட பல்வேறு ஆதாரங்கள் அனைத்தும் அதே இப்னு ஸஃதிலிருந்து தான் எடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்நூலை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதேபோல நபியவர்களுக்கு நிழலில்லை என அடுத்து எடுத்துக் காட்டப்படப் போகும் ஹதீதும் அதே இப்னு ஸஃதில்தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நீங்கள் பார்க்கலாம். ஆனால் இமாம் இப்னு ஸஃத் அவர்கள் நபியவர்கள் நூரானவர்கள். அவர்களுக்கு நிழலில்லை என்னும் கொள்கையைத் தான் கொண்டிருந்தனர் என்பதையும் இந்த இடத்தில் இந்நூலை வாசிக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அத்துடன் அந்த ஹதீதுக்கு இமாம் இப்னு ஸஃத் அவர்கள் சொல்லாத புதியதொரு விளக்கதை சர்பராஸ் சொல்வதுடன் இந்த அரபிச் சொல்லுக்கு இதுதான் அர்த்தமென்றும் சொல்கிறார். இவருக்குத்தான் சரியான அர்த்தம் தெரிந்திருக்கிறது போலும். அடுத்த அந்த ஹதீதையும் பாருங்கள்.,,,

ஆதாரம் இரண்டு :-

فلما كان شـــهر ربـــيع الأول دخل عليها فرأت ظله
فقالت إن هذا لظل رجل ومايدخل عليّ النبي صلى الله عليه
وآله وسلم فمن هذا؟ فدخل النبي صلى الله عليه وآله وسلم

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்

கள் ரபீவுல் அவ்வல் மாதம் என்னிடம் வருகை தந்தார்கள். நான் நபியவர்களின் நிழலைக் கண்டபோது இந்த ஆடவருடைய நிழல் யாருடையதாக இருக்குமென்று யோசித்துக் கொண்டிருக்கும் போது உள்ளே நபியவர்கள் நுழைந்தார்கள் எனக் கூறுகின்றனர் ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்." *(நூல்: மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-4, பக்கம்-324)*

நபியவர்களுக்கு நிழலிருந்ததாக எடுத்துக் காட்டப்படும் ஹதீதுகளில் இரண்டாவது ஹதீதாகும் இது. இவ்விரு ஹதீதுகளும் ஒரே சம்பவத்தைத் தனக்குள் கொண்டுள்ள இரு ஹதீதுகளாகும். இதேபோல எதிர் தரப்பினரால் எடுத்துக் காட்டப்படும் நான்காவது ஹதீதும் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் அதே நூலிலிருந்து எடுத்துக் காட்டப்படுவதாகும்.

அல்லாமா நூருத்தீன் ஹைதமீ ரஹிமஹுல்லாஹ் என்பார் தான் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் அந்நூலுடைய ஆசிரியராகும். இவர் ஹிஜ்ரி 807ல் இவ்வுலகை விட்டு மறைந்தவர். இவரைவிட 550 ஆண்டுகளுக்கு முன் இருந்த இமாம் ஹாகிம், திர்மிதி போன்றோர் அல்லது 400 ஆண்டுகளுக்கு முன் இருந்த இமாம் ராகிப் இஸ்பஹானி போன்றோர் அல்லது 300 ஆண்டுகளுக்குமுன் இருந்த முஸ்லிம் ஷரீபின் விரிவுரையாளர் அல்லாமா காழி இயாழ் போன்றோர் அல்லது 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட குர்ஆனின் விரிவுரையாளரான இமாம் நஸஃபியைப் போன்றோர் நிழல் இல்லையெனச் சொல்லப்பட்ட எவருடைய கருத்துக்கும் ஏன் மறுப்புக் கூறாமல் விட்டு விட்டனர்? அல்லது மஜ்மவுஸ் ஸவாயிதின் நூலாசிரியராவது நபியவர்களுக்கு நிழலில்லை என்று சொன்னவர்களின் கருத்துக்கு இந்த ஹதீதை ஆதாரமாகக் காட்டி மறுத்திருக்கலாம் அல்லவா! எனவே இமாம் ஹைதமியால் சொல்லப்படாத புதியதோர் விளக்கத்தை தான் இக்காலத்தை சேர்ந்தவர்கள் கூறுகின்றனர் என்பதை புரிந்து கொள்ளுங்கள். ஆதலால் இவர்களது விளக்கம் நம்மைப் பொறுத்தவரை நமக்கு அதிசயமான ஒன்றோ அல்லது ஆச்சரியமான ஒன்றோ அல்ல.

ஆதாரம் மூன்று :-

صلى بنا رسول الله صلى الله عليه وآله وسلم ذات يوم صلوة الصبح ثم مد يده ثم أخرها فلما سلم قيل له يارسول الله صلى الله عليه وآله وسلم لقد صنعت في صلوتك شيئا لم تصنعه في غيرها قــال إني رأيت الجنة فرأيت فيها دالية قطوفها دانية حبها كالدباء فأردت أن أتناول منها فأوحى اليّ: ان إستأخري فأســتأخرت ثم رأيت النار فيما بــيني وبينكم حتى لقــد رأيت ظلي وظلكم فأومأت اليكم أن أستأخروا–الحديث

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒருநாள் ஸுப்ஹுடைய தொழுகையை நடத்திக் கொண்டிருந்த போது தொழுகைக்குரிய நிலையிலேயே தமது முபாரக்கான கரத்தை முன் பின்னாக அசைத்தனர். அதன்பின் தொழுகை முடிந்தபோது தோழர்கள் அது தொடர்பாகக் கேட்க, அதற்கு நபியவர்கள்; எனக்கு சுவர்க்கத்தைக் காட்டப்பட்டது. அப்போது அதிலிருந்து உங்களுக்காக எதையாவது எடுக்கலாமென்று கையை நீட்ட, பின்னால் செல்லும்படியாக உத்திரவிடப்பட்டேன். அதன்பின் நரகம் எனக்குக் காட்டப்பட்டது. அதில் என்னுடையவும் உங்களுடையவும் நிழலைக் கண்டேன். உடனே பின்னால் செல்லுமாறு சைக்கினை செய்தேன் என்று பதிலளித்தனர்." *(நூல் : ஹாதில் அர்வாஹ் இலா பிலாதில் அஃப்ராஹ், பக்கம்-18. முஸ்தத்ரக் பாகம்-4, பக்கம்-503)*

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழல் இருந்ததென்பதை ஆதாரப் படுத்துவதற்கு வஹ்ஹாபிய இயக்கங்களால் எடுத்துக் காட்டப்படும் ஆதாரங்களில் மூன்றாவது ஆதாரமாகும் இது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சுவர்க்க, நரகம் காட்டப்பட்டதாக புகாரி, முஸ்லிம், நஸாயி, திர்மிதி, முஸ்னத், அஹ்மத் போன்ற ஹதீதுக்குரிய

கிரந்தங்களில் ஸலாத்துல் குஸூஃப் (கிரஹணத் தொழுகை) என்னும் பிரிவில் நிறைய பார்க்கலாம். இத்தனை நூல்களில் எந்தவொரு நூலிலும் ஹாதில் அர்வாஹ், முஸ்தத்ரக் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள (என்னுடையவும் உங்களுடையவும் நிழலைக் கண்டேன்) என்னும் வாக்கியத்தைக் காண முடியவில்லை. ஆனால் இந்த ஹதீத் அஷ்ஷரீஆ என்னும் நூலின் 408ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஹதீதை அறிவிக்கும் ஸும்ஆ பின் ஸாலிஹ் என்பவர் ழயீபானவர் எனக் கூறப்பட்டுள்ளது.

இதில் ஒரு ஹதீதை அறிவிப்போரில் ஒருவர் ழயீபானவர் என்பதற்காக அந்த ஹதீதையே ழயீபென்றோ அல்லது அதை ஆதாரப்படுத்த முடியாதென்றோ சுன்னத் வல் ஜமாஅத்தினர் எப்போதுமே சொன்னதில்லை. இனி சுன்னத் வல் ஜமாஅத்தினர் ழயீபான ஒரு ஹதீதையோ அல்லது புகாரி முஸ்லிமில் இல்லாத வேறொரு நூலிலுள்ள ஹதீதையோ தங்களின் கருத்தை ஆதாரப்படுத்த எடுத்துக் காட்டினால் புகாரி முஸ்லிமிலுள்ள ஹதீதைக் காட்டுங்களென்று அங்கலாய்க்கும் இந்த வஹ்ஹாபிகள் தமது கருத்தை மட்டும் ஆதாரப்படுத்துவதற்கு ஒரு ழயீபான ஹதீதை எடுத்துக் காட்டுகிறார்களே இந்த இடத்தில் இவர்களுடைய தன்மானம் இழந்துபோய் விட்டதை மட்டும் ஏன் இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை? இன்னும் முஸ்தத்ரக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ஸஹீஹான ஹதீதைத்தான் நாங்கள் எடுத்துக் காட்டினோமென்று சொல்வார்களாயின் அந்த நூலாசிரியர் ஒரு முழுமையா(பக்காவா)ன சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையைச் சார்ந்தவரென்பது கூட இவர்களுக்குத் தெரியாமல் போய்விட்டதா? பிறகு எவ்வாறு சுன்னத் வல் ஜமாஅத் தைச் சார்ந்தவரால் பதிவு செய்யப்பட்ட ஹதீதை இவர்கள் தமது கூற்றுக்கு ஆதாரமாக எடுத்தனர்?

மேலும் ஹாக்கிம் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அதே முஸ்தத்ரக் என்னும் நூலிலிருந்து பல்வேறு ஆதாரங்களை இந்நூலின் முந்திய தலைப்புக்களில் நமது கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஆம். நமது பெரியார்கள் வேறொரு விஷயத்தை நிரூபிக்கக் கையாண்ட தகவல்களையெல்லாம் இவர்கள் தங்களுக்குச் சாதகமானவை என்று கருதிக்கொண்டு அந்த ஹதீதுகளுக்கெல்லாம் மனம்

போன போக்கில் விளக்கம் கூறி அதற்கு நம்மிடமே ஆதார மும் கேட்கின்றனர்.

இன்னும் குர்ஆன் ஹதீதைத்தான் பின்பற்ற வேண்டு மென்றும் நமது பெரியார்களது நூல்களில் நம்பத்தகாத ஹதீதுகளெல்லாம் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறும் இவர்கள், அப்பெரியார்களால் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீதுகளை எங்களுக்குப் பாதகமாகத் திரித்து எங்களிடம் கேள்வி கேட்கத் தேவையில்லை. அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியமுமில்லை. ஏனெனில் அவர்களின் நோக்கம் என்னவென்பது எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

எனவே எதிர்தரப்பாரால் எடுத்துக் காட்டப்பட்ட மேற்கண்ட மூன்று ஹதீதுகளுக்கும் அவைகளை பதிவு செய்துள்ள நூலாசிரியர்கள் மட்டுமல்ல. வேறு எந்தவொரு பெரியாராலும் இதுவரை சொல்லப்படாத புதிதானதோர் விளக்கத்தைத் தான் இவர்கள் சொல்கின்றனர் என்பதில் அறவே உங்களுக்கு சந்தேகம் வேண்டாம். இன்னும் இந்த ஹதீதுகளுக்கு நமது முன்னோர்களும் அந்நூலாசிரியர் களும் சொல்லாத ஒரு புதிதான விளக்கத்தை நீங்கள் ஏன் சொல்கிறீர்களென்று அவர்களிடம் கேட்டால் அதற்கவர் கள், நாங்கள் குர்ஆன் ஹதீதுக்குரிய பொருள் எதுவோ அதைத்தான் சொல்கிறோமென்று சாதிக்கின்றனர். அப்படி யானால் நமது முன்னோர்கள் அந்த குர்ஆனுக்கும் ஹதீதுக் கும் வார்த்தைக்கு வார்த்தை அவைகளுக்குரிய அர்த்தத்தை யும் விளக்கத்தையும் சொல்லவில்லையா என்றொரு கேள் வியும் எழுகிறது.

அதற்குரிய பதிலானது, ஒரு வார்த்தைக்கு ஒரேயொரு பொருள் மட்டும் தான் இருக்கிறதா என்பதை நாம் யோசித் துப் பார்க்க வேண்டும். மேலும் ஒரு வாக்கியம் எத்தனை இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதோ அத்தனை இடங் களிலும் அவ்வார்த்தைக்கு அந்த ஒரே அர்த்தத்தை மட்டும் தான் கொடுக்க வேண்டுமா? அல்லது ஒரு வார்த்தைக்கு பல அர்த்தங்கள் இருக்கிறதா? அப்படிப் பல அர்த்தங்கள் இருந்தால் அந்த அர்த்தங்களை அவை பொருந்தக்கூடிய இடத்தில் பயன்படுத்தலாமா பயன்படுத்தக் கூடாதா?

அவ்வாறின்றி ஒரு வார்த்தைக்கு எத்தனை அர்த்தங்கள் இருந்தாலும் ஒரேயொரு அர்த்தத்தை மட்டும்தான் அந்த வார்த்தை எத்தனை இடங்களில் வந்தாலும் பயன்படுத்தப் பட வேண்டுமென்று சொல்லலாமா? இவ்வாறே ஒரு வார்த் தைக்குரிய முன் பின் பகுதியிலுள்ள விஷயங்கள் எப்படிப் பட்ட கருத்தை வலியுறுத்துகிறதோ அக்கருத்துக்கு ஏற்றவா றும் அவ்வார்த்தைக்குரிய பல்வேறு அர்த்தங்களில் ஒரு அர்த்தத்தைப் பயன்படுத்தலாமா?

இவ்வாறே ஒரு வசனத்தில் இடம் பெற்றுள்ள எல்லா வார்த்தைகளுக்கும் பொருள் சொல்ல வேண்டுமா? அல் லது ஒரு வசனத்திலுள்ள ஒரு வார்த்தை அல்லது ஒரு எழுத்து அந்த இடத்தில் எந்தவொரு பொருளுமில்லாமல் போவதற்குரிய வாய்ப்பிருக்கிறதா? இவைகளுக்குரிய தீர்ப்பையெல்லாம் உங்களிடமே நாம் விட்டு விட்டு அதைத் தெளிவுபடுத்தும் சில உதாரணங்களை மட்டும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

“ழில்லுன்” என்றால் நிழல் மட்டும்தான் அதற்குரிய அர்த்தமே தவிர வேறொரு அர்த்தமில்லை என்று நீங்கள் நினைத்தால் இப்போது பாருங்கள்.,,,

سبعة يظلهم الله في ظله يوم لاظل إلاظله

“அல்லாஹ்வுடைய நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத நாளன்று ஏழு நபர்களுக்கு அல்லாஹ் தனது நிழலில் நிழல் வழங்குவான்”

இந்த ஹதீத் ஸஹீஹ் முஸ்லிம் என்னும் நூலில் பாபு இக்ஃபாயிஸ் ஸதகா, பாகம்-3, பக்கம்-563லும், புகாரி ஷரீப், கிதாபுல் அதான், பாபு மன் ஜலஸ ஃபில் மஸ்ஜிதி யன்தழி குஸ் ஸலாத்த வ ஃபழ்லில் மஸாஜிதி, பாகம்-1, பக்கம்-306 லும் பதிவு செய்யப்பட்டுள்ள ஸஹீஹான ஹதீதாகும். இந்த ஹதீதை எடுத்துக்காட்டி இதில் குறிப்பிடப்படும் “ழில் லுன்” என்னும் வார்த்தைக்கு சூரிய சந்திரனில் காணப்படும் நிழலா எனக் கேட்கப்பட்ட போது,

سبعة في ظل العرش يوم لاظل إلاظله

"அந்நாளில் அர்ஷுடைய நிழலில் ஏழு பேர்களுக்கும் நிழலளிப்பான்"
என்னும் இப்னு அஸாகிரிலும், ஜாமிவுஸ் ஸகீர் பாகம்-2, பக்கம்-43லும் பதிவாகியுள்ள முர்ஸலான ஹதீதையும்,

سبعة يظلهم الله تحت ظل عرشه

"அல்லாஹ் அந்த ஏழு பேர்களுக்கும் அர்ஷுடைய நிழலின் கீழ் நிழலளிப்பான்"
என்னம் ஜாமிவுஸ் ஸகீர் பாகம்-2, பக்கம்-43ல் பதிவாகியுள்ள "ஹஸன்" என்னும் படித்தரத்தைக் கொண்ட ஹதீதையும் ஆதாரமாகக் காட்டி அல்லாஹ்வுக்கென்று நிழல் ஏதுமில்லை. அது அவனுடைய அர்ஷுடைய நிழல்தான் என்று கூறுகின்றனர். இந்த இடத்தில் முர்ஸலான ஹதீதையும், ஸஹீஹல்லாத வேறு படித்தரங்களைக் கொண்டுள்ள ஹதீதையும் தமது கருத்தை உறுதிப்படுத்துவதற்காக இவர்கள் கையாண்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் சுன்னத் வல் ஜமாஅத்தினர் கூறுகின்ற, செய்கின்ற அனைத்துக்கும் ஸஹீஹான ஹதீதுகளை ஆதாரமாகக் கேட்கும் இவர்கள் தமது கருத்துக்களுக்கு மட்டும் ஸஹீஹல்லாத நபிமொழிகளை ஆதாரமாக ஏன் காட்டுகின்றனர்?

அப்படியானால் முர்ஸலான, ழயீபான, கரீபான ஹதீதுகளாக இருந்தாலும் அவையனைத்தும் அந்த ஹதீதை அறிவித்தவரின் நிலையைக் குறிப்பவைகளே அன்றி ஹதீதின் தரத்தைக் குறிப்பவைகளல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதேநேரம் ழயீபான ஒருவரால், முர்ஸலான ஒருவரால், கரீபான ஒருவரால் ஒரு ஹதீத் அறிவிக்கப்பட்டு ஒட்டுமொத்தமாக எல்லா ஹதீதுக்கலை அறிஞர்களும் அவரது அறிவிப்பை ஏற்றுக் கொள்ளாமல் விட்டு விடுவார்களாயின் அந்த நிலையில்தான் அந்த ஹதீதை எந்த ஒன்றுக்கும் ஆதாரமாகக் காட்ட முடியாது.

அவ்வாறின்றி இமாம் புகாரியால், இமாம் முஸ்லிமால் ஒருவர் நம்பத்தகுந்தவரல்ல எனக் கருதப்பட்டு விடப்பட்டுப் போன ஒருவருடைய தகவலை வேறொரு பெரியாரால் பதிவு செய்யப்படுமாயின் அத்தகவலை ஆதாரமாகக் கொள்ள முடியுமென்பதே ஏகமனதான தீர்ப்பாகும். இத்

தீர்ப்பு வஹ்ஹாபியர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுதான். அதனால்தான் முர்ஸலான, ஹஸனான எத்தனையோ ஹதீதுகளை சுன்னத் வல் ஜமாஅத்தின் அறிஞர்கள் ஆதாரமாகக் கையாளுகின்றனர்.

இனி குர்ஆனையும் ஹதீதையும் தான் பின்பற்ற வேண்டும். இமாம்களையோ அவர்களால் வகுத்தளிக்கப்பட்ட மத்ஹபுகளையோ பின்பற்றக் கூடாதென இரவு பகலாக மேடை போட்டு வாய்கிழியப் பிரச்சாரம் செய்கிறார்களே! இதற்குரிய ஆதாரம் குர்ஆன் ஹதீதிலிருக்கிறதா? அல்லது புகாரி முஸ்லிமில் தானிருக்கிறதா? நல்லோர்களது கப்ருகளின் மீது கட்டப்பட்டுள்ள குப்பாக்களை எல்லாம் உடைத்தெறியுங்கள். அவைகளை தரைமட்டமாக்குங்கள் என்று ஆவேசமாக ஊளையிடுகிறார்களே! அதற்கவர்கள் ஆதாரமாக ஸஹீஹ் முஸ்லிமில் இருந்து ஒரு ஹதீதை கொண்டு வருகிறார்களே! அந்த ஹதீதை அறிவிக்கும் அறிவிப்பாளர்களில் ஒருவரான வகீஃ என்பவர் ஒருவரால்கூட (ஜுர்ஹ்) குற்றம் சாட்டப்படாதவரா? இதை அவர்கள் ஆதாரமாக எடுத்தார்களென்றால் இது அவர்களுக்கு, அவர்களின் கண்டு பிடிப்புக்களுக்கு தோதாக இருப்பதுதான் காரணமாகும். பிறகு ஏன் சுன்னத் வல் ஜமாஅத்தினரிடம் மட்டும் ஸஹீஹான ஹதீதைக் காட்டுங்களென்று கேட்கிறார்கள் என்பதாக யோசிக்கிறீர்களா?

சுன்னத் வல் ஜமாஅத்தினர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை தமது உயிருக்கும் மேலாக மதிப்பவர்களும் அவர்களின் அகமியத்தை அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறுயாராலும் அறிய முடியாதென்று நம்புகின்றவர்கள். ஆனால் இவர்கள் தமது ரஸூலை தம்மைப் போன்றவரெனவும், அவர்களின் அகமியத்தை தமது வாயால் ஊதி அணைத்து விடலாமென்றும் நினைத்துக் கொண்டிருப்பது தான் இதற்குரிய காரணமாகும்.

மேலும் சுன்னத்வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள ஏனைய எல்லா ஜமாஅத்துக்களையும் நீங்கள் கவனித்துப் பார்ப்பீர்களாயின் அவர்களது சொல்லிலும் செயலிலும் இன்னொரு தேசத்தின் தொடர்பிருப்பதையும் அவ்வியக்கத்திற்கும் அதைத் தோற்றுவித்தவர்களுக்கும் யூத, நஸா

ராக்களோடு நெருக்கமான உறவு இருப்பதையும் வரலாற்றின் வெளிச்சத்தை வைத்து நாம் தெரிந்து கொள்ளலாம்

இனி அல்லாஹ் நூரானவனாகையால் அவனுக்கு நிழலில்லை. இனி அல்லாஹ்வின் நிழலில் இருப்பார்களென்று கூறப்பட்டதன் கருத்து அது அர்ஷுடைய நிழலாகும் என்று சொல்கிறீர்களே! அந்த அர்ஷும் நூரால்தானே படைக்கப்பட்டுள்ளது? இந்நிலையில் அதற்கு நிழல் எப்படி இருக்க முடியும்? இன்னும் அந்த அர்ஷ் அல்லாஹ்வுடைய சிம்மாசனம் என்றும் சொல்கிறீர்களே! உருவமற்றவனுக்கு சிம்மாசனம் எதற்கு? இன்னும் பாருங்கள்.

السلطان ظل الله في الأرض

"அரசன் பூமியில் நடமாடும் அல்லாஹ்வின் நிழலாகும்"

السلطان العادل المتواضع ظل الله

"நீதமுள்ள பணிவான அரசன் அல்லாஹ்வின் நிழலாகும்"

என்ற ரஃப்வுல் கிஃபா என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-403ல் பதிவாகியுள்ள ஹதீதுகளில் பேசப்படும் நிழல் என்பது இந்நூலை வாசிக்கும் உங்களுக்கு இருப்பதைப் போன்ற நிழலா? இன்னும்,,,

فلان في ظل فلان

"இன்னார் இன்னாருடைய நிழலில் இருக்கிறார்"

என்னும் அரபுப் பழமொழியில் பேசப்படும் நிழல் என்பது சூரிய சந்திரனின் நிழல் என்பதாகப் பொருள் சொல்லலாமா? அரபி மொழியில் புலமை வாய்ந்த எல்லோருமே "ழில்லுன்" என்பதற்கு சூரிய சந்திரனில் காணப்படும் நிழல் மட்டும்தான் என்று சொல்வார்களா? ஒரு வார்த்தைக்கு ஒரேயொரு அர்த்தம் தானெனில் அகராதி என்பது எதற்கு? பதில் தரட்டுமே பார்ப்போம்.

மேற்கண்ட ஒன்றிரண்டு ஹதீதுகளிலும், அரபுப் பழமொழியிலும் எடுத்துக் காட்டப்பட்ட "ழில்லுன்" என்னும் வார்த்தைக்கு எந்த அர்த்தம் பொருந்தும் என்பதை

"ழில்லும் அதன் பொருளும்" என்னும் தலைப்பை மீண்டுமொரு முறை எடுத்துப் பார்த்து முடிவு செய்வதுடன் ஒரு வார்த்தைக்கு ஒரு அர்த்தம் தானென்னும் மூட நம்பிக்கையை விட்டு விட்டு "ழில்லுன்" என்றால் சூரிய சந்திரனில் காணப்படும் நிழல் மட்டுமல்ல. அதற்கு இன்னும் பல அர்த்தங்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொள்வதோடு, இந்த நய வஞ்சகர்கள் தமது ஆதாரமாக எடுத்துக் காட்டிய ஹதீதுகளுக்கு நமது பெரியோர்கள் தந்துள்ள விளக்கங்களைப் படிக்கத் தயாராகுங்கள்.

"ழில்லும் அதன் பொருளும்" என்னும் தலைப்பில் "ழில்லுன்" என்ற வார்த்தைக்கு "ஷக்ஸுன்" (மனிதர்) என்றொரு அர்த்தமும் உண்டென்பதாகக் குறிப்பிட்டிருந்தோம். அதற்கொப்ப சர்பராஸ் என்பவரால் எடுத்துக் காட்டப்பட்ட மேற்கண்ட மூன்று ஹதீதிலும் "ழில்லுன்" என்பதற்கு சூரிய சந்திரனில் காணப்படும் நிழலல்ல. மாறாக மனிதர் என்பதாகும். அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும் என்பதுதான் அதற்குரிய பொருளாகும். அதாவது ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நபியவர்களைத் தான் கண்டார்கள். நமக்குள் காணப்படும் நிழலையல்ல. ஏன் தெரியுமா?

மஜ்மவுஸ் ஸவாயித், மஜ்மவுல் பஹ்ரைன், முஸ்னத் அஹ்மத், தபகாத் இப்னு ஸஃத் போன்ற நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் இரண்டு ஹதீதுகளும் ஒரே நிகழ்ச்சியைக் குறிக்கின்றவைகளாகும். அது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய இறுதி ஹஜ்ஜாகிய ஹிஜ்ரி 10ம் ஆண்டில் "ஹஜ்ஜத்துல் வதாஃ"வுக்குப் பின் நிகழ்ந்த சம்பவமாகும்.

அதாவது நபியவர்கள் இவ்வுலக வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தை நெருங்க ஒரு சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றதாகும். துல்ஹஜ் கடைசி வாரம், அல்லது முஹர்ரம், ஸபர், ரபீவுல் அவ்வலின் முந்திய சில தினங்களாகும். அதாவது கிறிஸ்துவ கணக்கின் படி 632ம் ஆண்டு ஜுன் மாதம் நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

குறிப்பாகச் சொல்வதென்றால் கிறிஸ்துவக் கணக்கின்படி நாயகியவர்கள் நபியவர்களை மே மாதம் அல்லது

ஜூன் மாதத்தில் கண்டிருக்கிறார்கள். இவ்விரு மாதமும் வெயில் காலத்திற்குரிய மாதமாகும். வெயில் காலத்தில் ஒருவருடைய நிழல் எங்கேயிருக்கும் என்பதை உங்களைக் கொண்டே நீங்கள் பரிசோதித்துப் பாருங்கள். முன்னால் நிழல் விழுவதற்குரிய சாத்தியமேயில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

முதலில் எடுத்துக் காட்டப்பட்ட ஹதீத் "தபகாத் இப்னு ஸஃதில்" பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொன்னபோது இதே ஹதீத் முஸ்னத் அஹ்மதின் எண்-25516,26780லும் பதிவு செய்யப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டிருந்தோம். அதில்,

"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு முன்னதாக நபியவர்களின் நிழலைக் கண்டார்கள்" என்று கூறப்பட்டுள்ள வாக்கியம், தபகாத் இப்னு ஸஃதில் கூறப்பட்டுள்ளதற்கு சர்பராஸ் தருகின்ற விளக்கமாகும். ஆனால் "நிழலைக் கண்டதும் நாயகியவர்கள் தமது படுக்கையையும் இதர பொருட்களையும் மீட்டுக் கொண்டார்கள்" என்னும் வாக்கியம் முஸ்னத் அஹ்மத், மஜ்மவுல் பஹ்ரைன் ஆகிய இரு நூல்களிலும் கூறப்பட்டுள்ளதாகும்.

மதிய வேளையில் ஒரு மனிதருடைய முன் பக்கத்தில் நிழல் தெரியாதென்பது ஒரு பக்கமிருக்க, நிழலைப் பார்த்ததும் அவர் இன்னார் தானென்று முடிவுசெய்து பயணத்தை எப்படி ரத்து செய்தார்கள்? என்பது போன்ற கேள்விகளுக்கெல்லாம் நாம் இடமளிக்கக் கூடாதென்பதற்காகத் தான் ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நிழலைக் கண்டபோது நபியவர்களைத் தான் கண்டார்கள் என்று நாம் சொன்னதற்கு,,,

அப்படியானால் நபியவர்களைப் பார்த்ததற்குப் பிறகும்கூட நாயகியவர்களால் வந்திருப்பவர் நபியவர்கள் தானென்பதை ஊகித்துக்கொள்ள முடியாமல் வியப்படைந்து இவர் யாராக இருக்குமென்று சொன்னார்? என்பதாக ஆவேசமாக நம்மிடம் கேட்கின்றனர்.

வெயில் காலத்தில் அதுவும் மதிய வேளையில் ஆளுக்கு முன்னால் நிழல் தென்படாததால் தான் அந்த இடத்தில் "ழில்லுன்" என்பதற்கு நபியவர்கள் தானென்

றும், நபியவர்களைக் கண்டதால் தான் நாயகியவர்கள் தமது பயணத்தை ரத்து செய்தார்களென்றும் இங்கே பொருத்தமானதொரு விளக்கம் தரப்பட்டாலும் மஜ்மவுஸ் ஸவாயித் எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீதுக்குரிய விளக்கத்தையும் நாம் உங்களுக்குச் சொல்ல கடமைப்பட்டுள்ளோம். ஏனெனில் எப்போதுமே நம்மவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை எல்லாவற்றையும் விட மிக மிக உயர்வானவர்களாக மதிப்பதால் இந்நிகழ்ச்சியைக் குறித்த சூழ்நிலையை சற்று ஆழமாக சிந்திக்குமாறு வேண்டுகிறோம்.

ஒருசில நேரங்களில் ஒரு நிகழ்ச்சியை விளங்க வைக்க தம்மையே உதாரணப்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்படுவதுண்டு. அதற்கொப்ப இவ்விடத்தில் உங்களை நீங்களே உதாரணமாகக் கொண்டு இந்நிகழ்ச்சியைக் குறித்த சூழ்நிலையை விளங்க வேண்டுகிறோம்.

அதாவது உங்களுக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவரை நீங்கள் மிகவும் நேசிக்கிறீர்கள். அவர் உங்களுடைய ஒரு செய்கையின் காரணமாக உங்கள்மீது வெறுப்புக் கொண்டு உங்களைப் பல மாதங்களாக சந்திக்க வராதிருக்கிறார். அதேநேரம் அவர் மரணப் படுக்கையிலும் இருக்கிறார். இந்நிலையில் அவர் உங்களை சந்திக்க வருவதற்குரிய வாய்ப்பு அறவேயில்லை என்னும் ஆழ்ந்த கவலையில் நீங்கள் அவரையே நினைத்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று அவர் உங்களுக்கு முன்னால் வந்தால் அப்போது உங்களின் மனநிலை ஹழ்ரத் ஸைனபுடைய மனநிலைக்கொப்ப இருக்குமா? அல்லது வேறு மாதிரியாக இருக்குமா என்பதை ஒரு வினாடி யோசித்துப் பாருங்கள்.

இங்கே ஹழ்ரத் ஸைனப் ரலியல்லாஹு அன்ஹாவின் மீது கொண்ட சினத்தால் மூன்று மாதங்களாக அவர்களின் தொடர்பையே துண்டித்துக் கொண்டிருந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஹிஜ்ரி 11ம் ஆண்டு ரபீவுல் அவ்வல் மாதம் மிகவும் சுகவீனமடைந்து சுயமாக எழுந்து நடக்கக்கூட முடியாதவர்களாக இருந்தனர். இதைத் தெரிந்து கொண்டிருந்த அன்னையவர்கள் இனிமேல் நபியவர்கள் நம்மிடம் வரவே மாட்டார்களோ என்ற ஆழ்ந்த

கவலையில் மூழ்கி இருக்கும்போது திடீரென நபியவர்கள் அவர்கள் முன்னால் வந்து நின்றதும் ஒரு கணம் இது நபியவர்களல்ல. வேறு யாரோ என யோசித்துக் கொண்டிருக்கும் போது நபியவர்கள் வீட்டுக்குள் நுழைகிறார்கள். இதுதான் அந்த ஹதீதுக்குரிய விளக்கமேயன்றி எப்போதுமே தன்னைவிடத் தாழ்ந்த ஒரு சாதாரண மனிதராகத் தமது ரஸூலைப் பார்க்கும் இந்த வஹ்ஹாபிகளுக்கு அன்னையவர்கள் தமது ரஸூலின்மீது கொண்டிருந்த அந்த நேசத்திற்குரிய மனோநிலையை இவர்களால் புரிந்துகொள்ள முடியாது. காரணம் இவர்களுக்கு நேசமென்றால் என்னவென்ற அர்த்தமும் தெரியாது. நேசிக்கவும் தெரியாது. அத்துடன் நேசிக்கின்றவர்கள் தான் தனது ரஸூலின் எதார்த்தம் என்ன என்பதையும் விளங்கி அதற்கு ஒரு சிறு களங்கம் கூட நேர்ந்து விடாமல் விளக்கமும் தருவார்கள். இது இவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட இரண்டு ஹதீதுகளுக்குமுரிய விளக்கமாகும். இனி,...

மூன்றாம் ஹதீதுக்கான விளக்கம் :-

மூன்றாம் ஹதீதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே தமது நிழலை நரகத்தில் பார்த்ததாகக் கூறுகின்றனர். இனி நிழல் தெரிய வேண்டுமாயின் வெளிச்சம் அவசியமாகும். இருட்டில் நிழல் தெரியாது. இதில் நரகத்தின் நெருப்பு எப்படியிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

عن ابى هريرة رضى الله عنه عن النبي صلى الله عليه وآله وسلم قال: أوقد على النار ألف سنة حتى إحمرت ثم أوقد عليها ألف سنة حتى إبيضت ثم أوقد عليها ألف سنة حتى إسودت فهي سوداء مظلمة

“நரக நெருப்பு ஆயிரம் ஆண்டுகள் மூடப்பட்டது. அதனால் அது சிவப்பு நிறமுடையதாயிற்று. பின்னர் மீண்டும் ஆயிரம் ஆண்டுகள் மூடப்பட்டது. அதனால் அது வெள்ளை நிறமுடையதாயிற்று. பின்னர் மறுபடியும் ஆயிரம் ஆண்டுகள் மூடப்பட்டது. அதனால் அது காரிருளாயிற்று என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறினர்.”

(அ-ர் ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி, மிஷ்காத், கிதாபுல் ஃபித்தன், பாபு ஸிஃபத்தின் நாரி வ அஹ்லிஹா. மிர்காத், பாகம்-9, பக்கம்-644)

எனவே நரகத்தின் நெருப்பு கருப்பு நிறமுடையதென்று காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே தெளிவுபடுத்தி விட்டதால் நரக நெருப்புக்கு வெளிச்சம் எப்படி இருக்க முடியும்? வெளிச்சமில்லை என்றால் நிழல் எப்படித் தெரியும்? அப்படியானால் “ழில்லுன்” என்பதற்கு முந்திய இரு ஹதீதுகளுக்கும் என்ன பொருள் தரப்பட்டதோ அதுதான் இந்த ஹதீதுக்குமுரிய விளக்கமாகும். அவ்வாறாயின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மையே நரகில் கண்டார்களென்று சொல்கிறீர்களா? எனக் கேட்கப்பட்டால்,...

இப்படியொரு எண்ணம் உள்ளத்தில் ஊசலாடுவதை விட்டும் அல்லாஹ்விடம் அந்த நபியின் பொருட்டால் பாதுகாப்புத் தேடுகிறோம். அப்படியாயின் அதற்குரிய விளக்கமானது, “எனது உம்மத்தினர் குழப்பங்களுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டி வரும்” என்பதுதான் அதற்குரிய பொருளாகும் என நபியவர்களே விளக்கமளித்து விட்டார்கள்.

இனி அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மை நரகில் கண்டதாகச் சொன்னதும் அதைக் கேட்டு அவர்களைப் பற்றிய தவறானதொரு எண்ணம் உங்களுக்குள் ஏற்பட்டதற்காக அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிய நீங்கள், அதற்குரிய கருத்து அதுவல்ல என்பதையும் சுட்டிக் காட்டினீர்கள். அப்படியானால் நபியவர்களுக்கு நெருப்பைக் காட்டப்பட்ட போது அதைக்கண்ட பயத்தினால் பின்வாங்குமாறு சைக்கினை செய்தார்கள் என்றால் நபியவர்களுக்கு நரகத்தின் நெருப்பு தன்னைத் தீண்டிவிடும் என்று பயந்தார்கள் என்றுதானே சொல்ல வேண்டும்?

ஆம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தம்மை நெருப்பு தொட்டுவிடக் கூடாதென்று பயந்தார்கள். அதனால்தான் உடனே பின்வாங்குமாறு சைக்கினையும் செய்தார்கள் என்பதில் சொஞ்சங்கூட சந்தேகமில்லை.

அவ்வாறாயின் அந்த நெருப்பு தன்னைத் துன்பத்திற்

குள்ளாக்கும் என்பதால் தானே நபியவர்கள் பின்வாங்கி னார்கள்?

இல்லை. நிச்சயமாக, சத்தியமாக இல்லை. ஏன் பயந் தார்கள் தெரியுமா? அந்த நெருப்பு தன்னைத் தொட்டால் எங்கே அணைந்து விடுமோ என்றுதான் பயந்தார்கள். அதனால் தான் பின்வாங்கினார்கள். இதுதான் இறை நம்பிக்கையாளர்களின் அகீதாவாகும். மேலும் இந்த ஹதீத் “ஆலமுல் மிஸால்” என்னும் உலகைச் சார்ந்த விஷயமாகும். அதாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுக்கு ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் தோற்ற மாகும் ஆற்றலை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியிருந் தான் என்பதையும் இந்நபிமொழி நமக்கு உணர்த்திக் காட்டுகிறது. இதையெல்லாம் வஹ்ஹாபிகளான வம்பர் கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதுதான் மூன்றாவது ஹதீதுக்கான விளக்கமாகும்.

நான்காம் ஹதீதும் அதன் விளக்கமும் :-

عن ابى هريرة رضى الله عنه: أنه ذكر أن رسول الله صلى
الله عليه وآله وسلم حدثهم أن جبريل عليه السلام جائه
فصلى به الصلوات وقتين وقتين إلاالمغرب جائني صلى بي
الظهر حين كان فيئ مثل شراك نعلي ثم جائني فصلى بي
العصر حين كان فيئ مثلي......ثم جائني من الغد فصلى
الظهر حين كان الفيئ مثلي ثم جائني فى العصر فصلى بي
حين كان فيئ مثلي

“ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டு அறிவிக்கின்றனர். ஒரு முறை ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வருகைதந்த ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாமவர்கள் மஃரிப் நேரத் தொழுகையைத் தவிர மற்ற இரண்டு இரண்டு நேரத் தொழுகைகளைத்

தொழ வைத்தார்கள். ழுஹர் தொழுகையைத் தொழ வைத்த போது நிழலானது நபியவர்களின் முபாரக் கான பாதணியின் பட்டியளவுக்கு இருந்தது. பின்பு வருகைதந்த ஜிப்ரீலவர்கள் அஸர் தொழுகையைத் தொழ வைத்தார்கள். அப்போது நிழல் என்னைப் போலிருந்தது. பின்பு மீண்டும் மறுநாள் என்னிடம் வருகைதந்தவர்கள் ழுஹர் தொழுகையைத் தொழ வைத்தார். அப்போது நிழல் என்னைப் போலிருந்தது. பின்பு அஸர் நேரத்தில் வருகை தந்தவர் அஸரைத் தொழ வைத்தார். அப்போதும் நிழல் என்னைப் போலி ருந்தது.” *(நூல் : மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-1, பக்கம்-303)*

இந்த ஹதீத் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு நிழல் இருந்ததென்பதை ஆதாரப்படுத்து வதற்கு எதிர் தரப்பினரால் எடுத்துக் காட்டப்படும் ஹதீதா கும். இதுவும் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீத் தான். ஆக நான்கு ஹதீதுகளில் இரண்டு ஹதீதுகள் மேற்கண்ட நூலிலிருந்து தான் எடுக்கப் பட்டுள்ளன. அத்துடன் குர்ஆனுடைய வசனமாக இருந்தா லும் ஹதீதாக இருந்தாலும் ஒன்று இன்னொன்றோடு தொடர்புடையதாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பதோடு இவ்விரு கிரந்தங்களின் விரிவுரையாளர்கள் இதற்கென்ன விளக்கமளிக்கின்றனர் என்பதையும் பார்க்க வேண்டும். ஆனால் இதில் எதையுமே பார்க்க மாட்டோமென்று அதன் வெளிப்படையான வாக்கியத்திற்கு மட்டுமுள்ள நேரடியான அர்த்தத்தைச் சொன்னதன் மூலம் இவர்கள் தமது அறியா மையைத் தாமாகவே வெளிப்படுத்திக் காட்டி விட்டனர்.

இன்னும் சுன்னத் வல் ஜமாஅத்தினர் இவர்களது அடிப்படைக் கருத்துக்களுக்கு மாறுபட்டவர்கள் என்ப தால் இந்த ஹதீதுக்குரிய நேரடியான பொருளைச் சொல் வதை விட்டு விட்டு இந்த ஹதீதுக்கும் ஏனைய ஹதீது களுக்குமுள்ள தொடர்பையும், இந்த ஹதீத் எது சம்பந்த மான விஷயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

இந்த ஹதீத் தொழுகை சம்பந்தமாக தொழுகைக்

குரிய நேரங்களை விபரிக்கும் பாடத்தில் பதிவாகியுள்ள தோடு ஸிஹாஹ் ஸித்தா எனப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆறு கிரந்தங்களில் ஒருசில கிரந்தங்களில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்த ஹதீதுக்கும் வேறு சில பிரபலமான ஹதீத் கிரந்தங்களிலுள்ள ஹதீதுகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதை நாம் பார்க்கலாம். அதாவது,-

أن النبي صلى الله عليه وآله وسلم قال: أمني جبريل عليه السلام عند البيت مرتين فصلى الظهر فى الاولى منهما حين كان الفيئ مثل الشراك ثم صلى العصر حين كان كل شيئ مثل ظله---- وصلى المرة الثانية الظهر حين كان ظل كل شيئ مثله ثم صلى العصر حين كان كل شيئ مثليه- الحديث

"அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறுகின்றனர். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் இருமுறை கஃபத்துல்லாஹ்வில் எனக்கு இமாமத்துச் செய்தார்கள். அதில் முதல்முறை ழுஹர் தொழுகையை தொழ வைத்தபோது நிழல் செருப்புடைய பட்டியின் அளவுக்கு இருந்தது. பின்பு அஸர் தொழுகையைத் தொழ வைத்தபோது நிழலானது ஒவ்வொரு பொருளுக்குரிய அளவில் இருந்தது. பின்பு இரண்டாம் முறையாக ழுஹரைத் தொழ வைத்தபோது நிழலானது ஒவ்வொரு பொருளின் அளவுக்கு இருந்தது. பின்பு அஸரைத் தொழ வைத்தார்கள். அப்போது நிழல் ஒவ்வொரு பொருளின் அளவில் இரு மடங்காக இருந்தது."

இது இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுவால் முன்மொழியப்பட்டதாகும். இன்னும் இந்த ஹதீத் திர்மிதி, கிதாபுஸ் ஸலாத், பாபு மவாகீத்துஸ் ஸலாத்தில் பாகம்-1, பக்கம்-200லும், ஸுனன் அபீதாவூத், பாபு மாஜாஅ ஃபில் மவாகீத், பாகம்-1, பக்கம்- 274லும், முஸ்தத்ரக்குல் ஹாக்கிம், பாபு மவாகீத்திஸ் ஸலாத்தி, பாகம்-1, பக்கம்-306லும், முஸ்னத் அஹ்மத், பாகம்-1, பக்கம்-840லும், தப்ரானி முஃஜிமுல் கபீர், பாகம்-10, பக்கம்-309லும், முஸ்னத் அப்திர்ரஸ்ஸாக், பாகம்-1, பக்கம்-531லும், முஸ்னத் அபீ

யஃலல் மௌஸிலி, பாகம்-5, பக்கம்-135லும், முஸ்னத் இப்னு அபீ ஷைபா, பாகம்-1, பக்கம்-317லும், இப்னு குஸைமா, எண்-325லும், ஸுனன் பைஹக்கீ, பாகம்-1, பக்கம்-364லும், ஸுனன் தாரகுத்னீ, பாகம்-1, பக்கம்-265லும், முஸ்னத் அப்த் பின் ஹுமைத், எண்-703லும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனைத்து நபிமொழிக் கிரந்தங்களிலும் ஒரு மாதிரியாகவும், எதிர்தரப்பினர் எடுத்துக் காட்டும் ஹதீத் வேறொரு மாதிரியாகவும் அதுவும் ஒரேயொரு நூலில் மட்டும் குறிக்கப்பட்டிருப்பதால் இதைக்கொண்டு எதையும் நிரூபிக்க முடியாது. ஆதலால் இந்த ஒரேயொரு ஹதீதை மட்டும் காரணமாக்கி நபியவர்களுக்கு நிழலிருப்பதாகச் சொல்வோர் இச்சமுதாயத்திலுள்ள முனாபிக்கீன்கள் என்பதில் ஐயமுற வேண்டாம். இன்னும் இவ்விரு ஹதீதிலும் தேவைக்குரிய பகுதியையும் அதற்குரிய விளக்கத்தை மட்டுமே இங்கே இடம்பெறச் செய்துள்ளோம் என்பதை வாசிப்போர் தெரிந்து கொள்வார்களாக.

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு நிழல் இருந்ததற்குரிய ஸஹீஹான ஹதீத் இருப்பதால் தான் நிழலுண்டு எனக் கூறுகிறோமென்று வாதிக்கும் எதிர்தரப்பினர் அவ்விரு ஹதீதையும் எந்த நூலிலிருந்து எடுத்தார்களோ அதே நூலிலிருந்து சில ஸஹீஹான ஹதீதுகளை உங்களின் பார்வைக்கு தருகிறோம். அதன்பின் இவ்விஷயத்தில் உங்களின் தீர்ப்பென்ன என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

1. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்போது ஆலமுல் பர்ஸக் என்னும் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது கூட நமது பாவங்கள், கஷ்டங்கள், தேவைகள் நீங்கிட எப்போதும் அந்த நபியவர்களின் பொருட்டால் மட்டுமல்ல. அவர்களிடமே கேட்கலாம் என்பதற்கு ஆதாரமாக ஹழ்ரத் உஸ்மான் பின் ஹனீப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தகவலை சுன்னத் வல் ஜமாஅத்தினர் எடுத்துக் காட்டுகின்றனர். ஆனால் எதிர் தரப்பினரோ இதை ஒரு ழயீபான தகவலெனக்கூறி இந்த ஹதீதையே மறுத்து வருகின்றனர். இந்த ஹதீத் மஜ்மவுஸ்

ஸவாயித், பாகம்-2, பக்கம்-279ல் பதிவு செய்யப்பட்டு ஸஹீஹான ஒன்றென்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இதைப் பற்றிய இவர்களின் கருத்தென்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

2. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மௌத்தும் ஹயாத்தும் இரண்டுமே சமம்தான். அவர்கள் ஆலமுல் பர்ஸகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தமது உம்மத்துக்களின் ஒவ்வொரு செயலையும் பார்த்துக் கொண்டு தானிருக்கின்றனர். இதை ஆதாரப்படுத்தும் ஹதீத் அதே மஜ்மவுஸ் ஸவாயிதிலும் இடம் பெற்றுள்ளது. இதைப்பற்றி இவர்கள் என்ன சொல்லுகின்றனர்?

3. நபிமார்கள் மட்டுமல்ல. வலிமார்கள் கூட தமது இறப்புக்குப் பின்னர் உயிரோடு தானிருக்கின்றனர் என்பதற்கும், ஸியாரத்துச் செய்கின்றவர்களை கப்ருக்குள் இருக்கும் அவர்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றனர் என்பதும் சுன்னத் வல் ஜமாஅத்தினரால் அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹாவைக் கொண்டு அறிவிக்கப்படும் ஹதீதும் அதே மஜ்மவுஸ் ஸவாயிதின் பாகம்-8, பக்கம்-26ல் பதிவாகியுள்ளது. இதற்கு இவர்களின் பதிலென்ன?

4. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய முபாரக்கான மேனியிலிருந்து வெளியாகும் எல்லாப் பொருட்களுமே பரிசுத்தமானவை என்பது சுன்னத் ஜமாஅத்தினரின் நம்பிக்கையாகும். அதிலொன்று குருதியுமாகும். நபியவர்களின் அக்குருதியை ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் குடித்தார்களென்ற தகவல் அதே மஜ்மவுஸ் ஸவாயிதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் இவர்களின் தீர்ப்பென்ன?

இன்னும் எதிர்தரப்பினரால் நிழலுண்டு என்பதற்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட ஒரு ஹதீத் ஹாக்கிம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதால் நாமும் அந்நூலிலிருந்தே ஒரு ஹதீதை முன்வைக்கிறோம். அதாவது,

பெண்கள் கப்ருகளுக்குச் செல்லக்கூடாதென தடைவிதிக்கப்பட்ட சட்டம் ஸியாரத்துச் செய்யுங்கள் என்னும் சட்டத்தின் மூலமாகத் திருத்தியமைக்கப்பட்டு விட்டதால்

இப்போது பெண்களும் ஸியாரத்துச் செய்யலாம் என்பதற்கான ஹதீத் ஹாக்கிம், 1:530ல் பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு இவர்கள் என்ன விளக்கம் தரப் போகிறார்கள்?

இதுவரை நாம் எடுத்துக் காட்டியவைகளை எல்லாம் இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா எனில் இல்லை என்னும் பதில் ஒரு புறமிருக்க இவைகளைப் பொய்யாக்குவதற்குரிய காரணம் என்ன என்பதைத்தான் தேடுவார்கள். இன்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை ஒரு சாதாரண மனிதராகக் கருதுவது ஒன்று மட்டும் தான் இவர்களின் அடிப்படை நோக்கம் என்பதை மறந்துவிட வேண்டாம். இவர்கள் ஒருபோதும் சுன்னத் வல் ஜமாஅத்தினரின் கருத்துக்களை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். ஆதலால் இவர்களின் சகவாசத்திலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து எதிர்தரப்பினரால் சுட்டிக் காட்டப்பட்ட நான்காவது ஹதீதுக்கு நாம் விளக்கம் தர வேண்டும். ஆகையால் அந்த ஹதீதை மற்ற கிரந்தங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் அப்போது தான் அதற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் உண்மை வெளியே வரும்.

இவர்கள் சுட்டிக்காட்டும் ஹதீதில் முதல்நாள் ழுஹர் தொழுகையின் போது நிழல் நபியவர்களின் முபாரக்கான பாதணியின் பட்டியின் அளவுக்கு இருந்ததாகச் சொல்கிறார்கள். மற்ற நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல யாருடைய பாதணியின் பட்டி என்று சொல்லாமல் பொதுவாக பாதணியின் பட்டி போலிருந்தது என்கின்றனர். ஆதலால் இதில் நிழல் என்பது அப்பாதணியுடையதே அன்றி நபியவர்களுடையதல்ல.

முதல்நாள் அஸர் தொழுகைக்கான நேரம். இவர்களால் சுட்டிக்காட்டப்படும் ஹதீதில் நிழல் என்னைப் போலிருந்தது என்று சொல்கிறார்கள். மற்ற நூல்களில் ஒவ்வொரு பொருளுடைய நிழலும் அப்பொருளுக்குரிய அளவுக்கு இருந்ததாக சொல்கிறார்கள். இந்த இடத்தில் இவ்விரு வார்த்தைக்குமுரிய ஒற்றுமை என்னவெனில் ஒவ்வொரு பொருளுடைய நிழலும் அப்பொருளின் அளவுக்கு

இருந்தது என்பதைத்தான் நிழல் என்னைப் போலாகி விட்டதென்று சொல்கிறார்கள்.

ஆக இந்த ஹதீதில் எதிர்தரப்பினர் எண்ணிக் கொண்டிருப்பதைப் போல நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமக்கு நிழல் இருந்ததாகச் சொல்லவேயில்லை. இமாம்களான முபஸ்ஸிரீன்கள், முஹத்திஸீன்கள், முபக்கிஹீன்கள், ஞானவான்கள் போன்றோரை எல்லாம் ஓரங் கட்டி விட்டு குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் நேரடியான பொருளைச் சொல்ல முனைந்தால் சொல்லப்படும் பொருளுக்கும் அவ்வார்த்தைக்கும் அறவே தொடர்பிருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

ஆதலால் அன்பான சகோதரர்களே!

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதர் என்னும் எண்ணத்தை விட்டு விடுங்கள். மாறாக அவர்கள் மனித இனத்தாரிடையே ஒரு மனிதராக உருவகப்படுத்தப்பட்டு மனித இனத்தை நேர்வழிப்படுத்த இப்புவிக்கு அனுப்பப்பட்ட ஒரு புனிதராகும். அவர்கள் தான் அல்லாஹ்வால் முதன் முதலாகப் படைக்கப்பட்ட நூரே முஹம்மதியாகும்.

யா அல்லாஹ்! உனது ஹபீபின் பொருட்டால் இச் சிறியதோர் பணியை ஏற்றுக் கொள்வாயாக. இன்னும் இதுபோன்ற பணிகளை மேலும் மேலும் செய்வதற்குரிய திடத்தையும் மன உறுதியையும் தந்தருள்வாயாக. சர்வ சக்தனே! இந்நூலின் பொருட்டால் எங்களின் பெற்றோர், உற்றார், உறவினர், ஆசிரியர் போன்றோர் அனைவரின் மண்ணறைகளையும் ஒளிமயமாக்கி சுவர்க்கப் பூங்காக்களில் ஒன்றாக்குவாயாக. அத்துடன் எங்களை உனது நல்லடியார்கள் சென்ற பாதையிலேயே சதாவும் நிலைத்திருக்க நல்லுதவி புரிந்தருள்வாயாக. ஆமீன் பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன். ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மத் யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்